1577
25-3-09

வெளியீடு: 16-10-08

Issued: 16-10-08

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை செயலகம் நூலகம் 19 ... சென்னை-600 009

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, மே 14, 2008—தொகுதி 55—எண் 2

Wednesday the 14th May 2008 —Volume 55—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

V211,31'P08
P.08·55·2
228415

[Price Rs. 3.00

**14–5–2008**

**உள்ளடக்கம்**


பக்கங்கள்

1. **வினாக்கள்–விடைகள்—**

உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 9) 517-555

2. **இரங்கல் தீர்மானங்கள்—**

(அ) சீன நாட்டில் நிலநடுக்கத்தால் ஏற்பட்ட உயிரிழப்பு 555

(ஆ) ஜெய்ப்பூரில் தொடர் குண்டு வெடிப்பு சம்பவத்தால் ஏற்பட்ட உயிரிழப்பு 556

3. **விதி 110–ன்கீழ் அறிக்கை—**

உறுப்பினர்களின் கோரிக்கைகளை ஏற்று, விபத்துகளில் உயிர் இழந்தவர்கள், இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள்/ பலியானவர்கள் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குதல் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை 556-563

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 556-563

4. **தகவல் கோரல்—**

(அ) சமூக நலத் துறை அமைச்சர் இலஞ்ச ஒழிப்புத் துறை இயக்குநரிடம் தொலைபேசியில் பேசியதாக வந்துள்ள செய்தி 563-567

திரு. ஓ. பன்னீர்செல்வம் 563-564

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி 565-567

| | பக்கங்கள் |
|---|---|
| (ஆ) மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட நிவாரணம் | 567-570 |
| திரு. கே.ஏ. செங்கோட்டையன் | 567-568 |
| மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி | 568 |
| திரு. தி. வேல்முருகன் | 569-570 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 570 |
| (இ) பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம் இரத்து | 568-569, 825-826 |
| திரு. என். நன்மாறன் | 568-569, 826 |
| மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி | 569, 825-826 |
| (ஈ) இராமேஸ்வரம் தங்கச்சிமடத்தைச் சேர்ந்த மீனவர்கள் கரை திரும்பாதது | 570-573 |
| திரு. டி. ஜெயக்குமார் | 570-572 |
| திரு. தி. வேல்முருகன் | 572 |
| மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி | 573 |
| **5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) தமிழ்நாடு பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், பழைய இரும்பு வணிகர்கள், மோட்டார் வண்டி வகைகள் பழுதுபார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் (முறைப்படுத்துதல், கட்டுப்பாடு மற்றும் உரிமம் வழங்கல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2008 | 573-574 |
| (ஆ) தமிழ்நாடு காவல் சட்டமுன்வடிவு, 2008 | 574-575 |
| (இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 | 575-576 |





| | பக்கங்கள் |
|---|---|
| **5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)**—தொடர்ச்சி | |
| (ஈ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 | 576 |
| (உ) பி.எஸ்.ஜி. பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2008 | 577 |
| (ஊ) தியாகராஜர் அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2008 | 577-578 |
| (எ) தமிழ்நாடு ஆசிரியர் கல்விப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2008 | 578-579 |
| (ஏ) தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 | 579-580 |
| (ஐ) தொழிலக வேலை வாய்ப்பு (நிலை ஆணைகள்) தமிழ்நாடு திருத்தச் சட்டமுன்வடிவு, 2008 | 580 |
| (ஒ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2008 | 721-722 |
| **6. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | 581-721 |
| (அ) கோரிக்கை எண் 1-மாநிலச் சட்டமன்றம் | |
| (ஆ) கோரிக்கை எண் 2-ஆளுநர் மற்றும் அமைச்சரவை | |
| (இ) கோரிக்கை எண் 16-நிதித் துறை | |
| (ஈ) கோரிக்கை எண் 36-திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | |
| (உ) கோரிக்கை எண் 50-ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | |
| *மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 581, 599, 611, 626, 640, 655, 697-711, 714 |

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228415
சென்னை-600 008




| | பக்கங்கள் |
|---|---|
| **மானியக் கோரிக்கைகள், 2008–2009, [illegible] வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| திரு. சு.ப. வேலுமணி .. | 590, 601, 620, 628, 641-642, 656-661 |
| *முனைவர் கு. ஜெயக்குமார் .. | 661-668 |
| திரு. ஜி.கே. மணி .. | 584, 602, 617, 629-630, 643, 668-674, 708-709 |
| திரு. சி. கோவிந்தசாமி .. | 588, 606, 618, 633, 647, 674-679, 712 |
| திரு. தி. இராமசாமி .. | 679-682 |
| திரு. வீர. இளவரசன் .. | 655, 682-685 |
| திரு. ஆர். சாமி .. | 597, 601-602, 624-625, 638, 653, 685-689 |
| திரு. சி. ஞானசேகரன் .. | 589-606-607, 619,634,648-649, 690-696, 710-711, 718-720 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி .. | 720-721 |
| **7. அறிவிப்புகள்**— | |
| (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2008 (ஆ.இ.) | 721 |
| (ஆ) வேலூர் மாநகராட்சி சட்டமுன்வடிவு, 2008 (ஆ.இ.) | 757 |





| | பக்கங்கள் |
|---|---|
| **7. அறிவிப்புகள்**—தொடர்ச்சி | |
| (இ) தூத்துக்குடி மாநகராட்சி சட்டமுன்வடிவு, 2008 (ஆ.இ.) | 761 |
| (ஈ) பி.எஸ்ஜி. பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2008 (ஆ.இ.) | 784 |
| (உ) தியாகராஜர் அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2008 (ஆ.இ.) | 784 |
| (ஊ) தமிழ்நாடு ஆசிரியர் கல்விப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2008 (ஆ.இ.) | 797 |
| (எ) தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச் சட்டமுன்வடிவு, 2008 (ஆ.இ.) | 823 |
| (ஏ) பேரவைக் குழுக்களுக்கான உறுப்பினர்கள் தேர்வு— | 826-831 |
| (அ) மதிப்பீட்டுக் குழு | 826-827 |
| (ஆ) பொதுக் கணக்குக் குழு | 827-829 |
| (இ) பொது நிறுவனங்கள் குழு | 829-830 |
| (ஈ) அவை உரிமைக் குழு | 830-831 |
| **8. அரசினர் தீர்மானங்கள்**— | |
| (அ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல் | 722-723 |
| (ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல் | 844 |
| **9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**— | |
| (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2008 | |
| *மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 724-725 |

பக்கங்கள்

9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி


(ஆ) தமிழ்நாடு நகராட்சிக் காவல் (நீக்கச்) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி 726-727

(இ) தமிழ்ப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி 727-729

(ஈ) தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 729-732

மாண்புமிகு திரு. துரைமுருகன் 729-731

திரு. ஜி.கே. மணி 730

(உ) தமிழ்நாடு பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், பழைய இரும்பு வணிகர்கள், மோட்டார் வண்டி வகைகள் பழுதுபார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் (முறைப்படுத்துதல், கட்டுப்பாடு மற்றும் உரிமம் வழங்கல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2008 732-734

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி 732-734

(ஊ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 734-740

*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் 734, 736-737, 739

திரு. கே.பி. அன்பழகன் 735-736, 738

திரு. பி.கே. சேகர்பாபு 737, 738




பக்கங்கள்

9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி


(எ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 740-743

*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் 740, 743

திரு. செ.ம. வேலுசாமி 741, 742

திரு. எல். ரவிச்சந்திரன் 741, 742

(ஏ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 743-745

*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் 743-745

(ஐ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 745-749

*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் 745, 749

திரு. பி.கே. சேகர்பாபு 746

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் 746

திரு. எல். ரவிச்சந்திரன் 746-748

மாண்புமிகு திரு. துரைமுருகன் 747

(ஒ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 750-751

*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் 750-751

(ஓ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 752-757

*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் 752, 757

திரு. எல். ரவிச்சந்திரன் 752-755

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் 753-756

| | பக்கங்கள் |
|---|---|
| **9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—*தொடர்ச்சி* | |
| (ஔ) வேலூர் மாநகராட்சி சட்டமுன்வடிவு, 2008 | 757-761 |
| *மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் | 758-759, 761 |
| திரு. இ. ஆறுமுகம் | 758 |
| (அஅ) தூத்துக்குடி மாநகராட்சி சட்டமுன்வடிவு, 2008 | 762-765 |
| *மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் | 762-764 |
| (ஆஆ) தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரிய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 | 765-767 |
| *மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் | 765-766 |
| (இஇ) சென்னைப் பெருநகர்ப் பகுதி நிலத்தடி நீர் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2008 | 767-769 |
| *மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் | 767-768 |
| (ஈஈ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 | 769-770 |
| *மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் | 769-770 |
| (உஉ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 | 771-772 |
| *மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் | 771-772 |
| (ஊஊ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 | 773-774 |
| *மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் | 773-774 |
| (எஎ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 | 775-776 |
| *மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் | 775-776 |
| | பக்கங்கள் |
| **9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—*தொடர்ச்சி* | |
| (ஏஏ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 | 777-778 |
| *மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 777-778 |
| (ஐஐ) தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புத் திருத்தச் சட்டமுன்வடிவு, 2008 | 778-780 |
| மாண்புமிகு திரு. துரைமுருகன் | 779-780 |
| (ஒஒ) தமிழ்நாடு கள்ளச்சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபச்சாரத் தொழில் குற்றவாளிகள், மணல் குற்றவாளிகள், குடிசை நில ஆக்கிரமிப்பாளர்கள், காணொலித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகளைத் தடுத்தல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 | 780-783 |
| மாண்புமிகு திரு. துரைமுருகன் | 781, 783 |
| திரு. பி.கே. சேகர்பாபு | 782 |
| திரு. செ.ம. வேலுசாமி | 782 |
| (ஓஓ) பி.எஸ்.ஜி. பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2008 | 784-797 |
| (ஔஔ) தியாகராஜர் அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2008 | 784-797 |
| மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி | 784, 790-796 |
| முனைவர் மு. தம்பிதுரை | 785-786, 791 |

பக்கங்கள்

9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—*தொடர்ச்சி*

திரு. ஜி.கே. மணி 785-787, 796

திரு. டி. சுதர்சனம் 787-788

திரு. கே. மகேந்திரன் 788-789

திரு. தி. இராமசாமி 789

திரு. டி. ஜெயக்குமார் 789-790

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் 795

(அஆ) தமிழ்நாடு ஆசிரியர் கல்விப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2008 797-800

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி 797-800

திரு. ஜி.கே. மணி 798

(அஇ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 800-802

*மாண்புமிகு திரு. கே.என். நேரு 800, 802

திரு. எல். ரவிச்சந்திரன் 801

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் 801

(அஈ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 803-804

*மாண்புமிகு திரு. கே.என். நேரு 803-804

(அஉ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 805-806

*மாண்புமிகு திரு. கே.என். நேரு 805-806

பக்கங்கள்

9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—*தொடர்ச்சி*

(அஊ) மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 806-808

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன் 807-808

(அஎ) தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 808-812

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன் 808-809, 811

திரு. செ.ம. வேலுசாமி 809-810

திரு. எல். ரவிச்சந்திரன் 809-810

(அஏ) தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 812-817

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன் 812,816-817

திரு. தி. வேல்முருகன் 812-813

திரு. ஞா. ஜாண் ஜோசப் 813-814

திரு. வை. சிவபுண்ணியம் 814-815

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி 815

(அஐ) தொழிலக வேலை வாய்ப்பு (நிலை ஆணைகள்) தமிழ்நாடு திருத்தச் சட்டமுன்வடிவு, 2008 817-821

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன் 817-818

திரு. தி. வேல்முருகன் 819

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி 820-821

திரு. ஆர். சின்னசாமி 820

பக்கங்கள்

9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(அஉ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008 — 821-823

*மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா — 821-823

(அஊ) தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச் சட்டமுன்வடிவு, 2008 — 823-825

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி — 824-825

10. பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் — 831-844

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் — 844-846

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, வைகாசி 1

## 2008 மே 14, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலுள் எல்லாம் தலை"

ஒரு செயலைச் செய்து முடிக்க வல்லவரின் ஆற்றலை இகழாது இருந்தால், அதுவே தம்மைக் காத்திடும் காவல்கள் அனைத்தையும்விடச் சிறந்த காவலாக அமையும்.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிடாத வினாக்கள்

### (பட்டியல் 9)@

1—

### உதவித் தொகை

**வினா எண் 40892—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒய்வூதியம் பெறுபவர்கள் இறந்தால் ஈமச் சடங்கிற்கு உதவித் தொகை வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர்:**

ஓய்வூதியர்கள் இறந்தால் தற்போது நடைமுறையில் உள்ள அரசாணைகளின்படி அவரது வாரிசுதாரர்களுக்கு ரூ.25,000/-

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதி அன்றுள்ளவாறு அமைந்தனவாகும்.

வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே, சமச் சடங்கிற்கு எனத் தனியாக தொகை வழங்கப்படுவதில்லை.

2—

சென்னை-600 00?

## கம்பிவடம் பதித்தல்

**வினா எண் 2009[illegible]—திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 17 இல் உள்ள பெரியதம்பி தெரு மற்றும் பெரியதம்பி முதல் தெருவில் சீரான மின்சாரம் பெற கம்பிவடம் பதிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 17 இல் எல்லா இடங்களிலுமே மேல்நிலை மின்பாதைகள் ஏற்கெனவே புதைவடமாக மாற்றப்பட்டுள்ளன. பெரியதம்பி தெருவில் 60 மீட்டர் தூரத்திற்கு புதைவடமும், பெரியதம்பி முதல் தெருவில் 70 மீட்டர் தூரத்திற்கு புதைவடமும் ஒரு மினி பில்லரும் அமைக்கப்பட்டு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

3—

## கம்பிவடம் பதித்தல்

**வினா எண் 20068—திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 18-ல் வெங்கடேசன் 1, 2, 4-வது தெருக்களில் சீரான மின்சாரம் பெற புதிய கம்பிவடம் பதிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 18-ல் எல்லா இடங்களிலுமே மேல்நிலை மின்பாதைகள் ஏற்கெனவே புதைவடமாக



மாற்றப்பட்டுள்ளன. வெங்கடேசன் 1, 2 மற்றும் 4-வது தெருக்களில் 70 மீட்டர் தூரத்திற்கு புதிய புதைவடம் அமைக்கப்பட்டு, சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

4—

## கட்டட வசதி

**வினா எண் 23555—திரு. வை. காவேரி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கன்னந்தேரி, கொங்கணாபுரத்திலுள்ள மின் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, கன்னந்தேரி மற்றும் கொங்கணாபுரத்திலுள்ள மின் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நிலம் தேடப்பட்டு வருகிறது. நிலம் ஆர்ஜிதம் செய்தவுடன் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

5—

## கம்பிவடம் பதித்தல்

**வினா எண் 24937—திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 20-ல் சஞ்சீவராயன் கோவில் தெரு, ஸ்ரீரங்கம்மாள் தெரு, குருவப்பன் தெரு, ஜீர் தெரு, நாசய்யர் தெரு, பேரம்பாலு தெரு, செல்வ விநாயகர் தெரு, ஜான்டு பிள்ளையார் கோயில் தெரு, ராமானுஜம் தெருவில் சீரான மின் வசதி பெற புதிய கம்பிவடம் பதிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இராயபுரம் தொகுதி, வட்டம் எண் 20-ல் சஞ்சீவராயன் கோவில் தெரு, ஸ்ரீரங்கம்மாள் தெரு, குருவப்பன் தெரு, ஜீர் தெரு, நாசய்யர் தெரு, போம்பாலு தெரு, செல்வ விநாயகர் தெரு, ஜான்டு பிள்ளையார் கோயில் தெரு, ராமானுஜம் தெருவில் புதைவடம் அமைக்கப்பட்டு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

**6—**

**மின் வசதி**

**வினா எண் 27389—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், இளையான்குடி ஒன்றியம், தாயமங்கலம் அகதிகள் முகாமில் மின்சார வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இளையான்குடி ஒன்றியம், தாயமங்கலம் அகதிகள் முகாமில் உள்ள குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் எதுவும் இதுவரை பெறப்படவில்லை. அவ்வாறு விண்ணப்பங்கள் பெறப்படும் பட்சத்தில் உடனடியாக உரிய விதிமுறைகளின்படி மின் இணைப்பு வழங்கப்படும்.

**7—**

**சீரான மின்சாரம்**

**வினா எண் 31800—டாக்டர். க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



கபிலர்மலை தொகுதி, பரமத்திவேலூர் கோட்டப் பகுதியில் சீரான மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

கபிலர்மலை தொகுதி, பரமத்திவேலூர் கோட்டப் பகுதியில் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

**8—**

**மின் வசதி**

**வினா எண் 33068—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மேலப்பிடாவூர், ஏ.விளாக்குளம் பகுதியில் அடிக்கடி மின்வெட்டு ஏற்படுவதைத் தடுக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, மேலப்பிடாவூர், ஏ.விளாக்குளம் பகுதியில் மின்தடைகள் ஏற்படாமலிருக்க மின்பாதையில் தொடும்படி இருக்கின்ற மரக்கிளைகள் வெட்டப்பட்டு, சந்தேகத்திற்குண்டான இன்சுலேட்டர்கள் எல்லாம் மாற்றப்பட்டுவிட்டன. தற்போது மேற்கண்ட பகுதிகளுக்கு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

**9—**

**மின் வசதி**

**வினா எண் 33635—திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடுமுடி, மொடக்குறிச்சி பகுதிகளில் மும்முனை மின்சாரம் 24 மணி நேரமும் அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கொடுமுடி சார்ந்த பகுதிகளுக்கு பிலிக்கல் பாளையம் 11 கே.வி. உயர்மின் அழுத்த மின் பாதை வழியாகவும், மொடக்குறிச்சி பகுதிகளுக்கு குளூர் 22 கே.வி. உயரழுத்த மின் பாதை வழியாகவும் வாரிய கிராம மின்பாதை தகுதியின்படி நாளொன்றுக்கு 14 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்படுகிறது. மேற்படி மின்னூட்டிகள் வாரிய விதிமுறைகளின்படி 300-க்கு மேற்பட்ட தாழ்வழுத்த தொழிற்சாலை மின்னிணைப்புகள் இருப்பின் அல்லது தாழ்வழுத்த தொழிற்சாலை மின்னிணைப்புகள் மொத்த பளு மின்னூட்டியின் மொத்த பளுவில் 50 விழுக்காட்டிற்கு மேல் இருப்பின், மேற்படி பகுதிகளுக்கு 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**10—**

## சீரான மின்சாரம்

**வினா எண் 34297—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலசப்பாக்கம் தொகுதி, ஏலத்தூரில் சீரான மின்சாரம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

கலசப்பாக்கம் தொகுதிக்குட்பட்ட ஏலத்தூர் கிராமத்திற்கு 3 கி.மீ. தூரத்தில் உள்ள 33/11 கி.வோ. வில்வராணி துணை மின் நிலையத்தில் உள்ள 1.5 எம்.வி.ஏ. உயரழுத்த மின்மாற்றி 1X8 எம்.வி.ஏ.-வாக உயர்த்தப்பட்டு ஏலத்தூர் கிராமத்திற்குச் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.



**11—**

## மின் வசதி

**வினா எண் 34585—திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதாப்பேட்டை தொகுதி, வட்டம் எண்கள் 134, 135, 136-ல் மின் கம்பிவடங்களை மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சைதாப்பேட்டை தொகுதி, வட்டம் எண்கள் 134, 135, 136-ல் உள்ள பகுதிகளில் கம்பி வடங்கள் புதைவடமாக மாற்றப்பட்டுவிட்டன.

**12—**

## தெரு விளக்கு

**வினா எண் 34902—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, சின்னக்கண்ணனூர் ஊராட்சி, கிருஷ்ணாபுரத்தில் மின் கம்பங்கள் அமைத்து தெரு விளக்குகள் அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, சின்னக்கண்ணனூர் ஊராட்சி, கிருஷ்ணாபுரத்தில் ஏற்கெனவே 14 தெரு விளக்குகள் உள்ளன. மேலும் இப்பகுதியில் தெரு விளக்கு அமைக்கக் கோரி 2007-2008 ஆம் ஆண்டு அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 3 விண்ணப்பம் பெறப்பட்டதன் பேரில், 02-11-2007 அன்று 3 தெரு விளக்குகள் ஒளிர்விடப்பட்டன.

13—

### மின்மாற்றி

**வினா எண் 37791—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை பேரூராட்சி, 1-வது வார்டிலுள்ள மின்மாற்றியை புதிதாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை பேரூராட்சி, 1-வது வார்டுக்கு 200 கே.வி.ஏ/22 கி.வோ. மின்மாற்றியின்மூலம் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. இம்மின்மாற்றியில் இணைக்கப்பட்டுள்ள மின்பளுக்கள், மின்மாற்றியின் திறனைவிட குறைவாகவே உள்ளது. எனவே, 1-வது வார்டிற்கு புதிதாக மின்மாற்றி அமைக்கும் அவசியம் தற்போது ஏதுமில்லை.

14—

### மின்மாற்றிகள்

**வினா எண் 38343—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, வேம்பத்தூரில் மின் கம்பங்கள், மின்மாற்றியை புதிதாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, வேம்பத்தூரில் பழுதானதாகக் கண்டறியப்பட்ட 5 மின் கம்பங்களும் 28-11-2007 அன்று புதியதாக மாற்றப்பட்டு விட்டன. வேம்பத்தூர் பகுதிக்கு இரண்டு 100 கே.வி.ஏ/22 கி.வோ. மின்மாற்றிகளின்மூலம் மின் விநியோகம்



செய்யப்பட்டு வருகின்றது. இம்மின்மாற்றிகளில் இணைக்கப்பட்டுள்ள மின்பளுக்கள் மின்மாற்றிகளின் திறனைவிட குறைவாகவே உள்ளன. எனவே, இப்பகுதிக்குப் புதிதாக மின்மாற்றி அமைக்க தற்போது தேவை எழவில்லை.

15—

### தடையில்லா மின்சாரம்

**வினா எண் 39684—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், மோசுக்குடி, ஏனாதிக்கோட்டை ஊராட்சிகளில் தடையில்லா மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், மோசுக்குடி, ஏனாதிக்கோட்டை ஊராட்சிகளுக்கு பார்த்திபனூர் 33/11 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து 11 கி.வோ. பார்த்திபனூர் மின்னூட்டியின்மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. மின்னூட்டிகளில் பழுதான இன்சுலேட்டர்களெல்லாம் மாற்றப்பட்டும், மின்பாதைகளில் படுகின்ற மரக்கிளைகள் வெட்டப்பட்டும் வருகின்றன. இதனால் மின் தடங்கல்கள் தவிர்க்கப்படும்.

16—

### மின்மாற்றிகள்

**வினா எண் 41000—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், திருப்புவனம் ஒன்றியப் பகுதிகளில் மின்மாற்றிகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை ஒன்றியத்தில் மொத்தம் 163 மின்மாற்றிகளும், திருப்புவனம் ஒன்றியத்தில் மொத்தம் 280 மின்மாற்றிகளும் இயக்கத்தில் உள்ளன. மேற்படி மின்மாற்றிகளில் இணைக்கப்பட்டுள்ள மின்பளுக்கள், மின்மாற்றிகளின் திறனைவிட குறைவாகவே உள்ளது. எனவே, மேற்படி பகுதிகளில் புதிய மின்மாற்றிகள் அமைக்கத் தேவையில்லை.

**17—**

**மின்மாற்றிகள்**

**வினா எண் 41001—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், கொந்தகை, காஞ்சிரங்குளம் பகுதிகளில் மின்மாற்றிகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்புவனம் ஒன்றியம், கொந்தகை கிராமத்தில் மொத்தம் 8 மின்மாற்றிகளும், காஞ்சிரங்குளம் கிராமத்தில் 2 மின்மாற்றிகளும் இயக்கத்தில் உள்ளன. இந்த மின்மாற்றிகளில் இணைக்கப்பட்டுள்ள மின்பளுக்கள் மின்மாற்றிகளின் திறனைவிட குறைவாகவே உள்ளது. எனவே, மேற்படி பகுதிகளில் புதிய மின்மாற்றிகள் அமைக்கத் தேவையில்லை.

**18—**

**சாலை**

**வினா எண் 2312—திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, புதுஇட்டேரி 2-வது வார்டு, சுந்தராபுரம் முதலியார் வீதி, 3-வது குறுக்குத் தெரு பகுதியில் குடியிருப்பவர்களுக்குச் சாலை வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குறிச்சி நகராட்சி, நஞ்சுண்டாபுரம் இரட்டை ஏரி வீதியில் 2005-2006 ஆம் ஆண்டு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பணி எடுக்கப்பட்டு, முதலியார் வீதி 3-வது குறுக்குத் தெருவில் சாலைப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

**19—**

**கழிப்பிட வசதி**

**வினா எண் 8588—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை பேருந்து நிலையத்தில் பெண்கள் கழிப்பிட வசதி ஏற்படுத்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பாளையங்கோட்டை பேருந்து நிலையத்தில் ஏற்கெனவே பெண்களுக்கான நவீன கட்டணக் கழிப்பிட வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

**20—**

**சாலை வசதி**

**வினா எண் 9014—திரு. ஏ.கே. போஸ்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றம் தொகுதி, மதுரை மாநகராட்சி 64, 65, 68, 69, 72 ஆகிய வார்டுகளில் சாலைகளைப் புதுப்பித்துத் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வார்டு எண் 64-ல் ரூ.118.25 இலட்சத்தில் 6 பணிகள் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழும், ரூ.36.00 இலட்சத்தில் 2 பணிகள் பல்வேறு நிதியின்கீழும் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளன. தற்பொழுது ரூ.49.70 இலட்சத்தில் 3 பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன.

வார்டு எண் 65-ல் ரூ.101.58 இலட்சத்தில் 6 பணிகள் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழும், ரூ.43.75 இலட்சத்தில் 4 பணிகள் பல்வேறு நிதியின்கீழும் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளன. தற்பொழுது ரூ.68.80 இலட்சத்தில் 3 பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன.

வார்டு எண் 68-ல் ரூ.97.60 இலட்சத்தில் 5 பணிகள் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழும், ரூ.54.40 இலட்சத்தில் 3 பணிகள் பல்வேறு நிதியின்கீழும் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளன. தற்பொழுது ரூ.205.90 இலட்சத்தில் 10 பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன.

வார்டு எண் 69-ல் ரூ.21.80 இலட்சத்தில் 1 பணி சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழும், ரூ.120.92 இலட்சத்தில் 13 பணிகள் பல்வேறு நிதியின்கீழும் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளன. தற்பொழுது ரூ.37.29 இலட்சத்தில் 2 பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன.

வார்டு எண் 72-ல் ரூ.74.75 இலட்சத்தில் 4 பணிகள் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழும், ரூ.102.21 இலட்சத்தில் 10 பணிகள் பல்வேறு நிதியின்கீழும் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளன. தற்பொழுது ரூ.70.38 இலட்சத்தில் 4 பணிகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகின்றன.



**21—**

## பேருந்து நிலையம்

**வினா எண் 9645—திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர்-சென்னை தேசிய நெடுஞ்சாலையில் மீன்சுருட்டியில் பேருந்து நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர்-சென்னை தேசிய நெடுஞ்சாலையில் ஜெயங்கொண்டபுரம் ஊராட்சி ஒன்றியம், குண்டவெளி ஊராட்சி, மீன்சுருட்டியில் பேருந்து நிலையம் அமைத்திடத் தேர்வு செய்யப்பட்ட இடம் ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட மயானப் புறம்போக்கு ஆகும். இவ்விடத்தின் முன்புறம் கடைகளும், பின்புறம் வாராந்திர சந்தையும் நடைபெற்று வருகின்றன.

மேற்படி கடைகள் மற்றும் வாரச் சந்தையைத் தற்சமயம் அகற்றினால் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை ஏற்படும் என்பதால், இப்பணியினை மேற்கொள்ள இயலாது.

மேலும், பேருந்து நிலையம் அமைத்திடத் தோராய மதிப்பீடு ரூ.60.00 இலட்சம் ஆகும். இச்செலவுத் தொகைக்கான நிதி வசதி, ஊராட்சி மற்றும் ஒன்றியப் பொது நிதியில் இல்லை என்பதாலும், ஆக்கிரமிப்புகளைத் தற்சமயம் அகற்றிட இயலாது என்பதாலும், தற்போது பேருந்து நிலையம் அமைக்க இயலாது.

**22—**

## வைரஸ் நோய்

**வினா எண் 6547—திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதியில் தென்னை மரத்தில் ஏற்பட்டுள்ள வைரஸ் நோயைக் கட்டுப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதியை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள், வேளாண் துறை தொழில்நுட்ப வல்லுனர்கள் மற்றும் வேளாண்மைத் துறை விரிவாக்க அலுவலர்கள் இணைந்து ஆய்வு செய்ததில், தென்னை எந்தவிதமான வைரஸ் நோயாலும் தாக்கப்படவில்லை எனக் கண்டறியப்பட்டது. தென்னையின் இலைகள் வளைந்து நெளிந்து மற்றும் மாறுபட்ட குருத்துக்கள் தோன்றுவது ஓராண் நுண்ணூட்டச் சத்து குறைபாடு ஆகும். மேலும், 60 சதவீதம் மரங்கள் செம்பான் சிலந்திப் பூச்சியால் பாதிக்கப்பட்டிருப்பதும் அறியப்பட்டது. பிப்ரவரி-மே 2007-ல் நிலவிய வறட்சியான தட்பவெப்ப நிலை செம்பான் சிலந்திப் பூச்சி பெருக்கத்தை அதிகப்படுத்தியதால், நோயின் தாக்கம் அதிகமாக தென்பட்டுள்ளது.

நோயைக் கட்டுப்படுத்த பரிந்துரைக்கப்பட்ட தொழில்நுட்பங்கள்:

1. ஓராண் நுண்ணூட்டச் சத்துக் குறைபாட்டினைத் தவிர்க்க வருடத்திற்கு ஒரு மரத்திற்கு 100 கிராம் போராக்ஸ் கலவையை இரண்டு தவணைகளில் பிரித்து இதர பேரூட்டச் சத்துக்களை அளிக்கும்போது மண்ணில் இடலாம்.

2. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தென்னை டானிக்கை (மரத்திற்கு 200 மி.லி.) வருடத்திற்கு மரத்திற்கு இரண்டு முறை வேர் மூலம் செலுத்தி மகசூலை அதிகரிக்கலாம்.

3. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பரிந்துரையின்படி, ஒருங்கிணைந்து தொழில்நுட்ப மேலாண்மைகளைக் கடைபிடித்து தென்னையில் செம்பான் சிலந்திப் பூச்சித் தாக்குதலைக் குறைத்தல்.



4. மேலும், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் மடிப்புகள் விவசாய பயிற்சிகள் மற்றும் செய்தித்தாள்கள்மூலம் விவசாயிகளுக்குத் தென்னையைத் தாக்கும் நோய்கள் மற்றும் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விழிப்புணர்வு முகாம்கள் வேளாண் துறை விரிவாக்கப் பணியாளர்களால் நடத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆத்தூர் தொகுதியில் செயல் விளக்கத் திடல்கள் மற்றும் ஆராய்ச்சித் திடல்கள் அமைத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.

5. 2007-2008 ஆண்டில் ஆத்தூர் தொகுதியில் 89,333 தென்னை மரங்கள் செம்பான் சிலந்திப் பூச்சியால் ஏற்படும் தாக்குதலைக் கட்டுப்படுத்த 2,680 லிட்டர் அசாடிராக்டின் ஒரு சதவீதம் உயிரியல் பூச்சி மருந்து 50 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு உள்ளது. ஆர்வமுள்ள விவசாயிகள் வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி பயன்பெறலாம். மேலும், மாவட்ட வாரியாக வேளாண்மை இணை இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட அறிக்கையின்படி, வைரஸ் தாக்குதல் தென்னை மரத்தில் எந்த ஒரு மாவட்டத்திலும் தென்படவில்லை.

**23—**

**தூர் வாருதல்**

**வினா எண் 11957—திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதி, சுபாவ்ராவ்பேட்டையிலிருந்து மாமண்டூர் மற்றும் கல்பூண்டி ஏரி வரை செல்லும் பாசன வாய்க்கால்களைத் தூர் வாரிச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

ஆரணி தொகுதி, சுபாவ்ராவ்பேட்டையிலிருந்து மாமண்டூர் மற்றும் கல்பூண்டி ஏரி வரை செல்லும் பாசன வாய்க்கால்களைத் தூர் வாரிச் செப்பனிட முன்னுரிமை அடிப்படையில் பணி மேற்கொள்ள கவனத்தில் கொள்ளப்படும்.

[2008 மே 14

24—

## ஏரியைச் சீர் செய்தல்

**வினா எண் 18686—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, தடாகம் கிராமத்திலுள்ள முனைப்பா ஏரியைச் சீர் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், மேல்மலையனூர் தொகுதி, முனைப்பா ஏரியைச் சீர் செய்யும் திட்டம் தற்போது இல்லை.

25—

## தூர் வாருதல்

**வினா எண் 26127—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், நடுவக்கரை, மலைப்பட்டு வயலேரியைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், நடுவக்கரை, மலைப்பட்டு வயலேரியைத் தூர் வாரும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. நிதி நிலைமைக்கு ஏற்ப முன்னுரிமை அடிப்படையில் பணி மேற்கொள்ள கவனத்தில் கொள்ளப்படும்.

26—

## ஏரியைச் செப்பனிடல்

**வினா எண் 28826—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2008 மே 14]

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், தத்தலூர் ஊராட்சியிலுள்ள ஏரிகளில் வரத்துக் கால்வாய்களைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், தத்தலூர் ஊராட்சியிலுள்ள ஏரிகளில் வரத்துக் கால்வாய்களைச் செப்பனிடும் பணி தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பணி மேற்கொள்ள கவனத்தில் கொள்ளப்படும்.

27—

## மதகு அமைத்தல்

**வினா எண் 37648—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், நரப்பாக்கம் ஏரிக்கு மதகு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், நரப்பாக்கம் ஏரியில் இரண்டு மதகுகள் உள்ளன. இவற்றுள் மதகு எண் 1, 2005-2006 ஆம் நிதியாண்டில் மீளக் கட்டப்பட்டது. தற்போது ஏரி நீர் நிரம்பிய நிலையில் உள்ளதால், ஏரியில் நீர் வற்றியவுடன், ரூ.2.48 இலட்சம் செலவில் மதகு எண் 2 சீரமைத்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

28—

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 17147—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2008 மே 14

(அ) வால்பாறை தொகுதி, ஆழியார் நகர் மற்றும் கோட்டூரில் குடியிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், கோட்டூர் கிராமத்தில் 250 நபர்களுக்கும், பொங்காளியூரில் 181 நபர்களுக்கும், ஆழியார் கிராமத்தில் 65 நபர்களுக்கும் வீட்டுமனைப் பட்டா ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி கிராமங்களில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**29—**

## கட்டட வசதி

**வினா எண் 21602—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்குப் புதியதாகக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

வருவாய்த் துறையின் 1,120 வருவாய் ஆய்வாளர்களில், 1,084 வருவாய் ஆய்வாளர்களுக்குக் குடியிருப்புகள் உள்ளன. மீதமுள்ள வருவாய்க் குடியிருப்புகளில் வரும் மூன்று ஆண்டுகளில் படிப்படியாக 36 வருவாய் ஆய்வாளர்களுக்கு ரூ.3.17 கோடி செலவில் அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புக் கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி, வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்குப் புதிதாகக் கட்டடம் கட்டுவது குறித்து தற்போது பரிசீலனையில் இல்லை.



2008 மே 14]

**30—**

## ஆக்கிரமிப்பை அகற்றுதல்

**வினா எண் 26282—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, மேல்சரபங்கா ஆற்றின் மேல் கரையிலுள்ள 4 ஏக்கர் ஆற்றுப் புறம்போக்கு நில ஆக்கிரமிப்பை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதி, மேல் சரபங்கா ஆற்றின் மேல் கரையில் உள்ள 4 ஏக்கர் ஆற்றுப் புறம்போக்கு நில ஆக்கிரமிப்புகளை அகற்ற ஓமலூர் வட்டாட்சியர் மற்றும் நாமக்கல் சரபங்கா வடிநிலக் கோட்டச் செயற் பொறியாளர் ஆகியோர்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**31—**

## வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம்

**வினா எண் 31871—திரு. ரெ. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை வட்டத்தில் வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) தற்போது பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

32—

## வீட்டுமனை வழங்கல்

**வினா எண் 38424—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கோட்டை கருங்குளம் பகுதி நம்பிக்குறிச்சி கிராம மக்களுக்கு வீட்டுமனை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கோட்டை கருங்குளம் பகுதி 2 கிராமம், மஜரா நம்பிக்குறிச்சி கிராமத்தில் புல எண் 138 நத்தம் புறம்போக்கு நிலத்தில், ராதாபுரம் வட்டாட்சியரால் 31 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

33—

## ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

**வினா எண் 42470—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, சின்ன நொளம்பை கிராமப் பள்ளியின் அருகிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

மேல்மலையனூர் தொகுதி, செஞ்சி வட்டம், சின்ன நொளம்பை கிராமம், புல எண் 16/1-ல் 1.42.0 எக்டேர்ஸ் ஓடைப் புறம்போக்கில் உள்ள ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளியின் எதிரில் 6 நபர்கள் வீடு மற்றும் கொட்டகைமூலம் ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். இவர்களில் 5 நபர்கள் ஆக்கிரமிப்புதாரர்களே தங்களது வீடுகளை அகற்றிக் கொண்டுவிட்டனர். எஞ்சியுள்ள ஒரு நபர் வீடு பூட்டிய நிலையில் ஆக்கிரமிப்புதாரர், பிழைப்பு தேடி கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக வெளியூரில் இருந்து வருவதால், இந்த ஒரு வீடு ஆக்கிரமிப்பு அகற்ற இயலாத நிலை உள்ளது. இருப்பினும், சட்ட விதிகளின்படி ஆக்கிரமிப்புதாரர் அடையாளம் கண்டு உரிய அறிவிக்கை சார்வு செய்து, விரைவில் ஆக்கிரமிப்பு அகற்றப்படும்.

34—

## மின் விளக்கு வசதி

**வினா எண் 14007—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பனகுடி மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள குத்திரப் பாஞ்சன் அருவிக்குப் பாதை வசதி, மின் விளக்கு வசதி மற்றும் குளியலறை போன்றவை ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பனகுடி மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள குத்திரப் பாஞ்சன் அருவி திருநெல்வேலி-கன்னியாகுமரி நெடுஞ்சாலையில் பனகுடி என்னும் ஊரிலிருந்து எட்டு கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இப்பகுதி பாதுகாப்பான காடுகள் பகுதியில் வருகிறது. எனவே, சுற்றுலாத் துறையால் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தித்தர இயலாது.

[2008 மே 14

35—

## சுற்றுலாத் தலமாக்குதல்

**வினா எண் 34070—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோவிலைச் சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

தாரமங்கலம் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோவில் பகுதிகளில் ரூபாய் 21.50 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் (மாவட்ட நிர்வாகமும் சுற்றுலாத் துறையும் இணைந்து) மேம்பாட்டுப் பணிகள் (2005-2006) முடிக்கப்பட்டுள்ளன.

36—

## மின்விளக்கு வசதி

**வினா எண் 41793—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, செஞ்சிக்கோட்டை நகரத்தில் ராணிக்கோட்டை, தேசிங்குராஜா கோட்டை உச்சிப் பகுதியில் உயர் கோபுர மின்விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

மேல்மலையனூர் தொகுதி, செஞ்சிக்கோட்டை நகரத்தில் ராணிக்கோட்டை, தேசிங்குராஜா கோட்டை பகுதிகள் மைய அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறையின் பராமரிப்பில் உள்ளன. இப்பகுதிக்குள் உயர் கோபுர மின்விளக்கு அமைக்க தொல்பொருள் ஆய்வுத் துறையுடன் கலந்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.



2008 மே 14]

37—

## புதிய உணவகம்

**வினா எண் 43015—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே. பேட்டை, பள்ளிப்பட்டு ஆகிய பகுதிகளில் சுற்றுலாத் துறையின் சார்பாக புதிய உணவகம் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

தங்கும் விடுதி மற்றும் உணவகங்களைத் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தியும், பராமரித்தும் வருகிறது. திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே. பேட்டை மற்றும் பள்ளிப்பட்டு பகுதிகளில் உணவகம் அமைக்கும் திட்டப் பிரேரணை எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. மேற்குறிப்பிட்ட பகுதிகளில் உணவகம் அமைக்கத் தனியார் எவரேனும் முன்வருவாரேயானால், அரசு அவர்களை ஊக்குவிக்கும்.

38—

## சுற்றுலாத் தலம்

**வினா எண் 43877—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன் தேவர் மற்றும் பரமக்குடி தியாகி இமானுவேல் சேகரன் நினைவிடங்களைச் சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) அரசு எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை.

(ஆ) எழவில்லை.

**39—**

## நினைவுச் சின்னங்கள்

**வினா எண் 43879—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருது பாண்டியர்களின் வரலாற்று நினைவுச் சின்னங்களைச் சுற்றுலா திட்டத்தின்கீழ் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வரலாற்று நினைவுச் சின்னங்களை சுற்றுலாத் துறை பராமரிப்பதில்லை. அப்பகுதிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருகிறது.

**40—**

## சுற்றுலாத் தலம்

**வினா எண் 43880—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமேஸ்வரம் கடற்கரை ஓரங்களில் சுற்றுலாத் தலங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இராமேஸ்வரம் இந்தியாவின் மிகச் சிறந்த சுற்றுலாத் தலமாக விளங்குகிறது. பின்வரும் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள்மூலம் இராமேஸ்வரம் மற்றும் கடற்கரை ஓரங்களில் இருக்கும் சுற்றுலாத் தலங்களும் மேம்பாடு செய்யப்பட்டுள்ளன:

(ரூபாய் இலட்சத்தில்)

| | | | |
|---|---|---|---|
| 1. | விவேகானந்தர் மேம்பாடு (2003-2004) சுற்றுலா சுற்றுச்சாலை அபிவிருத்தித் திட்டம் | .. | ரூ. 168.24 |
| 2. | தேவிப்பட்டினம் மேம்பாடு திட்டம் (2005–2006) | .. | ரூ. 75.60 |
| 3. | இராமேஸ்வரம் சுற்றுலாத் தல மேம்பாடு | .. | ரூ. 126.46 |

**41—**

## வழிகாட்டி அலுவலகம்

**வினா எண் 44605—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், காளையார்கோவிலில் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தவும், சுற்றுலா துறையின்மூலம் பூங்கா அமைக்கவும், சாலைகளை மேம்பாடு செய்யவும், தங்குமிடம், வரவேற்பு மையம் கட்டவும், கூடுதலாக ஒளி விளக்குகள் அமைக்கவும், டிராவல்ஸ் கிளப் ஏற்படுத்தவும் மற்றும் வழிகாட்டி அலுவலகம் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் மேம்பாடு செய்வது குறித்த திட்டப் பிரேரணை எதுவுமில்லை.

காளையார் கோவில் தளத்தை மேம்பாடு செய்ய சுதந்திரப் போராட்ட வீரர்கள் சுற்றுலா சுற்றுச்சாலை (Freedom Fighters Circuit) திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்ய அரசு பரிசீலித்து வருகிறது.

**42—**

### சுற்றுலா மையம்

**வினா எண் 47174—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வால்பாறை கருமலையில் உள்ள பாலாஜி கோயிலை அழகுபடுத்திச் சுற்றுலா மையமாக அறிவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு எந்த ஒரு தலத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. அத்தலத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்தில் கொண்டு, அத்தலத்திற்குத் தேவைப்படும் அடிப்படை வசதிகளை மட்டும் சுற்றுலாத் துறை செய்து தருகிறது.

வால்பாறை தொகுதி, வால்பாறை கருமலையில் பாலாஜி கோயில் உள்ள இடத்தை மேம்படுத்தும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**43—**

### வணிக வியாபாரம்

**வினா எண் 30239—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைப் புறநகர் பேருந்து வளாகத்திலுள்ள உணவக இடத்தை வணிக வியாபாரத்திற்குப் பயன்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, செய்தித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சென்னைப் புறநகர் பேருந்து நிலையத்தில் உள்ள பிரதான முனைய கூடத்தின் மாடியில் உணவகத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த காலியிடத்தின் பயன்பாட்டை வணிக வியாபாரத்திற்கென மாற்றி, ஓய்வறைகளுக்காகவும் மற்றும் ஆயுள் காப்பீடு கழகத்தின் அலுவலகப் பயன்பாட்டிற்காகவும் மாத வாடகைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**44—**

### பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி

**வினா எண் 23505—திரு. வீ.எ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியம், வீரபாண்டி மணலூர்பேட்டை பேரூராட்சி ஆகிய இடங்களில் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியம், வீரபாண்டி மணலூர்பேட்டை பேரூராட்சி ஆகிய இடங்களில் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி கட்டும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

**45—**

### மாணவ/மாணவியர் தங்கும் விடுதி

**வினா எண் 38320—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, வேம்பத்தூரில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ/மாணவிகள் தங்கும் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, வேம்பத்தூருக்கு அருகில் சுமார் 3.5 கி.மீட்டரில் பெரியகோட்டை பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி அரசு கட்டடத்தில் இயங்கி வருவதால், வேம்பத்தூரில் புதிய விடுதி திறப்பதற்கான நிபந்தனைகள் பூர்த்தி செய்வதாக இல்லையென்பதால், அங்கே புதிய விடுதி துவங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**46—**

## பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி

**வினா எண் 41973—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, அதியமான்கோட்டை ஊராட்சி, அதியமான்கோட்டை பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்குச் சுற்றுச்சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தொகுதி, அதியமான்கோட்டை ஊராட்சி, அதியமான்கோட்டை பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதிக்குச் சுற்றுச்சுவர் அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.



**47—**

## பக்தர்களுக்கு வசதிகள்

**வினா எண் 29681—திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் தொகுதி, கஞ்சனூர் சுக்கிரன் கோயிலில் தனியார் ஆக்கிரமிப்புகளை அகற்றி கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு வசதிகள் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவிடைமருதூர் தொகுதி, கஞ்சனூர் சுக்கிரன் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களில் ஆக்கிரமிப்பு ஏதுமில்லை. இத்திருக்கோயிலுக்கு வருகை தரும் சேவார்த்திகளுக்குத் தேவையான குடிநீர், கழிப்பிட வசதி மற்றும் சேவார்த்திகள் ஓய்வு எடுக்கவும், தங்குவதற்கும் வசதிகள் உள்ளன. மேலும், சுற்றுலாத் துறை மற்றும் திருக்கோயில் நிதிமூலம் கூடுதல் சேவார்த்திகள் ஓய்வு மண்டபம் கட்டுவதற்கு ரூ.11.30 இலட்சத்திற்கு மதிப்பீடு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**48—**

## திருக்கோயிலைப் புதுப்பித்தல்

**வினா எண் 35656—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி தொகுதி, வெங்கடாம்பேட்டை, அருள்மிகு வேணுகோபாலசுவாமி திருக்கோயிலைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், வெங்கடாம்பேட்டை அருள்மிகு வேணுகோபால சுவாமி திருக்கோயில் சட்டப் பிரிவு 46(I)-ன்கீழ் பட்டியலைச் சேர்ந்த திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் நிலை-3 செயல் அலுவலர் மற்றும் தக்காரால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலின் திருப்பணிகளுக்கு கீழ்க்கண்டவாறு மதிப்பீடு அங்கீகாரம் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு | பணி முன்னேற்றம் |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ வேணுகோபாலன் (பெருமாள் சன்னதி மற்றும் மண்டபம் கட்டுதல்) | 15,00,000 | 40% |
| 2 | தாயார் சன்னதி மற்றும் மண்டபம் கட்டுதல் | 13,00,000 | 70% |
| 3 | ஆண்டாள் சன்னதி மற்றும் மண்டபம் கட்டுதல் | 15,00,000 | 40% |

திருப்பணிகள் உபயதாரர் ஜெர்மன் திரு. வி.ஏ.எல். பாஸ்கர குருக்கள் என்பவர் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பணிகள் விரைவாக நடைபெற்று 2008-ல் குடமுழுக்கு நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**49—**

## இலவச வீடு

**வினா எண் 35676—திரு. த. தியோடர் ரெஜினால்டு:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பத்மநாபபுரம் தொகுதி, பள்ளியாடி, மருதூர் குறிச்சியிலுள்ள நெசவாளர்களுக்கு இலவச வீடுகட்ட அரசு முன்வருமா?



விடை—

**மாண்புமிகு திரு. என்கேகே. பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

கைத்தறி மற்றும் துணிநூல் துறையின்மூலம் நெசவாளர்களுக்கு இலவசமாக வீடுகட்டும் திட்டம் ஏதும் செயல்படுத்தப்படவில்லை. எனவே, பத்மநாபபுரம் தொகுதி, பள்ளியாடி, மருதூர் குறிச்சியில் உள்ள நெசவாளர்களுக்கு அரசின்மூலம் இலவசமாக வீடு கட்டும் திட்டம் செயல்படுத்த வழிவகை இல்லை. எனினும், பத்மநாபபுரம் தொகுதியிலுள்ள 12 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் கலைக்கப்பட்ட 4 சங்கங்கள் உட்பட உறுப்பினர்களாக உள்ள நெசவாளர்களுக்கு 1999-2000 முதல் 2004-2005 முடியவுள்ள காலத்தில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் மானியத்துடன் 319 தறிக்கூடங்களும், 1991-1992 முதல் 2002-2003 முடியவுள்ள காலத்தில் தறிகூடத்துடன் கூடிய 74 வீடுகளும் கட்டி வழங்கப்பட்டுள்ளன. நெசவாளர்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தி வந்த தறிகூடத்துடன் கூடிய வீடுகட்டும் திட்டம் 10-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்துடன் நிறுத்தப்பட்டுள்ளது. 1-4-2007 முதல் இத்திட்டம் நிறுத்தப்பட்டுவிட்டதனால், இனிவரும் காலங்களில் தறிகூடத்துடன் கூடிய வீடு கட்டும் திட்டம் செயல்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை.

**50—**

## பயணிகள் விடுதியை நவீனப்படுத்தல்

**வினா எண் 40668—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், திருப்புவனத்திலுள்ள நெடுஞ்சாலைத் துறை பயணிகள் விடுதியை நவீனப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், திருப்புவனத்திலுள்ள நெடுஞ்சாலைத் துறை பயணியர் விடுதி

சிவகங்கை (நெ) கோட்டப் பராமரிப்பில் உள்ளது. இதில் கடந்த 2007-2008 ஆம் நிதியாண்டில் ரூ.2.70 இலட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது.

**51—**

**சத்துணவுக் கூடம்**

**வினா எண் 23851—திரு. சபா. ராஜேந்திரன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் தொகுதி, எழுமேடு ஊராட்சி, முத்து நாராயணபுரம் அங்கன்வாடி மையத்திற்குச் சத்துணவுக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நெல்லிக்குப்பம் தொகுதி, எழுமேடு ஊராட்சி, முத்து நாராயணபுரம் அங்கன்வாடி மையம் 11-8-2006 முதல் செயல்பாட்டில் உள்ளது. இம்மையத்தில் 25 குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர். இம்மையம் வாடகை கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இம்மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு நிலம் எதுவும் கிடைக்காத நிலையில், எழுமேடு ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் மற்றும் ஊர் முக்கியஸ்தர்களால் ஊருக்கு பொதுவான இடத்தில் மையத்திற்கு கட்டடம் கட்ட நிலம் தேர்வு செய்யப்பட்டு, அவ்விடத்தில் சத்துணவு கூடத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**52—**

**சத்துணவுக் கூடம்**

**வினா எண் 41712—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, கணவாய்புதூர் ஊராட்சி, வேங்கைநகர் அரசு துவக்கப் பள்ளிக்குச் சத்துணவுக் கூடம் புதியதாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், கணவாய்புதூர் ஊராட்சி, வேங்கை நகர் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் சத்துணவுக் கூடம் ரூ.70,000/- மதிப்பீட்டில் கட்டித் தருவதற்காக நிதி ஒதுக்கீடு வழங்கக் கோரப்பட்டுள்ளது. உரிய நிதி ஒதுக்கீடு வரப் பெற்றவுடன் சத்துணவுக் கூடம் புதியதாக கட்டித் தரப்படும்.

**53—**

**கால்நடை மருத்துவமனை**

**வினா எண் 11674—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம்-மேல்மலையனூர் தொகுதியில் கால்நடை மருத்துவமனை அமைத்துத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் ஒன்றியத்தைச் சார்ந்த மேல்மலையனூரில் கால்நடை மருந்தகம்தான் செயல்பட்டு வருகிறது. கால்நடை மருத்துவமனை துவக்கப்பட வேண்டுமானால் அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40-க்கும் கூடுதலாக இருக்க வேண்டும். மேல்மலையனூர் கால்நடை மருந்தகத்திற்குச் சிகிச்சைக்காக வரும் கால்நடைகளின் எண்ணிக்கை அன்றாட சராசரி 30 ஆகும். மேல்மலையனூர் கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாக தரம் உயர்த்த செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

54—

## கட்டட வசதி

**வினா எண் 25678—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் பகுதியில் கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மண்டலம், பூம்புகார் பகுதியில் உள்ள பூம்புகார் கால்நடை மருந்தகம், தற்பொழுது பழைய கட்டடத்தில இயங்கி வருகிறது. அதற்குப் புதிய கட்டடம் சுனாமி திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு வருகிறது.

55—

## சுற்றுச் சுவர்

**வினா எண் 34224—திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போளூர் தொகுதி, களம்பூர் பேரூராட்சியில் கால்நடை மருத்துவமனை கட்டடத்தை பழுதுபார்த்து, சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மண்டலம், போளூர் தொகுதி, களம்பூர் கால்நடை மருந்தகம், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட அரசுக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்குகிறது.



இதற்குத் தற்போது சுற்றுச் சுவர் கட்ட செயற்குறிப்பு அரசிடம் ஏதும் இல்லை. கட்டடத்தில் பழுதுகள் உள்ளன. 2007-2008 ஆம் ஆண்டுக்கான பொது பராமரிப்புக்கான நிதி ஒதுக்கீடு முடிவடைந்துவிட்டதால், 2008-2009 ஆம் ஆண்டில் மேற்படி கால்நடை மருந்தகத்திற்குப் பழுதுபார்க்கும் பணி மேற்கொள்ள ஆவன செய்யப்படும். மேலும் இக்கால்நடை மருந்தகத்திற்கு சுற்றுச் சுவர் கட்ட நிதி ஒதுக்கீடு சட்டமன்ற உறுப்பினர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பெற தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

56—

## கால்நடை முகாம்கள்

**வினா எண் 34832—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதியில் காணை நோயைக் கட்டுப்படுத்த சிறப்புக் கால்நடை முகாம்கள் நடத்த சிறப்புத் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆண்டுதோறும் கால்நடைகளைத் தாக்கும் காணை எனும் கோமாரி நோயைத் தடுக்க அஸ்காட் திட்டத்தின்கீழ் மத்திய, மாநில அரசு நிதிப் பங்களிப்பு உதவியுடன் கோமாரி நோய்த் தடுப்பூசி இலவசமாக போடப்பட்டு வருகிறது. இவ்வாண்டும் சிவகங்கை உட்பட அனைத்து மாவட்டங்களிலும் தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்புத் துறையினால் கோமாரி (காணை) நோயைத் தடுக்க இலவசமாக மாநிலம் முழுவதும் 80,00,000 தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. மானாமதுரை தொகுதி மக்கள் அருகிலுள்ள அரசு கால்நடை மருத்துவரை அணுகி தங்கள் கால்நடைகளுக்கு இலவச கோமாரி நோய் தடுப்பூசி போட்டுக்கொள்ளலாம்.

[2008 மே 14

57—

## கால்நடை முதலுதவி நிலையம்

**வினா எண் 34891—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை மாட்டுச் சந்தையில் கால்நடை முதலுதவி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

உடுமலைப்பேட்டை நகராட்சி பகுதியில் அமைந்துள்ள மாட்டுச் சந்தையானது உடுமலைப்பேட்டை கால்நடை மருத்துவமனைக்கு மிகவும் அருகில் அமைந்துள்ளது. எனவே, இச்சந்தைக்குக் கொண்டுவரப்படும் கால்நடைகளுக்கு அவசர காலத்திற்கான மருத்துவ வசதிகள் உடுமலைப்பேட்டை கால்நடை மருத்துவமனைமூலம் போதுமான அளவு வழங்கப்பட்டு வருகின்ற காரணத்தால் உடுமலைப்பேட்டை கால்நடை சந்தையில் புதிய முதலுதவி நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.

58—

## சுற்றுச் சுவர்

**வினா எண் 37588—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை கால்நடை மருத்துவமனைக்கு சுற்றுச் சுவர், அடிப்படை வசதிகள் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வருவாய்த் துறைக்கு ஒப்படைக்கப்பட்ட கால்நடைத் துறைக்குச் சொந்தமான நிலம் திரும்ப பெறப்பட்ட



2008 மே 14]

பின்னர் பழுதடைந்துள்ள வால்பாறை கால்நடை மருந்தகம் சுற்றுச் சுவருடன், அடிப்படை வசதிகளுடன் கூடிய கட்டடம் நபார்டு திட்டம் அல்லது சட்டமன்ற மேம்பாட்டு நிதியிலிருந்து கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

59—

## கூடுதல் கட்டடம்

**வினா எண் 40076—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், இடையமேலூர் கால்நடை மருந்தகத்திற்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், இடையமேலூர் கால்நடை மருந்தகத்திற்குக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு நபார்டு RIDF XIII திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. அனுமதி பெறப்பட்டவுடன் கூடுதல் கட்டடம் கட்டப்படும்.

60—

## கால்நடை மருந்தகம்

**வினா எண் 40097—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், வி. புதுக்குளத்தில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 மே 14

விடை—

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி வி. புதுக்குளத்தில் ஏற்கெனவே ஒரு கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது. கால்நடை உதவி மருத்துவர் நிரந்தரமாக அங்கு பணிபுரிந்து, கால்நடைகளுக்கு சிகிச்சைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**61—**

### கட்டடம்

**வினா எண் 42605—திரு. வை. காவேரி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, இருப்பாளி, சித்தூர் கால்நடை மருத்துவமனைகளுக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

சேலம் மண்டலம், எடப்பாடி தொகுதியில், இருப்பாளி கால்நடை மருந்தகமும், சித்தூர் கால்நடை கிளை நிலையமும் இயங்கி வருகின்றன. அதனில் இருப்பாளி கால்நடை மருந்தகம் துறைக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வருகிறது. கட்டடம் முழுவதும் பழுதடைந்துள்ள நிலையில் புதிய கட்டடம் கட்ட நபார்டு XIII திட்டத்தின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சித்தூர் கால்நடை கிளை நிலையம் 1961 ஆம் ஆண்டிலிருந்து எடப்பாடி ஊராட்சி ஒன்றியம் மனமகிழ் மன்றத்தின் வாடகையில்லா கட்டடத்தில் இயங்கி வருகிறது. அக்கட்டடத்தில் பழுதுகள் எதுவும் இல்லை. சுற்றுச் சுவரும் உள்ளது. எனவே, இதற்குப் புதிய கட்டடம் கட்ட தற்போது வாய்ப்பில்லை.



2008 மே 14]

**62—**

### கணினி இயந்திரம்

**வினா எண் 43910—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், சானூர் பால் குளிரூட்டும் நிலையத்தில் கணினி இயந்திரம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், சானூர் பால் குளிரூட்டும் நிலையத்தில், தற்பொழுது தானியங்கி எடைபோடும் இயந்திரம் செயல்பட்டு வருகிறது. இதனுடன் கணினி இயந்திரத்தை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. இரங்கல் தீர்மானங்கள்

### (அ) சீன நாட்டில் நிலநடுக்கத்தால் ஏற்பட்ட உயிரிழப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கல் தீர்மானங்கள். 12-5-2008 அன்று சீன நாட்டில் தென்மேற்குப் பகுதியில் உள்ள சிச்சுவான் மாநிலத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்தது குறித்து இப்பேரவை அதிர்ச்சியும் வேதனையும் கொள்கிறது. இக்கொடிய நிகழ்வால் இன்னுயிரை இழந்துவிட்ட பல்லாயிரக்கணக்கான மக்களின் குடும்பத்தினருக்கும், இடிபாடுகளில் சிக்கி படுகாயமுற்று துன்பத்துக்கு ஆளாகியுள்ளோருக்கும், பெருஞ்சேதத்திற்கு ஆளாகியுள்ள சீன தேச மக்களுக்கும் இப்பேரவை இரங்கலையும் அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது.

[2008 மே 14

## (ஆ) ஜெய்ப்பூரில் தொடர் குண்டு வெடிப்பு சம்பவத்தால் ஏற்பட்ட உயிரிழப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 13-5-2008 அன்று இரவு இராஜஸ்தான் மாநில தலைநகர் ஜெய்ப்பூரில் நடைபெற்ற குண்டு வெடிப்பினால் பெருமளவில் உயிரிழப்பு ஏற்பட்ட துயரச் செய்தியை அறிந்து இப்பேரவை மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைகிறது. இந்திய நாடு முழுவதும் அதிர்ச்சி ஏற்படுத்திய இந்தக் கொடிய நிகழ்ச்சியில் இன்னுயிர்களை இழந்த நூற்றுக்கணக்கான மக்களின் குடும்பத்தினருக்கும், இதில் படுகாயமுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருவோருக்கும் மற்றும் இக்கோரச் சம்பவத்தால் துயரத்திற்கு ஆளாகியுள்ள ஜெய்ப்பூர் மக்களுக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும்முகத்தானும், மறைந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித்துளிகள் எழுந்து நின்று அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேறின.)

# 3. விதி 110-ன்கீழ் அறிக்கை

## உறுப்பினர்களின் கோரிக்கைகளை ஏற்று, விபத்துகளில் உயிர் இழந்தவர்கள், இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் / பலியானவர்கள் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குதல் குறித்து மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றினை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி எண் 110-ன்கீழ் பேரவையிலே இந்த அறிக்கையினைப் படிக்க தங்களிடம் அனுமதி பெற்றுள்ளேன்.



2008 மே 14] [கலைஞர் மு. கருணாநிதி]

இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்கள், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள், தங்களுடைய தொகுதிகளில் நடைபெற்ற சில விபத்துகளில் உயிரிழந்தவர்கள், இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது பலியானவர்களுடைய குடும்பத்தினருக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவி அளிக்க வேண்டுமென்று கொடுத்த கோரிக்கைகளை அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பி, அவர்களது அறிக்கைகளைப் பெற்று, அவற்றின் அடிப்படையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகைகள் அளிக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திண்டுக்கல் தொகுதி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சட்டப் பேரவை உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி மற்றும் வேலூர் தொகுதி காங்கிரஸ் கட்சியின் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் மஞ்சள்காமாலை நோய்க்கான தடுப்பூசி போடப்பட்டதைத் தொடர்ந்து 26-4-2008 அன்று இறந்துபோன 11 மாத பெண் குழந்தை மாரியம்மாளின் குடும்பத்திற்கு நிதி உதவி செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளனர். அவர்களது கோரிக்கையை ஏற்று, இறந்துபோன குழந்தையின் தந்தை திண்டுக்கல் பெரியார் காலனியைச் சேர்ந்த செருப்பு தைக்கும் தொழிலாளி திரு. முருகேசன் என்பவருக்கு ஒரு இலட்ச ரூபாய் நிதி உதவி முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

(முற்பகல் 9-35

கபிலர்மலை தொகுதி பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டப் பேரவை உறுப்பினர் டாக்டர் க. நெடுஞ்செழியன் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அவரது தொகுதியில் உள்ள பாமத்தி வேலூரில் 27-4-2008 அன்று நடந்த தீ விபத்தில் சவுக்கு மரக் கடைக்கு ஏற்பட்ட இழப்பின் தன்மை கருதி அதன் உரிமையாளர் திரு. செந்தில்குமாருக்கு 25,000 ரூபாயும், தீ விபத்தில் கார் பழுதுபார்க்கும் கடைக்கு ஏற்பட்ட இழப்பின் தன்மை கருதி, அதன் உரிமையாளர் திரு. சீனிவாசனுக்கு 30,000 ரூபாயும், தீ விபத்தில் மோகன் ஸ்பிரிங் பட்டறைக்கு ஏற்பட்ட இழப்பின் தன்மை கருதி, அதன் உரிமையாளர் திரு. சேகருக்கு 15,000 ரூபாயும், தீ விபத்தில் சக்தி முருகன் ஆட்டோ சென்டருக்கு ஏற்பட்ட இழப்பின் தன்மை கருதி, அதன் உரிமையாளர்

[கலைஞர் மு. கருணாநிதி] [2008 மே 14

திரு. ஆறுமுகத்திற்கு 20,000 ரூபாயுமாக மொத்தம் 90,000 ரூபாய் நிவாரண நிதியாக வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

தாராபுரம் தொகுதி, திராவிட முன்னேற்றக் கழக சட்டப் பேரவை உறுப்பினர் திருமதி பெ. பிரபாவதி மற்றும் காங்கேயம் தொகுதி, காங்கிரஸ் கட்சி சட்டப் பேரவை உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர் ஆகியோர் 25-4-2008 அன்று விவசாயப் பணிக்குச் சென்ற ஏழை விவசாயக் கூலிகள் நான்கு பேர் சாலை விபத்தில் மரணம் அடைந்தனர் என்றும், அவர்களது குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்துள்ளனர். அந்தக் கோரிக்கையினை ஏற்று, சாலை விபத்தில் மரணமடைந்த திருமதி மாசாத்தாள், செல்வி உமா தேவி, திருமதி பழனியம்மாள், திருமதி பாக்கியலட்சுமி ஆகியோரது குடும்பங்களுக்கு தலா 50,000 ரூபாய் வீதம் 2 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பூவிருந்தவல்லி தொகுதி, காங்கிரஸ் கட்சி சட்டமன்றப் பேரவை உறுப்பினரும், சட்டப் பேரவை காங்கிரஸ் கட்சித் தலைவருமான திரு. டி. சுதர்சனம், கும்மிடிப்பூண்டி தொகுதி அ.தி.மு.க.-வைச் சேர்ந்த சட்டப் பேரவை உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார், பொன்னேரி தொகுதி அ.தி.மு.க.-வைச் சேர்ந்த சட்டப் பேரவை உறுப்பினர் திரு. பி. பலராமன், திருவள்ளூர் தொகுதி திராவிட முன்னேற்றக் கழக சட்டப் பேரவை உறுப்பினர் திரு. இ.ஏ.பி. சிவாஜி ஆகியோர் 26-4-2008 அன்று திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பூச்சி அத்திப்பட்டு கிராமத்தில் திரு. முனுசாமியின் மகன்கள் 10 வயது சிவா மற்றும் 8 வயது விஷ்ணு குளிக்கச் சென்றபோது கால்வாய் புதைகுழியில் சிக்கி இறந்துவிட்டதால், குழந்தைகளின் தந்தை திரு. முனுசாமி என்பவருக்கு நிதியுதவி வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளனர். அதனை ஏற்று 2 குழந்தைகளை இழந்துள்ள திரு. முனுசாமிக்கு ஒரு இலட்சம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

27-4-2008 அன்று காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கீழ்பேரமநல்லூர் காலனியில் உள்ள தாமரைக் குளத்திலே மூழ்கி செல்வி எஸ். நித்தியா மற்றும் செல்வி நந்தினி ஆகிய இரண்டு மாணவிகள் இறந்துவிட்டனர். மகள்களை இழந்த குடும்பங்களுக்கு நிதியுதவி அளித்திட வேண்டுமென்று காஞ்சிபுரம் தொகுதி பாட்டாளி மக்கள் கட்சி சட்டப் பேரவை உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்



2008 மே 14] [கலைஞர் மு. கருணாநிதி]

அவர்களது கோரிக்கையை ஏற்று அந்த இரண்டு குடும்பங்களுக்கும் தலா 50,000 ரூபாய் வீதம், ஒரு இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

கடலூர் தொகுதி, திராவிட முன்னேற்றக் கழக சட்டப் பேரவை உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன், செங்கல்பட்டு தொகுதி பாட்டாளி மக்கள் கட்சி சட்டப் பேரவை உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம் மற்றும் பண்ருட்டி தொகுதி பாட்டாளி மக்கள் கட்சி சட்டப் பேரவை உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் ஆகியோர், கடலூர் தொகுதியைச் சேர்ந்த அன்பரசன் என்பவர் இலங்கையில் வேலை பார்த்து வந்தபோது 23-4-2008 அன்று இறந்துபோனதாகவும், அவரது குடும்பத்திற்கு நிதியுதவி வழங்கிட வேண்டுமென்றும் கோரிக்கை வைத்துள்ளனர். அதனை ஏற்று, உயிரிழந்த அன்பரசன் குடும்பத்திற்கு 50,000 ரூபாய் நிதியுதவி வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், செட்ரப்பட்டி ஊராட்சியைச் சார்ந்த சண்முகம் தனது குடும்பத்துடன் மொரப்பூர் காவல் நிலையத்திற்கு 8-4-2008 அன்று சென்றபோது அவரது 4 வயதுடைய குழந்தை தண்ணீர் என நினைத்து தவறுதலாக பெப்சி பாட்டிலில் இருந்த அமிலத்தைக் குடித்ததன் காரணமாக சேலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிகிச்சை பலனின்றி 9-4-2008 அன்று இறந்துள்ளது. அந்தக் குழந்தையின் குடும்பத்தின் வறிய நிலையைக் கருத்தில் கொண்டு, நிதி உதவி வழங்கிடவேண்டுமென பல்லடம் தொகுதி அ.தி.மு.க. சட்டப் பேரவை உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி, சென்னை, ஆர்.கே. நகர் தொகுதி, அ.தி.மு.க. சட்டப் பேரவை உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, சேலம்-1 தொகுதி அ.தி.மு.க. சட்டப் பேரவை உறுப்பினர் திரு. எல். ரவிச்சந்திரன் மற்றும் பாலக்கோடு தொகுதி அ.தி.மு.க. சட்டப் பேரவை உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன் ஆகியோரது கோரிக்கையினை ஏற்று உயிரிழந்த குழந்தை சன்மதியின் குடும்பத்திற்கு 50 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படுகிறது.

முற்பகல் 9-40

ஒட்டன்சத்திரம் தொகுதி திராவிட முன்னேற்றக் கழக சட்டப் பேரவை உறுப்பினரும், அரசு தலைமைக் கொறடாவுமாகிய திரு. அர. சக்கரபாணி, திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், தும்பிச்சிபாளையம் கிராமத்தில் 7-5-2008 அன்று கிணற்றில் தவறி விழுந்து நீரில் மூழ்கி இறந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த செல்வி

சிவலட்சுமி மற்றும் செல்வன் காளீஸ்வரன் ஆகியோரின் குடும்பத்திற்கும், அதே நிகழ்வில் இறந்துபோன செல்வகுமார் குடும்பத்திற்கும் நிதி உதவி வழங்கிட வேண்டுமென அளித்த கோரிக்கையை ஏற்று உயிரிழந்த இரண்டு குழந்தைகளின் தந்தை திரு. பெரியசாமிக்கு ஒரு இலட்ச ரூபாயும், செல்வகுமாரின் தந்தை திரு. செல்லமுத்துவிற்கு 50 ஆயிரம் ரூபாயும் நிதி உதவி வழங்கப்படுகிறது.

மேலும், இதே உறுப்பினர் ஒட்டன்சத்திரம் வட்டம், சின்னகாம்பட்டி கிராமத்திற்கு அருகே 13-4-2008 அன்று டிராக்டர் கவிழ்ந்த விபத்தில் உயிரிழந்த செல்வி சுகன்யா, திருமதி முருகம்மாள், திருமதி மல்லிகா, திருமதி வீரமாத்தி ஆகிய நான்கு பேரின் குடும்பங்களுக்கும்; மேலும் அந்த விபத்தில் காயமடைந்த மூன்று பேருக்கும் நிதி உதவி வழங்கிட வேண்டுமென கோரிக்கை அளித்துள்ளார். அந்த நிகழ்வில் மரணமடைந்த திருமதி முருகம்மாள் மற்றும் திருமதி மல்லிகா ஆகிய இருவரின் குடும்பங்களுக்கு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் தலா ஒரு இலட்சத்து இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது. விபத்தில் மரணமடைந்த சுகன்யா மற்றும் வீரமாத்தி ஆகிய மற்ற இருவர் குடும்பங்களுக்கும் தலா 50 ஆயிரம் ரூபாயும்; காயமடைந்த திருமதி ராஜேஸ்வரி, திருமதி லட்சுமி, திரு. பழனிச்சாமி ஆகிய மூவருக்கும் தலா 5 ஆயிரம் ரூபாயும் நிதி உதவியாக வழங்கப்படுகிறது.

மேட்டூர் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினரும், பாட்டாளி மக்கள் கட்சியின் சட்டப் பேரவைத் தலைவருமான திரு. ஜி.கே. மணி, அதே கட்சியைச் சேர்ந்தவர்களான செங்கல்பட்டு தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், காஞ்சிபுரம் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் திருமதி கமலாம்பாள் மற்றும் திருப்போரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. டி. மூர்த்தி ஆகியோர், காஞ்சிபுரம் நசரத்பேட்டை ஊராட்சி எல்லைக்குட்பட்ட கிராமத்தில் 8-5-2008 அன்று நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்த செல்வி ஷோபனா குடும்பத்திற்கு நிதி உதவி வழங்க வேண்டுமென அளித்துள்ள கோரிக்கையினை ஏற்று உயிரிழந்த ஷோபனாவின் தந்தை திரு. முருகன் என்பவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படுகிறது.

கோவை, அவினாசி சாலையில் இயங்கி வரும் கூர்நோக்கு இல்லத்தில் சிறுவன் முபாரக் அலி 7-5-2008 அன்று இறந்தது தொடர்பாக அவாது குடும்பத்திற்கு நிதி உதவி வழங்க வேண்டுமென



தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் கோவை மாவட்டத் தலைவர் திரு. ஆ. அப்துல் பகூர் அரசுக்குக் கோரிக்கை அளித்துள்ளதையொட்டி, இறந்துபோன சிறுவன் முபாரக் அலியின் குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படுகிறது.

காவேரிப்பட்டினம் தொகுதி, பா.ம.க. உறுப்பினர் திரு. த.அ. மேகநாதன் நேற்றையதினம் என்னிடம் கொடுத்த கோரிக்கையையேற்று, அவரது தொகுதியிலுள்ள திம்மாபுரம் கிராமத்தில் 29-4-2008 அன்று பலத்த சூறாவளி காற்றில் தென்னை மரம் வேரோடு சாய்ந்ததில் ஏழு வயது சிறுமி ஒருவர் பலத்த அடிபட்டு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டும் அங்கே சிகிச்சை பலனின்றி இறந்துவிட்ட சுவேதாவின் குடும்பத்திற்கு 50 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், ஆற்காடு தொகுதி பாட்டாளி மக்கள் கட்சி சட்டப் பேரவை உறுப்பினர் திரு. கே.எல். இளவழகன், சென்னை, ஆர்.கே. நகர் தொகுதி அ.தி.மு.க.வைச் சேர்ந்த சட்டப் பேரவை உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு மற்றும் சேலம்-1 தொகுதி அ.தி.மு.கவைச் சேர்ந்த சட்டப் பேரவை உறுப்பினர் திரு. எல். ரவிச்சந்திரன் ஆகியோர், வேலூர் மாவட்டம், ஆம்பூர், சாணாங்குப்பம் கிராமத்தில் 29-4-2008 அன்று மின்கம்பி அறுந்து விழுந்து மின்சாரம் பாய்ந்து இறந்துபோன திருமதி அம்மு மற்றும் திருமதி ஜானகி ஆகிய இருவர் குடும்பத்திற்கும் நிதி உதவி வழங்கக் கோரியுள்ளனர். அவர்களது குடும்பங்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் அரசின் சார்பில் நிதியுதவி ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-45

தளி தொகுதி, அஞ்செட்டி வன சரகத்தில், மஞ்சுகாப்புக் காட்டில் 21-4-2008 அன்று காட்டு யானை மிதித்து இறந்துபோன துரைசாமி என்பவரின் குடும்பத்திற்கு நிதியுதவி வழங்க வேண்டுமென தளி தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் கோரியுள்ளார். இறந்துபோன துரைசாமியின் குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதியுதவி ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது.

தொண்டாமுத்தூர் தொகுதி ம.தி.மு.க. சட்டப் பேரவை உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன், செங்கல்பட்டு தொகுதி பாட்டாளி மக்கள்

கட்சி உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம் ஆகியோர் கோவை அருகே பெரியதடாகம் பகுதியிலே உள்ள அனுவாவி சுப்ரமணியசுவாமி கோவில் காவலாளி சுப்பிரமணியம் என்பவர் 28-4-2008 அன்று யானை மிதித்து உயிரிழந்துள்ளதால், அவரது குடும்பத்திற்கு நிதியுதவி வழங்கிட வேண்டுமெனக் கோரியுள்ளார்கள். இறந்துபோன சுப்பிரமணியம் குடும்பத்திற்கு வனத் துறையின் சார்பாக ஒரு இலட்சம் ரூபாயும், இந்து சமய அறநிலையத் துறையின் சார்பாக ஒரு இலட்சம் ரூபாயும், ஆக மொத்தம் இரண்டு இலட்சம் ரூபாய் ஏற்கெனவே நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது என்பதையும் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவை தவிர, பா.ம.க. உறுப்பினர் திரு. வேல்முருகனின் கோரிக்கையையேற்று பண்ருட்டி தொகுதியில் இடி தாக்கி இறந்த ராணி என்ற பெண்மணியின் குடும்பத்திற்கு 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் 1-4-2008 அன்றும், சி.பி.எம். உறுப்பினர் திருமதி லீமா ரோஸ் அவர்களது கோரிக்கையின்பேரில் திருவட்டாறு தொகுதியிலே இடி தாக்கி இறந்த இருவருடைய குடும்பங்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 7-4-2008 அன்று இரண்டு இலட்சம் ரூபாயும், பா.ம.க. உறுப்பினர் திருக்கச்சூர் ஆறுமுகம் அவர்களின் கோரிக்கையையேற்று செங்கற்பட்டு தொகுதியிலே ஏரியிலே மூழ்கி இறந்த 3 மாணவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் 24-4-2008 அன்று மூன்று இலட்சம் ரூபாயும், விழுப்புரம் மாவட்டம், சாரம் கிராமத்தில் 23-4-2008 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்த திண்டிவனம் வட்டாட்சியர் ஆர். சுப்பிரமணியம், திண்டிவனம் வட்டாட்சியர் அலுவலக உதவியாளர்கள் எஸ். பன்னீர்செல்வம், டி. ஏழுமலை ஆகியோருடைய குடும்பங்களுக்கும், காயமடைந்த திண்டிவனம் கோட்டாட்சியர் திரு. எஸ். கேப்ரியல் மற்றும் ஓட்டுநர் திரு. குணசேகரன் ஆகியோருக்கும் 24-4-2008 அன்று பன்னிரண்டு இலட்ச ரூபாயும், தட்டம்மை தடுப்பூசி ஒவ்வாமையால் உயிரிழந்த குழந்தைகள் நந்தினி, பூஜா, மோகனபிரியா, லோகேஷ் ஆகிய நான்கு குழந்தைகளினுடைய குடும்பங்களுக்கு தலா 3 இலட்சம் ரூபாய் வீதம் 24-4-2008 அன்று 12 இலட்சம் ரூபாயும், 7-5-2008 அன்று இதே அவையில் நான் படித்த அறிக்கைபடி 10 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாயும், விழுப்புரம் மாவட்டம், காட்டுக்கோட்டையில் நீச்சல் கற்கச் சென்று, ஆற்றுக் குட்டையிலே மூழ்கி இறந்த தமிழரசன், செந்தமிழ்ச் செல்வன், தேன்மலர், ஜீவிதா, சரிதா, கவிதா ஆகியோரின் குடும்பங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 3 இலட்சம் ரூபாயும், ஆக மொத்தம், இந்தக் கூட்டத் தொடரில் மட்டும் பல்வேறு சட்டப் பேரவை உறுப்பினர்களின் கோரிக்கைகளையேற்று 55 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் முதலமைச்சர்



பொது நிவாரண நிதியிலிருந்து அளிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 4. தகவல் கோரல்

### (அ) சமூக நலத் துறை அமைச்சர் இலஞ்ச ஒழிப்புத் துறை இயக்குநரிடம் தொலைபேசியில் பேசியதாக வந்துள்ள செய்தி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 3 தினங்களாக தமிழக மக்களிடையே பரபரப்பான ஒரு செய்தியும், அந்தச் செய்தியின் அடிப்படையில் அதிகாரத் துஷ்பிரயோகம் எந்த அளவிற்கு கரைபுரண்டு ஓடிக்கொண்டிருக்கின்றது என்பதைப் பற்றியும் பரவலாகப் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

(முற்பகல் 9-50)

ஏற்கெனவே கடந்த சில மாதங்களுக்கு முன்பாக, தொலைபேசி ஒட்டுக் கேட்கப்படுகின்றது என்ற பிரச்சினை சில பல பத்திரிகைகளில் ஆதாரங்களோடு, தொலைபேசி எண்களோடு குறிப்பிட்டிருந்தபொழுது, அரசின் சார்பாக அதற்கு மறுப்புரை வழங்கப்பட்டது. சென்ற மாதம், மீண்டும் அதே தொலைபேசி ஒட்டுக்கேட்பு, தலைமைச் செயலாளர், இலஞ்ச ஒழிப்புத் துறை இயக்குநர் எஸ்.கே. உபாத்யாயா போன்றவர்களுடைய தொலைபேசி ஒட்டுக்கேட்பு நிகழ்ந்தபொழுது, அரசு அதற்கு விசாரணை கமிஷன் அமைத்திருக்கின்றது.

இப்பொழுது மறுபடியும் தொலைபேசிமூலமாக, அமைச்சர் பொறுப்பிலே இருக்கின்ற மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சரும், இலஞ்ச ஒழிப்புத் துறை இயக்குநர் திரு. எஸ்.கே. உபாத்யாயா அவர்களும் பேசிய உரையாடல் பத்திரிகைகள் வாயிலாக, தொலைக்காட்சியின் வாயிலாக இன்றைக்கு அது மிகவும், அனைத்துத் தரப்பு மக்களிடையேயும், மிகுந்த ஒரு ஆச்சரியத்தோடு பரவலாகப் பேசப்படுகிற ஒரு செய்தியாக வந்துகொண்டிருக்கின்றது. அமைச்சர் பொறுப்பை ஏற்கின்ற ஒருவர், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி

நடப்பேன் என்றும், நன்னடத்தை விதிகளை எந்த நேரத்திலும் கடைப்பிடித்து நடப்பேன் என்றும், சுய சார்போடு, சமநிலையோடு, எந்தப் பக்கமும் சார்ந்திடாமல் என்னுடைய பணியை, அதாவது அவருக்கு வழங்கப்பட்டிருக்கின்ற பணியை, ஏற்று நடப்பேன் என்று உறுதிமொழி எடுத்துக்கொண்டு, இலஞ்ச ஒழிப்புத் துறை இயக்குநர் எஸ்.கே. உபாத்யாயா அவர்களிடம் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள், தன்னுடைய நெருங்கிய உறவினர், மின்சாரத் துறையில் உதவிப் பொறியாளராக இருக்கின்ற ஜவகர் என்பவரைப்பற்றிப் பேசிய உரையாடல் பத்திரிகையில் செய்தியாக, தொலைக்காட்சியில் செய்தியாக வந்துகொண்டிருக்கின்றது.

அதாவது, அவர் இலஞ்சம் பெற்றதாகவும், கையும் களவுமாகப் பிடிபட்டதாகவும், அது இலஞ்ச ஒழிப்புத் துறையில் தீவிர விசாரணையில் இருப்பதாகவும், அந்த விசாரணையினுடைய கடினத் தன்மையை மென்மையாக நீங்கள் அணுகவேண்டும், இல்லையென்றால் அதை சம்பந்தப்பட்ட மின் துறைக்கே அனுப்பிவிடவேண்டும் என்று ஒரு அமைச்சர் இலஞ்ச ஒழிப்புத் துறை இயக்குநரை வற்புறுத்துவது எந்தவிதத்தில் நியாயம் என்பதையும், எந்த அளவுக்கு அதிகார துஷ்பிரயோகத்தை ஆளுகின்ற அரசு, அதில் பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர்கள் செய்யத் துணிந்திருக்கின்றார்கள் என்பதும் இன்றைக்கு வெட்ட வெளிச்சமாக ஆக்கப்பட்டிருக்கிறது என்பதனை நான் சபையினுடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆக, இந்திய அரசியல் அமைப்பை மீறுபவர்களுக்கும், நன்னடத்தை விதியை ஏற்று நடப்பேன் என்று உறுதிமொழி எடுத்துக்கொண்டு அதை மீறுபவர்களுக்கும் எம்மாதிரியான பரிகாரம் செய்ய வேண்டும் என்பது அவர்களுக்கும் தெரியும். அதை அவராகவே செய்துகொண்டால் மரியாதை என்றும், சட்டத்தின்மூலமாகவோ--ஏனென்று சொன்னால், இந்தப் பிரச்சினையை ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமி அவர்கள் ஆளுநரிடம் விண்ணப்ப வடிவத்திலே புகார் கொடுத்திருக்கின்றார். -- அல்லது ஒழுங்கு நடவடிக்கையின்மூலமாகவோ செய்தால் அது அவமரியாதை என்பதை நான் சுட்டிக்காட்டி, இந்த அரசு எம்மாதிரியான நடவடிக்கைகளை எடுக்கப்போகிறது என்பதனை நான் கேட்டு அமைகின்றேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அமைதியான முறையில் இந்த அவையிலே எடுத்து வைக்கவேண்டிய ஒரு கருத்தை எடுத்து வைத்திருக்கின்றார்கள். அதற்காக நான் அவரைப் பாராட்டி நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க்கட்சியினுடைய பணி எதுவோ, அந்தப் பணியை நிறைவேற்ற வேண்டுமென்ற கடமையுணர்ச்சியோடு அவர்கள் அந்தப் பணியை இப்பொழுது நிறைவேற்றியிருக்கிறார்கள்.

'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்'

என்றான் வள்ளுவன். 'இடித்துச் சொல்லக்கூடிய எதிர் தரப்பிலே உள்ளவர்கள் இல்லாவிட்டால், அந்த அரசு தன்னை யாரும் கெடுப்பதற்கு முன்வராமலே தானே கெட்டுவிடும்' என்பது வள்ளுவனுடைய வாக்கு. அந்த வாக்கிற்கேற்ப, இடித்துச் சொல்லுகின்ற அந்தப் பொறுப்பை நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஏற்று, தன்னுடைய கடமையை ஆற்றியிருக்கின்றார். அதற்கு அவருடைய பாணியிலேயே -- அதாவது அவருடைய பாணி என்றால்-அந்த அமைதியான முறையிலேயே நான் விளக்கம் அளிக்க விரும்புகின்றேன்.

ஏற்கெனவே, ஒட்டுக் கேட்ட ஒரு விவகாரம் நாட்டிலே பத்திரிகைகளிலே விளம்பரப்படுத்தப்பட்டு, அது சட்டமன்றம் வரையிலே எதிரொலித்து, அதற்கொரு விசாரணைக் குழுவை நீதியரசர் திரு சண்முகம் அவர்களுடைய தலைமையிலே நாம் உருவாக்கியிருக்கிறோம். அது தன்னுடைய பணியினை ஆரம்பித்திருக்கின்றது. முதலில் வந்த தகவல் தலைமைச் செயலாளரும், இன்னொரு அதிகாரியும் பேசிக் கொண்டிருந்தது பதிவாகியிருக்கிறது என்பதாகும். ஒருவர் பேசுவதை இன்னொருவர் கேட்பது, பதிவு செய்வது விஞ்ஞானம் வளர்ந்திருக்கின்ற இந்தக் காலகட்டத்தில் மிகச் சுலபமாக ஆகிவிட்டது. நம்முடைய கையிலே வைத்திருக்கின்ற cell phone-ஐ வைத்துக்கூட தற்பொழுது photo எடுக்கமுடிகிறது. நமக்குப் பக்கத்திலேயிருந்து இரண்டு பேர் பேசிக் கொண்டிருந்தால், அவர்கள் அறியாமல் அதைப் படம் எடுத்துக்

கொள்ளலாம் என்ற அளவிற்கு விஞ்ஞான வளர்ச்சி இப்போது ஏற்பட்டிருக்கின்றது. அது நாமெல்லாம் அன்றாடம் காணுகின்ற ஒரு நடைமுறையாகவும் ஆகிவிட்டிருக்கின்றது.

ஆனால், விசாரணைக் குழுவிற்கு விடப்பட்டிருக்கின்ற முதல் வழக்கு--தலைமைச் செயலாளரும் ஒரு அதிகாரியும் பேசிக் கொண்டதாகப் பதிவான ஒரு ஒட்டுக் கேட்பு நிகழ்ச்சியின் விசாரணை முடியவில்லை--விசாரணைக்கு நியமிக்கப்பட்ட நீதியரசர் அந்தப் பணிகளைத் தொடங்கி நடந்து கொண்டிருக்கின்ற நேரத்தில், இடையிலே இப்படி ஒரு செய்தி வந்திருப்பது நான் உள்ளபடியே வருந்துகின்ற ஒன்றாகும். இந்தச் செய்தி வந்ததற்குக் காரணமாக இருந்த ஒருவர், நம்முடைய அமைச்சர் பெருமக்களிலே ஒருவர் என்கிற நேரத்தில், நான் மேலும் வேதனைப்படுகின்றேன். அதற்கான விளக்கத்தை இங்கே நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எடுத்துக்காட்டியதைப்போல, அளிப்பதற்கு முன்பு, அதையும் இந்த விசாரணைக் கமிஷனோடு சேர்த்துச் செய்யலாம் என்று நாங்கள் சிந்தித்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு முன்பே, அந்த அம்மையார் தன்னுடைய இராஜினாமாவை எழுதி அனுப்பியிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதைத்தான் இங்கே கேட்டார்கள். அந்தப் பேச்சில் நான் இப்போது அதைப்பற்றிச் சொன்னால், முன்கூட்டியே விசாரணையின் முடிவை அறிவித்துவிட்டதாக ஆகிவிடும். இரண்டு விஷயங்களையும் சொல்கிறேன். முதல் விவகாரத்தில் இரண்டுபேர் பேசியதில் எந்தவிதமான இரகசியங்களும் இல்லை. தேசத் துரோகமான அல்லது நாட்டுத் துரோகமான அல்லது அரசுக்கு விரோதமான எந்த விஷயங்களும் முதல் விவகாரத்திலே பேசவில்லை. ஆனால், இந்த விவகாரத்தில் இலஞ்சம் வாங்கிய தன்னுடைய சொந்தக்காரர் ஒருவரைப் பாதுகாக்கின்ற முயற்சி அமைச்சர் ஒருவரால் செய்யப்பட்டிருக்கிறதென்பது, நான் வெட்கப்பட வேண்டிய ஒன்றாகும். நான் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. நான் வெட்கப்படுகின்றேன் அதற்காக. அந்த அம்மையாரும் தான் செய்த தவறை உணர்ந்து, எனக்கு எழுதிய கடிதத்தில், "எனது உறவினர் ஜவகர் மீது நடைபெற்றுவரும் விசாரணையின்போக்கில் குறுக்கிட்டு, அமைச்சர் என்ற முறையில் எனது செல்வாக்கை, எனது அதிகாரத்தைச் செலுத்த வேண்டுமென்ற உள் நோக்கம் கிஞ்சிற்றும் எனக்குக் கிடையாது என்றாலும், விஜிலன்ஸ் டைரக்டருடன் பேசியபோது, ஜவகர் தொடர்பான விஷயத்தை ஒரு கோரிக்கை என்ற முறையில் பரிசீலிக்கச் சொன்னேன். எனினும் அப்படிச் செய்ததைக்கூட தவறு என்று இப்போது உணருகிறேன். அதற்குப் பரிகாரமாக எனது அமைச்சர் பொறுப்பை இராஜிநாமா செய்கிறேன்" என்று சொல்லியிருக்கிறார்கள்.



*முற்பகல் 10-00*

அமைச்சர் இராஜிநாமா செய்தது குறித்து நான் இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை. அதைப்பற்றி கலந்து ஆலோசித்துக்கொண்டிருக்கிறேன். அது ஆய்விலே இருக்கிறது. இதில் முடிவு எடுக்கின்ற அதேநேரத்தில், எப்படி இந்த டேப் விவகாரம், ஒட்டுக்கேட்கிற விவகாரம் நடைபெறுகிறது என்பதை ஆராய, அத்தகைய வேகமானப் பணிகளை நம்முடைய துப்பறியும் இலாகாவின்மூலமாகச் செய்திட, அந்த விசாரணையையும் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

அடுத்து, இது தொடர்பாக இன்னொரு விசாரணைக் குழுவையும் அல்லது இதே விசாரணைக் குழு இதையும் இணைத்து விசாரிக்கலாமா என்பதையும் யோசித்து நடவடிக்கை எடுக்கப்படும். தவறு செய்தவர்கள் யாரும் மன்னிக்கப்படமாட்டார்கள். அதிலும், இலஞ்சம் வாங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்காக துணைபோவதோ, ஆதரவு அளிப்பதோ பெரும் குற்றம் என்பதை நானும் நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் உணர்வதைப்போல உணருகிறேன் என்பதை எடுத்துச் சொல்லி, இந்த விவகாரத்தில் அடுத்து எடுக்கிற நடவடிக்கைகளை அரசு அவ்வப்போது அறிவிக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

## (ஆ) மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட நிவாரணம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஏ. செங்கோட்டையன், சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ள நிவாரணப் பணிகள் குறித்தும், பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளின் நிலங்களின் பரப்பளவு குறித்தும், எவ்வளவுபேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்ற விவரம் குறித்தும், வெள்ள நிவாரணப் பணிகளிலே அவர்களுக்கு நிவாரணம் வழங்குகிறபோது, நில வரியைப் பிடித்த பின்புதான் அந்த நிவாரணம் வழங்கப்படுகிறது என்ற அச்சம் பல இடங்களிலே கூறப்பட்டிருக்கிறது.

நிவாரண உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது குறித்து விரிவான வெள்ளை அறிக்கை ஒன்றினை இந்த அரசு அவைக்கு வைக்க வேண்டுமென்று நான் வலியுறுத்தி அமருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள், மார்ச் மாதத்திலே பெய்த மழையின்போது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மத்திய அரசாங்கத்தினுடைய நிதி நமக்குக் கிடைப்பதற்கு முன்னாலேயே, 300 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவிகளைச் செய்ய வேண்டுமென்று ஆணையிட்டார்கள். அந்த ஆணை பல மாவட்டங்களிலே மாவட்ட ஆட்சித் தலைவர்களாலே நிறைவேற்றப்பட்டு வருகிறது. சில இடங்களிலே--மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல--சிலருக்குக் கிடைப்பதில் சில இடையூறுகள் இருப்பதாக இங்கே தெரிவித்தார்கள். இந்த மாதத்திற்குள்ளாக எல்லா மாவட்டங்களிலேயும் நிவாரண உதவிகள், பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் போய்ச் சேரக்கூடிய வகையில் இந்த அரசு உரிய நடவடிக்கையை நிச்சயமாக எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-05

### (இ) பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம் இரத்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நம்முடைய அரசு மேல்நிலைக் கல்வி முடித்து அரசுக் கல்லூரிகளுக்குச் செல்கின்ற மாணவர்களுக்கு tuition fees என்று அழைக்கப்படுகின்ற அந்தக் கட்டணத்தில், சலுகையை அறிவித்திருக்கிறது. அதே சலுகை, அரசு பாலிடெக்னிக்குகளில் பயிலக்கூடிய மாணவர்களுக்கும் பொருந்தவேண்டுமென்கிற விருப்பம்,





அந்த மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் இருக்கிறது. அதனையும் நிறைவேற்றித் தருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அரசு பாலிடெக்னிக்குகளில் tuition கட்டணமாக 2,500 ரூபாயும், சிறப்புக் கட்டணமாக 1,000 ரூபாயும், development charges என்ற அடிப்படையிலே 1,000 ரூபாயும், ஆக மொத்தம் 4,500 ரூபாய் வசூலிக்கப்படுகிறது. அரசு உதவிபெறும் கல்லூரிகளிலும் 4,500 ரூபாய்தான் வசூலிக்கப்படுகிறது. கடந்த ஆண்டு, அரசுக் கல்லூரிகளில் படிக்கிற மாணவர்கள் அனைவருக்கும் tuition fees--அந்தக் கட்டணமே இல்லையென்று கலைஞர் அவர்கள் அறிவித்து, அது நடைமுறையில் இருக்கிறது. உங்களுடைய கோரிக்கைகுறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்துபேசி, சாத்தியம் இருக்குமானால், வருங்காலங்களில் அதைப்பற்றி முடிவு செய்யப்படும்.

### (ஆ) மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட நிவாரணம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மார்ச் மாதம் பெய்த மழையால் ஏற்பட்ட பாதிப்புக்கு வெள்ள நிவாரணம் வழங்குவதுகுறித்து, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இங்கு பதிலளித்தார்கள். அவர்கள் எங்கள் கடலூர் மாவட்டத்திற்கு வருகை தந்தபோது, முந்திரிக்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்து நாங்கள் நேரடியாக விளக்கினோம். ஆனால், இதுநாள்வரையிலும் பாதிப்புகளைக் கணக்கெடுத்து, எந்த முந்திரி விவசாயிக்கும் எந்தவித நிவாரணமும் வழங்கப்படவில்லை. அதற்கு நம்முடைய அரசுத் துறைச் செயலாளர்கள், அலுவலர்கள் சொல்கின்ற காரணம், முந்திரியினுடைய பாதிப்பு 50 விழுக்காட்டிற்குமேல் இருந்தால்தான் நிவாரணம் தரமுடியும் என்று மத்திய அரசு சொல்லியிருக்கிறது. அதனால் தரமுடியவில்லை

[திரு. தி. வேல்முருகன்] [2008 மே 14

என்று காரணம் சொல்கிறார்கள். ஆனால், மாண்புமிகு அமைச்சர் மற்றும் துறையினுடைய செயலாளர் ஆகியோரோடு பேசுகின்றபோது, 40-ல் இருந்து 45 சதவிகிதம் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது என்ற கருத்தை உள்வாங்கியிருக்கிறார்கள். ஆனால், பாதிக்கப்பட்டுள்ள முந்திரி விவசாயிகளுக்கு நிவாரணமாக நான் ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபாய் தரவேண்டுமென்று கேட்டேன், 10 ஆயிரம் ரூபாய் தர வேண்டுமென்று கேட்டேன். அதைத் தரவில்லையென்று சொன்னாலும்கூட, ஏக்கருக்கு 5 ஆயிரம் ரூபாயாவது வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட வேண்டும். அதேபோல், நேற்றையதினம் இரவு 11 மணி அளவில் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன், போதும். உட்காருங்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மந்திரிகளுக்கு இன்றைக்கு நிறைய மானியங்கள் இருக்கின்றன. ஆகவே, முந்திரியைப்பற்றி இன்னொரு நாள் பேசிக்கொள்ளலாம். (சிரிப்பு)

## (ஈ) இராமேஸ்வரம் தங்கச்சிமடத்தைச் சேர்ந்த மீனவர்கள் கரை திரும்பாதது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம், தங்கச்சிமடத்தைச் சேர்ந்த மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்று 15 நாட்களாகியும் இதுவரை கரை திரும்பாததால் ஏற்பட்டுள்ள நிலைகுறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் ஆகியோர் விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். முதலாவதாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மீனவர்களுடைய இன்றைய நிலை என்னவென்று சொன்னால், "ஒருநாள் போவார், ஒருநாள் வருவார், ஒவ்வொரு நாளும் துயரம்" என்கின்ற அளவுக்கு மீனவர்களுடைய வாழ்க்கை நிலை இருந்துகொண்டிருக்கிறது. கடந்த 12 நாட்களுக்கு முன்பாக, இராமேஸ்வரம் பகுதி, தங்கச்சிமடத்தைச் சேர்ந்த 19 மீனவர்கள்,



2008 மே 14] [திரு. டி. ஜெயக்குமார்]

நண்டு பிடிக்கச் சென்று, இதுவரை கரை திரும்பவில்லை. பொதுவாக நண்டு பிடிக்கச் செல்பவர்கள், திசை தவறிச் செல்வதற்கு வாய்ப்புகள் இல்லை. எனவே, அவர்களை இலங்கைக் கடற்படையினரோ அல்லது மற்ற தீவிரவாத அமைப்புகளோ கடத்தியிருக்கலாம் என்கின்ற ஒரு சந்தேகம் நிலவி வருகின்ற சூழ்நிலையில், இதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது என்ற கேள்விக்கணையோடு -- கடந்த மார்ச் மாதத்தில் தங்கச்சிமடத்தைச் சேர்ந்த கிருஷ்டி என்ற மீனவர் சுடப்பட்டார். அதே இராமேஸ்வரம் பகுதியில் இருந்து, மார்ச் மாதத்தில் கிட்டத்தட்ட 8 படகுகளில் கடலுக்குள் சென்ற மீனவர்களை நடுக்கடலிலே ஒரு படகில் இருந்த 8 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தூக்கி எறிந்து . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், விஷயத்தை மட்டும் சுருக்கமாகச் சொல்லுங்கள். கவனத்தை ஈர்க்கிறேன் என்று இந்த விஷயத்தை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு நிமிடங்கள். அதற்கும் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்திருக்கிறேன். 8 மீனவர்கள் நிர்வாணமாக்கப்பட்டு, கடலிலே தூக்கி எறியப்பட்டு, அவமானப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதிக்கு நேர் கிழக்கே, இலங்கையைச் சார்ந்தவர்கள், நம்முடைய எல்லையிலே வந்து மீன் பிடிக்கின்றார்கள். எனவே, அரசு நம்முடைய மீனவர்களுக்கு ஒரு கண்ணிலே சுண்ணாம்பும், அதே நேரத்தில் இலங்கை மீனவர்களுக்கு ஒரு கண்ணிலே வெண்ணெய்யும் வைக்கின்ற நிலையில், அன்றைக்கு சிங்களர்கள் மதுரையில் தாக்கப்பட்டு, சுடப்பட்டபோது, அவர்களுக்கு இந்த அரசு பத்து இலட்சம் ரூபாய் கொடுக்கின்ற சூழ்நிலையில், நம்முடைய மீனவர்கள் கடந்த இரண்டு வருடங்களில் எவ்வளவோ பேர் இறந்திருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன நிவாரணம் கொடுக்கப்பட்டிருக்கின்றது? மார்ச் மாதத்திலே மட்டும் கிட்டத்தட்ட இரண்டு கடிதங்கள் மத்திய அரசாங்கத்திற்கு முதலமைச்சர் அவர்கள் எழுதியிருக்கின்றார்கள். எழுதி என்ன பிரயோஜனம்?

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், கேள்வி நேரத்தை நிறுத்தி வைத்துவிட்டு இன்றைக்கு இந்தப் பிரச்சினையை எடுத்திருக்கிறோம். சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** முடித்து விடுகிறேன். தொடர்ந்து இதுபோன்ற நிகழ்வுகளைத் தடுப்பதற்கு, நம்முடைய மீனவர்களுக்கு உறுதியான பாதுகாப்பு வழங்குவதற்கு என்ன நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுத்திருக்கிறது என்பதைத்தான் நான் கேட்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரம், தங்கச்சிமடம் பகுதியைச் சேர்ந்த 19 மீனவர்களை 12 நாட்களாகக் காணவில்லையென்று, அவர்களது குடும்பத்தினர் அங்கு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும், மீன்வளத் துறை இயக்குநரிடத்திலும் மனு கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் எந்த ஆட்சிக் காலமாக இருந்தாலும், ஆண்டாண்டு காலமாக நாம் கச்சத்தீவை அவர்களுக்குக் குத்தகை விட்டதிலிருந்து, தொடர்ந்து தமிழ்நாட்டினுடைய மீனவர்கள் சிங்கள கடற்படையினரால் கைது செய்யப்படுவதும், சுட்டுக் கொலை செய்யப்படுவதும் போன்ற மனிதநேயமற்ற செயல்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். ஆனால், தமிழகத்தினுடைய முதல்வர், முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் அவர்கள் -- இப்போதுகூட சிங்கள மீனவர்கள் தமிழ்நாடு கடலோர காவல் படையால் கைது செய்யப்பட்டு, பத்திரமாக அவர்களெல்லாம் கையசைத்துவிட்டுத் திரும்புகின்ற காட்சி புகைப்படங்களிலே வந்திருக்கிறது. நாம் எந்த மனிதநேயத்தோடு நடந்து கொள்கிறோமோ, அதற்கு நேர் மாறாக தமிழ்நாட்டு மீனவர்களையும், புலம் பெயர்ந்து உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்கு அகதிகளாக படகுகளிலே வருகின்ற ஈழத்து உறவுகளையும் சுட்டுக் கொல்வதையும், கைது செய்வதையும் வாடிக்கையாகக் கொண்டிருக்கிற சிங்களப் பேரினவாத அரசை— மத்திய அரசை வலியுறுத்தி, மத்திய அரசினுடைய கடற்படையை வலியுறுத்தி, எதிர்வரும் காலங்களில் இதுபோன்ற பாதிப்பு இல்லாதிருப்பதற்கும், கடற்கரை எல்லைகளின் சரியான அளவைக் காட்டுவதற்கும் நம்முடைய அரசு முயற்சி எடுக்குமா? மீனவர்களுடைய துயரத்தைப் போக்குவதற்கு, ஒரு நிரந்தரத் தீர்வை தமிழக அரசும், தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களும், புலம் பெயர்ந்து வாழுகின்ற தமிழர்களுக்கெல்லாம் தலைவனாக விளங்குகின்ற டாக்டர் கலைஞர் அரசு, ஒரு நிரந்தரப் பாதுகாப்பு அரணை ஏற்படுத்தித் தருவதற்கு முன்வருமா என்கிற கேள்வியோடு இந்த கவன ஈர்ப்பை பேரவையின்வாயிலாக ஈர்த்து அமர்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதைப்போல, தொடர்ந்து இதுபோன்ற சம்பவங்கள் நம்முடைய தமிழக மீனவர்களுக்கு இலங்கைக் கடற்படையினால் நடந்து வருவதையும், அதற்கு நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் தொடர்ந்து எடுத்து வருகின்ற நடவடிக்கைகள்மூலமாக அவர்கள் உடனுக்குடன் விடுவிக்கப்படுவதும் இந்த அவை அறிந்த ஒன்று.

கடந்த 12 நாட்களுக்கு முன்னால் தங்கச்சிமடம் பகுதியில் மீன் பிடிக்கச் சென்றவர்கள், இங்கே உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னதைப்போல, நண்டு பிடிக்கச் சென்றவர்கள், காணாமல் போயிருக்கின்றார்கள். அவர்களைத் தேடுகின்ற பணி நம்முடைய இந்திய கடற்படையினரால் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதனை இந்த அவையின்மூலமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், பழைய இரும்பு வணிகர்கள், மோட்டார் வண்டி வகைகள் பழுது பார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் (முறைப்படுத்துதல், கட்டுப்பாடு மற்றும் உரிமம் வழங்கல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், பழைய இரும்பு வணிகர்கள், மோட்டார் வண்டி வகைகள் பழுது பார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் (முறைப்படுத்துதல், கட்டுப்பாடு மற்றும் உரிமம் வழங்கல்) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2008 மே 14

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், பழைய இரும்பு வணிகர்கள், மோட்டார் வண்டி வகைகள் பழுது பார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் (முறைப்படுத்துதல், கட்டுப்பாடு மற்றும் உரிமம் வழங்கல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (ஆ) தமிழ்நாடு காவல் சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல் சட்டமுன்வடிவு. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.



2008 மே 14]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

[பேரவைத் தலைவர்] [2008 மே 14

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 10-15

**(ஈ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



2008 மே 14]

**(உ) பி.எஸ்.ஜி. பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2008**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு பி.எஸ்.ஜி. பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு பி.எஸ்.ஜி. பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**(ஊ) தியாகராஜர் அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2008**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தியாகராஜர் அறிவியல் தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தியாகராஜர் அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10752, திரு. கு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10774, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11635, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12371, திரு. தா. மலரவன்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13249, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6221, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6443, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10339, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10996, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11150, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11434, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11785, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12036, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12303, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14405, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14531, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15059, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15151, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10356, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13593, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13855, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15672, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1478, டாக்டர் எம்.கே. விஷ்ணு பிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணு பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "1980-ல் ஓய்வு பெற்ற கிராம நிருவாக அதிகாரிகளுக்குக் குறைந்தபட்ச ஓய்வூதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2550, திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விதவைப் பெண்களுக்கு வயது வரம்பைத் தளர்த்தி ஓய்வூதியம் வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய *50* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*7,932,13,92,000*/-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3826*, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆண் வாரிசுகள் இருந்தாலும் *60* வயதான முதியோர்களுக்கு விண்ணப்பித்த ஒரு மாத காலத்திற்குள் முதியோர் பென்சன் வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய *50* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*7,932,13,92,000*/-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3985*, திரு. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *4879*, திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முதியோர்களுக்கு ஆண் வாரிசுகள் இருந்தாலும் உதவித் தொகை வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய *50* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*7,932,13,92,000*/-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *5026*, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவு ஊழியர்கள், கூட்டுறவு வங்கி ஊழியர்கள், கூட்டுறவு சர்க்கரை ஆலை ஊழியர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு இணையான



பென்சன் வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய *50* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*7,932,13,92,000*/-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *5661*, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விதவைப் பெண்களுக்கு வயது வரம்பைத் தளர்த்தியும், ஆண் குழந்தைகளுக்கு *18* வயது என்ற வரம்பைத் தளர்த்தியும் ஓய்வூதியம் வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய *50* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*7,932,13,92,000*/-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *8218*, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சோளிங்கர் சட்டமன்றத் தொகுதி, காவேரிப்பாக்கம் ஒன்றியம், தப்பூர் கிராமத்தில் அரசு வழங்கிவந்த ஓய்வூதியம் நிறுத்தப்பட்டுள்ளது. அதனை உடனே வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய *50* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*7,932,13,92,000*/-ல் ரூ.*100*/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *8865*, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதியில் ஓய்வூதியம் வேண்டி விண்ணப்பித்த சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு ஓய்வூதியம் உடனடியாக வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9990, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மொழிப் போர் தியாகிகளுக்கு வழங்குகின்ற ஓய்வூதியத்தை மேலும் உயர்த்தி வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10045, திரு. ல. ராதாகிருஷ்ணன்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி தொகுதியில் வாரிசுகள் இருந்தும், கைவிடப்பட்ட தாய், தந்தையர்க்குச் சட்டவரம்பைத் தளர்த்தி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பரிந்துரைகளின்படி முதியோர் ஓய்வூதியம் வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10448, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராமங்களில் எந்தவித ஆதரவுமின்றி வறுமையில் வாழும் முதியோர்களுக்கு அரசே கிராம நிருவாக அதிகாரிகளின்மூலம் கண்டறிந்து, இலவசமாக எந்தவிதச் செலவுமின்றி ஓய்வூதியம் கிடைக்கச் செய்யவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11227, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முதியோருக்கு ஓய்வூதியங்கள் கூடுதலாக வழங்கவும், தபால் நிலையத்தில் மணியார்டர்மூலம் வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11750, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சி தொகுதியில் மொழிப் போர், சுதந்திரப் போராட்டத் தியாகிகள், அரசுப் பணியாற்றியோர், முதியோர், விதவை என எவரும் விடுதல் இல்லாமல் ஓய்வூதியம் வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11841, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஏழை விவசாயக் குடிமக்கள் அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்க அரசு ஆவன செய்யவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11859, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலைவாய்ப்பு அலுவலகங்கள்மூலம் சீனியாரிட்டி அடிப்படையில் பரிந்துரைக்கப்பட்டு அரசுப் பணியில் அமர்த்தப்படுவோர் வயது அதிகமாக உள்ளதால், பணிக்கால அளவைக் கணக்கில் கொள்ளாமல், ஓய்வூதியம் முழுமையாக வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12893, திரு. ராம. சுப்புராம்.

**திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓய்வூதியங்கள் பெறுவதற்கான விதிமுறைகளைத் தளர்த்தவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 13004, திரு. எல். ரவிச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 13171, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "1988 முதல் 1997 வரை ஓய்வுபெற்ற அரசு ஊழியர்களின் அனைத்து ஓய்வுக்கால பணிப் பலன்களை வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14041, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் ஓய்வூதியம் கேட்டு விண்ணப்பித்தவர்களுக்கு விரைந்து வழங்கிட நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14235, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர் தொகுதியில் உதவித் தொகை கேட்டு விண்ணப்பித்த அனைவருக்கும் உதவித் தொகை வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 14330, திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தியாகிகளுக்கு ஓய்வூதியம், படி ஆகியவற்றை அதிகப்படுத்தி வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 15347, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விதவைப் பெண்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத் தொகையைப் பெற விதிக்கப்பட்டுள்ள வயது வரம்பைத் தளர்த்தவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16049, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூட்டுறவுத் துறையில் கூட்டுறவு வங்கியில் பணிபுரியும் ஊழியர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதைப்போல், ஓய்வூதியம் வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 16794, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அனைத்து அரசு மற்றும் தொழிற்சாலைகளில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 17071, திரு. வீர. இளவரசன்.



**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓய்வூதியம் பெற்றவர்கள் இறந்தபின் அவர்களது மனைவி அல்லது வாரிசுதாரர்கள் அதற்குரிய ஓய்வூதியம் பெறுவதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,932,13,92,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதித் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் பற்றிய மானியக் கோரிக்கைகள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இம்மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் பேசிய பின்னர், மாண்புமிகு நிதி அமைச்சரவர்களின் பதிலுரைக்குப் பின்னர், மானியக் கோரிக்கைகள் மீதான வாக்கெடுப்பு சரியாக பிற்பகல் 1-30 மணிக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்களது உரையை கொடுக்கப்பட்டுள்ள நேரத்திற்குள் முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம் தொடங்குகின்றது. இன்று 5 மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு

@ 847 முதல் 919 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I, II & III ஆக அச்சிடப்பட்டுள்ளன.

வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் 5 மானியக் கோரிக்கைகளிலும் சேர்த்தே பேசலாம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி, நீங்கள் பேசுவதற்கு ஒதுக்கப்பட்ட நேரம் 10 நிமிடங்கள்.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இம்மன்றத்தில் பேச வாய்ப்பளித்த 6½ கோடி தமிழ்ச் சமுதாயத்தின் ஆராதனைக்குரிய தெய்வம், தமிழகத்தில் எத்தனையோ கட்சிகள் இருந்தும், கட்சிகளில் தகுதி வாய்ந்த தலைவர்கள் இருந்தும், வாரிசுகளையே முன்னிலைப்படுத்தும் நிலையில், அடிமட்டத் தொண்டர்களையும் சட்டமன்ற உறுப்பினராகவும், அமைச்சர்களாகவும் ஆளாக்கி அழகுபார்க்கும், ஏழை, எளிய மக்களின் இதய சிம்மாசனத்தில் நீக்கமற நிறைந்திருக்கும் எங்கள் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, எனது நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் பேசி முடிக்கும் வரை மணி அடிக்காமல் இருக்கப்போகின்ற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். ஆளும் கட்சியில் பலரிடமிருந்து பேரவைத் தலைவர் அவர்களுக்கு அவ்வப்போது சைகைகள் வந்தாலும், பேரவைத் தலைவரிடம் போராடி, எங்களைப் போன்ற உறுப்பினர்கள் பேசுவதற்கு நேரத்தைப் பெற்றுத் தரும் எங்களின் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு கொறடா அவர்களுக்கும் நன்றி சொல்லி, என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணித்தரமான கொள்கைபற்றி குறிப்பிடுவது அவசியம் என்று கருதுகிறேன்.

தெய்வத்திரு புரட்சித் தலைவர் அவர்களால் டெல்லி மாநிலங்களவைக்கு உறுப்பினராக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை தேர்ந்தெடுத்து அனுப்பிவைத்தார்கள். கடந்த 23-4-1984-ல் மாநிலங்களவையில் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டபோது, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பேசியது. "I have come here as the representative of the weaker section of our society. The toiling masses the crores of humble workers, farmers, poor



agricultural labourers and women to give oral manifestation to their desires and make them known to the rest of the country" என்று சொன்னார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய மாநிலங்களவை உரையின்படியே தமிழ்நாட்டின் முதலமைச்சரான பிறகு, நலிந்த பிரிவினர், உழைக்கும் வர்க்கத்தார், ஏழ்மையில் வாழுகின்ற உழைப்பாளர்கள், உழவர்கள், பெண்கள், ஏழை சமுதாயத்தின் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் 1991 முதல் 1996 மற்றும் 2001 முதல் 2006 வரை வரியில்லாத பட்ஜெட்டுகளைத் தந்து பல சலுகைகள் தந்தவர் தங்கத் தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

இன்றைய நிலையில் வரியில்லாத பட்ஜெட் என்று மேலோட்டமாக அறிவித்துவிட்டு, அரசாணைகள்மூலம் சொத்து வரி உட்பட இன்னும் பிற வரிகளை ஏற்றிவிட்டு--இரண்டு வருடத்திற்கு முன்னால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே இருந்த மக்களின் அத்தியாவசியப் பொருட்களின் விலை இப்போது தி.மு.க. ஆட்சியில் இரண்டு, மூன்று மடங்காக உயர்ந்துள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் பெயரில் உள்ள தொலைக்காட்சியில் லாஜிக் இல்லாத மேஜிக் நிகழ்ச்சியை ஒளிபரப்புகிறீர்கள். இங்கே லாஜிக்கான மேஜிக்கை நடத்துகிறீர்கள்.

நிருவாகமும், நீதித் துறையும் பணியாற்றுவதற்கு அடிப்படை சட்டமன்றப் பேரவைதான். மக்களாட்சி முறையில் ஆளுங்கட்சியும் இருக்கவேண்டும். எதிர்க்கட்சியும் இருக்கவேண்டும். அந்த வகையில்தான் the ruling party has its way. The opposition party has its say என்று சொல்வார்கள்.

செய்ய வேண்டியவை எவை என்பவற்றை எடுத்துச்சொல்ல வேண்டிய பொறுப்பு எதிர்க்கட்சிக்கு இருக்கிறது. அவற்றை தெரிந்துகொண்டு செய்யவேண்டிய பொறுப்பு ஆளுங்கட்சிக்கு இருக்கிறது. ஆகவே, சட்டமன்றத்திலும் சரி, தொகுதி வளர்ச்சிப் பணிகளிலும் சரி, ஆளுங்கட்சிக்கும் தோழமைக் கட்சிகளுக்கும் நடைபெறுகின்ற பணிகளில் நான்கில் ஒரு பங்குகூட, எதிர்க்கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் இடம்பெறுகின்ற சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெறாமல் இருப்பது, தமிழகத்தில் இந்தத் தொகுதிகள் இல்லாதவைபோல் இருக்கின்றன.

கடந்த 8-4-2008 அன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டமன்றத்திற்கு வந்து கேள்வி-பதில் நேரத்தை ஒத்திவைத்து நாட்டின் முக்கியப் பிரச்சினையான ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இந்த அரசின் நிலை குறித்து விவாதிக்க நேரம் ஒதுக்கி அனுமதிக்க வேண்டும் என்றும், பாராளுமன்றத்தில் இதுபோல நடைமுறை இருக்கிறது என்றும் மாண்புமிகு அம்மா அவர்கள் கருத்து தெரிவித்தும்கூட வாய்ப்பு கொடுக்கப்படவில்லை. ஒகேனக்கல் பிரச்சினை என்பது நமது உரிமைப் பிரச்சினையாகும். ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை எந்த எதிர்ப்பு வந்தாலும் சட்டமன்றத்தில் நிறைவேற்றியே தீருவோம் என்று ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இடையில் மூன்று நாட்கள் சட்டப் பேரவைக்கு விடுமுறை வந்தபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள், கர்நாடகாவில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு அமைத்த பிறகு இந்தத் திட்டத்தை தொடங்கலாம் என்று தன்னிச்சையாக அறிவித்தார். ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில், தி.மு.க. அரசின் துரோகத்தை எடுத்துரைக்கும் தைரியம் புரட்சித் தலைவி அம்மாவைத் தவிர இங்கே இருக்கின்ற எந்த எதிர்க்கட்சித் தலைவருக்கும் கிடையாது என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) வெட்டுத் தீர்மானங்கள், cut motions . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைப்பற்றி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எவ்வளவு அக்கறை உண்டோ அவ்வளவு அக்கறை தமிழகத்திலே இருக்கின்ற அத்தனைக் கட்சிகளுக்கும் உண்டு. ஆனால், (குறுக்கீடுகள்) ஏதோ அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத்தான் அந்தத் திட்டம் சொந்தம் என்பதுபோன்று இங்கே ஒரு மாயையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த மாயை நிச்சயமாக மக்கள் மத்தியிலே எடுபடாது. ஏனென்று சொன்னால், கடந்த ஐந்தாண்டு காலத்திலே அந்த ஆட்சி நடைபெற்றது. அப்போது வெளிநாட்டுக் கடன் நமக்கு கிடைக்கவில்லை. வெளிநாட்டுக் கடன் கிடைக்காதபோது அந்த அரசு எந்தவித முயற்சியும் செய்யவில்லை. ஆனால், புதிய அரசு, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைமையிலே ஏற்பட்டு இருக்கின்ற அரசு, ஜப்பான் நாட்டோடு



பேசி கடன் பெற்று, இந்தத் திட்டத்தை எப்படியும் கொண்டுவருவோம் என்று அறிவித்து, அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். சில சூழ்நிலைகளில், ஒரு திட்டம் ஆரம்பித்தால் அதை முடிப்பதற்குப் பல மாதங்கள் ஆகும், பல வருடங்கள் ஆகும். அதைவிட்டுவிட்டு திடீரென்று ஏதோ அந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் இவர்களுக்குத்தான் சொந்தம் என்று கொண்டாடுவது மிகவும் கண்டிக்கத்தக்கது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

முற்பகல் 10-40

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் இயக்கத்தினுடைய தலைவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம் அவர்கள் பேசுகிறபோது கடந்த 5 ஆண்டு கால ஆட்சியில் வெளிநாட்டிலிருந்து எந்த நிதியுதவியும் பெறப்படவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டை இங்கே சொன்னார்கள். மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில் நெடுஞ்சாலைத் துறைக்கு 2,100 கோடி ரூபாய் உலக வங்கியிலிருந்து பெறப்பட்டது. 2,900 கோடி ரூபாய் பொதுப் பணித் துறைக்குப் பெறப்பட்டு பூர்வாங்க வேலைகள் எல்லாம் முடித்து ஒப்புதல் அளிக்கப்பட்டது. மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு 640 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. வனத் துறைக்கும் நிதி பெறப்பட்டிருக்கின்றது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** வெட்டுத் தீர்மானங்கள், Cut Motions. வெட்டுத் தீர்மானங்கள் ஆளுகிற கட்சிகள் கொடுக்கக் கூடாது. M.N. Kaul and S.L. Sakdher எழுதிய 'Practise and Procedure of Parliament' என்ற நூலில் உள்ள விதிப்படி வெட்டுத் தீர்மானங்கள் என்பது ஆளுகின்ற அரசின்மீது கொண்டு வருகிற மறைமுக நம்பிக்கையில்லாத் தீர்மானம் போன்றது என்று விதி குறிப்பிடுகிறது. ஆனால் இங்கே காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவில்தான் இந்த அரசு நடக்கிறது. இவர்கள் வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கக் கூடாது என்று பாராளுமன்ற மரபு சொல்கிறது.

நாடாளுமன்ற மக்களவையில் நோட்டீஸ் ஆபீஸ் என்று ஒரு அலுவலகம் உள்ளது. உறுப்பினர்களிடமிருந்து அனைத்து முன்னறிவிப்புகளும், கடிதங்களும் பெறப்படுகின்றன. உறுப்பினர்களுக்குத் தேவையான அனைத்துப் படிவங்களும் அங்கு வழங்கப்படுகின்றன. நாடாளுமன்றப் பணி குறித்து உறுப்பினர்களுக்கு எழும் சந்தேகங்களுக்கு அங்கு விளக்கம் அளிக்கப்படுகிறது. இதுமாதிரி ஒரு அலுவலகம் இங்கு ஏற்படுத்த வேண்டும்.

'Parliament Library and Reference, Research, Documentation and Information Service' என்ற அமைப்பு பாராளுமன்றத்தில் இருக்கிறது. அங்கே உறுப்பினர்களுக்குத் தேவையான பல்வேறு பொருள்கள் குறித்து புள்ளிவிவரங்களுடன் தகவல் உடனுக்குடன் தரப்படுகின்றது. அதேமாதிரி அமைப்பு இங்கு ஏற்படுத்த வேண்டும்.

Departmentally Related Standing Committees, நாடாளுமன்றத்திலும், மகாராஷ்டிரா, மேற்கு வங்காளம், கேரளா போன்ற பல்வேறு மாநிலச் சட்டமன்றங்களிலும் 'Departmentally Related Standing Committees' என்ற குழுக்கள் அமைக்கப்பட்டு சிறப்பாகச் செயல்படுகின்றன.

நிதிநிலை அறிக்கைமீது பொது விவாதம் முடிந்தவுடன் அங்கெல்லாம் அவை ஒத்திவைக்கப்பட்டு மானியக் கோரிக்கைகள் அந்தக் குழுக்களால் விரிவாக விவாதிக்கப்பட்டு, அவைக்கு, அறிக்கைகள் அளிக்கப்படுகின்றன. சட்டமுன்வடிவுகள் அவையால் நிறைவேற்றப்படுவதற்கு முன்பு அந்தக் குழுக்களால் ஆய்வு செய்யப்பட்டு, அறிக்கைகள் அளிக்கப்படுகின்றன. அதுபோன்ற குழுக்கள் இந்தப் பேரவையில் அமைக்கப்படவேண்டும்.

நிதிநிலை அறிக்கையையும், சட்டமுன்வடிவுகளையும் அதிகாரிகள் தயாரித்து அமைச்சர் ஒப்புதல் அளித்து அவற்றைப் பேரவையில் அப்படியே நிறைவேற்றுவதைவிட துறைக்குத் தொடர்பான குழுக்கள் அமைத்து அக்குழுக்களின் கருத்தறிந்து நிறைவேற்றுவது சிறப்பாக அமையும்.

Committee on Agriculture, Committee on Industry, Committee on Urban and Rural Development, Committee on Finance, Committee on Transport and Tourism, Committee on Home Affairs, இதுபோன்ற 17 குழுக்கள் மக்களவையில் அமைக்கப்பட்டு சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. பிற மாநிலச் சட்டமன்றங்களுக்கு முன்மாதிரியாகத் திகழ வேண்டிய தமிழ்நாடு சட்டமன்றத்தில் மேற்காணும் குழுக்கள் அமைக்கப்படாதது



வேதனைக்குரிய விஷயமாகும். நாடாளுமன்ற விதிகளைப்போல மகாராஷ்டிரா, மேற்கு வங்காளம், இராஜஸ்தான், பஞ்சாப், இமாச்சலப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் பேரவை விதிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

மக்களவை விதி 26-ல் வெள்ளிக்கிழமைகளில் கடைசி 2½ மணி நேரம் தனி உறுப்பினர் அலுவலாக ஒதுக்கப்பட வேண்டும் என உள்ளது.

நமது பேரவை, ஆளுநர் உரை கூட்டத் தொடர் மற்றும் பட்ஜெட் கூட்டத் தொடர், தவிர குளிர்கால கூட்டத் தொடர் 5 நாட்கள் நடைபெறுகின்றன. எனவே தனி உறுப்பினர் அலுவலுக்கு வாய்ப்பே இல்லாமல் போய்விடுகிறது. புரட்சித் தலைவர் ஆட்சியிலிருந்தபோது காமன்வெல்த் பாராளுமன்றச் சங்கம்மூலம் பல உறுப்பினர்களுக்கு வெளிநாடு சுற்றுப் பயணம் செய்யும் வாய்ப்பு கிடைத்தது. தற்போது மேற்படி சங்கத்தின் தமிழ்நாடு கிளையின் கூட்டம்கூட நடைபெறுவது இல்லை. சட்டமன்ற குழுக் கூட்ட . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கு. ஜெயக்குமார். (குறுக்கீடு) இன்றைக்கு correct-ஆக மணி 1-30-க்கு முடித்தாக வேண்டும், உட்காருங்கள். முனைவர் ஜெயக்குமார். (குறுக்கீடு) இன்றைக்கு correct-ஆக முடித்தாக வேண்டும், உட்காருங்கள். முனைவர். கு. ஜெயக்குமார்.

***முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, வாய்ப்புக்கு நன்றி. இந்த அவையிலே 5 முறை முதல்வராக இருந்து இன்றைக்கு இச்சபையில் 3-வது வருடத்தைத் துவக்கியிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு எடுத்துக் கொண்ட இந்த மானியக் கோரிக்கைகளின்மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் கருத்துகளை எடுத்து வைப்பதற்கு வாய்ப்பளித்த எங்களுடைய கட்சியின் தலைவர் மாண்புமிகு திரு. சுதர்சனம் அவர்களுக்கு என்னுடைய நன்றி. மூன்றாவது முறையாக அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் செயலாளராக என்னை பொறுப்பிலே அமர்த்தியிருக்கிற இந்திய அரசியலின் மகா சக்தி, அன்னை சோனியா காந்தி அம்மையார் அவர்களுக்கு என்னுடைய நன்றியினை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

(மேசையைத் தட்டும் ஒலி) காலம் குறுகியது என்ற காரணத்தால் கருத்துகளை விரைவாகவே எடுத்து வைக்க நான் விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

இந்த அவையிலே மதிப்புக் கூட்டு வரியின்மீது பேசியபோது, அந்த மதிப்புக் கூட்டு வரியை கடந்த அரசு எந்தக் காலத்திலும் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும், இந்த அரசுதான் அதை ஏற்றுக்கொண்டது என்றும், திராவிட முன்னேற்றக் கழகம், மத்தியிலே ஆட்சியிலே இருக்கின்ற ஒரே காரணத்தினாலே அதை ஏற்றுக்கொண்டது என்றும் இந்த அவையிலே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் அவர்கள் இங்கே கருத்துகளை எடுத்து வைத்தார்கள். நான் உண்மை நிலையை விளக்குவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை இந்த அவையிலே சமர்ப்பித்தபோது, அன்றைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த அவையை வேண்டினார்கள். 'வாட்' முறையை உடனடியாக, விரைவாக அமல்படுத்த இந்த அவையிலே இருக்கின்ற மாமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று வேண்டியதை உறுப்பினர் மறந்துவிட்டார் என்று நான் கருதுகின்றேன்.

அதுமட்டுமல்ல, வணிக வரித் துறையானது 100 சதவிகிதம் கணினிமயமாக்கப்பட்டிருக்கின்றது, தயார் நிலையில் இருக்கின்றது என்றும் சொன்னார்கள். அடுத்த நிதிநிலை அறிக்கையிலே, அதாவது 2004-2005 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே பேசுகின்றபோது, மீண்டும் எல்லா நிலைகளிலும் நாங்கள் தயார்படுத்தி வைத்திருக்கின்றோம் என்று சொன்னார்கள். ஆனால், 2005-2006 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கின்றபோதுதான், இந்த 'வாட்' வரி முறையிலிருந்து பின்வாங்கிக்கொண்டார்கள். ஏனென்றால், அரசியல் ஆதாயத்திற்காக. மக்களுடைய நன்மையைக் கருதி எடுக்கப்பட்ட முடிவாக இருந்திருந்தால் அன்றையதினம் 2003-2004-லே சொன்னபோது இது நல்லதொரு திட்டம், நாட்டுக்கு நன்மை பயக்கிற திட்டம், அதிக வரிகளைக் கொடுக்கின்ற திட்டம், இந்தத் திட்டம் சமச் சீர் திட்டத்தை ஏற்படுத்துகின்றது என்று அன்று சொன்னவர்கள், பின்பு தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து சாராரும் ஒருமனதாக ஏற்றுக்கொண்ட பிறகுதான் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று பின்னுக்கு அடித்துவிட்டார்கள்



என்று சொன்னால் அதுதான் உண்மை. இந்த நேரத்தில் மற்றுமொரு கருத்தை நான் இங்கே கவனத்திற்குக் கொண்டு வர கடமைப்பட்டிருக்கின்றேன். அன்றையதினம் மத மாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டுவந்தபோது இதுபோன்ற ஒருமித்த கருத்தை ஏன் அன்றைக்கு இவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று எனக்குத் தெரியவில்லை.

அதுமட்டுமல்ல, விலைவாசியைப் பற்றி இந்த மாமன்றத்திலே விவாதிக்கின்றபோது விலைவாசி ஏறியதற்கு மத்திய அரசும், மாநில அரசும் காரணம் என்று கவுண்டமணி, செந்தில் வாழைப்பழக் கதையைப் போன்று இங்கே எடுத்து வைத்து, அன்றைக்குப் பேசினார்கள். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள்கூட தெளிவான விளக்கத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். இந்த நேரத்திலே நான் ஒரு கருத்தை இங்கே வலியுறுத்த விரும்புகின்றேன்.

இங்கே உலக வங்கியின் ஓர் அங்கமாக இருக்கின்ற International Monetary Fund துணைத் தலைவர் ஜான் லிப்ஸ்கி அவர்கள் சொல்கிறார்கள். It is a global crisis. இது இந்தியாவை மட்டும் சார்ந்தது அல்ல. பண வீக்கத்தை எடுத்துக்கொண்டால் இந்தியாவின் பண வீக்கம் 7.61 சதவீதமாக இருக்கிறது. ஆனால், அதேநேரத்தில் நம்முடைய பொருளாதாரத்தை ஒத்த சைனாவின் பண வீக்கத்தை எடுத்துக்கொண்டால் 8.7 சதவிகிதம்; இந்தியாவைவிட அதிகம். இந்தோனேஷியாவை எடுத்துக்கொண்டால் 17.9 சதவிகிதம், இலங்கையை எடுத்துக்கொண்டால் 20 சதவிகிதம், பாகிஸ்தானை எடுத்துக்கொண்டால் 17.2 சதவிகிதம், பங்களாதேஷை எடுத்துக்கொண்டால் 11 சதவிகிதம், பிரேசில் நாட்டை எடுத்துக்கொண்டால் 4.6 சதவிகிதம். நான் முன்னே சொன்ன நாடுகள் எல்லாம் பெட்ரோலியப் பொருட்களைச் சார்ந்த நாடுகளாக இருக்கின்றன. விலைவாசி என்பது உலக அளவிலே இன்றைக்கு உயர்ந்து கொண்டிருக்கிறது. இதற்காக இந்த அவையிலே பேசிய மாமன்ற உறுப்பினர் அவர்கள் மாண்புமிகு பிரதமர் அவர்களும், மத்திய நிதி அமைச்சர் அவர்களும், மக்களை ஏமாற்றுகிறார்கள் என்ற ஒரு கருத்தை அரசியல் நாகரீகத்தை மீறி இங்கே தெரியப்படுத்தி இருக்கிறார்கள். எனவே அவர் தெரியாத்தனமாக பேசுகின்ற பேச்சு, அரசியல் நாகரீகம் தெரியாமல் பேசுகின்ற பேச்சு, பொருளாதாரம் அறியாமல் பேசுகின்ற பேச்சு. ஒப்பற்ற தலைவர், இன்றைக்கு பொருளாதார ஞானி உலக அளவிலே என்று சொன்னால் திரு. மன்மோகன் சிங் அவர்கள்தான் என்பதை யாரும் இல்லை

என்று சொல்ல முடியாது. அத்தகைய ஒரு ஒப்பற்றத் தலைவரை இன்றையதினத்திலே மக்களை ஏமாற்றுகிறார் என்று சொன்னால், யார் மக்களை ஏமாற்றுபவர்கள் என்பதை மாமன்றத்தில் இருக்கின்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள் என்பதை இங்கே எடுத்து வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நான் மூன்றாவது முறையாக இலவச அரிசியைப் பற்றி இந்த மாமன்றத்திலே ஒரு கருத்தை எடுத்து வைக்க விரும்புகிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டியதில்லை; இதை ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று விரும்புகின்றேன். தங்களுடைய நிதிநிலை அறிக்கையிலே 1,950 கோடி ரூபாயை நீங்கள் உணவு மானியமாக வழங்கி இருக்கின்றீர்கள். அரிசிக்கு மட்டும் என்று எடுத்துக்கொண்டால் மானியம் 1,600 கோடி ரூபாய் நீங்கள் கொடுத்திருக்கின்றீர்கள். இப்போது எல்லா மக்களுக்கும், கார்டு வைத்திருப்பவர்கள் அனைவருக்கும் இந்த அரிசையைக் கொடுக்கின்றீர்கள். அதனால்தான் 1,600 கோடி ரூபாய் அரிசி தவறாகப் பயன்படுத்தப்படுகின்றது. தமிழ்நாட்டில் மூலை முடுக்குகளிலே ஏழையெளிய மக்களாக வறுமைக்கோட்டிற்குக் கீழே வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கு மட்டும் இந்த அரிசியை இலவசமாக 30 கிலோ அரிசி ஒரு மாதத்திற்கு என்று கொடுத்தாலும்கூட உங்களுக்கு 1.2 இலட்சம் டன் அரிசிதான் தேவைப்படும். இந்த அரிசியை மத்திய அரசிடமிருந்து பெற்றாலும்கூட மாதம் 73 கோடி ரூபாய், வருடத்திற்கு 876 கோடி ரூபாய்தான் வரும். ஆனால், 1,600 கோடி ரூபாய் நீங்கள் மானியமாகக் கொடுக்கின்றீர்கள். இலவச அரிசி கொடுத்தாலே, 876 கோடி ரூபாய்தான் உங்களுக்குச் செலவு ஆகும். அப்படி ஒரு திட்டத்தை நீங்கள் கடைப்பிடித்தால் உங்கள் அரசுக்கு 723 கோடி ரூபாய் மிச்சப்படுகின்ற ஒரு ஆலோசனையை நான் இங்கே வழங்குகின்றேன். இதை நீங்கள் முயற்சித்துப் பார்க்கலாம் என்று சொல்லிக்கொள்கின்றேன்.

மற்றுமொன்று, உள் நாட்டிலே மீன் வளர்ப்பவர்கள்மூலம் சுமார் 2 இலட்சத்து 30 ஆயிரம் மீன் பண்ணைகள் இப்போது தமிழகத்திலே இருக்கின்றன. இவர்கள் யாரும் மின் கட்டணத்தைச் சரியாகச் செலுத்துவது கிடையாது. சுமார் 6,000 பேர்கள்தான் மின் கட்டணத்தைச் செலுத்துகின்றார்கள். ஒரு யூனிட்டுக்கு 5 ரூபாய் 80 காசு என்ற அளவிலே செலுத்துகின்றார்கள். இதனால் அரசுக்கு கிடைக்கின்ற வருமானம் சுமார் 15 கோடி ரூபாய்தான். ஆனால், நீங்கள் இந்த மின் கட்டணத்தைக் குறைத்து ஒரு குதிரைத் திறனுக்கு 250 ரூபாய் என்று எடுத்துக்கொண்டு கணக்கிட்டால் 2 இலட்சத்து 30 ஆயிரம் மீன் பண்ணையாளர்களும் மின்சார பில்லை கட்டுவார்கள். அப்படி செய்கின்றபோது உங்களுக்கு 45 கோடி ரூபாய் உபரியாக வருமானம் வரும் என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக்காட்ட விரும்புகின்றேன்.



முற்பகல் 10-50

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை இந்த அவையிலே தாக்கல் செய்தபோது, சிறப்பு உட்கூறு திட்டத்தின்மீது பேசுகின்றபோது 2312 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் சொன்னார்கள். நாம் இதை தேர்தல் வாக்குறுதியாகக் கொடுத்திருக்கின்றோம். தேர்தல் வாக்குறுதியிலே முழுத் தொகையும் அதாவது, 19 சதவிகிதம் ஒதுக்கப்படும் என்று சொல்லியிருக்கின்றோம். உங்களுடைய முதல் பட்ஜெட்டிலே 8 சதவிகிதம் ஒதுக்கினீர்கள். இரண்டாவது பட்ஜெட்டிலே 11 சதவிகிதம் ஒதுக்கினீர்கள். இப்போது அதை உயர்த்தி 14 சதவிகிதம் ஒதுக்கியிருக்கின்றீர்கள். கண்டிப்பாக வருகின்ற நாட்களிலே நீங்கள் இதை 19 சதவிகிதமாக உயர்த்துவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, வருகின்ற ஆகஸ்டு மாதத்திலே இந்திய துணைக் கண்டத்தின் ஒப்பற்ற தலைவர் இளைஞர்களின் இதயங்களில் எல்லாம் நீங்காத இடம் பிடித்த இராஜீவ் காந்தி அவர்களுடைய பிறந்தநாள் வருகிறது. அந்த மகான்தான் இந்த இந்தியத் துணை கண்டத்தை ஒரு வல்லரசு நாடாக ஆக்க வேண்டுமென்று பல தீர்க்கமான முடிவுகளை எடுத்தவர், நாட்டை விஞ்ஞான வழியிலே எடுத்துச் சென்றவர். இந்த விஞ்ஞான உலகத்தில் எல்லோர் கையிலும் செல்போன்கள் இருக்கின்றன. வறுமைக் கோட்டிற்குக் கீழாக சுமார் 40 இலட்சம் பேர்கள் இருப்பார்கள். இந்த 40 இலட்சம் குடும்பங்களுக்கும் அவரின் நினைவாக நீங்கள் இலவசமாக செல்போன் கொடுக்கலாம். இன்றைக்கு செல்போன் விலையை எடுத்துக்கொண்டால், 250 ரூபாய்க்குக்கூட செல்போன் கிடைக்கும். ஆக, இந்த 40 இலட்சம் குடும்பங்களுக்கு வறுமைக்கோட்டிற்குக்கீழே வாழ்கின்ற குடும்பங்களுக்கு ஒரு செல்போன் 250 ரூபாய் என்று எடுத்துக்கொண்டால்கூட 100 கோடி ரூபாய்தான் செலவு ஆகும். நீங்கள் இலவச செல்போனை வறுமைக்கோட்டிற்குக்கீழே வாழ்கின்ற

மக்களுக்கு இராஜீவ் காந்தி அவர்களுடைய நினைவாக கொடுக்க வேண்டுமென்று நான் இங்கே உங்களை விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் பல வேண்டுதல்களை இங்கே வைத்திருக்கின்றார்கள். கணினியைக் கொடுத்தீர்கள். மிக நல்லத் திட்டம். நல்ல ஒரு அலுவலகத்தை இந்த அரசு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது; நல்லதொரு திட்டம். கணினியையும் கொடுத்து, நல்லதொரு அலுவலகத்தையும் கொடுத்துள்ளீர்கள். ஆனால் அந்தக் கணினியை இங்கே இருக்கின்ற 90 சதவிகித சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இயக்கத் தெரியாது என்பதை என்னால் அடித்துச் சொல்ல முடியும். எனவே, அந்த கணினியைப் பயன்படுத்த, அவர்கள் தங்களுடைய அலுவலகத்தைச் சரியாகப் பயன்படுத்த, கணினியை உபயோகப்படுத்த ஒரு உதவியாளரை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நல்லதொரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியத் தலைவர் அனைவருக்கும் வாகனங்கள் வழங்கியிருக்கின்றார்கள். நல்லதொரு திட்டம், போற்றப்படக்கூடிய திட்டம். அவர்கள் சிறப்பாகச் செயல்படக்கூடிய திட்டம். அவர்களுக்கு மேலாக சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் 3 யூனியன்களுக்கு தலைவராக இருக்கின்றார்கள். எனவே, 200 சட்டமன்ற உறுப்பினர்களுக்குத்தான் வாகனம் தேவைப்படும். ஏனென்றால் மற்றவர்கள் எல்லாம் அமைச்சர்களாகப் பொறுப்புகளிலே உள்ளனர். தலைவர் முதற்கொண்டு, பொறுப்பில் இருப்பவர்களுக்கு வாகனம் தேவையில்லை. 200 சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்கள் என்று எடுத்துக்கொண்டால்கூட 10 கோடி ரூபாய்தான் செலவாகும் என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் வயதானவர்கள். அவர்களுக்கு மருத்துவச் சலுகையை அதிகமாக்க வேண்டும். இப்போது வருடத்திற்கு 4,000 ரூபாய் கொடுக்கின்றீர்கள். அதை மாற்றி மாதத்திற்கு 1,000 ரூபாய் என்று கொடுத்தால் நலமாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



கிராமப் பணியாளர் ஓய்வூதியம். கிராமப் பணியாளர்களுக்கு இப்போது ஓய்வூதியம் 368 ரூபாய் என்று நான் அறிந்தேன். என்னுடைய தொகுதியிலே ஒருவர் என்னிடம் வந்து இதுபற்றி விளக்கமாகச் சொன்னார், அவர் இறந்து விட்டால் அவருடைய மனைவிக்கு 400 ரூபாய் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. ஆனால், இருக்கும்போது 368 ரூபாய் அந்தக் கிராமப் பணியாளருக்குக் கிடைக்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தினால் இதை நீங்கள் சரி செய்ய வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடம். கிராமப் பணியாளர்கள் ஓய்வூதியத்தை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-55

இராஜீவ் காந்தி அவர்கள் இங்கே மரணமடைந்தபோது அவர்களுடைய உடல் இங்கே இருக்கின்ற பொது மருத்துவமனையிலேதான் வைக்கப்பட்டது. மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களே, உங்களை நான் வேண்டிக் கேட்டுக்கொள்வதெல்லாம் இராஜீவ் காந்தி அவர்களுடைய நினைவாக இங்கேயிருக்கின்ற அரசு பொது மருத்துவமனையை இராஜீவ் காந்தி பொது மருத்துவமனை என்று நீங்கள் பெயர் சூட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து 5.5 கோடி ரூபாயை தாட்கோ கடன் பெற்ற விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்தார்கள். தாட்கோவில் இருப்பவர்கள் யாரும் நிலம் வைத்திருப்பவர்கள் கிடையாது. அந்தக் கடனைப் பெற்றவர்கள் நிலம் உடையவர்கள் ...

**HON. SPEAKER:** Dr. K. Jayakumar, please complete your speech.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** எனவே, தாட்கோ கடன் அத்தனையையும் நீங்கள் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று உங்களை நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடுகள்) இன்று நேரத்திற்குள் முடிக்க வேண்டும். Please உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு)

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர். *(குறுக்கீடுகள்)*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டுக்கான மாநிலச் சட்டமன்றம்... *(குறுக்கீடு)*

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், திரு. சி.வி. சண்முகம், பாயின்ட் ஆஃப் ஆர்டர் எல்லாம் ஒன்றும் வேண்டாம், உட்காருங்கள். *(குறுக்கீடு)*

**திரு. ஜி.கே. மணி:** ஆளுநர் மற்றும் அமைச்சரவை, நிதித் துறை, திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் ஆகிய... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி இருங்கள், ஒரு நிமிடம். என்ன முனைவர் கு. ஜெயக்குமார், சொல்லுங்கள்? *(குறுக்கீடு)* திரு. சி.வி. சண்முகம், உட்காருங்கள், ஜெயக்குமார் தனது உரையை முடித்ததும் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** அவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே வணிக வளாகம் அமைக்கப்படும் என்று முதல்வர் அவர்கள் சொன்னார்கள். பறவைக் காய்ச்சல் ஆராய்ச்சி மையம் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். குளிர்பதனக் கிடங்கு அமைத்துக் கொடுக்கப்படும் என்று முந்தைய அரசு சொன்னது. இவற்றையெல்லாம் விரைவில் நீங்கள், நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு, மற்றொன்று மிக முக்கியமானது, பேசுவதற்கு அதிக நேரம் மாமன்ற உறுப்பினர்களுக்குத் தேவை. அதனால்தான் நான் இவ்வளவு அவசரமாகப் பேச வேண்டியிருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** பேசுவதற்கு அதிக நேரம் வேண்டும் எனும் கோரிக்கையை உங்களுக்கு வைத்து, நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி.வி. சண்முகம், என்ன? சொல்லுங்கள்.



**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது கருத்துகளைச் சொல்வதற்கு அவருக்கு உரிமையுண்டு. அதிலும் அவர் என்மீது சொல்கின்றார். என்னுடைய கருத்துக்கு மாற்றுக் கருத்து சொல்கின்றார்கள். ஆனால், அப்படிச் சொல்கின்றபோது நான் நாகரீகமற்றவன் என்று சொல்லியிருக்கின்றார். எனக்கு நாகரீகம் இருக்கிறதா, இல்லையா என்பதற்கு அவர் எனக்கு அத்தாட்சி தர வேண்டியதில்லை. அவருடைய தலைவரைப் புகழ வேண்டுமென்றால் அவர் புகழ்ந்துகொள்ளட்டும், அதற்காக என்னை இழிவுபடுத்த வேண்டும் என்று அவர் சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டுக்கான மாநில சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, நிதித் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் சில கருத்துகளை இங்கே நான் கூற விழைகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சட்டமன்றத்தினுடைய இட நெருக்கடியைக் கருதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புதிய சட்டமன்றச் செயலகக் கட்டடம் கட்டி முடிக்கப்படும் என்று அறிவித்து, அதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு, அந்தப் பணிகளும் தொடங்குவதாக அறிவிக்கப்பட்டிருப்பதை பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே வரவேற்று, அந்தக் கட்டடப் பணியை விரைவாக முடித்து வரக்கூடிய 2009-2010 ஆம் ஆண்டினுடைய வரவு செலவுத் திட்டமான நிதிநிலை அறிக்கையை அந்தப் புதிய கட்டடத்திலே நடத்துவதற்கு எல்லா ஏற்பாடுகளையும் விரைந்து செய்ய வேண்டுமென்று நான் முதலிலேயே கோரிக்கை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதைப்போல, இந்த வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடர் என்பது நீண்டகாலம் நடைபெறக்கூடிய கூட்டத் தொடர். இது 1½ மாதம், இரண்டு மாதங்கள் நடைபெறுகின்ற காரணத்தினாலும், நம்முடைய முதலமைச்சர் உட்பட அமைச்சர் பெருமக்கள், பல்வேறு

அரசியல்கட்சிகளைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் பணிகள் இருக்கின்ற காரணத்தினாலும், நீண்ட கூட்டத் தொடர் என்ற காரணத்தினாலும், நாடாளுமன்றத்தைப்போல 20 நாட்கள், 25 நாட்கள் நடத்திவிட்டு 10, 15 நாட்கள் இடைவெளிவிட்டு மேலும் தொடர்ந்து நடத்துவது சாத்தியமாக இருக்கும் என்ற காரணத்தினால்தான் இனி வருங்காலங்களில் இடைவெளியாக 10, 15 நாட்களை விட வேண்டுமென்ற கோரிக்கையையும் நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, நம்முடைய சட்டமன்றத்தில் ஒரே நாளில் இரண்டு, மூன்று மானியக் கோரிக்கைகளை எடுத்துக்கொள்கிறோம். 3 அமைச்சர்கள் பதிலளிக்க இயலாமல் மிகக் குறைந்த நேரத்தை ஒதுக்குகின்ற காரணத்தினால், அமைச்சர் பெருமக்கள் பதில் அளிப்பதற்கும், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய கோரிக்கைகளை அல்லது அந்தந்த மானியக் கோரிக்கைகளின் மீது பேசுவதற்கும் கால அவகாசம் கொடுக்கிற வகையில் ஒரு நாளைக்கு ஒரு மானியக் கோரிக்கையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை நான் முன்வைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, கல்வி, வேளாண்மை, சுகாதாரம், பொதுப் பணித் துறை போன்ற முக்கிய மானியக் கோரிக்கைகளுக்கு இரண்டு நாட்கள் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்ற கோரிக்கையையும் நான் இங்கே வைக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-00*

நம்முடைய சட்டமன்ற நிகழ்வுகளை தமிழ்நாட்டு மக்கள் எல்லோரும் பார்க்கக்கூடிய வகையில் அன்றாடம் நேரடியாக ஒளிபரப்புச் செய்யவேண்டும் என்ற வேண்டுகோளையும் நான் உங்கள் முன்வைக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, நம்முடைய சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியை ரூ.1½ கோடியாக உயர்த்திக்கொடுக்க வேண்டும் என்று எல்லோரும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைக் கருணை உள்ளத்தோடு உயர்த்திக்கொடுக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் நான் இங்கே உங்கள் முன்வைக்க விரும்புகிறேன்.



தொகுதி மேம்பாட்டு நிதியில் நீங்களே இலக்கும், அலகும் நிர்ணயித்துவிடுகின்ற காரணத்தால் அந்தத் தொகுதியிலே இருக்கக்கூடிய முக்கியத்துவம்வாய்ந்த பிரச்சினைகளை, அவசியத் தேவையான சில வேலைகளை எடுக்க இயலாமல் போய்விடுகின்றன. ஆகவே, அலகு நிர்ணயிக்காமல், இலக்குகளையெல்லாம் ஒதுக்கீடு செய்யாமல் சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தப் பகுதியினுடைய தேவைக்கேற்ப அவர்களே எடுத்துக்கொள்வதற்கு உண்டான வாய்ப்பையும் உருவாக்கிக்கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, சட்டமன்றத் தொகுதியிலே, சட்டமன்ற உறுப்பினர்கள் அலுவலகக் கட்டடம் இருக்கிறது. அலுவலகத்தைப் பராமரிப்பதற்கு ஒரு ஆள் தேவை. கணினி வழங்கியிருக்கிறீர்கள். அதை யார் இயக்குவது என்ற கேள்விக்குறி இருக்கிறது. ஆகவே, சட்டமன்ற உறுப்பினருடைய அலுவலகம் முறையாக இயங்குவதற்கு ஒரு உதவியாளர் தேவை. அதைப்போல, அந்த அலுவலகத்திற்கு ஒரு தட்டச்சர் தேவை. அவர்களை நியமிக்கவேண்டும். அதுமட்டுமல்ல, அலுவலகம் என்று சொன்னால் அதற்கு ஒரு வண்டி தேவை. சட்டமன்றத் தொகுதியைச் சுற்றி வருவதற்கு, பல்வேறு வேலைகளுக்குச் செல்வதற்கு ஒரு வண்டி கட்டாயம் கொடுக்க வேண்டும். ஒரு மகிழுந்து தேவை. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குத் தேவையான எரிபொருள் முதற்கொண்டு அனைத்தையும் கொடுத்துவிடுங்கள். ஓட்டுநரையும் கொடுத்துவிடுங்கள். ஐந்து ஆண்டுகள் முடிந்து அவரே உறுப்பினராக இருந்தாலும் சரி, வேறு உறுப்பினர் வந்தாலும்கூட அந்த அலுவலகத்தினுடைய வண்டியும், ஓட்டுநரும் அப்படியே இருப்பார்கள். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இந்த வசதி தொடர்ந்து இருப்பதற்கு வழிவகை செய்யவேண்டும் என்ற வேண்டுகோளை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

அதைப்போல, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் சொல்கிறார்கள். சில அதிகாரிகளை சந்திக்கின்ற நேரத்தில் எங்களைக் காத்திருக்க வைக்கிறார்கள், உடனே அழைத்துப் பேசுவதில்லை, அப்படியே அழைத்தாலும்கூட மரியாதை நிமித்தமாக எழுந்து வணக்கம் செலுத்துவதில்லை என்ற குறைகளையெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதைப்போல சில நாடாளுமன்ற உறுப்பினர்களும் கோரிக்கை வைக்கிறார்கள். சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிகாரிகளைச் சந்திக்கின்ற நேரத்தில்,

உரிய விதிமுறைப்படி I.A.S. அதிகாரிகள் உட்பட எல்லா அதிகாரிகளும் எழுந்து திரும்ப வணக்கம் செலுத்துவதற்கு உரிய முறையைப் பின்பற்ற வேண்டும் என்ற கோரிக்கையையும் நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

நம்முடைய சட்டமன்ற செயலகத்தில் தற்காலிகப் பணியாளர்கள் பல வருடங்களாக பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கூட்டத் தொடர் முடிந்துவிட்டால் வீட்டுக்கு சென்றுவிடுகிறார்கள். வேறு வேலைக்குச் செல்ல இயலவில்லை. ஆகவே, கருணையுள்ளம் கொண்ட நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அவர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும். காலி இடங்களிலே இவர்களை நிரப்பிக்கொள்ளலாம், இல்லையென்றால் வேறு துறைகளுக்காவது அவர்களை அனுப்பவேண்டும் என்ற கோரிக்கையை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

சட்டமன்றம் கூடுகின்ற நாட்களில் அலுவலர்கள் முதல் அனைத்து பணியாளர்களுக்கும் தினப் படியைக் கூடுதலாக வழங்கவேண்டும். அதேபோல், நம்முடைய பாதுகாப்புக்கு உள்ள ஆண், பெண் காவல் துறை பணியாளர்களுக்கும் தினப் படியை உயர்த்திக்கொடுக்கவேண்டும் என்ற கோரிக்கையையும் நான் முன்வைக்க விரும்புகிறேன்.

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குக் கோரிக்கைக் கடிதம் கொடுத்தால், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உட்பட ஒரு சில அமைச்சர்களுக்கு கடிதம் கொடுக்கின்ற நேரத்தில் பதில் திரும்பக் கிடைக்கிறது. மற்றவர்களுக்கு அதிலே குறிப்பாக மாவட்ட ஆட்சித் தலைவர், மூத்த I..A.S. அதிகாரிகள் என்று துறையின் வாயிலாகக் கடிதம் கொடுக்கின்றபோது திரும்ப பதிலே கிடைப்பதில்லை. உரிய பதில் கிடைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இங்கே நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, இங்கே திட்ட வளர்ச்சியைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். இந்தத் திட்டம் மிக முக்கியமானது. 11-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே நாம் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சீரிய முயற்சியிலே இந்த ஆண்டு கூடுதலாக நிதி ஒதுக்கீடு பெற்றதை நாம் எல்லோரும் பாராட்டிக்கொண்டிருக்கிறோம். இப்படிப் பாராட்டுகின்ற வேளையிலே, தமிழ்நாட்டில் உள்ள எல்லாத் தரப்பு



மக்களும் வாழ்க்கையில் உயரவேண்டும். அதற்கான திட்டங்கள் தேவை. இப்போது பார்த்தால் ஒருசில மாவட்டங்களில் சில பகுதிகள் பின்தங்கியிருப்பதாகவே நாம் கருதுகிறோம். ஆகவே, எல்லா மாவட்டங்களிலும் எல்லாத் தரப்பு மக்களும் சமச்சீர் வளர்ச்சி பெறுவதற்கான திட்டங்கள் தேவை. அந்த அடிப்படையில் கல்வி அறிவில் பின்தங்கியிருக்கின்ற பகுதி மக்கள், உயர் கல்வி அல்லது கல்வி நிறுவனங்கள் இல்லாத பகுதிகள்—அரசு அல்லது தனியார் வேலைவாய்ப்புப் பெற்றவர்களா, குடியிருக்கின்ற வீட்டினுடைய தன்மை, உணவுப் பழக்கங்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி உரையை முடியுங்கள். (குறுக்கீடு) பேசி முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** முடித்துவிடுகிறேன். கொஞ்ச நேரம்தான் ஆகிறது. இன்னும் நிறைய பேச வேண்டி இருக்கிறது.

போக்குவரத்து, தனிநபர் வருமானம், குடும்ப வருமானம், வறுமை கோட்டுக்குக்கீழே இருக்கக்கூடியவர்கள் என்று இப்படிப்பட்ட புள்ளிவிவரங்களையெல்லாம் ஆய்வு செய்து அவர்களுக்குரிய சமச்சீர் வளர்ச்சியைக் கொடுக்கவேண்டும். இதற்காக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு தனி ஆய்வுக் குழுவை நியமித்து இந்த மாவட்ட வளர்ச்சியில் சமச்சீர் வளர்ச்சி பெறுவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சியைப் பற்றிச் சொல்கிற நேரத்தில், இங்கே மூடிய ஆலைகள் நிறைய திறக்கப்படாமல் இருக்கின்றன. ஓசூர் சிப்காட், இராணிப்பேட்டை, கடலூர் போன்ற இடங்களில் உள்ள மூடிய ஆலைகளைத் திறக்க வேண்டும். 18 கூட்டுறவு நூற்பாலைகளில், 13 ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அவற்றையும் திறக்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால், இந்த நாட்டினுடைய ஆதாரத் தொழிலாக இருக்கிற வேளாண் தொழிலுக்கு முக்கியத்துவம் அளிக்கிற வகையில், வேளாண் தொழிலினுடைய . . .

முற்பகல் 11-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, இன்றைக்கு கில்லட்டின் டைம், அதற்குள் முடிக்க வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** ஒன்றேயொன்று, ஓய்வூதியத்தைப் பற்றி மட்டும் சொல்லிவிடுகிறேன். இப்பொழுது அரசு போக்குவரத்துக்

கழகத்தினுடைய ஓட்டுநர் மற்றும் பணியாளர்கள், சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்கள், கூட்டுறவுத் துறையிலே இருக்கிற நியாயவிலைக் கடைப் பணியாளர்கள் முதலான அனைத்துப் பணியாளர்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றக்கூடியவர்கள், இவர்கள் எல்லாம் ஓய்வூதியம் வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள், அதை நிறைவேற்ற வேண்டும். கிராம முன்சிப், கர்ணம் ஆகியோருடைய ஓய்வூதியத் தொகை ரூபாய் 525 ஆக இருக்கிறது. அதையும் உயர்த்தி வழங்க வேண்டும். சிறு சேமிப்பிலே இருக்கிற முகவர்கள், பெண் முகவர்களுக்கான கழிவுத் தொகை ½ சதவீதத்திலிருந்து கூடுதலாக வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் திரு. மணி, very sorry, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலச் சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, நிதித் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுகிற வாய்ப்பினைத் தந்தமைக்கு தங்களுக்கு நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன்.

சட்டமன்றக் கூட்டத் தொடர் என்பது ஒரு ஆண்டிற்குக் குறைந்தபட்சம் 100 நாட்கள் நடைபெறுவதை உறுதிப்படுத்துகிற வகையிலே எதிர்வருகிற காலங்களில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். போதுமான கால அவகாசம் இல்லாத காரணத்தினால், 3 அல்லது 4 மானியக் கோரிக்கைகளை ஒரே நாளிலே விவாதிப்பதும், அவற்றுக்கு அமைச்சர்கள் பொருத்தமான முறையிலே தயாரித்திருக்கிற பதில்களைக்கூட சொல்லமுடியாத நிலைமையும் ஏற்படுகிறது. ஆகவே, அதை கவனத்தில் எடுத்துக்கொண்டு சட்டமன்றம் கூடுகிற நாட்களை அதிகரித்து, நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் அன்பிற்குரிய மணி அவர்கள் சொன்னதைப்போல, இடைவெளிவிட்டு — ஒரு மாத காலம் கூட்டத் தொடர், பிறகு 10 நாட்கள், 15 நாட்கள் இடைவெளிவிட்டு—மீண்டும் ஒரு மாதம் நடத்துவது என்ற முறையிலே ஏற்பாடுகளைச் செய்து விரிவான விவாதங்கள் நடத்துவதற்கு வாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டும்.



அதைப்போல, மானியக் கோரிக்கைகள் சம்பந்தமான குறிப்புகள், கொள்கை விளக்கக் குறிப்புகள் எல்லாம், மறுநாள் காலையிலே எடுத்துக் கொள்கிற மானியக் கோரிக்கையினுடைய கொள்கை விளக்கக் குறிப்புகள் இரவு 10-00 மணி, 11-00 மணிக்குத்தான் எங்களுக்குக் கிடைக்கிறது. நாங்கள் உறங்கச் சென்ற பிறகு கொண்டுவந்து கொடுத்தால் அதை எப்படிப் படித்து, அதன்மீது இங்கே விவாதிப்பது என்பதை அறிந்து மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள்தான் எங்களுக்கு முன்கூட்டியே அவை கிடைப்பதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டும். குறிப்பின் அடிப்படையிலே முழுமையான விவாதம் நடத்தமுடியாத நிலைமை ஏற்படுகிறது என்பதை நான் கவனப்படுத்துகிறேன்.

அதைப்போலதான் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துகிறபோதும் இதே நிலை தொடர்கிறது. நேற்றுகூட இரவு எத்தனை மணிக்கு வந்தது என்று எனக்குத் தெரியவில்லை. காலையில் எழுந்து பார்த்தபோது பெட்டியிலே ஆறு புதிய சட்டமுன்வடிவுகள் இருந்தன. சபைக்கு வந்தால், 3 சட்டமுன்வடிவுகள் அவையிலே வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இதையெல்லாம் படித்து அறிந்து, பொருத்தமான கருத்துகளை உறுப்பினர்கள் தெரிவிப்பதற்கு வாய்ப்புக்கு இடமில்லாமல் போகிற சூழல் ஏற்படுகிறது. ஆகவே, இதையெல்லாம் கவனத்தில் எடுத்துக்கொண்டு, சட்டமன்றக் கூட்டத் தொடரை அதிக நாட்கள் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, சட்டமன்றத்திலே பேசுகின்ற உறுப்பினர்களுடைய பேச்சுக்கள்—எல்லா பத்திரிகையிலும், எல்லா உறுப்பினர்களுடைய பேச்சுக்களும் இடம்பெறுவதில்லை. ஆகவே, யார் என்ன பேசுகிறார் என்பது மக்களுக்குப் போய்ச் சேருவதிலேகூட பல தடைகள் இருக்கின்றன. ஆகவே, சட்டமன்ற நிகழ்ச்சிகளை நேரடியாக ஒளிபரப்பக்கூடிய வகையிலே, நாடாளுமன்றத்தைப்போல, அந்த ஏற்பாட்டை இங்கேயும் செய்து கொடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, சட்டமன்ற உறுப்பினர்களுக்கான—இங்கே காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினரும், நம்முடைய திரு. மணி அவர்களெல்லாம் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல நானும் அதை வழிமொழிகிறேன்—இங்கே வீடு சம்பந்தமாக பின்னாலே என்ன அறிவிப்பு வரும் என்று எனக்குத் தெரியாது. பொதுவாக அதைப்பற்றி

எங்களுடைய கருத்து, ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிற கருத்தைத்தான் இப்போதும் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். ஆனால் அதற்கு மாறாக, சென்னையில் வீடு என்பதற்குப் பதிலாக தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய பணிகளை மேலும் சிறப்பாக ஆற்றுவதற்கு, மக்களோடு நல்ல தொடர்புகளை உருவாக்கிக்கொள்வதற்கு, மற்ற உறுப்பினர்கள் சொன்னதைப்போல ஓட்டுநரோடு ஒரு கார், அது எந்த வாகனம் என்று அரசு முடிவு செய்கிறதோ அந்த வாகனத்தை ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கெல்லாம் வழங்கப்பட்டிருப்பதைப்போல, வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். கணினி வசதி எல்லாம் செய்து கொடுத்திருக்கிறீர்கள். அலுவலகம் கொடுத்திருக்கிறீர்கள். அதையெல்லாம் முறையாகப் பராமரிக்க கணினிப் பயிற்சி பெற்ற ஒரு உதவியாளரை வழங்குவது என்பதும் பொருத்தமாக இருக்கும் என்ற முறையில் நாங்கள் வலியுறுத்த விரும்புகிறோம்.

*முற்பகல் 11-10*

அதேபோல, சட்டமன்ற உறுப்பினர்கள் கோடைக் காலத்திலே சட்டமன்றக் கூட்டத் தொடர் வழக்கமாக நடைபெறுகிறபோது, சென்னைக்கு வருவதற்கு இரயிலில் இடம் கிடைக்காமல் உண்மையிலேயே பலவிதமான சிரமங்களுக்கு ஆளாகி, நாகர்கோவிலிலே இப்பொழுது மூன்று சட்டமன்ற உறுப்பினர்கள்மீது வழக்குகளெல்லாம் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இந்தச் சிரமங்களைத் தவிர்க்க சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு இரயில்வே பாஸ் வழங்கலாம். மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களிலே பாஸ் வழங்கப்பட்டிருக்கிறது. அதற்குரிய தொகையை அரசு சம்பந்தப்பட்ட இரயில்வே துறைக்குக் கட்டுகிறது. ஆகவே, அதுபோன்ற முறையை இங்கேயும் நீங்கள் கொண்டுவந்து சட்டப் பேரவை உறுப்பினர்கள் தடையின்றி பயணம் செய்வதற்கு வாய்ப்பை உருவாக்கித்தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத்தை சிறிது உயர்த்திக் கொடுக்கலாம். அதேபோல சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்து, மறைந்துவிட்டவர்களின் வாரிசுகள், அதாவது திருமணம் ஆகாத குழந்தைகள் இருந்தால் அவர்களுக்கு அல்லது திருமணமாகி கணவனை இழந்து விதவைகளாக இருக்கக்கூடிய பெண்கள் அல்லது திருமணமாகி விவாகரத்து செய்து கொண்டு, தன்னந்தனியாக எந்த



ஆதரவும் இல்லாமல் வாழக்கூடியவர்களுக்கு சட்டத்திலே சில திருத்தங்களைச் செய்து, அந்த உதவித் தொகை, அவர்களுக்குக் கிடைப்பதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை உறுதிப்படுத்த வேண்டுமென்பதை எனது பணிவான வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன். சட்டமன்றக் கூட்டத் தொடர் இல்லாத காலங்களில் ஒவ்வொரு வாரத்தினுடைய முதல் மூன்று நாட்கள் அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலகத்திலே, அலுவலகத்திலே இருந்தால் தொகுதிகளிலிருந்து வரும் மக்கள் பிரதிநிதிகள் அமைச்சர்களை சந்திப்பதற்கு, சுலபமாக பார்த்துச் செல்வதற்கு வாய்ப்பாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே தவிர்க்க முடியாத காரணமாக இருந்தால் வெளியே செல்லலாம். நான் அப்படி 100 சதவிகிதம் கட்டுப்பாடு இருக்க வேண்டுமென்று சொல்லவில்லை. குறைந்தபட்சம் இந்த மூன்று நாட்களில் அமைச்சர்கள் இங்கே இருப்பார்கள்; போனால் நாம் பார்க்க முடியும் என்கிற ஒரு சூழலை ஏற்படுத்த வேண்டும். பல முறை நாங்கள் வந்து யாரையும் பார்க்க முடியாமல் திரும்பிச் செல்கிற நிலைமையிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்கான ஒரு வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, நம்முடைய அமைச்சர்கள் விழாக்களுக்கு வருகிறபோது அந்த விழாக்களை முறைப்படுத்துவது இன்னும் சற்று உதவியாக இருக்கும் என்று கருதுகிறேன். ஒரு மாவட்டத்திற்கு பல்வேறு துறைகள் சம்பந்தமாக பல அமைச்சர்கள் மாறி, மாறி விழாக்களுக்கு வருகிறபோது, ஒரு வாரத்திலேயே மூன்று, நான்கு விழாக்கள் என்றால் அந்த மாவட்டத்தினுடைய அரசு ஊழியர்கள் பணி முழுவதையும் அதற்காகச் செலவிட வேண்டிய அவசியம் இருக்கிறது. இதையெல்லாம் ஒருங்கிணைத்து ஒரு பொது விழாவாக நடத்தினால் அந்த அதிகாரிகளினுடைய பணிகள் குறையும். அவர்கள் மற்ற பணிகளைச் செய்வதற்கு அது வாய்ப்பாக அமையும். அதையும் பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுக்கிற மனுக்களுக்கு, அவர் சொன்னதுபோல, முதலமைச்சரிடத்திலேயிருந்து, உள்ளாட்சித் துறை அமைச்சரிடத்திலேயிருந்து, வேறு சில அமைச்சர்களிடத்திலிருந்துகூட

பதில் வருகிறது. அதை ஒரு பொதுவான விதியாக, எல்லா அமைச்சர்களுக்கும்—சில பணிகள் நடக்கலாம், சில நடக்காமல்கூட போகலாம். ஆனால், மக்கள் பிரதிநிதிகள் கொடுக்கிற கடிதங்களுக்கு, மனுக்களுக்கு அவற்றின் மீது எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கை என்ன என்பதைப் பற்றிய ஒரு பதில் வருவது உதவியாக இருக்கும். அதை எல்லோரும் பின்பற்றுவதற்கு ஒரு வழிகாட்டுதல் தேவை என்பதை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக, ஓய்வூதியம் சம்பந்தமாக—அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் 1988 முதல் 1995 வரையில் ஓய்வு பெற்றவர்களுக்கு அகவிலைப்படியை ஊதியத்தோடு இணைத்து வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்துகிறார்கள். அதேபோல ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவச் செலவை திரும்பப் பெறும் திட்டத்தின்மூலம் வழங்கப்படுகிற நிதி ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட வேண்டும். அண்டை மாநிலங்களில் வைத்தியம் செய்துகொண்டால்கூட அந்தத் திட்டத்தின்மூலம் பயன்பெறுகிற வகையிலே திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவிந்தசாமி, உரையை முடியுங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** ஓரேயொரு நிமிடம். அதேபோல இந்த அங்கன்வாடி, சத்துணவு ஊழியர்கள் பல பேர் இப்போது ஓய்வு பெற்று வெளியே செல்கிற நிலையிருக்கிறது. எந்த வாய்ப்பும் இல்லாமல் வெறுங்கையோடு செல்கிறார்கள். முதியோர் பென்ஷனாவது 400 ரூபாய் கிடைக்கிறது. இந்த வேலையிலிருந்து வெளியிலே போகிறவர்களுக்கு அதுகூட இல்லை. நான் கேட்க விரும்புவது, ஒரு திட்டம் இல்லையென்றாலும் அந்த முதியோர் உதவித் தொகையாவது இவர்களுக்கெல்லாம் கிடைப்பதற்கு வழிவகை செய்வதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவிந்தசாமி, உரையை முடியுங்கள், நேரமாகிவிட்டது.

**திரு. சி. கோவிந்தசாமி:** முடித்துவிடுகிறேன். அதேபோல இந்த முன்னாள் கிராம நிருவாக அலுவலர்களும் அரசு ஊழியர்கள்தான் என்று தீர்ப்பெல்லாம் வந்திருக்கிறது. அவர்களுக்கும் அந்த 1,275 ரூபாய்



என்பதை உறுதிப்படுத்த வேண்டும். இரண்டே இரண்டு செய்திகளைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

நம்முடைய சட்டப் பேரவை வளாகத்திலே பணியாற்றக்கூடிய செயலக ஊழியர்கள் இந்தச் சட்டமன்றக் கூட்டக் காலங்களில் over time வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு இப்போது குறைந்த தொகை வழங்கப்படுவதாகத் தெரிவிக்கிறார்கள். அது 250 ரூபாயாக உயர்த்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறார்கள்.

இந்தச் சட்டமன்றச் செயலக ஊழியர்கள் தலைமைச் செயலகத்திலிருந்து பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே தற்போதுள்ள நிலையை மாற்றி மத்தியிலே பாராளுமன்றச் செயலக ஊழியர்களுக்கு வழங்கப்படுகிற சலுகைகளை இவர்களுக்கு வழங்க வேண்டும்.

முற்பகல் 11-15

அதேபோல, 20 ஆண்டுகளுக்கு மேலாக இங்கே தினக் கூலிகளாகப் பணியாற்றிக்கொண்டிருக்கக்கூடிய அந்த ஊழியர்களுக்குப் பணி நிரந்தரம் அல்லது தொகுப்பூதிய அடிப்படையிலே ஊதியம் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டு, (மணியடிக்கப்பெற்றது) நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் மேலான கவனத்திற்காக ஒரே ஒரு செய்தியைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அரசால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று நீண்ட காலமாக தங்களிடத்திலே கோரிக்கை வைத்து, சமீபத்திலே நடந்த அதனுடைய மாநாட்டிலும் தாங்கள் அந்த உறுதியை அறிவித்திருக்கிறீர்கள். இந்தத் தொடரில் அந்த அறிவிப்பு வரும் என்று அவர்களெல்லாம் காத்திருக்கிறார்கள். இன்று சட்டமன்றக் கூட்டத் தொடர் நிறைவடைகிற காரணத்தினால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே தாங்கள் அறிவித்த தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்கான அங்கீகாரத்தை வழங்குவதற்கான நல்ல செய்தியை வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டு, விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலச் சட்டமன்றம், நிதித் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் முயற்சிகள் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமசாமி, 5 minutes are allowed for you.

**திரு. தி. இராமசாமி:** இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக கருத்துகளைக் கூறுவதற்கு வாய்ப்பினை அளித்த தங்களுக்கு நன்றிகூறி, அமைச்சர் பெருமக்கள் வருடத்திற்கு ஒரு முறைதான் மானியக் கோரிக்கையின்மீது பேசுகிறார்கள். ஒரு நாளைக்கு 3 மானியக் கோரிக்கைகள், 4 மானியக் கோரிக்கைகள் எடுக்கும்போது, அமைச்சர் பெருமக்கள் பேசுவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைந்துவிடுகின்றன. எனவே, ஒரு நாளைக்கு ஒரு மானியக் கோரிக்கை என்ற அடிப்படையில் மானியக் கோரிக்கைகளை எடுத்து, அமைச்சர் பெருமக்கள் தாராளமாகப் பேசுவதற்கான வாய்ப்பை முதலில் வழங்கவேண்டும்.

அடுத்தபடியாக, சட்டமன்றத்தில் உறுப்பினர்கள் பேசுவதற்கான நேரம் அவர்கள் சார்ந்துள்ள கட்சியினுடைய எண்ணிக்கைக்குத் தகுந்தாற்போல் ஒதுக்கப்படுகிறது. சில கட்சிகளின் நீண்ட பாரம்பரியம், தியாக வரலாறு, மக்களிடம் அந்தக் கட்சிகளின் கருத்துகளுக்கு உள்ள முக்கியத்துவம், இவற்றையும் கணக்கில் எடுத்து நேரம் ஒதுக்கப்படவேண்டும்.

அடுத்தபடியாக, அவையை இரண்டு நேரமும் நடத்துவதற்கான முறையைக் கொண்டுவரவேண்டும், காலையும், மாலையும். (குறுக்கீடு) ஆமாம். காலையும், மாலையும் நடத்தவேண்டும்.

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நிதி வழங்குவதில்—பல பின்தங்கிய பகுதிகளில் தேவைகள் நிறைய இருக்கின்றன. அரசினுடைய நிதியும் சரி, உள்ளாட்சியினுடைய நிதியும் சரி, பெரு நகரங்களுக்கு அதிகமாகச் செல்கிறது. அப்படிப்பட்ட இடங்களில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி போன்ற நிதிகளுக்கு அவசியம் இல்லாமல் போய்விடுகிறது. பின்தங்கிய பகுதிகளில், குறிப்பாக ஆதி திராவிடர் வசிக்கும் பகுதி, மற்ற பகுதிகளுக்கு நிதி ஒதுக்கம் அதிகமாகத் தேவைப்படுகிறது. எனவே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கக்கூடிய அந்தத் தொகுதி மேம்பாட்டு நிதியை அதிகப்படுத்தி வழங்கவேண்டும்.

அதேபோல, சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் செயல்படுவதற்கு முழு உத்தரவாதம் அளிக்கவேண்டும். இரயில்வே கட்டணத்திற்கு பதிலாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இரயில்வே பாஸ் என்பது வழங்கப்படவேண்டும்.



எம்.ஜி.ஆர். காலத்தில் பணி நீக்கம் செய்யப்பட்ட கிராம முன்சீப், கர்ணங்களுக்கு பென்ஷன் தொகையை அதிகப்படுத்தி வழங்கவேண்டும். சிறு சேமிப்பு முகவர்களுக்கு ஊக்கத் தொகை—அவர்கள்தான் அரசுக்கு நிதியாதாரத்தைக் கொண்டுவந்து சேர்ப்பவர்கள். எனவே, அவர்களுக்கு வழங்கப்படுகின்ற அந்த ஊக்கத் தொகையை—அரை சதவீதத்திலிருந்து ஒரு சதவீதமாக ஆக்கவேண்டும். தொடர்ச்சியான கோரிக்கையாக இருப்பது, டாஸ்மாக் பணியாளர்களை நிரந்தரம் செய்யவேண்டும் என்பது. வருடத்திற்கு பத்தாயிரம் கோடி ரூபாய் வருமானம் ஈட்டிக் கொடுக்கின்ற அந்தத் தொழிலாளர்களை நிரந்தரம் செய்து, ஊதியம் நிர்ணயம் செய்ய வேண்டும்.

கடந்த ஆட்சியில் பணி நியமனத் தடைச் சட்டம் இருக்கும்போது முறை தவறி பணி நியமனம் செய்யப்பட்டு மருத்துவத் துறை பணியாளர்கள் வேலைக்குச் சேர்ந்தார்கள்; குறைந்த ஊதியத்தில் பணியாற்றினார்கள்; இப்பொழுது நடுத் தெருவிலே நின்றுகொண்டிருக்கிறார்கள். அந்தப் பணியாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி, முறைப்படுத்தவேண்டும்.

அதேபோல, தமிழ்நாட்டில் அரசு உதவி பெறுகின்ற கல்லூரிகளில் பணியாற்றி ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கு ஊதியத் திருத்த நிலுவை இதுவரை வழங்கப்படவில்லை. அதேபோல, கல்லூரிகளில் பணியாற்றி ஓய்வுபெற்ற நூலகர், உடற்கல்வி இயக்குநர்களுக்கும் 1-1-1996 முதல் வழங்கப்படவேண்டும். ஆசிரியர்கள், அரசுப் பணியாளர்கள், ஓய்வுபெறும்போது commutation 33 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாக வழங்கப்படவேண்டும். அவர்களிடத்தில் 15 ஆண்டுகள் பிடிப்பதை 12 ஆண்டுகள் பிடித்தம் செய்யப்படவேண்டும்.

அடுத்து, ஓசூரில் இருக்கக்கூடிய பாகலூரிலுள்ள Asian Memorial Limited தொழிற்சாலை கடந்த இரண்டாண்டு காலமாக சட்டவிரோதமாகக் கதவடைக்கப்பட்டிருக்கிறது. 200 தொழிலாளர்களுடைய குடும்பங்கள் இப்போது பெரும் பாதிப்பிற்குள்ளாக்கப்பட்டுள்ளது. ஆகவே தொழிற்சாலையைத் திறந்து, தொழிலாளர்களுடைய குடும்பங்களைக் காப்பாற்றவேண்டும்.

முற்பகல் 11-20

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இப்போது ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களுக்கு வாகன வசதியை வழங்கி, அவர்கள் சிறப்பாகப் பணியாற்றுவதற்கு அனுமதித்திருப்பது போன்று,

சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஒரு வாகனத்தையும், ஓட்டுநரையும் வழங்கி முறைப்படுத்தவேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் உணவு விடுதி செயல்படுகிறது. நல்ல, தரமான உணவு கிடைப்பதற்கான வழிவகையை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஏற்படுத்தித் தர வேண்டும். பெரும்பாலான உறுப்பினர்கள் diabetics நோயினால் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். எனவே, அந்த diabetics நோயினுடைய ஒரு பிரிவை சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலேயே கொண்டுவந்து, அதன்மூலமாக அந்த diabetics நோயால் பாதிக்கப்பட்ட (மணியடிக்கப்பெற்றது) அந்த நோயாளிகளுக்கு—நோயாளிகள் என்று சொல்லக்கூடாது—அந்த உறுப்பினர்களுக்குத் தனி வகையான உணவினை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

அதேபோல, இப்போது சட்டமன்ற உறுப்பினர்களுக்கான தொகுதி அலுவலகங்களில், பல அலுவலகங்கள் பூட்டியே கிடக்கின்றன. இங்கே பேசிய உறுப்பினர் அவர்கள், 'கணினி வழங்கப்பட்டிருக்கிறது; அதை பல பேருக்கு இயக்கத் தெரியவில்லை' என்று சொன்னார்கள். எனக்குக்கூட கணினியை இயக்குவதற்கு இன்னும் தெரியவில்லை. எனவே, அதை இயக்குவதற்காக ஒரு ஊழியரை நியமனம் செய்து, அந்தச் சட்டமன்ற அலுவலகத்தில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீர. இளவரசன். (குறுக்கீடு)

**திரு. தி. இராமசாமி:** கருத்தைச் சொல்லி முடித்துவிடுகிறேன், முடித்துவிடுகிறேன். அந்தச் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி அலுவலகத்தில் நியமனம் செய்வதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கூறி, வாய்ப்பு வழங்கிய தங்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தின் மிக முக்கியமான தூணாகக் கருதப்படுவது சட்டமன்றம். இந்தச் சட்டமன்றத்தில் ஜனநாயக மரபு எந்த அளவிற்குப் பாதுகாக்கப்படுகிறது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். 1957 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதி அன்று



டாக்டர் கிருஷ்ணாராவ் அவர்கள் பதவியேற்றபோது இங்கே சொன்னார்கள்; 'ஆளுங்கட்சியிலே 150 உறுப்பினர்கள் இருக்கிறார்கள்; எதிர்க்கட்சியிலே வெறும் 50 பேர்தான் இருக்கிறார்கள். யாருக்காவது நான் சலுகைகள் வழங்கவேண்டும் என்று சொன்னால், அது எதிர்க்கட்சிக்குத்தானே தவிர, ஆளுங்கட்சிக்கு அல்ல' என்று டாக்டர் கிருஷ்ணாராவ் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஆனால், அந்த மரபுகள், அந்தப் பண்பாடுகள் எல்லாம் எந்த அளவிற்கு இங்கே எதிர்க்கட்சிகளுக்கு வழங்கப்படுகின்றன என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நாங்கள் கொடுக்கின்ற ஒத்திவைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எல்லாம் இங்கே அதிக அளவில், குறிப்பிட்ட முக்கியமான தீர்மானங்கள்கூட எடுத்துக் கொள்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை; கேள்விகள் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை; துணைக் கேள்விகள் கேட்பதற்கு எழுந்து நின்றால், கையை உயர்த்தினால், எங்களை அழைப்பதற்கு இங்கே அனுமதி மறுக்கப்படுகிறது. இரண்டு நாட்கள் நடைபெற்ற காவல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில், எனக்கு வெறும் 7 நிமிடங்கள்தான் ஒதுக்கப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களை எல்லாம் பேச விட்டிருக்கிறோமே! கையைத் தூக்கினால் அனுமதிக்கப்படுவதில்லை என்று எதற்காகச் சொல்கிறீர்கள்? (குறுக்கீடு)

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுத்தது 5 நிமிடங்கள். (குறுக்கீடு) அதிலும் குறுக்கீடுகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜனநாயக முறைப்படி எல்லோருக்கும் வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. வீர. இளவரசன்:** 5 நிமிடங்களில் நான் என்னுடைய கருத்தைப் பேசி முடித்துவிடுகிறேன். இரண்டு நாட்கள் நடைபெற்ற விவாதத்தில் வெறும் 7 நிமிடங்கள்தான் எங்களுக்கு ஒதுக்கப்பட்டன என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் இப்போது நிறைவேற்றப்படுகின்ற சட்டங்கள் ஜனநாயகத்தை நிலைநாட்டுகின்ற வகையிலும், மக்கள் உரிமையில், மக்கள் நலனில் அக்கறை கொண்டிருக்கின்ற வகையிலும் நிறைவேற்றப்படவேண்டும்

என்கின்ற கருத்தை நான் பதிவு செய்ய விரும்புகிறேன். ஏனென்றால், கடந்த காலங்களில் சில சட்டங்கள் ஜனநாயகத்திற்கு ஒவ்வாத வகையில், மக்கள் ஏற்றுக் கொள்ளாத வகையில் இங்கே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்றால், உள்ளாட்சித் துறையிலே, தலைவர்கள்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருகின்ற அந்தச் சட்டத்தை நிறைவேற்றுவது என்பது, 5-ல் 4 பங்கு majority இருந்தால்தான், அந்தச் சட்டத்தை நிறைவேற்றமுடியும் என்கின்ற ஒரு சூழ்நிலை இப்போது இருந்து வருகிறது. சட்டமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும்கூட சரிபாதி எண்ணிக்கைக்கு மேல், ஒரு ஓட்டு கூடுதலாக இருந்தால், தீர்மானத்தை நிறைவேற்றமுடியும் என்கின்ற நிலையில், இப்படிப்பட்ட சட்டங்களையெல்லாம் இங்கே கொண்டு வந்திருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட 1966-லே சொன்னார்கள்; 'இங்கே நிறைவேற்றப்படுகின்ற சட்டங்கள் எல்லாம் செல்லுபடியாகக்கூடிய சட்டங்கள் என்றோ, மக்களால் ஏற்றுக்கொள்ளத்தக்க சட்டங்கள் என்றோ கூறி விடமுடியாது' என்று சொல்லியிருக்கிறார்களே, அப்படிப்பட்ட சட்டங்கள்கூட இங்கே இயற்றப்படுகின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முற்பகல் 11-25

வரவு-செலவுத் திட்டத்திலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது; ஒற்றுமை, ஒருமைப்பாடு, இறையாண்மை இவையெல்லாம் கேள்விக்குறியாக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். என்ன காரணம்? இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்க முடியவில்லை. தமிழ் மீனவர்களைப் பாதுகாக்க முடியவில்லை. அதேபோல, காவிரிப் பிரச்சினை, முல்லைப் பெரியாறு பிரச்சினை, பாலாறுப் பிரச்சினைகளில் நம்முடைய உரிமைகளை நிலைநாட்ட முடியவில்லை. அதுமட்டுமல்ல, ஒகேனக்கல் குடிநீர்த் திட்டத்தையும் ஒத்திவைக்கக்கூடிய ஒரு கட்டாயச் சூழ்நிலை இன்றைக்கு இருந்து வருகிறது. இதை எண்ணித்தான் நம்முடைய வரவு-செலவுத் திட்டத்திலே இப்படிப்பட்ட வார்த்தைகளெல்லாம் இடம் பெற்றிருக்கின்றன என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரிய மரியாதை, குறிப்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு தொகுதிகளில் அதிகாரிகள்



மட்டத்தில் கிடைப்பதில்லை. எனவே, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை, பாரபட்சம் இல்லாமல் அதிகாரிகள் நடந்துகொள்கின்ற வகையில், மரபுகளைக் கட்டிக் காக்கின்ற வகையில், அதிகாரிகளுக்கு அரசு அறிவுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஓய்வுபெற்ற அரசு ஊழியர்களுக்கு அவர்கள் இறந்தால் குறைந்தபட்சம் ஒரு இலட்சம் ரூபாய் அவர்களின் குடும்பத்திற்கு கிடைப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு bus pass வழங்கியிருக்கிறீர்கள். அதேபோல, தமிழகம் முழுவதும் செல்வதற்கு அவர்களுக்கு Railway pass-ம் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுதந்திரப் போராட்ட வீரர்களுடைய குடும்பங்களுக்கு ஓய்வூதியமாக 500 ரூபாய் அவர்களுடைய வாரிசுக்கு வழங்கப்பட்டு வருகிறது. 500 ரூபாய் என்பது மிகவும் குறைவான தொகையாக இருப்பதால், அதை ஆயிரம் ரூபாயாக உயர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உறுப்பினர்களுடைய அடையாள அட்டையில் அவர்களுடைய அங்க அடையாளங்கள், அவர்களுடைய பிறந்த தேதி, அதுமட்டுமல்ல, இரத்த வகை போன்றவையெல்லாம் அந்த அடையாள அட்டையில் குறிப்பிடப்பட வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுடைய விடுதிகள் சரியாகப் பராமரிக்கப்படுவதில்லை. அந்த விடுதிகளில், குறிப்பாக bath room-பகுதிகளில், toilet-களில் எல்லாம் புழுக்களும், எறும்புகளும் ஊர்ந்துகொண்டிருப்பதை இன்றைக்குக்கூட பார்க்க முடிகிறது. (மணியடிக்கப்பெற்றது) எனவே அவற்றை சரியாகப் பராமரிப்பதற்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள், உட்காருங்கள். அடுத்து, (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி. (குறுக்கீடு) எல்லாமே முக்கியமான விஷயம்தான்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை வட்டக் கழகச் செயலாளர் ஆக்கி, நகராட்சியினுடைய கவுன்சிலராக ஆக்கி, நகர்க் கழகச் செயலாளர் ஆக்கி, இளைஞரணியினுடைய மாநிலச் செயலாளராக ஆக்கி, இரண்டு

முறை சட்டமன்ற உறுப்பினராக ஆக்கிய எங்களுடைய குலதெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய உரையைத் துவங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லைப் பெரியாறு கொள்ளளவை 142 அடியாக உயர்த்த வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பை இந்த அரசாங்கம் உடனடியாக அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய மேலூர் தொகுதியிலே காவிரிக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்பது இதுவரை தொடங்கப்படவில்லை. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், 2006-2007-லே 148 கோடி ரூபாயில் இந்தத் திட்டத்தை அறிவித்தார்கள். ஆனால், அதற்குப்பிறகு இதுவரை 2007-2008-லே உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையிலே அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, உடனடியாக இந்த ஆண்டு நடைபெறும் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு இந்த ஆண்டு, 2008-2009 ஆம் ஆண்டு உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையிலே ரூபாய் 203 கோடியில் இந்தத் திட்டம் நடைபெறும் என்று சொல்லி, காலந்தாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்களுக்கு குடிதண்ணீர் வழங்குவதற்கு, மேலூர் தொகுதி முழுவதும், எல்லா கிராமங்களுக்கும், காவிரிக் கூட்டுக் குடிநீர் செல்வதற்கு அமைச்சர் அவர்கள் உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூபாய் 1,500 வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு மூட்டை நெல் விலையை ஆயிரம் ரூபாயாக உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதியிலே ஒருபோக சாகுபடியை இருபோக சாகுபடியாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், கண்மாய்கள், ஓடைகளைத் தூர் வாரித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலூர் சார்பு நீதிமன்றம் குறித்து, அமைச்சர் அவர்கள் சட்டசபையில் அறிவித்திருக்கிறார்கள். சார்பு நீதிமன்றம் மேலூரிலே இயங்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், மேலூரில் இருக்கின்ற ஒருங்கிணைந்த நீதிமன்றங்களுக்கு புதிய கட்டடம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலூர் தொகுதியிலே தினந்தோறும் அதிகமான மின்வெட்டு ஏற்படுகிறது. விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மேலூர் தொகுதியிலே மின்வெட்டு வராமல் இருப்பதற்கு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மேலூர் தொகுதியில் குண்டும் குழியுமாக இருக்கின்ற ரோடுகளை நெடுஞ்சாலைத் துறை உடனடியாக சரி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலூரிலே கூடுதல் bus வசதி வேண்டுமென்று இரண்டு ஆண்டு காலமாக அமைச்சரிடம் பலமுறை கேட்டுக்கொண்டும் இதுவரை ஒரு bus-கூட விடவில்லை என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அதேபோல இரண்டு ஆண்டு காலமாக மேலூர் தொகுதியிலே பல ரேஷன் கடைகளைப் பிரித்துக்கொடுக்க வேண்டுமென்று கேட்டும், இதுவரையில் ஒரு ரேஷன் கடையைக்கூட அமைச்சர் அவர்கள் பிரித்துக் கொடுக்கவில்லை என்பதைக் குற்றச்சாட்டாகச் சொல்ல விரும்புகிறேன். அதேபோல, மேலூர் தொகுதியிலே உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்டதாக தரம் உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூரிலே, எனது வீட்டுக்கு அருகிலே இருக்கின்ற கூட்டுறவு நூற்பாலை கடந்த 1999 ஆம் ஆண்டு மூடப்பட்டது. அந்த ஆலையை இயக்க வேண்டும், இல்லையென்றால், அந்த ஆலையை மாற்றி வேறு தொழிற்சாலை தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், மேலூர் தொகுதியிலே இருக்கின்ற அனைத்துப் பள்ளிகளையும் தரம் உயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலூரிலே இருக்கின்ற காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டித்தரவேண்டும். மேலூரிலே இருக்கின்ற D.S.P. அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மகளிர் காவல் நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-30

அதுமட்டுமல்ல, மேலூர் தொகுதியில் இருக்கின்ற தீயணைப்பு நிலையங்களுக்கும், கொட்டாம்பட்டியில் இருக்கின்ற தீயணைப்பு நிலையத்திற்கும் புதிய கட்டடங்கள் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, சேட்டப்பட்டி தொகுதியில் இருக்கின்ற உத்தபுரத்திலும், திருமங்கலம் தொகுதியில் இருக்கின்ற

எலியார்பத்தி கிராமத்திலும் உள்ள மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கே முத்தரையர் சமுதாய மக்கள் மிகவும் வேதனையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். இதில் அரசு தலையிட்டு, அங்கே என்ன நடந்தது என்பதைக் கண்டறிய நீதி விசாரணை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் அம்மா அவர்களுடைய ஆட்சியில் கட்டுமானப் பொருட்களின் விலை மிகவும் குறைவாக இருந்தது. ஒரு மூட்டை சிமெண்ட் விலை 110 ரூபாயிலிருந்து 140 ரூபாய்வரை இருந்தது. கம்பி விலை, டன் ஒன்றுக்கு 28 ஆயிரம் ரூபாயாக இருந்தது. ஒரு லோடு மணல் 3,500 ரூபாயாக இருந்தது. ஒரு லோடு செங்கல் 5,500 ரூபாயாக இருந்தது. இப்போது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே சிமெண்ட் விலை மூட்டை 251 ரூபாய். கம்பி விலை, டன் ஒன்றுக்கு 48 ஆயிரம் ரூபாய். ஒரு லோடு மணல் விலை 7 ஆயிரம் ரூபாய். ஒரு லோடு செங்கல் விலை 13 ஆயிரம் ரூபாயாக உயர்ந்திருக்கிறது.

அதேபோல, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நாய் கடித்தால் ஊசி போடுவதற்கு ரேஷன் கார்டு கொண்டுவர வேண்டுமென்று சேலம் மருத்துவமனையில் அறிவித்திருக்கின்றார்கள். அப்படியென்றால், நாய் கடிக்கின்றபோது ரேஷன் கார்டை பையிலே வைத்திருக்க வேண்டுமா என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மாதம் 4,000 ரூபாய் கொடுப்பதை 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, விடுதலைப் போராட்ட வீரர்களுடைய குடும்பத்திற்குக் கொடுக்கப்படுகின்ற 2 ஆயிரம் ரூபாயை 5 ஆயிரம் ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் 7 ஆயிரம் ரூபாய் என்பதை 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் மருத்துவப்படி வருடத்திற்கு 4 ஆயிரம் ரூபாய் என்று வழங்கப்படுவதை, மாதம் 2 ஆயிரம் ரூபாயாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியைப் பொறுத்தவரையில்—இப்பொழுதெல்லாம் எந்தக் கிராமமாக இருந்தாலும், நேரடியாகச் சட்டமன்ற உறுப்பினர்களிடம் சென்றுதான், அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்துதரக் கேட்கிறார்கள்—தற்போது ஒதுக்கப்படும் 1 கோடியே, 20 இலட்சம் ரூபாய் என்பது பாதி அளவிற்குக்கூட போதவில்லை. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியை 3 கோடி ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இதுவரை இல்லாத அளவிற்கு பல சட்டமன்ற உறுப்பினர்கள் சஸ்பெண்டு செய்யப்பட்டிருக்கிறார்கள். அதை ஏற்றுக்கொள்கிறோம். நீங்கள் தண்டனை கொடுப்பதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், சம்பளப் பிடித்தம் என்பது, இதுவரை இந்தச் சட்டமன்றத்தில் நடந்தது கிடையாது. முதல்முறையாக, திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்களின் சம்பளத்தைப் பிடித்திருக்கிறீர்கள். அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனை மட்டும் போதும். பிடித்தம் செய்யப்பட்ட சம்பளத்தை உடனடியாக வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், கடந்த 8 ஆம் தேதி அன்று ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கையிலே எங்கள் அம்மா அவர்களுடைய பெயரைச் சொல்லி, "ஏதோ ஒரு நாள் சட்டமன்றத்திற்கு வருகிறார், ஏதாவது ஒன்றைச் சொல்லிவிட்டுப் போகிறார்" என்று சொல்லியிருக்கின்றார். 1991 ஆம் ஆண்டிலிருந்து 1996 ஆம் ஆண்டுவரை, சேப்பாக்கம் சட்டமன்ற உறுப்பினராக இருந்த முதலமைச்சர் அவர்கள், ஒரு நாளாவது இந்த அவைக்கு வந்ததுண்டா, அவையிலே விவாதம் நடத்தியதுண்டா, இந்த அவையிலே பேசியதுண்டா என்று நான் கேட்க விரும்புகின்றேன். எங்கள் அம்மாவைப் பார்த்து, ஒருநாள் வருகிறார், என்றைக்கோ ஒருநாள் வருகிறார் என்று அவர் சொல்வதற்கு அவசியமில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ** என்பதை நான் குற்றச்சாட்டாகச் சொல்கிறேன். ஏனென்றால்...

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. சாமி, முதலில் உட்காருங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு சி. ஞானசேகரன். (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். திரு. சாமி அவர்கள் கடைசியாகச் சொன்ன அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. திரு. சி. ஞானசேகரன், பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பல மானியக் கோரிக்கைகள் இருந்தாலும், நேரமின்மை காரணமாக மாநிலச் சட்டமன்றம் குறித்து மட்டும் நான் இங்கே பேச விழைகிறேன். ஏற்கெனவே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சாமி, நீங்கள் தேவையில்லாமல் எழுந்து நிற்கின்றீர்கள். உட்காருங்கள். அவசியமில்லாமல் எழுந்து நின்று, அங்கே பார்த்துப் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) மற்றவர்கள் அமைதியாக இருங்கள். (குறுக்கீடு) திரு. துரை சந்திரசேகரன், அமைதியாக உட்காருங்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1½ மாத காலமாக இந்த அவை சுமுகமாக நடந்து கொண்டிருக்கிறது. இன்று இறுதி நாள். இன்றும் சுமுகமாக நடப்பதற்கு நீங்கள் வழிவகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சாமி, அமைதியாக இருங்கள். இவ்வளவு நாட்களும் அமைதியாக இருந்தீர்கள். இன்றும் அமைதியாக இருங்கள். திரு. சி. ஞானசேகரன், பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. சீனிவாசன், உட்காருங்கள். (குறுக்கீடு) அவர்தான் எழுந்து நின்றுகொண்டிருக்கிறார். திரு. சி. ஞானசேகரன், பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்பொழுதுமே தமிழகம், இந்தியத் திருநாட்டிலேயே எல்லாத் துறைகளிலும் முன்னணி மாநிலமாக விளங்க வேண்டுமென்று, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், மற்ற அமைச்சர்களெல்லாம் போட்டி போட்டுக்கொண்டு முன்னேற்றத்தைக்



கண்டிருக்கிறீர்கள். ஆனால், சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளத்தைப் பொறுத்த அளவில், நாம் மிகவும் பின்தங்கியிருக்கிறோம் என்பதை நான் இந்த அவையிலே முதலிலே பதிய வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மற்ற மாநிலங்களை எதற்கெடுத்தாலும் உதாரணம் காட்டுகிற நாம், நம்முடைய மகாராஷ்டிராவை எடுத்துக்கொண்டால், இப்பொழுது மகாராஷ்டிராவிலே 65,000 ரூபாய் சம்பளம் வழங்குகிறார்கள்; பக்கத்திலே இருக்கக்கூடிய ஆந்திராவை எடுத்துக்கொண்டால், அங்கே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மாதம் 43,000 ரூபாய் வழங்குகிறார்கள்; சிறு மாநிலமான ஹிமாச்சல் பிரதேஷை எடுத்துக்கொண்டால் 33,000 ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள்; உத்தரப் பிரதேசத்திலே மாதத்திற்கு 30,000 ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள்; அரியானாவிலே 31,500 ரூபாய் கொடுக்கிறார்கள். சிறு, சிறு மாநிலங்களெல்லாம் இவ்வளவு சம்பளத்தை வழங்கிக் கொண்டிருக்கிறபோது, இன்று இந்தியத் திருநாடே தமிழகத்தைத் திரும்பிப் பார்க்கக்கூடிய அளவிற்கு எல்லா துறைகளிலும் நாம் வளர்ச்சி பெற்றுவிட்டோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிற நாம், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கக்கூடிய அந்த சம்பளத்தை— இன்னும் சொல்லப்போனால், நான் மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன், இப்பொழுது மாதம் ரூபாய் 2,000 சம்பளமாக நீங்கள் கொடுக்கிறீர்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சம்பளமே வேண்டாம்—நீங்கள் வெறும் செலவுத் தொகை என்கிற படிகளை மட்டுமே கொடுத்தால் போதும் என்பதை மட்டும் நான் இங்கே பதிய வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-35

பொதுவாக, இந்தப் படிகளை எல்லாம் பார்த்தோமானால், மிசோரமிலே ரூபாய் 10,000/- சம்பளம் கொடுக்கிறார்கள்; இங்கே ரூ.2,000/- கொடுக்கிறீர்கள்; அதுகூட எங்களுக்கு வேண்டாம்.

அதேபோல, ஈட்டுப் படி. தமிழ்நாட்டில் ரூ.6,000/- கொடுக்கிறீர்கள்; அதை ஏற்றுக்கொள்கிறோம். அதைப்போல, தொலைபேசிப் படியைப் பார்த்தீர்களானால், இராஜஸ்தானில் ரூ.20,000/- கொடுக்கிறார்கள்; தொகுதிப் படி U.P.-லே ரூ.15,000/- கொடுக்கிறார்கள்; தபால் படி மகாராஷ்டிராவிலே ரூ. 6,000/- கொடுக்கிறார்கள். அதேபோல, தொகுதிப் படி கோவாவிலே ரூ..5,000/- கொடுக்கிறார்கள். நேர்முக உதவியாளர் படி Himachal Pradesh, Punjab போன்ற மாநிலங்களில் ரூ..5,000/- கொடுக்கிறார்கள். போக்குவரத்துப் படி அஸ்ஸாமிலே ரூ.6,300/-

கொடுக்கிறார்கள். செயலகப் படி New Delhi-லே ரூ.7,000/- கொடுக்கிறார்கள். இட வசதிப் படி, பாண்டிச்சேரியில் ரூ.5,500/- கொடுக்கிறார்கள். மருத்துவப் படி, U.P. ரூ.6,000/- குடிநீர் மற்றும் மின்சாரத்திற்காகக் கொடுக்கப்படுகிற படி சத்தீஷ்கரில் ரூ.2,500/- கொடுக்கிறார்கள். எதிர்பாரா செலவுப் படி என்று மிசோராம், அஸ்ஸாமிலே 3,000 ரூபாய் கொடுக்கிறார்கள். பத்திரிகை படி என்று ஒரிஸாவில் 200 ரூபாய் கொடுக்கிறார்கள். ஓட்டுநர் படி மேகாலயாவிலே 3,000 ரூபாய் கொடுக்கிறார்கள். நிர்ணயிக்கப்பட்ட படி என்று கேரளாவில் ரூ.7,500/- கொடுக்கிறார்கள். அதேபோல, குடும்ப விருந்தினர் படி என்று மிசோராமில் 3,000 ரூபாய் கொடுக்கிறார்கள். அதேபோல, இதரப் படி என்று பார்த்தால், West Bengal-லே ரூ.2,000/-, வாகனப் படி A.P. and Maharastra ரூ.15,000/- கொடுக்கிறார்கள். இதையெல்லாம் கணக்குப் போட்டோமென்றால், மாதத்திற்கு 1,33,000 ரூபாய் வருகிறது. ஆனால், எங்களுக்கு இதெல்லாம் வேண்டவே வேண்டாம். மகாராஷ்டிராவிலே ரூ.65,000/- கொடுக்கிறார்கள். அதில், ரூ.2,000/-ஐக் கழித்துவிட்டு ரூ.63,000/- தமிழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நீங்கள் வழங்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து வாகனம். மகாராஷ்டிராவை எடுத்துக்கொண்டால், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும், ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தோடு அங்கே V.I.P. cars எப்படி provide பண்ணுகிறோமோ, அதுபோல, ஒரு மாவட்டத்தில் 12 சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால், 12 கார்கள் அங்கே நிற்கும். அதேபோல, 12 ஓட்டுநர்கள் இருப்பார்கள். Repair என்று ஏற்பட்டால் அங்கே Government Workshop-ல் கொண்டுபோய் அதை repair செய்வார்கள். Fuel எவ்வளவு தேவைப்படுகிறதோ அதற்கு அமைச்சர்கள், Collector, S.P. போன்றவர்களெல்லாம் எப்படி பெட்ரோல், டீசல் பிடிக்கிறார்களோ அந்த இடத்தில் டீசல் பிடிக்கலாம். இப்படி எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மகாராஷ்டிராவில் வாகனங்களை வழங்கி, அவர்கள் முன்னுதாரணமான ஒரு மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இப்பொழுது Panchayat Union Chairman-களுக்கு 385 கார்கள் வழங்கப்படும் என்கிற ஓர் அறிவிப்பை இந்த மாமன்றத்தில் அறிவித்தார்கள். M.L.A. பதவி என்பது equal to Chief Secretary என்று Protocol-ல் வைத்திருக்கிறீர்கள்.



Equal to Chief Secretary என்று Protocol-ல் வைத்துவிட்டு, 'பேரு மட்டும் பெத்த பேரு' கடைசியிலே பார்த்தால், ஒரு Panchayat Union Chairman-க்கு இருக்கக்கூடிய அந்த இணையான மதிப்பு, மரியாதையாவது இந்த அரசாங்கம் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, (குறுக்கீடு) Guillotine time பிற்பகல் 1½ மணி. நம்முடைய அருளாளர் ஆற்காட்டார் அண்ணன் அவர்கள் எங்களுக்கு நேரத்தை ஒதுக்கித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 31 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. அதையும் கருத்திலே கொள்ள வேண்டும்.

*முற்பகல் 11-40*

**திரு. சி. ஞானசேகரன்:** 31 சட்டமுன்வடிவுகள் இருக்கின்றனவென்றால், அவற்றில் நாங்கள் ஐந்து நிமிடங்கள் எடுத்துக்கொள்வதைக் குறைத்துக்கொள்கிறோம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—இன்றைய சூழ்நிலையில்—முன்பெல்லாம் பார்த்தீர்களானால், சட்டமன்ற உறுப்பினர்களாக வரக்கூடியவர்கள் செல்வந்தர் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் அல்லது தனவந்தர்கள்தான் வந்துகொண்டிருந்தார்கள். இன்று சட்டமன்ற உறுப்பினர்களாக வந்திருக்கக்கூடியவர்களெல்லாம்,—சாமானியர்களெல்லாம்கூட சட்டமன்ற உறுப்பினர்களாக வரக்கூடிய ஒரு வாய்ப்பை ஜனநாயகம் நமக்குத் தந்து, வந்துகொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், இன்றைக்குச் செலவெல்லாம் பார்த்தோமென்றால், ஏறியிருக்கக்கூடிய விலைவாசியிலே, கச்சா எண்ணெய் விலை 400 சதவீதம் ஏறியிருக்கிறது. அதேபோல, தொகுதி வளர்ச்சி நிதியினை எடுத்துக்கொண்டால், அதன்மூலம் ரூபாய் 1 கோடியே 20 இலட்சம் கொடுக்கிறோம். இப்போது இரும்பின் விலையும், சிமெண்டின் விலையும், மணல் விலையும், ஜல்லி விலையும் இரண்டு மடங்காகிவிட்டன. எல்லா பொருட்களின் விலையும் இரண்டு மடங்காகிக்கொண்டு போய்க்கொண்டிருக்கின்றபோது, தொகுதி வளர்ச்சி நிதிக்காகக் கொடுக்கப்படும் ரூ.1 கோடியே 20 இலட்சம் நிதியை, ரூ.2 கோடியே 40 இலட்சம் என்று உயர்த்திக்கொடுத்தால்தான் அந்தத் திட்டங்களை நிறைவேற்றிட முடியும். (மேசையைத் தட்டும ஒலி) சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் ஒரு கி.மீ.க்கு சிமெண்ட் ரோடு போட திட்டமிட்டுக் கொடுத்தால், அந்தப் பணத்தை வைத்து அந்த வேலையை முடிக்க முடியாமல் பாதியிலேயே நின்று விடுகிறது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்கிற கோரிக்கையெல்லாம் சரிதான். இரண்டரை கோடி ரூபாய் கேட்பது எல்லாம் சரிதான். மற்ற கோரிக்கைகளை மட்டும் சொல்லி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகவே, இந்தத் தொகுதி வளர்ச்சி நிதியினைப் பொறுத்தவரையில் மற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் சொன்னதுபோல, நாங்கள் கேட்கும் ரூ.2 கோடியே 40 இலட்சம் கேட்பது என்பது, ஏதோ எங்களுடைய பாக்கெட்டில் போட்டுக்கொள்வதற்காகவோ, அல்லது எங்களுடைய வீட்டிற்கு எடுத்துக்கொண்டு போவதற்காகவோ கேட்கவில்லை. எல்லா பணத்தையும் நீங்கள் சொல்லக்கூடிய உங்களுடைய விதிமுறைகளின்படி, மாவட்ட ஆட்சித் தலைவர் சொல்கிறபடி, அங்கேயிருக்கக்கூடிய திட்ட அலுவலர் சொல்கிறபடி டெண்டர் வைத்துதான் பணிகள் செய்யப்படுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அரசாங்கம் செலவு செய்யக்கூடிய அந்தப் பணத்தை நீங்கள் எங்களுக்கு ஒதுக்கீடு செய்துகொடுத்தால் சட்டமன்ற உறுப்பினர்கள் கொஞ்சம் மரியாதையோடு தொகுதிக்குச் சென்று மக்கள் சொல்லக்கூடிய பணிகளை செய்துகொடுக்கமுடியும் என்கின்ற காரணத்தினாலே, இந்த நிதியை நீங்கள் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பொதுவாகக் கிடைக்கக்கூடிய வசதிகள் என்பது மிகவும் குறைவாக இருக்கிறது. உதவியாளர்கள் இல்லாமலும், அதேபோல, இப்போது கம்ப்யூட்டரைக் கொடுத்திருக்கிறீர்கள், அதனை இயக்குவதற்கு நிச்சயமாக ஆப்பரேட்டர் தேவை.

அதேபோல, ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலிருந்தாவது இரண்டு உதவியாளர்களை எங்கள் P.A-வாக நீங்கள் டெபுடேஷன் அடிப்படையில் கொடுத்தால்தான், நிச்சயமாக அதற்கான நடவடிக்கை எடுத்தால்தான் சட்டமன்ற உறுப்பினருடைய அலுவலகம் அங்கே சிறப்பாக நடைபெறும். ஏனென்றால், வரக்கூடிய மனு எங்கே போகிறது என்பது தெரியாமல் போகின்றது. இப்போது சட்டமன்றக் கூட்டம் நடைபெறுவதால் இங்கே வந்துவிடுகிறோம்.



இந்த நேரத்தில் மக்கள் அங்கு வருகின்றபோது அவர்களுடைய தேவையினை அறிந்து மனுக்களைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொன்னால், கம்ப்யூட்டர் ஆப்பரேட்டர் நிச்சயமாகத் தேவை. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்களும், இங்கேயிருக்கும் நிதி அமைச்சர் அவர்களும் மற்றும் இருக்கக்கூடிய அமைச்சர் பெருமக்களும் சட்டமன்ற உறுப்பினர்களுடைய இந்தக் கோரிக்கையினை நீங்கள் தயவு செய்து பரிசீலித்து ஆப்பரேட்டர் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேலும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கையும் இருக்கிறது. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நாம் வாங்கக்கூடிய சம்பளத்தில் பாதியை எப்போதும் கொடுக்கக்கூடிய மரபு இருந்துக்கொண்டிருக்கின்றது. இப்போது கொடுக்கக்கூடிய ஊதியம் அவர்களுக்குப் போதவில்லை. குறைந்தபட்சம் அவர்களுக்கு ரூ.12,500/- பென்ஷனை நீங்கள் வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, அவர்களுக்கு மருத்துவப் படி வருடத்திற்கு ரூ.4 ஆயிரம் கொடுப்பது என்பது போதவில்லை. அவர்களுக்கு மாதம் ரூ.1,000/- என்று வருடத்திற்கு ரூ.12 ஆயிரம் மருத்துவப் படியைக் கொடுப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல, ஏற்கெனவே நாம் இந்த அவையிலே பேசியிருக்கிறோம். தமிழ்நாடு இல்லத்திலே அவர்களுக்கு ரூ.500/-க்கு அறை கொடுக்கப்படுகிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எந்தத் தொகையில் கொடுக்கப்படுகிறதோ அந்தத் தொகைக்கே அவர்களுக்கு கொடுக்கக்கூடிய நிலைக்கு நீங்கள் நிச்சயமாக ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லா உறுப்பினர்களும் வேண்டுகோள் வைக்கிறார்கள். (குறுக்கீடு) சரி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பு வைப்பதைப்போல கடைசியாக ஒரு கோரிக்கை. இதற்குமேல் ஒன்றை நம்முடைய அருமை அண்ணன் ஆற்காட்டார் மற்றும் மற்றவர்கள் முன்னிலையில் வைக்கப்போவதில்லை.

இப்போது 4 இலட்சம் பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாவைக் கொடுத்துவிட்டீர்கள். நாம் வீட்டு வசதி வாரியம் என்று ஒன்றை வைத்திருக்கிறோம். வீட்டு வசதி வாரியம் என்பது பொதுவாக யாரெல்லாம் வீட்டுமனை கேட்கிறார்களோ அவர்களுக்கு அரசாங்கம் நிலத்தைக் கையகப்படுத்தி reasonable rate-ல் நீங்கள் மனையைக் கொடுப்பதற்காக உருவாக்கப்பட்டதுதான் வீட்டு வசதி வாரியம். ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் ஒன்றும் இலவசமாகக் கேட்கவில்லை. மகாராஷ்டிரத்திலேயும் ஹைதராபாத்திலும் இரண்டு கிரவுண்டு இடம் கொடுத்து, ரூ.10 இலட்சம் அப்போது வட்டியில்லாமல் கடன் கொடுத்திருக்கிறார், திரு. சந்திரபாபு நாயுடு அவர்கள். நம்முடைய அண்ணன் ஆற்காட்டார் அவர்கள் அதைப் புரிந்துகொள்ள வேண்டும். கொடுக்க மாட்டேன், கொடுக்க மாட்டேன் என்று நீங்கள் இப்படியே காலம் தள்ளிக் கொண்டுப் போவது என்பது சரியாக இல்லை. பெங்களூரிலே 15 ஆண்டுகளுக்கு முன்னால் இரண்டு கிரவுண்ட் நிலம் கொடுத்திருக்கிறார்கள். அதேபோல, ஹைதராபாத்திலே (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நாங்கள் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், நாங்கள் இலவசமாக நிலத்தைக் கேட்டால் சமுதாயத்தில் கெட்ட பெயர் வந்துவிடும். அந்த மாதிரி கேட்கவில்லை. நீங்கள் அதற்குரிய விலையை வாங்கிக்கொள்ளுங்கள். எந்த நோக்கத்தோடு வீட்டு வசதி வாரியம் உருவாக்கப்பட்டதோ, அந்த நோக்கத்தோடு, எந்தெந்த சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை வைத்துக் கேட்கிறார்களோ, அவர்களுக்கு reasonable rate-ல் கொடுக்கலாம். அமைச்சர்களுக்கும் கொடுக்கலாம், சபாநாயகருக்கும் கொடுக்கலாம், துணை சபாநாயகர் மற்றும் எல்லோருக்கும் கொடுக்கலாம். பொதுவாக இந்தச் சட்டமன்றத்தில் உறுப்பினர்களாக இருக்கக்கூடிய அத்தனை பேருக்கும், யார் மனு கொடுக்கிறார்களோ --பெரும்பான்மையான உறுப்பினர்களுக்குக் கொடுக்கலாம். மனு கொடுக்காத நம்முடைய கம்யூனிஸ்டு உறுப்பினர்களை விட்டுவிடலாம். ஆகவே, மற்றவர்களுக்கெல்லாம் நீங்கள் தயவுசெய்து இரண்டு கிரவுண்டு நிலம் reasonable rate-ல் உடனடியாக விலைக்குக் கொடுக்க வேண்டும், முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)



*முற்பகல் 11-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் பதிலுரை.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இங்கே கொண்டு வரப்பட்ட மானியக் கோரிக்கைகளான மாநிலச் சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, நிதித் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் துறை ஆகிய இந்தத் துறைகள் பற்றிய மானியக் கோரிக்கைகள் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஞானசேகரன் அவர்கள் உட்பட, 8 பேர் உரையாற்றி இருக்கிறார்கள். இதிலே நிதித் துறையைப் பற்றியும், ஓய்வூதியத் துறையைப் பற்றியும், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையைப் பற்றியும் பல செய்திகள், என்னுடைய இந்த மானியங்களைப் பற்றிய விளக்க உரையிலே இடம் பெற்றிருந்தாலும்கூட, இந்தக் கோரிக்கைகள் அடிப்படையிலே உரையாற்றிய நண்பர்களில் மிகப் பலர், மிக அதிகமாக சட்டப் பேரவை கோரிக்கை அடிப்படையிலேதான், சட்டமன்ற உறுப்பினர்கள் என்ற முறையிலேதான் வலியுறுத்திப் பேசினார்கள். இந்தக் கோரிக்கைகளிலேகூட 257 பெயர்களில் வெட்டுத் தீர்மானங்கள் வழங்கியிருக்கிறார்கள். அந்த 257 பேர், என்பது உறுப்பினர்களின் எண்ணிக்கை அல்ல; ஒரே உறுப்பினர் பல வெட்டுத் தீர்மானங்களைக்கூட வழங்கியிருக்கிறார்கள். இதிலே சட்டப் பேரவையைப் பற்றி மட்டும் 819 வெட்டுத் தீர்மானங்கள் தரப்பட்டிருக்கின்றன. இந்த வெட்டுத் தீர்மானங்களும், இங்கே ஆற்றிய உரைகளும் அரசால் மிக உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு, வெட்டுத் தீர்மானங்கள் அடிப்படையிலே தரப்பட்டிருக்கிற கோரிக்கைகளும், இந்த அவையிலே உரையாற்றுகிறபோது எடுத்துச் சொல்லப்பட்ட அந்தக் கோரிக்கைகளும் தகுந்த முறையில் உரிய பரிசீலனைக்குப் பின்னர் முடிவெடுத்து அறிவிக்கப்படும் என்று நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏனென்றால், இங்கே திரு. ஞானசேகரன் அவர்கள் எவ்வளவு அவசரப்பட்டு உரையாற்றி எல்லாவற்றையும் பெற வேண்டும் என்று விரும்புகிறாரோ, அதற்கு நேர்மாறாக நான் அவசரப்பட முடியாதவனாக, அதே வேகத்திலே பதில் சொல்ல முடியாதவனாக, ஏதோ, எப்படியோ பதில் சொல்ல வேண்டுமென்பதற்காக எல்லாமே

இல்லை என்று சொல்லிவிடாதவனாக நான் இருக்க விரும்புகிறேன். (சிரிப்பு) ஆகவே, இவைபற்றி ஆய்வு செய்ய வேண்டிய ஒரு நிலைதான் இருக்கிறது என்பதை நான் ஒரு கருத்தாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில், இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்—ம.தி.மு.க. உறுப்பினர் என்று கருதுகிறேன்—அவர்கள் பேசுகிறபோது, டாக்டர் கிருஷ்ணாராவ் அவர்கள் சட்டப் பேரவைத் தலைவராக இருந்தபோது, எதிர்க்கட்சிகளுக்குத்தான் அதிக உரிமை தர வேண்டும், எண்ணிக்கைக் குறைவாக இருக்கிறவர்களுக்குத்தான் அவர்கள் அதிக பேசும் வாய்ப்பு வழங்க வேண்டுமென்று சொன்னார்கள் என்ற கருத்தைச் சொன்னார்கள். டாக்டர் கிருஷ்ணாராவ் அவர்கள் அப்படிச் சொன்னபோது அந்த அவையிலே உறுப்பினராக இருந்தவன் நான். ஆனால், அறிஞர் அண்ணா அவர்கள் அதற்கு முன்னாலே உரையாற்றுகிறபோது, வலிவு குறைந்தவர்கள், பலகீனமானவர்கள், இளைத்தவர்கள் ஆகியோரைத்தான் ஒரு டாக்டர் அதிகமாகக் கவனிக்க வேண்டும், சிகிச்சை வழங்க வேண்டும், அந்த முறையில் எதிர்க்கட்சியினராகிய நாங்கள் வலிவு குறைந்தவர்களாக இருக்கிறோம், ஆளுகிற கட்சி வலுவான கட்சியாக இருக்கிறது என்பதை டாக்டர் கருத வேண்டுமென்று அண்ணா சொன்னார்கள். அந்த அடிப்படையிலே அன்றையதினம் டாக்டர் கிருஷ்ணாராவ் அவர்கள் அதை ஏற்று அதற்கு உடன்பட்ட கருத்தைத் தெரிவித்தார்கள். இந்த அவையிலே நடைமுறையிலே நீங்கள் பார்ப்பீர்களேயானால் எதிர்க்கட்சிகளுக்குத் தரவேண்டிய முக்கியத்துவம் மிகப் பெரிய அளவிற்குத் தரப்படுகிறது என்பதை நான் உறுதி செய்ய விரும்புகிறேன். பேசுகிற நேரமானாலும் சரி, பேசுவதிலே அவர்கள் எடுத்துச் சொல்லக்கூடிய கருத்துகள் எவ்வளவு மாறுபாடாக இருந்தாலும்கூட, அதைச் சொல்வதற்கான உரிமையாக இருந்தாலும் சரி, உண்மையாகவே எதிர்க் கட்சிகளுக்குத் தரவேண்டிய இடத்தை ஆளும் கட்சி தருகிறது என்பதை நான் புள்ளிவிவரங்களோடு எடுத்துச் சொல்ல முடியும், அதற்கு இந்த நேரத்தைப் பயன்படுத்த நான் விரும்பவில்லை. ம.தி.மு.க. உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது எதிர்க்கட்சிகளுக்குப் பேச இடம் தரவில்லை என்றார்கள்.

முற்பகல் 11-50

அவர்கள் எண்ணிக்கொண்டு சொல்வது, எதிர்க்கட்சியே தன்னுடைய கட்சிதான் என்று எண்ணிக்கொண்டு அவர்கள்



சொன்னார்கள். அவருடைய கட்சியினுடைய உறுப்பினர் எண்ணிக்கையை வைத்துப் பார்க்கின்றபோது, எதிர்க்கட்சி வரிசையிலே அவர்களுக்குரிய அந்த எண்ணிக்கையின் அடிப்படையிலேதான் மொத்த நேரத்தைப் பங்கிட முடியும். ஆளும் கட்சியைவிட எதிர்க்கட்சிகளுக்கு அதிக நேரம் ஒதுக்கினாலும், அவ்வாறு எதிர்க்கட்சிகளுக்கு ஒதுக்கப்படுகின்ற அதிக நேரம்கூட, ஒரு கட்சிக்கு அதிகம், ஒரு கட்சிக்குக் குறைவு என்று குறை கூற முடியாத அளவுக்கு உறுப்பினருடைய எண்ணிக்கையை வைத்துதான் பகிர்ந்திட முடியும். அந்த முறையிலே கட்சிகளுக்கு நேரம் வழங்கப்படுகின்றது என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

கடந்தகாலத்தில் சட்டமன்றத்தில் சில கட்சிகளுக்கு, சில நாட்களில் பேசுவதற்கு நேரம் வழங்கப்பட்டதேயில்லை. அதை உரிமை என்று கருத முடியாது. சட்டமன்றம் நடைபெற வேண்டிய முறைக்காக, அவர்கள் அந்த நேரத்தை எடுத்துக்கொள்வதற்கான உரிமையைப் பெற்றவர்களாக இல்லை என்றுதான் கருதவேண்டும். ஆகவே, அந்த முறையிலே ஒரு கருத்தாக நான் சொல்ல விரும்புவது, ஜனநாயகம் இந்தச் சட்டமன்ற நடைமுறைகளிலே நாளுக்கு நாள் நல்ல முறையிலே தழைத்து வருவதாக நான் நம்புகின்றேன். மாறுபாடு இருக்கலாம், எதிர்ப்பு இருக்கலாம், போராட்டம் இருக்கலாம். ஆனால் எவ்வளவு மாறுபாடு இருந்தாலும்கூட, இந்தச் சட்டமன்றத்தில் விவாதங்கள் எவ்வளவு நேரம் நடைபெற்றிருக்கின்றது என்பதைப் பற்றிய புள்ளி விவரங்களை எடுத்து நீங்கள் பார்ப்பீர்களேயானால், வர வரச் செம்மையாக, இன்னும் சொல்லப்போனால் ஒரு சட்டமன்றம் எப்படி நடைபெறவேண்டுமோ, அதற்கு ஒரு அடையாளமாக தமிழகச் சட்டமன்றம் நடைபெறுகின்றது. அதையும் நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், வேற்றுமையிலே ஒற்றுமை காண்கின்ற தத்துவத்தை கலைஞர் அவர்கள் கடைப்பிடிப்பதன் காரணமாக, மாறுபாடு இருந்தாலும்கூட, உடன்பாடுகளையே காண்போம் என்ற அந்த நோக்கத்தில், முதல்வர் செயல்படுகிறார். இன்று காலையில்கூட எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எழுப்பிய ஒரு பிரச்சினைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதில் சொல்கின்றபோது, எந்த அளவு உடன்பாடு கண்டுகொண்டு தன்னுடைய உரையை நிகழ்த்தினார் என்று பார்க்கின்றபோது, ஒரு வேளை இரண்டு கட்சிகளும் ஒன்றாகக்கூடிய அளவுக்கு

நெருங்கிவிட்டதோ என்று எனக்கு சந்தேகமே வரக்கூடிய அளவுக்குக் கருத்தொற்றுமை இருந்தது. எனவே இந்தக் கருத்தொற்றுமை என்பது, கருத்தொற்றுமை காணவேண்டிய நேரத்தில் நாம் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற வகையில் ஜனநாயக முறை காப்பாற்றப்படுகின்றது என்று நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இப்படி சட்டமன்றக் கோரிக்கை பற்றிய கருத்துகள் வேறு சிலவற்றை நான் குறிப்பிட விரும்பினாலும் இப்போது நேரமில்லை. நிதித் துறை என்பது—பல பேர் ஏதோ பட்ஜெட் என்று வழங்குகின்றோமே, நிதிநிலை அறிக்கை, அந்த நிதிநிலை அறிக்கையை வழங்குகின்ற காரணத்தால், ஏறக்குறைய நிதிநிலை அறிக்கைக்கு உட்பட்ட ஒரு செய்தியைப்போல நிதித் துறையைப் பற்றி பலரும் கருதுகின்றார்கள். நிதிநிலை அறிக்கையை வழங்குவதற்குக் காரணமான அடிப்படையான விவரங்களைச் சேகரித்து, உரிய முறையிலே அந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பதற்குக் காரணமாக இருப்பது நிதித் துறை. ஆனால், நிதித் துறை என்பது பல்வேறு பிரிவுகளாகப் பணியாற்றுகின்றது. நிதித் துறையில்தான் கருவூலக் கணக்குத் துறை, உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை, சிறு சேமிப்புத் துறை, அரசு தகவல் தொகுப்பு -Data Centre- விவர மையம், கூட்டுறவுத் தணிக்கைத் துறை, அரசுத் துறை நிறுவனத் தணிக்கைத் துறை, ஓய்வூதிய இயக்ககம், இத்தனை பிரிவுகளும் நிதித் துறையில் இருந்துதான் இந்தப் பணிகளைச் செய்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அண்மைக் காலத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள், தங்கள் ஊர்களில் கருவூலத் துறையினுடைய கிளை நிலையத்தை அமைக்க வேண்டுமென்று அவ்வப்போது வலியுறுத்திக் கேட்கின்றார்கள். ஆனால், கருவூலக் கணக்குத் துறை அண்மையிலே கணினி மூலமாக பல்வேறு வகையிலே தரம் உயர்த்தப்பட்டு, அதன் செயல்பாடு சிறந்திருக்கின்றது. தானியங்கி முறையில் கருவூலங்களின் பட்டியல் ஏற்பு முறைத் திட்டம் என்பது தேசிய தகவல் மையத்தால் கருவூலக் கணக்குத் துறைக்காக உருவாக்கப்பட்ட ஒரு கணினி மென்பொருள் ஆகும். இந்த மென்பொருளைப் பயன்படுத்தி, பிற மாநிலங்களில் உள்ளதுபோல அல்லாமல், பட்டியல்கள் அனுமதிக்கப்படும் நிலையில் இருந்து கணக்குகள் தயாரிக்கும் நிலை வரை அனைத்துப் பணிகளும் தொடர்ச்சியாகவும், உடனடியாகவும் On-line முறையிலே மேற்கொள்ளப்பட முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. ஆக, கருவூலக் கணக்குத் துறை என்பது 10, 20 ஆண்டுகளுக்கு முன்னர் எப்படி



நடைபெற்றதோ அந்த நிலையிலிருந்து மிகப் பெரிய அளவுக்கு அறிவியல் துணை காரணமாக மாற்றப்பட்டு, விரைவுபடுத்தப்பட்டிருக்கின்றது. அதனுடைய பணிகள் சீராக்கப்பட்டிருக்கின்றன. அதைப்போல, இந்தத் துறை சார்பாக பல்வேறு தணிக்கைப் பிரிவுகள். அரசாங்கத்தினுடைய பல்வேறு அமைப்புகளின் செயல்பாடுகள், தனி அமைப்புகளின் செயல்பாடுகள், ஆகியவையெல்லாம்கூட பல்வேறு வகையில் தணிக்கை செய்யப்படுகின்றன. இன்னும் சொல்லப்போனால், நடப்புத் தணிக்கையும் செய்யப்பட்டு, வாடிக்கையான நடப்பு தணிக்கைக்குப் பின்னர் இறுதித் தணிக்கையும் செய்யப்படுகின்றன. அவைமூலமாக அரசு நிருவாகங்கள் செம்மைப்படுத்தப்பட்டிருக்கின்றன என்று நான் குறிப்பாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-55

இந்த நிதித் துறையைப் பொறுத்த வரையில் ஒரு கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். இங்கே தரப்பட்ட வெட்டுத் தீர்மானங்களில் ஒன்றாக தரப்பட்டிருப்பது இது. இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் அதை எடுத்துச் சொன்னார்கள். கடந்த ஆண்டு பட்டியல் இனத்தவருடைய துணைத் திட்டத்திற்காக 1,638.19 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. 1,638 கோடி ரூபாய் என்று அரசு அறிவித்தபடி பட்ஜெட்டில் தொகை வழங்கப்படவில்லை என்ற ஒரு குறை சொல்லப்பட்டு, அதற்காக நிதித் துறை செயலாளரை, கேள்விக்குரியவராக ஆக்கவேண்டுமென்று அந்தக் கருத்து இடம் பெற்றிருக்கிறது. அதற்கு நான் விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். 2007-2008 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் பட்டியல் இனத்தவர்கள், ஆதி திராவிடப் பெருங்குடி மக்கள், அவர்களுக்கு துணைத் திட்டத்திற்காக அரசு அறிவித்தபடி வரவு-செலவுத் திட்டத்தில் பல்வேறு தலைப்புகளின்கீழ் மொத்தம் 1,638.19 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்தத் தொகை 2007-2008 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீட்டில் மேலும் உயர்த்தப்பட்டுள்ளது. அந்தத் தொகை செலவிடப்படவில்லை என்ற கருத்திலே வெட்டுத் தீர்மானம், ஆனால், அந்தத் தொகை மேலும் உயர்த்தப்பட்டு 1,771.38 கோடி ரூபாயாக அது மதிப்பீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டிருக்கிறது. 2007-2008 ஆம் ஆண்டின் கணக்குகள் மாநிலக் கணக்காயரால் கணக்கு முடிக்கப்பட்ட பிறகே இந்தத் திட்டத்திற்காக எவ்வளவு தொகை செ[illegible] என்று தெரியவரும். மாறாக வரவு[illegible]

228415
சென்னை-600 008

அறிவிக்கப்பட்ட தொகை ஒதுக்கப்படவில்லை என்பது தவறான கூற்றாகும். எனவே, இது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவேண்டிய அவசியம் எழவில்லை என்பதை நான் தெரிவிக்கவிரும்புகிறேன்.

அதேபோல, இப்படி ஒதுக்கப்படுகின்ற தொகை, முனைவர் கு. ஜெயக்குமார் அவர்கள் சொன்னதைப்போல, கடந்த காலத்திலே ஒதுக்கப்பட்டதைவிட ஒவ்வொரு ஆண்டும் 20 விழுக்காடு, 25 விழுக்காடு என்று உயர்ந்து, வருங்காலத்திலே அது மாநில மொத்தச் செலவில் 19 விழுக்காடு அளவிற்கு; பட்டியலின மக்கள் தொகையினுடைய விகிதாச்சாரம் அளவிற்கு அந்தத் தொகை ஒதுக்கப்படவேண்டுமென்ற வேண்டுகோளை நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் முனைவர் கு. ஜெயக்குமார் அவர்கள் தெரிவித்தார்கள். அது, ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை முன்னேற்றுவதற்காக அரசு எடுத்துக்கொள்கிற, பல்வேறு விதமான நடவடிக்கைகள், அந்தத் துறையின்மூலமாக மட்டுமே எடுக்காத நடவடிக்கைகள், ஆனால் பல்வேறு துறைகளின் நடவடிக்கைகள் மூலம் நிறைவேற்றப்படுகிறது. இப்போது அரிசி கிலோ 2 ரூபாய்க்கு வழங்கப்படுவதை, அவருடைய ஆலோசனையாக வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மக்களுக்கு மட்டுமே அதை வழங்குகின்ற முறையை நீங்கள் கொண்டுவருவீர்களேயானால், அதாவது எனக்கெல்லாம் வழங்கவேண்டாமென்று முனைவர் கு. ஜெயக்குமார் அவர்கள் கூறுவதாகப் பொருள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம்கூட வழங்கமுடியாது—கிலோ 2 ரூபாய்க்கு உள்ள அரிசி எல்லோருக்கும் வழங்க வேண்டாம். ஏழ்மையிலே உள்ள மக்களுக்கு மட்டும் வழங்கினால் ஆண்டுக்கு 700 கோடி ரூபாய், 800 கோடி ரூபாய் மீதமாகும் என்று ஆலோசனை சொன்னார். அரசாங்கத்திற்கு நிதி மிச்சம் ஆகும் என்பதற்காக மட்டுமே சில காரியங்களைச் செய்யமுடியாது. அந்த 2 ரூபாய்க்கு வழங்கப்படுகின்ற அரிசியை ஆதி திராவிட மக்கள் வாங்குகின்றார்கள் அல்லவா? அதனால் அவர்களுக்கு பலன் கிடைக்கிறது அல்லவா, அப்படிக் கிடைக்கின்ற பலனை நீங்கள் கணக்கிட்டுப் பார்த்தால், இப்போதே மொத்தத்தில் 19 விழுக்காட்டிற்கு மேல் ஆதி திராவிட சமுதாயத்திற்கு அரசாங்கத்தினுடைய நிதிப் பங்கீடாக அந்த உதவிகள் கிடைக்கின்றன என்று நான் உறுதி கூற விரும்புகின்றேன்.



அரசாங்கத்தினுடைய பல்வேறு பணிகள் காரணமாகவும்— பள்ளிக்கூடங்கள் தொடங்குகின்றோம். தொடங்குகின்ற பள்ளிக்கூடங்களிலே ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் சேர்க்கப்படாமல் இருக்கமுடியுமா? வேறுபல பொதுநலக் காரியங்கள் செய்கின்றோம், ஆதி திராவிட மக்களை அனுமதிக்காமல் இருக்கமுடியுமா, அனுமதிக்காமல் இருக்கலாமா? பொது மருத்துவமனைக்கு ஆயிரம் பேர் அங்கே சிகிச்சை பெற வருவார்களேயானால், அதிலே குறைந்தது 300, 400 பேர் ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாகத்தான் இருப்பார்கள். இருக்கக்கூடாது என்பதோ, ஏன் வருகிறார்கள் என்பதோ என்னுடைய கேள்வி அல்ல. ஆனாலும் ஆதி திராவிடரும் நமது உடன்பிறப்புகள், ஒரே இனம் என்று கருதுகின்றவன் நான். ஆனால், அப்படி வருகின்ற கணக்குகளையெல்லாம் சேர்த்துப் பார்த்தால், 19 விழுக்காடு என்பதைவிட அவர்களுக்குத் தாராளமாக வழங்கப்படுகிறது என்றுதான் நான் மனதார கருதுகிறேன். 30 விழுக்காடு வழங்கினாலும் தவறல்ல. ஆனால், 30 விழுக்காடு அளவிற்கு சமூகத்திலே நடைபெறுகின்ற பல்வேறு பணிகள் மூலமாகத்தான், அந்த ஆதி திராவிட மக்கள் பெறலாகும் சம உரிமை பெற்ற மக்களாக உயர்வதற்கு அந்த நிதி ஒதுக்கம் மேலும், மேலும் அதிகமாக வேண்டும். இந்த அரசைப் பொறுத்தவரையில் மேலும் அதிகமாகும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*நண்பகல் 12-00*

அதேபோல, பல உறுப்பினர்கள் தங்கள் தொகுதியைப் பற்றிக் குறிப்பிட்டு எங்களுடைய தொகுதியிலேயுள்ள மக்களுடைய தனி நபர் வருமானத்தை உயர்த்துவதற்கு என்ன திட்டம் இருக்கிறது என்ற கருத்தில் வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கிறார்கள். ஒவ்வொரு தொகுதிக்கும் தனித் தனியாக தனி நபர் வருமானத்தைக் கணக்கிட ஒரு புள்ளிவிவரம் எடுப்பதுகூட கடினம்.

நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் மணி அவர்கள்கூட, சமச்சீர் நிலை மாவட்டங்களுக்கிடையிலே வரவேண்டும் என்கிறார்கள். எப்படி முடியும் என்றே எனக்குத் தெரியவில்லை. கற்பனைகூட என்னால் செய்ய முடியாது. சமச்சீராக வரவேண்டுமானால் வளர்ந்த இடங்களை உடனே வளராமல் தடுக்க வேண்டும். அப்படி வளர்ச்சி ஒரு பக்கம் நடைபெறுகிறபோது,

சென்னை மாநகரம் வளர்ந்து கொண்டிருக்கிறபோது, திண்டிவனத்தை நான் எப்படிச் சென்னையோடு சமத்துவப்படுத்த முடியும்? திண்டிவனத்தையே சமத்துவப்படுத்த முடியாதபோது செஞ்சியை நான் எப்படி கைதூக்கிவிடமுடியும். செஞ்சிக்கு அப்பால் இருக்கிற கிராமத்தினுடைய நிலையிலே எப்படி ஒரு பெரிய வளர்ச்சி வரும்? விரலுக்கு ஏற்ற வீக்கம் என்பதைப்போல, அந்தந்த இடத்தின் நிலைமைக்கேற்ற வளர்ச்சிதான் வர முடியும். அந்த நிலைமைக்கேற்ற வளர்ச்சிகூட வராமல் ஆதிக்க சக்திகள் தடுத்துவிடாமல் பார்த்துக்கொள்வதுதான் ஒரு ஜனநாயக அரசாங்கத்தினுடைய கடமை.

அடித்தட்டு மக்களும் முன்னேற வேண்டும், மொத்த முன்னேற்றமும் நாட்டிலே நடைபெற வேண்டும். பெரிய தொழிற்சாலையும் ஏற்பட வேண்டும். குடிசைத் தொழிலையும் பாதுகாக்க வேண்டும். பெரிய தொழிற்சாலைகள் வருவதாலே குடிசைத் தொழில் பாதிக்கப்படுமானால், குடிசைத் தொழிலுக்கு ஆதரவான திட்டங்களை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். குடிசைத் தொழிலைப் பாதுகாப்பது குடிசைத் தொழிலில் வேலை செய்கிற மக்களுடைய வாழ்வுக்காக. பெரிய தொழிலைப் பாதுகாப்பது நாட்டினுடைய மொத்த வளர்ச்சிக்காக. நாட்டினுடைய மொத்த வளர்ச்சியையும் நாம் இழந்துவிட முடியாது. குடிசைத் தொழிலைப் பாதுகாக்காமலும் இருக்க முடியாது.

ஒரு காலத்திலே தேசிய காங்கிரசோடு மாறுபட்ட கருத்துக் கொண்டிருந்த காலத்தில், கதர் எதற்காக, கதர் ஏன்? அறிவியல் அடிப்படையிலே கைராட்டையிலே நூற்ற கதர் துணி எதற்கு என்று கேட்டவன்தான் நான். ஆனால், கதர் துணி ஏன் என்று கேட்ட நான், கைத்தறித் துணி வாங்கு என்று சொல்கிற கட்டத்திற்கு வந்தேன். கைத்தறியை வாங்கு என்று சொன்னது அறிஞர் அண்ணா அவர்கள், கைத்தறி நெசவாளர்களைக் காப்பாற்ற வேண்டுமானால் ஊர், ஊராகச் சென்று கைத்தறியை நாமே விற்று கைத்தறி கட்டுவதை ஊக்கப்படுத்த வேண்டுமென்றார். கைத்தறியை ஊக்கப்படுத்த வேண்டும், கைத்தறியை ஆதரிக்க வேண்டும் என்ற அந்தக் கொள்கை வந்தது. அதற்குப் பின்னர் ஆட்சிப் பொறுப்புக்கு வருகிறபோது கதரையும் காப்பாற்ற வேண்டும், கைத்தறியையும் காப்பாற்ற வேண்டும், மில் வேலையும் நின்று போகக் கூடாது. ஆலையும் நடைபெற்றாக வேண்டும். ஆலை நடைபெறுகிற அதேநேரத்தில் கைத்தறியும் காப்பாற்றப்பட வேண்டும். கைத்தறியிலேகூட சாதாரண



கைத்தறியையும் காப்பாற்ற வேண்டும். இப்போது அண்மைக் காலத்திலே அறிவியல் அடிப்படையிலே வளர்ந்திருக்கிற விசைத்தறியையும் காப்பாற்ற வேண்டும். விசைத்தறியைக் காப்பாற்றுவதற்கு விசைத்தறிக்கு மின் விசை, மின் ஆற்றலை இலவசமாகவும் தரவேண்டும் என்பது இன்றைய நிலை.

ஆக, எப்படிப்பட்ட ஒரு நிலை என்று கேட்டால், சமுதாயத்திலேயுள்ள மக்களின் பல்வேறு நிலைமைகள் காரணமாக, வளருகிற ஒரு சமுதாயத்திலே இந்த நிலைமைகள் இருக்கத்தான் செய்யும். வளராத சமுதாயம் என்றால் இந்த நிலைமையே மேலும் மேலும் இருண்டு போய் அடையாளம் தெரியாமல் போய்விடும். வளருகிற சமுதாயத்திலே இந்த நிலைமை இருக்கும். ஆகவேதான் மணி அவர்கள் சொல்வதைப்போல் எல்லாவற்றிலும் சமச்சீர், சமச்சீர் என்று சமநிலை காண முடியாது. அரசாங்கம் எடுக்கிற நடவடிக்கையைத்தான் சமச்சீர் நோக்கத்தோடு எடுக்கலாமே தவிர, சமச்சீர் நிலைமையைச் சமுதாயத்திலே உடனடியாக ஏற்படுத்தி விடமுடியாது. சமத்துவத்தை நோக்கித் தொடர்ந்து முன்னேறுவதற்கான பல பணிகள் ஆற்றப்பட வேண்டும் என்ற கருத்தை மட்டும்தான் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆகவே, இங்கே தொகுதிவாரியாக, அந்தந்தத் தொகுதியினுடைய முன்னேற்றத்திற்காக, அங்குள்ளத் தனி நபர் வருமானத்தை உயர்த்துவதற்காக என்று வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிற நண்பர்களுக்கு இந்த நிலைமையை நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, மத்திய அரசிடமிருந்து பெறும் நிதி குறித்து விவாதிக்க வேண்டும் என்று ஒரு நண்பர் குறிப்பிட்டிருக்கிறார். நம்முடைய நிதிநிலை அறிக்கையிலேயே, மத்திய அரசு எந்தெந்த வகையிலே நமக்கு நிதி ஒதுக்குகிறது, அந்த நிதி அடிப்படையிலே நாம் நடைபெறுகிற திட்டப் பணிகளுக்காக எந்தெந்த வகையிலே எல்லாம் நிதி பெறுகிறோம் என்பது விளக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அவற்றைப் பற்றி நான் அதிகமாகச் சொல்ல விரும்பவில்லை.

"தமிழகத்தின் நிதித் துறையில் தினக் கூலிகளாகப் பணியாற்றும் பணியாளர்களை நிரந்தரமாக்க வேண்டும்" என்று ஒரு வெட்டுத் தீர்மானம். இத்துறையில் தினக் கூலிப் பணியாளர்களாக யாரும் பணியமர்த்தப்படவில்லை என்று நிதித் துறை சார்பாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அந்தப் பிரச்சினை எழவில்லை.

பிற்பகல் 12-05

இன்னும்கூடத் தெளிவாகச் சொல்வதானால், "தமிழக அரசு மாநிலப் பணியாளர்களுக்கு, மத்திய அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் சமநிலை ஏற்படுத்திட, ஊதியக் குழு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க வேண்டும்" என்று திரு. பெரியசாமி அவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஆனால் உண்மையிலேயே, இந்தியாவிலேயே தமிழக அரசுதான், மத்திய அரசு, அவர்களுடைய ஊழியர்களுக்கு, அலுவலர்களுக்கு என்ன ஊதியம் வழங்குகிறார்களோ அதே ஊதியத்தை வழங்குவது என்று பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே, கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது (மேசையைத் தட்டும் ஒலி) தீர்மானித்து, மைய அரசு வழங்குகிற அதே ஊதிய விகிதம், பெரும்பாலும் நூற்றுக்கு 95 விழுக்காடு அதே ஊதிய விகிதம், அந்தந்த நிலையில் பணியில் உள்ளவர்களுக்கு வழங்கப்படுகிறது என்பதோடுகூட, எவ்வப்போது அகவிலைப்படி உயர்வு மத்திய அரசால் அறிவிக்கப்படுகிறதோ அப்படி அறிவிக்கப்படுகிற அகவிலைப்படி உயர்வும், தமிழக அரசால், அந்தந்த காலகட்டத்திலே அவ்வப்போது அறிவிக்கப்பட்டுச் செயல்படுத்தப்படுகிறது. எந்தத் தேதி முதலாக அகவிலைப்படி உயர்வு மத்திய அரசு தருகிறதோ, அந்தத் தேதி முதலாக தருகிற அளவிற்கு, தமிழக அரசு அந்தக் கொள்கையை ஒரு இலட்சியமாகக் கொண்டு நிறைவேற்றுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் பல்வேறு வெட்டுத் தீர்மானங்களிலே நிதித் துறை பற்றி சொல்லப்பட்ட கருத்துகளை, நிச்சயமாக இந்த அரசு கவனிக்கும். அவற்றைப் பற்றி ஏதேனும் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமை இருக்குமானால், நிச்சயமாக மேற்கொள்ளும் என்றும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இங்கே, பல்வேறு செய்திகளைப் பற்றி பேசிய நம்முடைய உறுப்பினர்கள், சொன்ன செய்திகளுக்கெல்லாம் விளக்கங்களை அந்தத் துறையைச் சார்ந்த அலுவலர்கள் எனக்கு வழங்கி இருக்கிறார்கள். இருந்தாலும்கூட, அவை அத்தனையையும் நான் இங்கே எடுத்து விளக்கி உரையாற்ற இயலாத ஒரு நிலை இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை என்னும் ஒரு துறை அரசாங்கத்தினுடைய அலுவல் துறையாகும். ஐந்தாண்டுத் திட்டங்களை எல்லாம் வரையறுத்து எடுத்துக் காட்டுகிற திட்டக் குழு



இது என்றும், அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அந்தக் குழுவும் இதுவும் ஏறத்தாழ ஒன்று என்ற ஒரு எண்ணத்திலே பல பேர் இருக்கிறார்கள். இது நிர்வாகத்திற்காக, அது திட்டமிடுவதற்காக. அந்தத் திட்டக் குழுவிலே தகுதி வாய்ந்த பொருளியல் அறிஞர்கள், பல்வேறு துறைகளிலே அனுபவம் பெற்றவர்கள் இடம் பெற்று, அவர்களுடைய ஆலோசனைகள் எல்லாம் வழங்கப்பட்டு திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. உருவாக்கப்பட்ட திட்டங்களை அரசு பரிசீலித்து ஏற்றுக்கொள்கிறது. அந்தத் திட்டங்களைக்கூட சட்டமன்றத்திலே கொண்டு வந்து நிறைவேற்றுகின்ற அளவிற்குத் திட்டங்கள் பெருமளவிற்கு சட்டமன்றத்தின் மூலமாக, நிதிநிலை அறிக்கை மூலமாகத்தான் செயல்படுத்தப்படுகின்றன. அப்படி செயல்படுத்துகிறபோது, அந்தத் திட்டங்களை எல்லாம் மாநிலத் திட்டக் குழுவின் உதவியோடு 5 ஆண்டுத் திட்டங்கள் மற்றும் ஆண்டுத் திட்டங்கள் தயாரித்தல் மற்றும் மத்திய திட்டக் குழுவுடன் இணைந்து செயல்படுதல் ஆகிய பணிகளை ஒரு I.A.S. அதிகாரியினுடைய தலைமையிலே இயங்குகிற இந்தத் துறை நிறைவேற்றுகிறது. இந்தப் பணிகள் எல்லாம் சேர்ந்துதான், நாட்டிலே நிறைவேற்றப்படுகிற திட்டங்கள், அவற்றின் பயன்கள் மக்களைச் சென்றடைவதற்கு உரிய முறையில் இந்தத் துறைமூலமாக அரசு செயல்படுத்துகிறது. இந்தத் துறை அரசினுடைய ஓர் அங்கமாக இருந்து செயல்பட்டு, அதன்மூலமாகச் செம்மையான முறையில் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று இந்தக் கோரிக்கையினுடைய நிறைவேற்றத்திற்குப் பின்னர் தொடர்ந்து பல்வேறு சட்டங்கள் நிறைவேற்றப்படவேண்டிய ஒரு கட்டாயமான நிலைமை இருப்பதன் காரணமாக நான் விரைவாக முடித்துக்கொள்ள விரும்புகிறேன். இங்கே சட்டமன்ற உறுப்பினர்களுடைய பிரச்சினைகளைப் பற்றி அவர்களுடைய வேண்டுகோள்கள் எல்லாவற்றையும் பரிசீலிக்க முடியாவிட்டாலும், ஓரளவுக்கு உடனடியாக செய்யக்கூடியவற்றை ஏற்று இந்த அறிவிப்பை நான் வெளியிட விரும்புகிறேன்.

சட்டப் பேரவை உறுப்பினர்கள் இங்கே பேசும்போது அவர்களது ஊதியத்தை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தார்கள் அல்லவா, ஒவ்வோர் ஆண்டும் இதுபோன்ற கோரிக்கைகள், அது எந்த அரசாங்கமாக இருந்தாலும் தொடர்ந்து வருவதுதான் வாடிக்கை. சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் இப்போது சம்பளம்

ரூ.2,000/-, ஈட்டுப் படி ரூ.6,000/-, தொலைபேசிப் படி ரூ.4,000/-, தொகுதிப்படி ரூ.4,000/- தபால் படி ரூ.1,500/-, தொகுப்புப் படி ரூ.2,500/-, வாகனப் படி ரூ.5,000/-. ஆக, ஒட்டுமொத்தமாக மாதம் ஒன்றுக்கு ரூ.25,000/- பெற்று வருகிறார்கள்.

*பிற்பகல் 12-10*

சட்டப் பேரவை உறுப்பினர்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் இப்போது வழங்குகின்ற 2,000 ரூபாய் சம்பளம் என்பது 3,000 ரூபாய் என்றும், ஈட்டுப் படி 7,000 ரூபாய் என்றும், தொலைபேசிப் படி 5,000 ரூபாய் என்றும், தொகுதிப் படி 5,000 ரூபாய் என்றும் தபால் படி, அஞ்சல் துறைக்காக செலவிடக்கூடிய பணம், 2,500 ரூபாய் என்றும் தொகுப்புப் படி 2,500 ரூபாய் என்றும், வாகனப் படி 5,000 ரூபாய் என்றும், ஆக ஒட்டுமொத்தமாக மாதம் ஒன்றுக்கு 30,000 ரூபாய் ஊதியமாக 1-4-2008 தேதி முதல் வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முதலமைச்சர், அமைச்சர்கள், பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், அரசு தலைமைக் கொறடா ஆகியோர்களுக்கு தற்போது அளிக்கப்பட்டு வரும் சம்பளம் மற்றும் படிகளுடன் 5,000 ரூபாய் உயர்த்தி வழங்கப்படும். முன்னாள் சட்டப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்கள் ஏற்கெனவே பெற்றுவரும் ஓய்வூதியத் தொகை 7,000 ரூபாய் என்பதற்கு மாறாக இனி மாதம் ஒன்றுக்கு 8,000 ரூபாய் ஓய்வூதியத் தொகை என்றும், முன்னாள் சட்டமன்ற மற்றும் மேலவை உறுப்பினர்கள் மறைந்த பிறகு அவர்களின் வாரிசுதாரர்கள் பெறும் குடும்ப ஓய்வூதியம் ஏற்கெனவே அது 3,500 ரூபாயாக இருந்தது, அது இனி 4,000 ரூபாயாக இருக்கும் என்றும் அறிவிக்கப்படுகிறது. இதுவும் 1-4-2008 முதல் நடைமுறைப்படுத்தப்படும். இப்போது இந்த அறிவிப்புகள் மூலம் தற்காலிகமாக, எல்லாமே தற்காலிகம்தான், நம் உறுப்பினர் பதவியே 5 ஆண்டுகள்தானே. ஆகவே, தற்காலிகமாக இந்த முடிவு எடுக்கப்பட்டு அதை நான் தெரிவித்துக்கொண்டு இந்த கோரிக்கைகளை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் பெருமானார் அவர்கள்



இங்கே ஒரு விளக்கத்தைச் சொன்னார்கள். அவர்மீது நான் அதிக மரியாதை வைத்திருப்பவன். அவர் சொன்ன பதிலுக்கு உள்ளே நுழைய வேண்டுமென்று எனக்கு அந்த எண்ணமும் இல்லை. இருந்தாலும்கூட, அவர் சொன்னபோது சமச்சீர் வளர்ச்சி முடியாது என்று சொன்னார்கள். சென்னையைப் போல ஒரு கிராமத்தை அல்லது ஒரு சிறிய ஊரை வளர்க்க வேண்டும் என்பது சென்னையின் வளர்ச்சியை சரிக்க வேண்டும் என்பது நோக்கமல்ல. சென்னை பெரிய நகர்ப் பகுதி. வளரக்கூடிய பகுதி, அது வளர்ந்து கொண்டேயிருக்கும். வளராமல் இருக்கிற பகுதி வளர வேண்டும். அதிலே மாறுபட்ட எண்ணம் இல்லை. அந்த அடிப்படையிலேதான் தந்தை பெரியார் அவர்களும் மற்ற தலைவர்கள் எல்லாம் தாழ்த்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, பின்தங்கிய நிலையிலே இருப்பவர்கள் கல்வியிலே, வேலைவாய்ப்பிலே முன்னேறுவதற்கு தனி இட ஒதுக்கீட்டை வழங்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் வளர்ச்சி பெறுவதற்கான சிறப்புத் திட்டங்கள் வேண்டுமென்று கேட்கிறோமே தவிர, வளர்ந்த பகுதிகளை பின்னோக்கி இழுக்க வேண்டுமென்று நோக்கம் இல்லை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. மணி அவர்கள் சொன்ன விளக்கத்திற்கு நன்றி. ஆனால் பேசுகிறபோது, சமச்சீர், சமச்சீர் என்று சொல்கிறபோது இரண்டையும் சமப்படுத்த வேண்டுமென்ற அந்தக் கருத்துதான் முன் நிற்கிறது. ஆகவே, இப்போது மணி அவர்கள் சொன்ன விளக்கம், நான் ஏற்றுக்கொள்கிற விளக்கம்தான். மற்றொன்று நான் பேசுகிறபோது அறிவிக்கப்பட வேண்டிய இரண்டு செய்திகள் இவை. ஏற்கெனவே இந்த அவையிலே எழுப்பப்பட்ட பிரச்சினை என்ற காரணத்தால், ஓய்வூதியர்களின் மருத்துவ சிகிச்சை உதவித் தொகையை ரூபாய் 1 இலட்சமாக உயர்த்தி வழங்க வேண்டும் என்று திரு. கோவிந்தசாமி அவர்கள் ஒரு வேண்டுகோளைத் தெரிவித்தார்கள். இந்த 2008-2009 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலேயே இந்த உதவி பெறுவதற்கான உச்சவரம்பு ரூபாய் 50,000/-த்திலிருந்து 1 இலட்சமாக உயர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு அவர்கள் செலுத்த வேண்டிய சந்தாவிலே உரிய மாற்றங்கள்

இருக்கும். அதுவும் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல, முன்னாள் கிராம அலுவலர்களுக்கு மாத ஓய்வூதியமாக ரூபாய் 350-தான் வழங்கப்படுவதாக நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். முன்னாள் கிராம அலுவலர்களுக்கு erstwhile Village Headman, கிராம முன்சீப் அவர்களுக்கு, 24-1-2008 முதல் 1,130 ரூபாய் மாதச் சிறப்பு ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது என்ற செய்தியை அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நன்மாறன். (குறுக்கீடு) திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இனமான பேராசிரியர் அவர்களிடமிருந்து நாங்கள் அதிகம் எதிர்பார்த்தோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருந்திருந்தால் இன்னும் கொஞ்சம் அதிகமாகவே எதிர்பார்த்திருப்போம். ஆனால் பின்னால் பரிசீலிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இருந்தாலும், எங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலோருக்கு இதிலே திருப்தி இல்லை. நான்கூட பல மாநிலங்களோடு ஒப்பிட்டுக்காட்டி 1 இலட்சத்து 33 ஆயிரம் எல்லாம் எங்களுக்கு வேண்டாம். மகாராஷ்டிரத்தில் கொடுப்பதிலே எங்களுக்கு 3 அல்லது 2 ஆயிரத்தைக் குறைத்துக்கொண்டு 63 ஆயிரம் ரூபாயாவது கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டேன். ஆனால், இப்போது ரூபாய் 5,000/-தான் உயர்த்தி இருக்கிறார்கள். ஆனால், இப்போது எம்.எல்.ஏ. தொகுதி வளர்ச்சி நிதி என்பது கண்டிப்பாக உயர்த்தப்பட வேண்டிய ஒன்று. Urgent-ஆக உயர்த்த வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-15

அதே மாதிரி, சிமெண்ட் விலை, கம்பி விலை எல்லாம் ஏறிப்போய் இருக்கக்கூடிய இந்தக் காலகட்டத்திலே நீங்கள் கொடுக்கக்கூடிய அந்தத் தொகையிலே நாம் செய்யக்கூடிய எந்தப் பணியாக இருந்தாலும் அது பாதியிலே நின்றுபோய் விடுகிறது. ஏனென்றால் 4 Scheme-களுக்குக்கூட அந்தப் பணத்தைக் கொடுக்க முடியவில்லை. ஆகவே, நீங்கள் பட்ஜெட்டிலே மற்றவற்றிற்காக ஒதுக்கக்கூடியதிலேயிருந்தாவது எடுத்து இதிலே போட்டு எப்படியாவது அதை இரண்டு கோடி ரூபாய் என்றாவது உடனே அறிவிப்பதோடு எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கார்



கொடுப்பதற்கும் (மேசையைத் தட்டும் ஒலி) எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இரண்டு கிரவுண்ட் நிலத்தை விலைக்குக் கொடுப்பதற்கும் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் இங்கே அறிவிப்பு செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையில் காவலர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றவர்கள் ஒரு கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். அவர்களுடைய pocket money-யாக தினந்தோறும் 30 ரூபாய் வழங்கப்படுவதாகவும், அது குறைவாக இருக்கிறது என்றும் அதை உயர்த்தித் தரும்படியும் கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, அதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்தாலோசித்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் முடிவு தெரிவிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்களும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும் மத்திய அரசினுடைய ஊழியர்களுக்கு இணையாக தமிழக அரசும் 90 சதவீதம் வழங்கி வருவதாகத் தெரிவித்தார்கள். குறிப்பாக, கால்நடை மருத்துவர்களுக்கு மத்திய அரசினுடைய ஊதியக் குழுவின் பரிந்துரை செய்யப்பட்ட தொகை என்பது இதுநாள் வரையில் வழங்கப்படவில்லை. அதை வழங்குவதற்கு நம்முடைய அரசும், நிதித் துறையும் முன்வருமா? அதேபோல, கல்வி நிறுவனங்களில் பணியாற்றுகின்ற ஆசிரியப் பெருமக்களுக்கு, பி.ஜி. படித்தவர்களுக்கு மத்திய அரசினுடைய ஊதியத் தொகை வழங்கப்படவில்லை என்ற ஒரு குறை இருக்கிறது. அந்தக் கல்லூரிகளில் பணியாற்றுகின்ற உடற்பயிற்சி

ஆசிரியர்களுக்கும்கூட அந்தப் பிரச்சினை இருக்கிறது. நேற்றையதினம் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு அது கொண்டு வரப்பட்டது. அந்த முரண்பாடுகளை களைவதற்கும், அவர்களுக்கும் சமமாக, மத்திய அரசினுடைய உதவிகளையும், அந்தச் சம்பளங்களையும் வழங்குவதற்கு நிதி அமைச்சர் அவர்கள் எதிர்காலத்தில் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஓய்வுபெற்ற அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு, அவர்களுக்கான மருத்துவத் தொகை ரூபாய் 50,000/-த்திலிருந்து ஒரு இலட்சமாக உயர்த்தித்தரப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டிருக்கிற மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்கான அங்கீகாரம் என்பது மாண்புமிகு முதல்வர் அவர்களாலே சமீபத்திலே நடந்த ஊழியர் மாநாட்டிலே அறிவிக்கப்பட்டது. எப்படியும் அவர் அறிவித்ததை இந்தக் கூட்டத் தொடரில் நிறைவேற்றுவார் என்று எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். இன்று சட்டமன்றக் கூட்டத் தொடர் நிறைவு பெறுகிறது. அந்த நல்ல செய்தியைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு நிகழ்ச்சி. இங்கே சட்டமன்ற உறுப்பினர்களுக்கான பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. மார்க்சிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில் சம்பள உயர்வு வேண்டியதில்லை. அதற்குப் பதிலாக காரும், அந்தக் கம்ப்யூட்டரை இயக்குவதற்கான ஆப்பரேட்டர் போன்ற வசதிகளைச் செய்து கொடுப்பீர்களேயானால், அது உண்மையிலேயே சட்டமன்ற உறுப்பினர்களுடைய பணிகளை மேம்படுத்துவதற்கும், தொகுதி மக்களோடு நெருக்கமான உறவுகளை மேம்படுத்துவதற்கும் பெரிய அளவிற்கு உதவி செய்யும். ஆகவே, சம்பள உயர்வை விடுத்து, அந்த வசதிகளைச் செய்து கொடுக்க முன்வர வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி அவர்கள் சொன்னார்கள். அரசாங்க ஊழியர்கள் கலந்துகொண்ட அந்த மாநாட்டிலேயே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் P. & A.R. துறையிலேதான் அந்தக் கோப்பு வந்திருக்கிறது. அதுகுறித்து விரைவிலே முடிவெடுத்து முதலமைச்சருக்கு அனுப்பி அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. ஜெயக்குமார்:** தலைவர் அவர்களே,...

**திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லைங்க, போதும். நிறைய சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்கள், திரு. டி. ஜெயக்குமார், சொல்லுங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிதித் துறையின் மூலமாக விவசாயிகளின் கடன்களையெல்லாம் தள்ளுபடி செய்திருக்கின்ற நிலையில் ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் குரல் எழுப்பியும், அதே நேரத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள், சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்கள், விசைப் படகுகள், நாட்டுப்புறப் படகுகள், மீன்பிடிக் கலன்கள் போன்றவற்றை வாங்குவதற்காக, வங்கிகளில் வாங்கிய கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று சொல்லியும் இதுவரை எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை. மத்திய அரசு கடன் கொடுக்கின்ற சூழ்நிலையில் மாநில அரசு மத்திய அரசை நிர்ப்பந்திக்கவில்லை. இங்கே நான் சொல்ல வேண்டிய கருத்து, மத்திய அரசிடமிருந்து அவர்கள் தள்ளுபடி செய்யும்போது தள்ளுபடி செய்யட்டும். நாம் நம்முடைய மீனவர்களுடைய நல்வாழ்விற்காக அந்த ரூ.60 கோடியைக் கொடுத்துவிட்டு, மத்திய அரசு தள்ளுபடி செய்த பின்பு அதை ratify செய்யலாம் என்கிற அந்த ஒரு கருத்தை இங்கே வைக்கின்றேன். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.

பிற்பகல் 12-20

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காரியத்திற்காக நாம் என்று சொல்லி, நாம் இதைச் செய்யக்கூடாதா என்று திரு. ஜெயக்குமார் அவர்கள் கேட்கிறார்கள். நாம் செய்யலாம். இருக்கின்ற இடம்தான் வேறு. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.பி. கலைராஜன், சொல்லுங்கள்.

**திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கட்டும், அல்லது கம்யூனிஸ்ட் இயக்கத்தினைச் சேர்ந்த திரு. சிவபுண்ணியம் அவர்களாக இருக்கட்டும், ஏன், ஆளும் கட்சியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள்கூட நம்முடைய பொருளாளர், அதாவது நம்முடைய பொருளாளர் என்றால், ஆளும் கட்சியினைச் சேர்ந்த பொருளாளர் அவர்களை, ஆற்காட்டார் என்றுதான் அழைப்பார்கள். ஆனால், இப்போது இந்தச் சட்டமன்ற நடவடிக்கைகளில் அருளாளர், அருளாளர் என்கிறார்கள். அருளாளர் என்ற பதவியின்மீது நம்பிக்கையில்லாத இயக்கம்தான் திராவிட இயக்கம். அந்த அருளாளர் என்பதன் அர்த்தம் என்ன? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த விவாதத்திற்குச் சம்பந்தம் இல்லாதது. மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருளாளர்மீது நம்பிக்கையில்லாத இயக்கம் திராவிட இயக்கம் என்கிறார். அன்றைக்கு அ.தி.மு.க.-வும் திராவிட இயக்கம் என்று சொன்னீர்கள். ஆனால், ஆடம் பாலத்தை ராமர் பாலம் என்று சொல்லி, அங்கே கட்டக்கூடாது என்று வழக்கு நடத்திக்கொண்டிருக்கிறீர்களே, அண்ணாவும், பெரியாரும் சொன்னதற்கு எதிராக சனாதன வழியில் இருந்துகொண்டிருக்கிறீர்களே, எப்படி உங்களை நீங்கள் திராவிட இயக்கம் என்றோ--அல்லது அருளாளர் என்று சொல்வதுகூட தவறு என்று சொல்லமுடியும்? அந்தத் தார்மீக உரிமை உங்களுக்கு ஏது? (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.



## (அ) கோரிக்கை எண் 1–மாநிலச் சட்டமன்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 1—மாநிலச் சட்டமன்றம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.23,02,13,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகின்றது.

## (ஆ) கோரிக்கை எண் 2–ஆளுநர் மற்றும் அமைச்சரவை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 2–ஆளுநர் மற்றும் அமைச்சரவை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.18,62,34,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகின்றது.

### (இ) கோரிக்கை எண் 16–நிதித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 16–நிதித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.527,30,85,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.24,42,55,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

### (ஈ) கோரிக்கை எண் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)



வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.43,60,66,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.14,67,17,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

### (உ) கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.7,932,13,92,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகின்றது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Voting விட்டதற்குப் பிறகு nothing. No. எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள், என்ன? முதலில், voting விடும்போது no disturbance தெரியுமா?

**திரு. சி. ஞானசேகரன்:** அதை முடித்துவிட்டீர்கள். அதை முடித்துவிட்டீர்கள். I would not disturb, Hon. Speaker Sir.

பிற்பகல் 12-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் மாநிலச் சட்டமன்றம் குறித்து நான் பேசுகிறபோது, நாங்கள் எல்லாம் பெரிதும் எதிர்பார்த்துக் காத்திருந்த வேளையில், வேறு வேலையாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியே சென்று, மீண்டும் அவைக்கு வந்துவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய வரவுக்காகத்தான் நாங்கள் இதுவரை காத்திருந்தோம். நம்முடைய இனமான பேராசிரியர் அவர்கள், பின்னால் பரிசீலிக்கப்படும், திரு. ஞானசேகரன் அவசரப்படக்கூடிய அளவுக்கு நாங்கள் அவசரமாக இதிலே முடிவெடுக்க முடியாது, பிறகு முடிவெடுப்போம் என்று சொன்னதனுடைய பொருளை நாங்கள் புரிந்து கொண்டோம். மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கலந்து ஆலோசித்து முடிவு சொல்வதாக அவர்கள் சொன்னார்கள். நாங்கள் கோரிக்கை ஒன்றும் பெரிதாக வைத்துவிடவில்லை. மற்ற மாநிலங்களையெல்லாம் ஒப்பிட்டு, நீங்கள் எப்பொழுதுமே--நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் 5 முறை தொடர்ந்து இந்தச் சட்டமன்றத்தில் முதலமைச்சராக விளங்கிக்கொண்டு சாதனை படைத்தவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஜனநாயகத்தில், பொதுவாக தமிழகத்தில் 1957-லிருந்து ஒரு தேர்தலில்கூட தோல்வி என்பதைத் தழுவாமல், வெற்றி வீரனாகவே தொடர்ந்து பணியாற்றியவர். "பாம்பின் கால் பாம்பறியும்" என்று சொல்வார்கள். ஏனென்றால் ஒரு பெரிய பணக்காரர் திடீரென்று எம்.எல்.ஏ.



ஆகிவிட்டார் என்றால், அவர்களுக்கு அது தேவைப்படாமல் போய்விடலாம். ஒரு சாமானியர், பொதுவாக இரண்டு நாளைக்கு முன்னால்கூட இதே அவையிலே பேசுகிறபொழுது, என்னுடைய மாமனார் ஊரான முல்லைக்கொம்பையில் அவருடைய நண்பர்-- என்னுடைய மாமனார் முல்லை வடிவேலு, முல்லை சக்தி போன்றவர்களோடு திண்ணையில் படுத்து, நடு இராத்திரியில் எல்லாம் சென்று, தொடர்ந்து காடுகளைக் கடந்து கட்சியை அங்கே வளர்த்த நிலைகளையெல்லாம் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் உண்மையிலே உருகிப் போனோம். அந்த அளவிற்கு எங்களுடைய நிலைமையை நன்றாகப் புரிந்தவர் முதலமைச்சர். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய கோரிக்கை என்ன? இந்தத் தொகுதி வளர்ச்சி நிதி--பொதுவாக இரும்பு விலை ஏறிப் போய்விட்டது, மணல் விலை ஏறிப் போய்விட்டது, அதேமாதிரி கட்டுமானப் பொருட்கள், சிமெண்ட் விலை ஏறிப் போய், இன்றைக்கு 1.20 கோடி ரூபாய் என்று இருக்கக்கூடியதை, குறைந்தபட்சம் 2.40 கோடி ரூபாய் என்று கேட்டேன், அது இல்லாவிட்டாலும்கூட 2 கோடி ரூபாயாகவாவது தொகுதி வளர்ச்சி நிதியை நீங்கள் உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கை. (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய தவப் புதல்வன், இன்று உள்ளாட்சித் துறை அமைச்சர்கூட 385 பேர்களுக்கு, இன்று ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கக்கூடிய பஞ்சாயத்துத் தலைவர்களுக்கே கார் கொடுத்திருக்கிறார்கள். அதைவிட பெரிய பொறுப்பில் ஐந்து முறை முதலமைச்சராக இருந்த நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், எங்களுக்கு equal to Chief Secretary என்று protocol-ல் பெரிய பெயரைக் கொடுத்துவிட்டு, எங்களுக்குக் கார்கூடக் கொடுக்காமல் இழுத்தடிப்பது சரியல்ல. ஆகவே, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் காரோடு ஓட்டுநர், அதேபோல fuel போன்றவற்றையெல்லாம் நீங்கள் கொடுத்து, எங்கள் பதவி எப்போது போகிறதோ அப்போது பிடியுங்கள், அப்படியே Collector Office-ல் வைத்துக்கொள்ளுங்கள். ஆகவே, தொடர்ந்து அதை எங்களுக்காகக் கேட்கவில்லை. அதை எப்படி பஞ்சாயத்து யூனியன் Chairman-களுக்கு நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் கொடுத்தாரோ அதைப்போல வழங்குவதற்கும், அதேபோல, Computer Operator கேட்டிருக்கிறோம், உதவியாளர் கேட்டிருக்கிறோம், இன்னொன்று ரொம்ப முக்கியமானது, நீங்கள் பொதுவாக நிலமில்லாத ஏழைகளுக்கெல்லாம் இலவசமாக 4 இலட்சம் பேர்களுக்குப் பட்டா

கொடுத்திருக்கிறீர்கள், சாதனை படைத்திருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் விலை கொடுக்கிறோம் என்று சொல்கிறோம். விலை கொடுப்பதில் பொதுவாக எப்படி ஹைதராபாத்திலும், அதேபோல பெங்களூரிலும் முன்னுரிமை கொடுத்து அங்கே சட்டமன்ற உறுப்பினர்களுடைய காலனி உருவாக்கப்பட்டதோ, அந்தக் காலனியை நீங்கள் அண்ணாவினுடைய நினைவு நூற்றாண்டு விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிற இந்த வேளையில் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய காலனியை இன்றே--ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு 2 கிரவுண்ட் என்று வழங்குவதற்கு இங்கே--மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்பாரா என்று ஆவலோடு அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பதவி நிரந்தரமில்லாதது. ஏனென்றால், மாண்புமிகு முதல்வர் மாதிரி எல்லாவற்றிலும் ஜெயித்துக்கொண்டே இருக்கமாட்டோம். சிலபேருக்கு தோல்வி என்று வந்தால் அல்லது சீட் கிடைக்காமல் போய்விட்டால், Ex. M.L.A. ஆகிறபொழுது, Ex. M.L.A.-க்கள் படக்கூடிய பாடு கொஞ்சம் பெரிதாக இருக்கிறது. அவர்களுக்குப் பொதுவாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கக்கூடிய சம்பளத்தில் பாதியைப் பென்ஷனாகக் கொடுப்பதுதான் எல்லா மாநிலங்களிலும் மரபாக இருக்கிறது. சொல்லப்போனால், கேரளாவிலே இன்று 16,000 ரூபாய் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பென்ஷன் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு குறைந்தபட்சம் 12,500 ரூபாயாவது பென்ஷன் கொடுப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இப்படித் தெரிந்திருந்தால் வந்திருக்க மாட்டேன். (சிரிப்பு) 'இனமானப் பேராசிரியர் இதுகாறும் தரவில்லை' என்று குறை சொன்னார் ஞானசேகரன். அவர் இனமானப் பேராசிரியரே தவிர வருமானப் பேராசிரியர் அல்ல. (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) அதனால்தான் அவர் வருமானத்தை, கலந்து பேசி, கணக்கிட்டு, பிறகு சொல்லலாம் என்று



இங்கே கூறியதை நான் மேலேயிருந்து கேட்டேன். இருந்தாலும் ஏமாற்றத்திற்கு உங்களை ஆளாக்கக்கூடாது என்பதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) தொகுதி நிதியாக இப்பொழுது தரப்படுகிற 1 கோடியே 20 இலட்ச ரூபாய், 1 கோடியே 50 இலட்ச ரூபாயாகத் தரப்படும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 12 கோடி ரூபாய் செலவில் ஜீப்புகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னொன்று மேலேயிருந்து கேட்டேன். கீழே வந்து நண்பர் வீராசாமியைக் கேட்டேன். அவர் வேறு சொன்னார். நான் தெளிவாகக் கேட்டது, நம்முடைய எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் இங்கே பணியாற்றுகின்ற சிப்பந்திகளுக்கு pocket money 30 ரூபாய் போதாது என்று சொன்னார். பேராசிரியர் என்னைக் கலந்து சொல்வதாக இங்கே குறிப்பிட்டார். அது 50 ரூபாயாகத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

## 7. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2008 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஒ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 8. அரசினர் தீர்மானங்கள்

### (அ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல் பற்றிய அரசினர் தீர்மானம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், நிறைய கருத்துகளை இந்த அவைக்குத் தந்திருக்கிறார்கள். ஆளும் தரப்பைத் தவிர மற்ற உறுப்பினர்களுக்கு எதிர்கால கல்வி சம்பந்தப்பட்ட செய்தியாகவும், முடிவாகவும் இது இருப்பதால், இதைப்பற்றி நிறைய சந்தேகங்கள் இருக்கின்றன. ஏனென்றால், இன்று நாம் எடுக்கின்ற முடிவுகள், வரும் காலத்தில் உயர் கல்விக்கு இந்த மாநிலத்தில் வழிகாட்டும் கொள்கை முடிவுகளாக இருக்கக்கூடிய சூழ்நிலையில் இருக்கின்ற காரணத்தினால், இதைச் சற்று கவனத்தோடு அணுகக்கூடிய பொறுப்பு நமக்கு இருக்கின்றது. ஆகவே, ஏற்கெனவே அவசரச் சட்டம்மூலம் மற்றவற்றையும் நாங்கள் உருவாக்கவிருக்கிறோம்; அந்த அரசுக் கல்லூரிகளைப் பற்றியும் உங்களுக்கு ஏதாவது கருத்து இருக்கிறதா என்று கேட்டார்கள். ஒட்டுமொத்தத்தில் இவையெல்லாம் ஒன்றோடு ஒன்று இணைந்த கருத்துகளாக இருக்கின்ற காரணத்தினால், இதை நீங்கள் செலக்ட் கமிட்டிக்கு அனுப்புகின்றபோது, அவற்றையும் நாம் சேர்த்துப் பரிசீலித்து ஒட்டுமொத்தமாக ஒரு நல்ல முடிவு எடுக்கலாம். அவர்கள் சொல்வதைப்போல நிறைய பல்கலைக்கழகங்களை நாம் திறக்க வேண்டும் என்பதிலே மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் அதேநேரத்திலே, கல்வி வணிகமயமாகிவிடக்கூடாது என்பதிலே நம் எல்லோருக்கும் அதிகக் கவனம் இருக்கிறது. எனவே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை, நாங்கள் கேட்டுக்கொள்வது என்னவென்று சொன்னால், இதிலே, சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய Select Committee-யில் இதைப்பற்றி நாம் தீர விசாரித்து கல்வியாளர்களோடு நாம் ஆலோசனை செய்து, பல்வேறு கருத்துகளை நாம் கேட்டு, ஒரு கருத்தொற்றுமையை உண்டாக்கிய பிறகு இந்தச் சட்டங்களை நாம் நிறைவேற்ற அனுமதிக்க வேண்டும் என்று உங்கள்மூலமாக நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

**HON. DEPUTY SPEAKER:** Mr. G.K. Mani.

[2008 மே 14

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டமாதிரி நிறைய பல்கலைக்கழகங்கள் வரவேண்டும். அது கல்வி வளர்ச்சிக்கு, சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்புடையது. அதை வரவேற்கிறோம். இப்போது ஆய்வுக் குழுவிற்கு அனுப்புகிறீர்கள். (குறுக்கீடு) ஆனால் இந்த அரசுக் கல்லூரிகளைப் பற்றியும் சொல்கிறீர்கள். அதையும் பல்கலைக்கழகமாக உயர்த்துவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதையும் செய்துவிடுங்கள். அதிலேகூட என்னவென்றால். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு பி.எஸ்.ஜி. பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 43/2008) மற்றும் 2008 ஆம் ஆண்டு தியாகராஜர் அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2008)@ ஆகிய இரு சட்டமுன்வடிவுகளையும் Select Committee-யின் ஆய்வுக்கு அனுப்ப வேண்டும்"

என்ற தீர்மானத்தினை தோழமைக் கட்சிகளின் வேண்டுகோளுக்கேற்ப இங்கே மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

2008 ஆம் ஆண்டு பி.எஸ்.ஜி. பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு

@ 14-5-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



2008 மே 14] [பேரவைத் தலைவர்]

(சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 43/2008) மற்றும் 2008 ஆம் ஆண்டு தியாகராஜர் அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2008) ஆகிய இரு சட்டமுன்வடிவுகள் ஆய்வு குழுவிற்கு அனுப்பப்படுகின்றன. ஆய்வுக் குழு (Select Committee) உறுப்பினர்கள் பின்னர் அறிவிக்கப்படுவார்கள். உயர் கல்வித் துறை அமைச்சர் ஆய்வுக் குழுவின் தலைவராக இருந்து பணியாற்றுவார்.

## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஊ) தமிழ்நாடு ஆசிரியர் கல்விப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2008 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு ஆசிரியர் கல்விப் பல்கலைக்கழகச் சட்ட முன்வடிவைப் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2008) பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (அ.ஆ) தமிழ்நாடு ஆசிரியர் கல்விப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆசிரியர் கல்விப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2008) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆசிரியர் கல்விப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2008)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடுகள்)

@ 14-5-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பிற்பகல் 1-45

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கல்வியியல் பல்கலைக்கழகம் என்பது பல்கலைக்கழகமாக உருவாக்கப்பட்டாலும்கூட இந்தப் பல்கலைக்கழகத்தின்கீழே தனியார் சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் ஏராளமாக வர இருக்கின்றன. இப்பொழுதே பார்த்தோம் என்று சொன்னால், தனியார் சுய நிதி கல்வியியல் கல்லூரிகள், பி.எட். கல்லூரிகளில் அரசு நிர்ணயித்த கட்டணத்திற்கு மேலே அவர்கள் ஏராளமான தொகை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். பி.எட். படிப்பிற்கு ரூபாய் 1 இலட்சம், 1½ இலட்சம், 2 இலட்சம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதேநேரத்திலே இட ஒதுக்கீட்டு முறையையும் அவர்கள் பின்பற்றுவதில்லை. ஒற்றைச் சாளர முறையில் தேர்வு செய்யப்படக்கூடிய மாணவ, மாணவியர்களுக்கும் அவர்கள் விருப்பத்திற்கேற்ப கட்டணம் வகுத்துக்கொள்கிறார்கள். இட ஒதுக்கீட்டைப் பின்பற்றுவதில்லை. ஆகவே, இந்தப் பல்கலைக்கழகத்தை உருவாக்குகிற வேளையில் கட்டணத்தை--அரசு நிர்ணயிக்கிற கட்டணமே அங்கே வசூலிக்கப்படவேண்டும். இட ஒதுக்கீட்டு முறை கட்டாயம் பின்பற்றப்பட வேண்டும். அப்படி இருக்குமானால் இந்தப் பல்கலைக்கழகம் உருவாவதனாலே நாட்டு மக்களுக்குப் பலன் இருக்கிறது. அதற்கு வேட்டு வைக்கும் என்று சொன்னால், இந்தப் பல்கலைக்கழகம் உருவாவதிலே அவசியம் இல்லாமல் போய்விடும் என்பதை உணர்ந்து அதற்கும் இந்தப் பல்கலைக்கழகம் வழிவகுக்குமா என்பதை அரசு ஆய்விலே எடுத்துக்கொண்டு, அதை ஆய்வு செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்தக் கல்வியியல் கல்லூரிகளில் எல்லாம், அவ்வப்பொழுது அவரவர்கள் தொடங்கி, அவரவர்கள் தேர்வு நடத்திக் கொண்டிருக்கிற ஒரு சூழ்நிலை இருந்தது. அவற்றை எல்லாம் ஒரே நிலைமையிலே கொண்டு வரவேண்டும் என்றுதான் இந்தப் பல்கலைக்கழகம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டிலிருந்து குறிப்பிட்ட காலத்தில் அவை துவங்கப்பட்டு, குறிப்பிட்ட காலத்தில் தேர்வுகள் நடத்தப்பட்டு அந்த seniority--ஏனென்றால் முதலில் அந்த



seniority basis-ல்தான் ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கிறோம். அந்த அடிப்படையிலே இருக்கிற காரணத்தினால்தான் இந்தப் பல்கலைக்கழகம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தப் பல்கலைக்கழகத்திலே நீங்கள் சொன்ன அனைத்தையும் கொண்டு வருவதற்கு—இட ஒதுக்கீடு உள்ளிட்ட மற்ற அனைத்துமே அவற்றில் பின்பற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 59 வரை மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 59 வரை மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 மே 14

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆசிரியர் கல்விப் பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2008) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (அஇ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2008), மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2008)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

---

@ 6-5-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



2008 மே 14]

### பொது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு, திரு. எல். ரவிச்சந்திரன் மற்றும் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் ஆகியோரில் ஒருவர் தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"Proposed amendments shall be omitted."

என்ற திருத்தத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழிமொழிதல்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். ரவிச்சந்திரன் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், திருத்தம் தோல்வியுற்றது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, திருத்தங்கள் இல்லை.

[பேரவைத் தலைவர்] [2008 மே 14

பிரிவு 2 முதல் 4 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2008) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



2008 மே 14]

## (அஈ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2008), மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2008)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிற்பகல் 1-50

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 13-5-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2008) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.



## (அஉ) தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2008), மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2008)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@ 13-5-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2008 மே 14

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2008) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (அஊ) மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2008), மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.



2008 மே 14]

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2008)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 6-5-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 25/2008) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (அ) தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2008), மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2008)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

### பிரிவு—2

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 2, திரு. பி.கே. சேகர்பாபு, திரு. செ.ம. வேலுசாமி மற்றும் திரு. எல். ரவிச்சந்திரன் ஆகியோரில் ஒருவர் தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1. In Clause-2, the expression, 'if the person employed had not been employed in any establishment during such period and an affidavit by such person employed had been filed to that effect in such Court' shall be admitted.

2. Proviso to Clause-2 shall be omitted."

என்ற திருத்தத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழிமொழிதல்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

@ 13-5-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[2008 மே 14

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், திருத்தம் தோல்வியுற்றது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

**பிரிவு—3**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரிவு 3, திரு. பி.கே. சேகர்பாபு, திரு. செ.ம. வேலுசாமி, திரு. எல். ரவிச்சந்திரன் ஆகியோரில் ஒருவர் தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

In Clause 3, for the expression "two hundred rupees", substitute the expression "two thousand rupees".

என்ற திருத்தத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழிமொழிதல்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்திருத்தத்தை நான் வழிமொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2008 மே 14] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், திருத்தம் தோல்வியுற்றது.

பிரிவு 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2008) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

[2008 மே 14

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

*பிற்பகல் 1-55*

## (அஏ) தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2008 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/2008), மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2008 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/2008)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1946 ஆம் ஆண்டு தொழில் தகராறு சட்டம், மைய திருத்தச் சட்டத்தின்மீது சில கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகிறேன். நான் தொழிலாளர் நலத் துறை மானியத்தின்மீது பேசுகின்றபோது, தொழிலாளர் நல ஆணையரகம் என்பதும் அதனுடைய தீர்ப்பாயம் என்பதும் அதிகாரம் இல்லாத பேருக்கான ஆணையமாக இருக்கிறது.

@ 14-5-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



2008 மே 14] [திரு.தி. வேல்முருகன்]

அதனால் அதிகாரம் படைத்த ஒரு ஆணையமாக அதை மாற்றியமைப்பதற்கு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று வலியுறுத்திப் பேசினேன். என்னுடைய கருத்துக்கு வலு சேர்க்கின்றவகையில் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்ததற்காக முதலில் தமிழக அரசுக்கும், தொழிலாளர் நலத் துறை அமைச்சருக்கும் நான் நன்றி சொல்கிறேன். ஆனால் அதே நேரத்தில், தொழில் தகராறு தாவா சட்டத்தின்கீழ் தீர்ப்பாணையத்திற்குப் போகின்றபோது அவர்கள் நோட்டீஸ் கொடுத்து தொழில் தகராறு பிரச்சினையில் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கு நிறுவனங்களை அழைக்கின்றபோது அவர்கள் வர மறுக்கின்றார்கள். அப்படி தொடர்ந்து ஒன்று அல்லது இரண்டு முறைகள் வர மறுக்கின்ற அந்தத் தொழிற்சாலை அதிபர்கள்மீதும் தொழிற்சாலை நிறுவனங்கள்மீதும் இந்த அரசு விதிகளைப் பயன்படுத்தி கடுமையாகத் தண்டிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். மாற்றாக, மின்சாரத் துறை அமைச்சர்மூலமாக மின்சாரத்தை நிறுத்த வேண்டும். அதேபோல Pollution, மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாக, அதைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்கு தொழிலாளர் நலத் துறை அமைச்சருக்கு அதிகாரம் வழங்கவேண்டும் என்ற கருத்தைப் பதிவு செய்கின்றேன். ஆனால் இந்தச் சட்டத்தின்மூலம் உரிமையியல் நீதிமன்றத்திற்கு நிகரான ஒரு அதிகாரம் படைத்த ஒரு தீர்ப்பாயமாக மாற்றப்படும் என்றுதான் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. இந்த மாற்றம் என்பது அவ்வளவு சிறப்பானதாக இருக்காது. இன்னும் அதிகாரம் படைத்த ஒரு மாற்றமாக சட்டமுன்வரைவுகளை வருங்காலத்தில் கொண்டுவருவதற்கு துறை நடவடிக்கையை எடுக்க வேண்டும். அப்போதுதான் ஆண்டாண்டு காலமாகப் போராடிக்கொண்டிருக்கிற M.R.F., நம்முடைய அரக்கோணம் M.R.F., நம்முடைய கோயம்புத்தூரிலே இருக்கிற PRICOL போன்ற பண முதலாளிகளுடைய கொட்டம் இந்த அரசினுடைய கட்டுப்பாட்டில் வருவதற்கு வாய்ப்பாக இருக்கும். அதற்கேற்றவாறு இனிவருங்காலங்களில் சட்டங்களைக் கடுமையாக்குவதற்கும் அரசு முன்வரவேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக என் கருத்தைப் பதிவு செய்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியும், C.I.T.U.-வும்

[திரு. ஞா. ஜாண் ஜோசப்] [2008 மே 14

நீண்டகாலமாக வலியுறுத்தி வந்த கோரிக்கை என்ற முறையில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக இந்தச் சட்டத் திருத்தத்தை வரவேற்கிறோம், ஆதரிக்கிறோம். அதேநேரத்தில் இரண்டு ஷரத்துகளைக் கூட இணைக்கவேண்டுமென்று எங்களுடைய கருத்தினை நாங்கள் பதிவு செய்ய விரும்புகிறோம்.

தொழிலாளர் நீதிமன்றத்திற்கும், தீர்ப்பாயத்திற்கும் இடைக்காலத் தடை வழங்குவதற்கான அதிகாரம் வழங்கவேண்டும் என்றும், அதுபோல, சமரச அலுவலர்கள் பேச்சுவார்த்தைக்கு அழைக்கும்போது வராதவர்கள்மீது உறுத்துக்கட்டளை--summons-- பிறப்பிப்பதற்கான அதிகாரமும் வழங்கவேண்டுமென்று வலியுறுத்துகிறோம். அதுபோல, தொழிற்சங்க அங்கீகாரத்திற்குத் தனிச் சட்டம் இயற்றவேண்டுமென்ற கோரிக்கையையும் வலியுறுத்தி, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் தகராறுகள் திருத்தச் சட்டமுன்வடிவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்கிறேன். இதிலே மேலும் தேவையான திருத்தங்கள் தேவையென்று வலியுறுத்தி சொல்லப்பட்டிருப்பதை நானும் ஆதரிக்கிறேன். தொழிலாளர் நல ஆணையத்திற்கான அதிகார வரம்புகள் உயர்த்தப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது. அதன்மூலமாகத்தான் தொழிற்சாலைகள் தனியாருடைய அந்த ஆதிக்க உணர்வுகளைக் குறைத்து, தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படும் என்ற காரணத்தினாலே அந்த ஆணையத்திற்குரிய அதிகாரங்கள் கூடுதலாக வழங்கப்படவேண்டும். குறிப்பாக, தமிழகத்திலே பல்வேறு தொழிற் தகராறுகள் ஏற்பட்டிருப்பதான சில பிரச்சினைகளைப்பற்றி இங்கே குறிப்பிட்டு பல சந்தர்ப்பங்களிலே பேசியிருக்கிறோம். இந்த சட்டத் திருத்தத்தோடு இணைத்து மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றை நான் சொல்ல விரும்புவது, நெய்வேலி நிலக்கரி ஒப்பந்தத் தொழிலாளர்கள் போராட்டம் என்பது உங்களுடைய வேண்டுகோளையேற்று ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மத்திய அரசாங்கம் அதிலே தீர்வு காண்பதற்கு முயற்சி எடுக்கவில்லை. இப்போது மீண்டும் அந்தப் போராட்டம்



2008 மே 14] [திரு. வை. சிவபுண்ணியம்]

தொடங்குவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுவிடுகிற சூழ்நிலை இருக்கிற காரணத்தினாலே, அதைத் தீர்ப்பதற்குரிய முயற்சியையும் அமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2-00

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் இங்கே கேட்டுக்கொண்டதற்கேற்ப, ஏற்கெனவே நிலக்கரித் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பிலே இருந்தபோது, அவர் கொடுத்த வாக்குறுதியை ஏற்று, நான் இந்த அவையிலேகூட அறிவித்தேன். நானேகூட பேச்சுவார்த்தை நடத்தி, 6 கோரிக்கைகளிலே 3 கோரிக்கைகளை மத்திய அரசுக்குத் தெரிவித்து, அவர்கள் ஏற்றுக் கொள்வதாகச் சொன்னார்கள். இடையிலே மத்திய அமைச்சரவை மாற்றப்பட்டுவிட்டது. இருந்தாலும்கூட, புதிய அமைச்சர் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடனே, அவர்களிடத்தில் நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் திரு. செ. குப்புசாமி அவர்களை அனுப்பி, நம்முடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ராஜா அவர்களையும் அனுப்பி, 'ஏற்கெனவே சட்டமன்றத்திலே அமைச்சர் இப்படியொரு வாக்குறுதி தந்திருக்கிறார்; அது பழைய அமைச்சருக்குத் தெரியும்; புதிதாகப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற உங்களுக்குத் தெரியாது. ஆகவே, அதைப் பரிசீலிக்கவேண்டும்' என்று அவர்கள் சொன்னபோது, புதிய அமைச்சர் என்னிடத்திலே தொலைபேசியிலே தொடர்புகொண்டு, 'நீங்கள் எந்த வாக்குறுதியை அவர்களுக்குத் தந்தீர்களோ, அதை நானே நிறைவேற்றித் தருகிறேன்; கர்நாடகாவிலே நடைபெறுகின்ற தேர்தலிலே நான் முழுமையாக ஈடுபட்டிருக்கின்ற காரணத்தினால், என்னாலே உடனடியாக இப்பொழுது சென்னைக்கு வந்து கையெழுத்து போட இயலவில்லை. எனவே, தேர்தல் முடிந்தவுடன் அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருகிறேன்' என்று வாக்குறுதி தந்திருக்கிறார். கர்நாடக மாநிலத்தினுடைய தேர்தல் முடிந்தவுடனே, C.P.I.-யினுடைய கோரிக்கைகள் நிச்சயமாக நிறைவேற்றித் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



"2008 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/2008) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (அஇ) தொழிலக வேலை வாய்ப்பு (நிலை ஆணைகள்) தமிழ்நாடு திருத்தச் சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தொழிலக வேலை வாய்ப்பு (நிலை ஆணைகள்) தமிழ்நாடு திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/2008), மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தொழிலக வேலை வாய்ப்பு (நிலை ஆணைகள்) தமிழ்நாடு திருத்தச் சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/2008)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 14-5-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2008 மே 14

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 19 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 19 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தொழிலக வேலை வாய்ப்பு (நிலை ஆணைகள்) தமிழ்நாடு திருத்தச் சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/2008) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடுகள்)



2008 மே 14]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் . . . (குறுக்கீடு) திரு. தி. வேல்முருகன், என்ன அடிக்கடி எழுந்து கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்?

**திரு. தி. வேல்முருகன்:** இல்லை, இல்லை. இது தொழிலாளர்களின் முக்கியமான பிரச்சினை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008 ஆம் ஆண்டிற்கானத் தொழிலக வேலைவாய்ப்பு (நிலை ஆணைகள்) சட்டத் திருத்தத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகச் சில கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இந்தச் சட்டத்தின்பிரகாரம், நம்முடைய நாட்டில் தொழிற்சாலைக்ளில் பணி செய்கின்றவர்களை apprentice என்ற பெயரில் 3 ஆண்டுக் காலம், 6 ஆண்டுக் காலம் என்று அவர்களைப் பணியமர்த்திக்கொண்டு, உற்பத்தியை அவர்கள் தொடங்குவதற்கு வாய்ப்பாக இருக்கிறது. இதிலே இத்தனை ஆண்டுகள்தான் வேலை செய்யவேண்டுமென்று இல்லை; மூன்று ஆண்டுகள் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். இப்போது இந்தச் சட்டத்தின்மூலமாக, எத்தனை நாட்கள் அவர்கள் apprentice-ஆகப் பணிபுரிவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவைக்கு அளிக்கவேண்டும்.

மேலும், apprentice காலங்களில் பணி செய்கின்றபோதுதான், நிரந்தரத் தொழிலாளி செய்கின்ற உற்பத்தியை இவர்களை வைத்து அந்த நிறுவனம் தயாரிக்கின்றபோது, நிரந்தரத் தொழிலாளர்களுக்கும், apprentice தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்திற்கும் பிரச்சினை ஏற்பட்டு, அந்த தொழிற் தகராறு உங்களிடத்திலே வருகிறது. இதேபோன்ற பிரச்சினை N.L.C.-யிலும் இருந்து கொண்டிருக்கிறது. ஆண்டாண்டுக் காலமாக apprentice பயிற்சி முடித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு தருவதில்லை. M.R.F.-லும் இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது; தமிழ்நாட்டில் பல்வேறு தொழிற்சாலைகளில் அந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. ஆக, பழகுநர்கள் என்பவர்கள் பயிற்சியினை முடித்தபிறகு, அவர்களை வெளியிலே அனுப்பிவிட்டு, நிரந்தரப் பணியாளர்களைக் கொண்டு உற்பத்தித் தொடங்கவேண்டும் என்கிற அளவிற்குத்தான் இப்போது இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 மே 14

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தம் நூற்பாலைகள் உட்பட எல்லா தொழில் நிறுவனங்களுக்கும் பொருந்தும் வகையில் கொண்டுவரப்பட்டுள்ளது. ஏற்கெனவே, நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தலைவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தலைவர்களும், மற்ற அனைத்துக் கட்சித் தலைவர்களும் இதுகுறித்துப் பேசி ஒரு முடிவெடுக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

கோவை, பெரியார் மாவட்டங்களிலே அந்த ஆலைக்குச் சொந்தக்காரர்கள் பெண்களை வேலைக்கு அமர்த்திக்கொண்டு, அடிமைகளைப்போல நடத்தி, அங்கே ஒரு ஹாஸ்டலிலே தங்க வைத்து, மூன்று ஆண்டுகளுக்குப்பிறகு ஒரு கணிசமான தொகையைக் கொடுத்துவிட்டு, அவர்கள் தொழிலாளர்கள் பாதுகாப்புச் சட்டத்தையே மதிக்காமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்தச் சட்டத்தை அடியோடு ஒழிக்க வேண்டுமென்பதற்காகத்தான், இந்தப் புதிய சட்டம் கொண்டுவரப்பட்டு, Apprenticeship காலம் நிர்ணயம் செய்யலாம் என இச்சட்டத் திருத்தத்தில் கூறப்பட்டுள்ளது. இது தொடர்பாக கொண்டுவரப்பட உள்ள விதிகளுக்கான திருத்தங்களில் Apprenticeship காலம் 6 மாதங்கள் என நிர்ணயம் செய்யப்பட உள்ளது. அந்தவகையிலே இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

*பிற்பகல் 2-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், பஞ்சாலைகளுக்கு மட்டும்தான் இந்தச் சட்டம் பொருந்தும் என்று சொன்னார்கள். அது உள்ளபடியே வரவேற்கத்தக்கது. பஞ்சாலைகளில்தான் இன்றைக்கு கொத்தடிமைகளாக வைத்து சம்பளம் கொடுக்காமல் திருமணத் திட்டம் என்ற பெயரால் மூன்று ஆண்டுகளுக்குமேல் வேலை வாங்கிவிட்டு, 30 ஆயிரம் ரூபாய், 40 ஆயிரம் ரூபாய் என்று கொடுத்துவிட்டு வீட்டுக்கு அனுப்புகிற நிலை இருக்கிறது. இந்தச் சட்டம் எந்தத் தேதியிலிருந்து அமலுக்கு வரும்? அது உடனடியாக அமல்படுத்தப்பட வேண்டுமென்பதை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகப் பதிவு செய்கிறேன்.



2008 மே 14]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே சொன்னக் கருத்தைத்தான் மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். சட்டமன்றப் பேரவையில் இச்சட்டத் திருத்தம் உங்களாலே நிறைவேற்றப்பட்டவுடன், ஓரிரு நாட்களிலே ஆளுநருடைய கையெழுத்திற்குப் போகும். அதன்பின், குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்றபின்பு இச்சட்டம் அமலுக்கு வரும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (அஔ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2008), மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2008)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

---

@ 13-5-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[2008 மே 14

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2008 மே 14] [திரு. சி.நா.மீ. உபயதுல்லா]

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2008) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஏ) தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச் சட்டமுன்வடிவு, 2008 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச் சட்டமுன்வடிவைப் (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2008) பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

## 9. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

### (அஓ) தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச் சட்டமுன்வடிவு, 2008

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2008), மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 மே 14

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2008)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 20 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 20 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 22-4-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



2008 மே 14] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 19/2008) நிறைவேற்றப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 4. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (இ) பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம் இரத்து—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன் அவர்கள்

[டாக்டர் க. பொன்முடி] [2008 மே 14

இங்கே உரையாற்றுகிறபொழுது, அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் (Government Polytechnics) பயில்கிற மாணவர்களுக்கு கல்விக் கட்டணத்தை இரத்துச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும் அதற்கு அனுமதியளித்து, *2008-2009* ஆம் கல்வியாண்டு முதல் அந்த மாணவர்களுக்கான கல்விக் கட்டணம் ரூ.*2,500* இரத்து செய்யப்படுகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு முதல்வர் அவர்களின்சார்பாக மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்புக்கு தமிழ்நாடு முழுவதிலும் இந்தப் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயிலக்கூடிய மாணவர்கள், பெற்றோர்களின் சார்பில் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் *2-10*

## 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஏ) பேரவைக் குழுக்களுக்கான உறுப்பினர்கள் தேர்வு

### (அ) மதிப்பீட்டுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மதிப்பீட்டுக் குழு. *2008-2009* ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு (Committee on Estimates) பேரவையின் *16* உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். கீழ்க்காணும் *16* உறுப்பினர்களிடமிருந்து முறையான வேட்புத் தாள்கள் வரப்பெற்றுள்ளன:

திரு. மு. அப்பாவு

செல்வி ஆ. அங்கையற்கண்ணி

திரு. தா. உதயசூரியன்

திரு. இ.ஏ.பி. சிவாஜி

திரு. அ. தமிழரசு



2008 மே 14] [பேரவைத் தலைவர்]

திரு. ஆர். சின்னசாமி

திரு. கோ. அரி

திரு. போ. சின்னப்பன்

திரு. ல. ராதாகிருஷ்ணன்

திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்

திரு. போளூர் ம. வரதன்

திரு. வே. மாரிமுத்து

திரு. வை. சிவபுண்ணியம்

திரு. ஆர். ஞானதாஸ்

டாக்டர் ஆஸ்கார் சி. நிக்லி

ஏற்கக்கூடிய வேட்பு மனுக்கள் அளித்துள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை, தேர்ந்தெடுக்கப்பெறவேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால் *2008-2009* ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். தவிர, நிதித் துறைக்குப் பொறுப்பு வகிப்பவர் என்கிற முறையில், மாண்புமிகு நிதி அமைச்சர், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவார்கள்.

பேரவை விதி *196*-ன்கீழ், திரு. மு. அப்பாவு அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### (ஆ) பொதுக் கணக்குக் குழு

*2008-2009* ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு (Committee on Public Accounts) பேரவையின் *16* உறுப்பினர்களைத்

தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் 16 உறுப்பினர்களிடமிருந்து முறையான வேட்புத் தாள்கள் வரப்பெற்றுள்ளன:

திரு. டி. செங்குட்டுவன்

திரு. எஸ்.ஆர். இராஜா

திரு. கோ. ஐயப்பன்

திரு. என். மாலைராஜா

திரு. கோ. எதிரொலி மணியன்

முனைவர் மு. தம்பிதுரை

திரு. வே. செந்தில் பாலாஜி

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்

திரு. பி. தங்கமணி

திருமதி டி. யசோதா

திரு. அருள் அன்பரசு

திரு. மா. தண்டபாணி

திருமதி ரா. லீமா றோஸ்

திரு. சு. குணசேகரன்

திரு. வீர. இளவரசன்

திரு. து. ரவிக்குமார்

ஏற்கக்கூடிய வேட்பு மனுக்கள் அளித்துள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை, தேர்ந்தெடுக்கப்பெறவேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 2008-2009 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கிறேன்.

தவிர, நிதித் துறைக்குப் பொறுப்பு வகிப்பவர் என்ற முறையில், மாண்புமிகு நிதி அமைச்சர், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் ஆகியோர் தங்களது அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவார்கள்.



பேரவை விதி 204-ன்கீழ், திருமதி டி. யசோதா அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## (இ) பொது நிறுவனங்கள் குழு

2008-2009 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு (Committee on Public Undertakings) பேரவையின் 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் பதினாறு உறுப்பினர்களிடமிருந்து முறையான வேட்புத் தாள்கள் வரப்பெற்றுள்ளன:

திரு. உதயம் சண்முகம்

திரு. கே.பி. இராமசுவாமி

திரு. எம். அன்பழகன்

திரு. ம. இராஜ்குமார்

திரு. பெ. காமராஜ்

திரு. க. சுந்தர்

திரு. தி. வேல்முருகன்

திரு. சொ. கருப்பசாமி

திரு. ஆ. அருண்மொழிதேவன்

திரு. சி.வி. சண்முகம்

திரு. வி.பி. கலைராஜன்

திருமதி ராணி வெங்கடேசன்

திரு. மா. ராஜசேகரன்

திரு. பா. வேல்துரை

திரு. கி. ஆறுமுகம்

திரு. டி. இராமச்சந்திரன்

[பேரவைத் தலைவர்] [2008 மே 14

ஏற்கக்கூடிய வேட்பு மனுக்கள் அளித்துள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை, தேர்ந்தெடுக்கப்பெறவேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 2008-2009 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப் பெற்றதாக அறிவிக்கிறேன்.

தவிர, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவார்கள்.

பேரவை விதி 213-ன்கீழ் திரு. கி. ஆறுமுகம் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### (ஈ) அவை உரிமைக் குழு

2008-2009 ஆம் ஆண்டிற்கான அவை உரிமைக் குழுவிற்கு (Committee of Privileges) பேரவையின் 14 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் பதினான்கு உறுப்பினர்களிடமிருந்து முறையான வேட்புத் தாள்கள் பெறப்பட்டுள்ளன:

திரு. கு. பிச்சாண்டி

திரு. வ. முல்லைவேந்தன்

திரு. பி.என். பெரியண்ணன்

திரு. ச. லட்சுமணன்

திரு. கூ.ந. சேகரன்

திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரி நாராயணன்

திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்

திரு. பி.கே. சேகர்பாபு

திரு. இரா. விசுவநாதன்

திரு. டி. ஜெயக்குமார்

திரு. சி. ஞானசேகரன்



2008 மே 14] [பேரவைத் தலைவர்]

திரு. எஸ். ராஜகுமார்

திரு. கே. மகேந்திரன்

திரு. எஸ். இராசசேகரன்

ஏற்கக்கூடிய வேட்பு மனுக்கள் அளித்துள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை, தேர்ந்தெடுக்கப்பெறவேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 2008-2009 ஆம் ஆண்டிற்கான அவை உரிமைக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கிறேன்.

தவிர, மாண்புமிகு பேரவை முன்னவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

பேரவை விதி 227(3)-ன்கீழ், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இக்குழுவின் தலைவராக இருப்பார். (மேசையைத் தட்டும் ஒலி)

மற்ற குழுக்களுக்கான உறுப்பினர்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

பிற்பகல் 2-15

## 10. பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களே, எல்லோருக்கும் வணக்கம்.

பதின்மூன்றாவது சட்டமன்றப் பேரவையின் ஏழாவது கூட்டத் தொடர் 2008 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 23 ஆம் நாள் தொடங்கி பிப்ரவரித் திங்கள் 1 ஆம் நாள் வரையிலும், எட்டாவது கூட்டத் தொடர் மார்ச் திங்கள் 19 ஆம் நாள் தொடங்கி மே திங்கள் 14 ஆம் நாள் (இன்று) வரையிலும் நடைபெற்றது. இந்த இரண்டு கூட்டத் தொடர்களில் பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பற்றிய விவரம் வருமாறு:

[பேரவைத் தலைவர்] [2008 மே 14

**இந்தக் கூட்டத் தொடர்களில்,**

| | | |
|---|---|---|
| பேரவை கூடிய மொத்த நாட்கள் (ஆளுநர் உரையாற்றிய நாள் உட்பட) | -- | 40 |
| அவைக் கூட்டம் நடைபெற்ற மொத்த நேரம் | -- | 162 மணி 17 நிமிடம் (பிற்பகல் 12-30 மணி வரை) |

மேதகு ஆளுநர் அவர்கள் 23-1-2008 அன்று பேரவையில் உரையாற்றினார்கள்

| | | |
|---|---|---|
| ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் நடைபெற்ற மொத்த நாட்கள் | -- | 6 |
| பங்கேற்ற உறுப்பினர்கள் | -- | 42 |
| உரையாற்றிய நேரம் | -- | 13 மணி 25 நிமிடம் |
| அதில் ஆளுங்கட்சியினர் 7 பேர், பேசிய நேரம் | -- | 1 மணி 41 நிமிடம் |
| பிரதான எதிர்க்கட்சியான அ.இ.அ.தி.மு.க.-வினர் 10 பேர், பேசிய நேரம் | -- | 3 மணி 30 நிமிடம் |
| இவற்றைத் தவிர, இதர கட்சியினர் 25 பேர், பேசிய நேரம் | -- | 8 மணி 14 நிமிடம் |
| மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதிலுரை ஆற்றிய நேரம் | -- | 34 நிமிடம் |

**நிதி அலுவல்கள்—**

2008-2009 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை 20-3-2008 அன்று பேரவைக்கு அளிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம் நடைபெற்ற நாட்கள் | -- | 6 |
| பங்கேற்ற உறுப்பினர்கள் | -- | 52 |
| உரையாற்றிய நேரம் | -- | 16 மணி 15 நிமிடம் |



2008 மே 14] [பேரவைத் தலைவர்]

| | | |
|---|---|---|
| அதில் ஆளுங்கட்சியினர் 7 பேர், பேசிய நேரம் | – | 2 மணி 21 நிமிடம் |
| இதர கட்சியினர் 45 பேர், பேசிய நேரம் | – | 13 மணி 54 நிமிடம் |
| மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதிலளித்த நேரம் | -- | 1 மணி 12 நிமிடம் |

**மானியக் கோரிக்கைகள்—**

மொத்தம் 51 மானியக் கோரிக்கைகள் விவாதித்து நிறைவேற்றப்பெற்றன.

| | | |
|---|---|---|
| விவாதம் நடைபெற்ற நாட்கள் | -- | 25 |
| உறுப்பினர்கள் ஆற்றிய உரைகள் | -- | 220 |
| உரையாற்றிய நேரம் | -- | 44 மணி 40 நிமிடம் |
| அதில் ஆளுங்கட்சியினரின் உரைகள் 39, பேசிய நேரம் | -- | 7 மணி 36 நிமிடம் |
| இதர கட்சியினரின் உரைகள் 181, பேசிய நேரம் | – | 37 மணி 04 நிமிடம் |
| மாண்புமிகு முதலமைச்சர் தனது பொறுப்பில் உள்ள துறைகள் தொடர்பாக பதிலளித்த நேரம் | -- | 1 மணி 12 நிமிடம் |
| தன் துறைகள் தொடர்பான விவாதங்களுக்கு பதிலுரை அளித்த நிகழ்வுகள் அல்லாமல் இதர துறைகள் தொடர்பான விவாதங்களிலும் உறுப்பினர்களின் ஐயங்களுக்கு உடனுக்குடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே விளக்கங்கள் அளித்த நேர்வுகள் | -- | 5 (8 நிமிடம்) |
| மாண்புமிகு அமைச்சர்கள் பதிலுரையாற்றிய மொத்த நேரம் | -- | 22 மணி 19 நிமிடம் |

அமைச்சர்களில், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதிகபட்சமாக 3 மணி 07 நிமிடங்கள் பதிலுரை வழங்கி முதலிடம் வகிக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை குறித்த மானியக் கோரிக்கை விவாதத்திற்கு 1 மணி 52 நிமிட நேரம் விரிவாகப் பதிலளித்து பல்வேறு முக்கிய அறிவிப்புகளைச் செய்ததோடு, அத்துறைகள் சம்பந்தப்பட்ட திட்டங்களின் செயல்பாடு, வழிகாட்டி நெறிமுறைகள், முக்கிய அரசாணைகள், அறிவிப்புகளின் தொகுப்பு, முக்கியச் சட்டம் மற்றும் விதிகள், பணியமைப்பு உள்ளிட்ட 34 வெளியீடுகள் மற்றும் நூல்களை உறுப்பினர்களின் பயன்பாட்டிற்காக வழங்கி சாதனை படைத்துள்ளார்கள். அதற்காக பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமது பொறுப்பில் உள்ள துறைகள் மட்டுமல்லாது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொறுப்பில் உள்ள தொழில் துறை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை குறித்த மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்திற்கும் 1 மணி 15 நிமிடங்கள் விரிவாக பதிலளித்துள்ளார்கள். அதற்காகவும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**வினாக்கள்–விடைகள்—**

| | |
|---|---|
| பேரவையில் கடந்த ஆண்டு அறிவிப்பு செய்த பின்னர், 11-5-2007 முதல் 14-5-2008 வரை உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்ட மொத்த வினாக்கள் | -- 36,731 |
| அளித்த உறுப்பினர்கள் எண்ணிக்கை | -- 132 |

இவற்றில் அதிக வினாக்கள் கொடுத்து முதல் ஐந்து நிலைகளில் இருப்பவர்கள்

| | |
|---|---|
| 1. திரு. கோவை தங்கம் (இ.தே.கா.) | -- 8373 வினாக்கள் |
| 2. திரு. ம. குணசேகரன் (அ.இ.அ.தி.மு.க.) | -- 4991 வினாக்கள் |
| 3. திரு. அ. தமிழரசு (பா.ம.க.) | -- 3143 வினாக்கள் |
| 4. திரு. ஜி.கே. மணி (பா.ம.க.) | -- 2584 வினாக்கள் |
| 5. திரு. கி. ஆறுமுகம் (பா.ம.க.) | -- 1326 வினாக்கள் |





பிற்பகல் 2-20

**உடுக்குறியிட்ட வினாக்கள்—**

| | |
|---|---|
| இந்த இரண்டு கூட்டத் தொடர்களில் அவையில் விடையளிக்கப்பட்டவை | -- 297 |

பேரவையில் அதிக வினாக்களுக்கு பதிலளித்து முதல் ஐந்து நிலைகளில் இருக்கும் அமைச்சர்கள் குறித்த விவரம்

| | |
|---|---|
| 1. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) | -- 23 வினாக்கள் |
| 2. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்<br>மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்<br>மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் | -- தலா 21 வினாக்கள் |
| 3. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் | -- 20 வினாக்கள் |
| 4. மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் | -- 15 வினாக்கள் |
| 5. மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்<br>மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் | -- தலா 14 வினாக்கள் |

**சிறப்புக் கவன ஈர்ப்புகள் / தகவல் கோரல்—**

| | |
|---|---|
| சிறப்புக் கவன ஈர்ப்புகள் / தகவல் கோரல் என்ற முறையில் அவையில் முக்கியப் பொருள்கள் எடுத்துக்கொள்ளப்பெற்றவை | -- 45 |

| | | |
|---|---|---|
| மாண்புமிகு முதலமைச்சர் பதிலளித்தவை | – | 19 |
| எடுத்துக்கொள்ளப்பெற்ற மொத்த நேரம் | – | 10 மணி 19 நிமிடம் |
| உரையாற்றிய உறுப்பினர்கள் | – | 117 பேர் |

**கவன ஈர்ப்புகள்—**

| | | |
|---|---|---|
| உறுப்பினர்களிடமிருந்து வரப்பெற்றவை | – | 1892 |
| கவன ஈர்ப்பாக அனுமதிக்கப்பெற்றவை | – | 138 |
| அவையில் விளக்கம் அளிக்கப்பெற்றவை | – | 14 |
| வினாவாக மாற்றப்பெற்றவை | – | 764 |

**உரிமை மீறல் குறித்த பிரச்சினைகள்—**

| | | |
|---|---|---|
| உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பெற்றவை | – | 2 |

**அரசினர் சட்டமுன்வடிவுகள்—**

| | | |
|---|---|---|
| வரப்பெற்றவை | – | 48 |
| நிறைவேற்றப்பெற்றவை | – | 45 |
| ஆய்வுக் குழுவிற்கு அனுப்பப்பெற்றவை | – | 2 |

தைத் திங்கள் முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்க நாளாகக் கொண்டாடுதல் குறித்த சட்டமுன்வடிவினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிமுகம் செய்தபோது, உறுப்பினர்கள் அனைவரும் மேஜை ஒலி எழுப்பி வரவேற்றார்கள்.

**விதி 110–ன்கீழ் மாண்புமிகு அமைச்சர்களின் அறிக்கைகள்—**

| | | |
|---|---|---|
| மொத்தம் அளிக்கப்பெற்றவை | -- | 6 |
| மாண்புமிகு முதலமைச்சர் அளித்தவை | -- | 3 |

சென்னை மெட்ரோ இரயில் நிருவாகத்திற்கும், சென்னையில் அரசு பொது மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை மற்றும் அரசு தோட்டக் கலைப் பூங்கா ஆகியவற்றின் பயன்பாட்டிற்கும் அரசுக்குச் சொந்தமான நிலங்களை ஒதுக்குதல் குறித்து 17-4-2008 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையை அளித்தார்கள்.





மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அளித்த மனுக்களின் பேரில், இயற்கைச் சீற்றங்கள் மற்றும் விபத்தில் பாதிப்படைந்தோருக்கு, முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து இந்தக் கூட்டத் தொடரில் மட்டும் ரூபாய் 55 இலட்சத்து 30 ஆயிரம் அளவுக்கு நிதி உதவிகளை அறிவித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 7-5-2008 மற்றும் 14-5-2008 ஆகிய தேதிகளில் இரு அறிக்கைகளை அளித்தார்கள்.

**அரசினர் தனித் தீர்மானம்—**

| | | |
|---|---|---|
| வரப்பெற்றவை | – | 4 |
| நிறைவேற்றப்பெற்றவை | – | 4 |

செம்மொழித் தமிழ் ஆய்வு மையத்தை சென்னையில் அமைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் செயல்பட ஆணை வழங்கிய மத்திய அரசைப் பாராட்டும் தீர்மானம், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்ற உதவிட வேண்டுமென்றும், கர்நாடக மாநிலத்தில் எழுந்துள்ள எதிர்ப்பினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களின் உரிமையைக் காக்கவேண்டும் என்றும் மத்திய அரசைக் கோரும் தீர்மானம், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண அமைதிப் பேச்சுவார்த்தை நடத்த மத்திய அரசைக் கோரும் தீர்மானம் ஆகியவை இவற்றில் அடங்கும்.

**தனி உறுப்பினர் தனித் தீர்மானம்—**

உயர் கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவிகித இட ஒதுக்கீடு கோரி பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி வெற்றி கண்ட மாண்புமிகு முதலமைச்சருக்குப் பாராட்டுத் தெரிவித்து திரு. ஜி.கே. மணி அவர்கள் கொண்டுவந்த தனித் தீர்மானம் 11-4-2008 அன்று பேரவையில் ஒருமனதாக நிறைவேறியது.

**உறுப்பினர்கள் வருகை—**

உறுப்பினர்கள் வருகைப் பதிவேட்டில் சுருக்கொப்பமிட்டதன் அடிப்படையில், 23-1-2008 முதல் இன்று (14-5-2008) வரை இந்த இரண்டு கூட்டத் தொடர்களின்போதும் 55 உறுப்பினர்கள் அனைத்து நாட்களும் பேரவைக்கு வருகை புரிந்துள்ளனர். இப்பட்டியலில் வருகைப் பதிவேட்டில் சுருக்கொப்பமிடாத உறுப்பினர்களின் பெயர்கள் இடம்பெறாது.

பிற்பகல் 2-25

அனைத்து நாட்களும் பேரவைக்கு வருகை புரிந்த உறுப்பினர்கள் விவரம் வருமாறு:

1. செல்வி. அ. அங்கையற்கண்ணி
2. திரு. எச். அப்துல் பாசித்
3. திரு. அருள் அன்பரசு
4. திரு. எம். அன்பழகன்
5. திரு. அன்பில் பெரியசாமி
6. திரு. க. இராஜேந்திரன்
7. திரு. எல். ராதாகிருஷ்ணன்
8. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்
9. திரு. சபா. இராஜேந்திரன்
10. திரு. தா. உதயசூரியன்
11. திரு. கோ. ஐயப்பன்
12. திரு. வே. கண்ணன்
13. திரு. வீ.ஏ.டி. கலியவரதன்
14. திரு. பெ. காமராஜ்
15. திரு. ம. குணசேகரன்
16. திரு. எஸ்.எஸ். குருசாமி
17. திரு. சி. சண்முகவேலு
18. திருமதி மு. சந்திரா
19. திரு. ஆர். சாமி
20. திரு. எஸ்.எஸ். சிவசங்கர்
21. திரு. ஆர். சின்னசாமி



22. திரு. அ. சின்னசாமி
23. திரு. ஓ.கே. சின்னராஜ்
24. திரு. கு. சீனிவாசன்
25. திரு. க. சுந்தர்
26. திரு. ந. சுப்பிரமணியன்
27. திரு. கே.ஏ. செங்கோட்டையன்
28. திரு. ஞா. செந்தமிழன்
29. திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்
30. திரு. கூ.ந. சேகரன்
31. திரு. அ. சௌந்தரபாண்டியன் (லால்குடி)
32. திரு. சி. ஞானசேகரன்
33. திரு. கே. திருநாவுக்கரசு
34. திரு. சி. துரைராஜ்
35. திருமதி எஸ். தேன்மொழி
36. திரு. மு. பரஞ்ஜோதி
37. திரு. பி. பலராமன்
38. திரு. வி.எஸ். பாபு
39. திரு. பி.என். பெரியண்ணன்
40. திரு. கே. பொன்னுசாமி
41. திரு. செ. பொன்னுதுரை
42. திரு. போளூர் ம. வரதன்
43. திரு. இ. மகேந்திரன்
44. திரு. த. மகேஷ் கிருஷ்ணசாமி
45. திரு. ப. ரங்கநாதன்

46. திரு. எல். ரவிச்சந்திரன்

47. திருமதி இரா. இராணி

48. திரு. எஸ்.ஆர். இராஜா

49. திரு. விடியல் எஸ். சேகர்

50. திரு. கே.எஸ். விஜயகுமார்

51. திரு. எம்.வி.ஆர். வீரகபிலன்

52. திரு. எஸ். ஜாண் ஜேக்கப்

53. திரு. எஸ்.பி. ஜெயராமன்

54. டாக்டர் ஆஸ்கார் சி. நிக்லி (குறுக்கீடு)

55. திரு. டி. சுதர்சனம்

மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் அன்றாடம் பேரவைக்கு வருகை புரிந்திருந்தாலும், அவர்கள் வருகைப் பதிவேட்டில் சுருக்கொப்பம் இடும் வழக்கமில்லை. எனவே, அவர்களது பெயர்கள் இப்பட்டியலில் இடம் பெறவில்லை.

**நடவடிக்கைக் குறிப்புகள்—**

| | | |
|---|---|---|
| இக்கூட்டத் தொடரில் உறுப்பினர்கள் ஆற்றிய மொத்த உரைகள் (குறுக்கீடுகள் தவிர) | -- | 818 |
| தட்டச்சு செய்யப்பெற்ற மொத்தப் பக்கங்கள் | -- | 7,728 |
| மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பெற்ற நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை | -- | 2,207 |
| தலைமைச் செயலகத் துறைகளுக்கு அனுப்பப்பெற்ற நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை | -- | 541 |

அதுமட்டுமல்லாமல், பேரவையில் எதிர்க்கட்சியினர் தமது கருத்துகளையும், கடுமையான விமர்சனங்களையும்கூட எடுத்துரைக்க அனைத்து வாய்ப்புகளும் விதிகளுக்குட்பட்டு அளிக்கப்பட்டுள்ளன. இன்னும் சொல்லப்போனால், அனுபவமும், செயல்திறனும் வாய்ந்த



நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பல்வேறு சூடான விவாதங்களில் கடுமையான குற்றச்சாட்டுகள் மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட போதும், அவர்களைப் பேச அனுமதித்து, அவர்களுக்கு அமைதியாக, தனக்கே உரித்தான நகைச்சுவை கலந்த மொழியாற்றலுடன் தக்க விளக்கம் அளித்துள்ளார்கள்.

அதேபோல, இயற்கைச் சீற்றங்கள் மற்றும் விபத்துகளால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம் வழங்கவேண்டுமென சட்டமன்ற உறுப்பினர்கள் அளித்த மனுக்களின்மீது கட்சிப் பாகுபாடின்றி நடவடிக்கை எடுத்து, முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியுள்ளார்கள். கட்சி வேறுபாடின்றி மனிதாபிமானத்துடன், அனைவருக்கும் பொதுவாகச் செயல்படுவதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நிகர் அவரேதான். (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமன்ற உறுப்பினர்களின் உடல் ஆரோக்கியத்தின்பால் அக்கறை கொண்டு, சிலம்பம், யோகா உள்ளிட்ட காட்சி விளையாட்டுப் போட்டிகளை இம்மாதம் 5 ஆம் தேதி முதல் சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்ததோடு, சட்டமன்றக் கூட்டம் நடைபெறும் அனைத்து நாட்களிலும் காலை, மாலையில் உறுப்பினர்களுக்கு இலவச யோகா பயிற்சி வழங்குவதற்கும் ஆணையிட்டதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் சார்பிலும், என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த இரண்டு கூட்டத் தொடர்கள் இனிதே நிறைவேற எனக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி தெரிவிப்பது எனது கடமையாகும்.

அந்த வகையில், ஒவ்வொரு நாளும் பேரவைக் கூட்டத்திற்கு முன்னர் காலை 9-00 மணிக்கே எனது அறைக்கு வருகை தந்து, அவையில் எடுத்துக்கொள்ளப்படவுள்ள பொருள்கள் குறித்து அரசு வழங்கவுள்ள விளக்கங்கள் பற்றி எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் கலந்து விவாதித்து முடிவெடுக்கும் சிறந்த ஜனநாயக நடைமுறையைப் பின்பற்றி அனைவருக்கும் சிறந்த முன்னோடியாகத் திகழும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, எனது நன்றியினை முதற்கண் உரித்தாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வகையில்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவைத் தலைவரின் பணிப் பளுவை வெகுவாகக் குறைத்துள்ளார்கள் என்பதை அவைக்குத் தெரிவிப்பதில் பெருமைகொள்கின்றேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து நாட்களிலும் எப்பொழுதும் உள்ள ஆர்வத்துடன் அவை நடவடிக்கைகளில் கலந்துகொண்டு, விவாதங்களில் பங்கேற்று, விவாதங்களுக்கு வலுவும் சுவையும் சேர்த்து உரையாற்றிய பாங்கு, பாராளுமன்ற நடைமுறைகளை ஊக்கத்துடன் அறிந்துகொள்ள விழையும் இளம் உறுப்பினர்களுக்கு ஒரு சிறந்த பாடமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு அலுவல்களுக்கிடையேயும் இந்த இரு கூட்டத் தொடர்களில் மொத்தம் 4 மணி 38 நிமிடங்கள் உரையாற்றியுள்ளது சிறப்புக்குரியதாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வாறு, வளரும் தலைமுறையினருக்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு பேரவைத் தலைவர் என்ற முறையில் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஐந்தாம் முறையாக முதல்வர் பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் அமைந்த இந்த அரசு இரண்டு ஆண்டுகளைச் சிறப்பாக நிறைவு செய்து மூன்றாமாண்டில் அடியெடுத்து வைத்ததையொட்டி சட்டமன்றக் கட்சிகளின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நேற்று பாராட்டுகளும் வாழ்த்துகளும் தெரிவிக்கப்பட்டன. அவற்றுடன் என்னுடைய வாழ்த்துதலையும் மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொள்கிறேன்.

தனது நீண்ட, நெடிய சட்டமன்ற அனுபவத்தின் காரணமாகப் பெற்ற பயன்களை நமக்கு நல்கி, சட்டமன்ற விதிகள் மற்றும் மரபுகளை அவ்வப்போது எடுத்துரைத்து, இந்த மன்றத்திற்கு வழிகாட்டுதல் வழங்கியமைக்காகவும், பேரவை நடவடிக்கைகளை நடத்துவதில் எனக்குப் பெரிதும் உதவியாக இருந்தமைக்காகவும் மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-30

பேரவையில் விவாதத்தின்போது, விவாதங்கள் பொருளைவிட்டு விலகும்போதெல்லாம் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்





அவர்கள் உறுப்பினர்களுக்கு நேரத்தின் அருமையை உணர்த்தி அவையின் அலுவல்களை குறித்த நேரத்தில் நிறைவேற்ற எனக்குப் பேருதவியாக இருந்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆளுங்கட்சி உறுப்பினர்களின் நேரத்தையும் வாய்ப்புகளையும் குறைத்துக்கொண்டு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உரையாற்ற உதவியுள்ளார்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவைத் தலைவர் இருக்கையில் அமர்ந்து அவை நடவடிக்கைகளைச் செம்மையாக நடத்தி, எனக்கு உதவிபுரிந்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கும், மாற்றுத் தலைவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பேரவை நிகழ்ச்சிகள் சிறப்புற நிறைவேற உறுதுணையாக இருந்த அரசுத் தலைமைக் கொறடா, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், எதிர்க்கட்சிக் கொறடா, இதர கட்சித் தலைவர்கள், இதர கட்சிக் கொறடாக்கள் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் மற்றொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். பத்திரிகையாளர்கள் ஆலோசனைக் குழுவின் வேண்டுகோளினை ஏற்று, சட்டமன்றப் பேரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்ட பத்திரிகையாளர்கள் மற்றும் செய்தியாளர்களுக்கு முதன்முறையாக பேனா மற்றும் சுருக்கெழுத்துக் குறிப்பேடுகள் ஆகியவற்றை இந்த ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

பேரவையின் நிகழ்ச்சிகளை அன்றாடம் சிறப்புற ஒளிபரப்புச் செய்ய உதவிய தமிழ்நாடு திரைப்படப் பிரிவினருக்கும், ஒலிவாங்கிகளை இயக்கும் ரேடியோ பிரிவினருக்கும், அகில இந்திய வானொலி, தூர்தர்ஷன், தனியார் தொலைக்காட்சிகள், பத்திரிகைகள், ஊடகங்கள், செய்தி நிறுவனங்கள், செய்தியாளர்கள் மற்றும் நிருபர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையினுடைய அலுவல்கள் சீரிய முறையில் நிறைவேற, அனைத்து வகைகளிலும் சிறந்த முறையில் உதவி நல்கிய பேரவைச் செயலாளர் திரு. மா. செல்வராஜ் அவர்களுக்கும், பேரவையின் அனைத்து அலுவலர்களுக்கும், பேரவை நிருபர்களுக்கும், இதர

[பேரவைத் தலைவர்] [2008 மே 14

பணியாளர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 8. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

### (ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. நன்றி, வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-32 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

## 11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

67. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் முப்பத்து ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு



2008 மே 14]

நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

68. 2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (சிவில்). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

69. 2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (வருவாய் வரவினங்கள்). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

70. 2007 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 அன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (வணிகம்). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

71. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் நிதி ஒதுக்கக் கணக்குகள். [இந்திய அரசமைப்புச் சட்டம் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்)

72. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் நிதிக் கணக்குகள். [இந்திய அரசமைப்புச் சட்டம் 151 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

248. மானியக் கோரிக்கை எண் 16-நிதித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

249. மானியக் கோரிக்கை எண் 36-திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

250. மானியக் கோரிக்கை எண் 50-ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

251. 2006-2007ஆம் ஆண்டிற்கான "கணக்குகள் குறித்த ஒரு மேலோட்டப் பார்வை" என்கிற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

252. வனத் துறை பற்றிய மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2008-2009. (தமிழ்)

253. 2007-2008 ஆம் ஆண்டிற்கான வனத் துறை பற்றிய அறிவிப்புகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள். (தமிழ்)

254. சுற்றுச்சூழல் பற்றிய மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2008-2009. (தமிழ்)

255. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின்போது மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2008-2009. (தமிழ்)

256. தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) பற்றிய மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தின்போது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2008-2009. (தமிழ்)

257. விளையாட்டரங்க கட்டுமான வசதிகள் குறித்த விவரங்கள் என்கிற சிறு நூல். (தமிழ், ஆங்கிலம்)

258. பல்வேறு விளையாட்டுகள் குறித்த செயல்முறை நுட்பக் கையேடு மற்றும் விதிகள் என்கிற புத்தகம். (ஆங்கிலம்)

259. நாளைய விளையாட்டு வீரர்களின் விபரங்கள் அடங்கிய சிறு நூல். (ஆங்கிலம்)

260. தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 என்கிற வழிகாட்டிக் கையேடு. (தமிழ்)

261. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (ஒன்பதாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 62 வரை)





## இணைப்பு I

*(655 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 16—நிதித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2008–2009

தமிழக அரசின் பொது நிதி நிருவாகப் பொறுப்பு நிதித் துறையைச் சார்ந்ததாகும். ஒவ்வொரு ஆண்டும் வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்து, சட்டப் பேரவையில் தாக்கல் செய்வதில் இத்துறை முக்கியப் பங்கு வகிக்கிறது. மாநிலக் கருவூலத்தை நிருவகித்து வரும் நிதித் துறை, வரவுகளையும் செலவுகளையும் சீராகப் பராமரிக்கும் ஒட்டுமொத்த பொறுப்பு வகிப்பதோடு, கடன் பொறுப்புகளைத் திருப்பிக் கொடுக்கும் பொறுப்பினையும் வகிக்கிறது. ஒட்டுமொத்த வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும், அரசின் நிதி இலக்குகளை எய்தும் பொருட்டும் வரவுக்கேற்றபடி செலவினங்களைச் சீர் செய்து, தேவை, செலவுக்கேற்ற பயன், வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கம், நிதி நடைமுறை, முதலியவற்றிற்கேற்ப துறைகளின் செயற் குறிப்புகளை நிதித் துறை உன்னிப்பாக ஆய்வு செய்கிறது.

2. நிதித் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் பின்வரும் ஏழு துறைகள் இயங்கி வருகின்றன:—

(i) கருவூலக் கணக்குத் துறை

(ii) உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

(iii) சிறு சேமிப்புத் துறை

(iv) அரசு தகவல் தொகுப்பு விவர மையம்

(v) கூட்டுறவு தணிக்கைத் துறை

(vi) அரசுத் துறை-நிறுவனத் தணிக்கைத் துறை

(vii) ஓய்வூதிய இயக்ககம்.

3. வரிசை எண் (i) முதல் (vi) வரை மேலே குறிப்பிடப்பட்டுள்ள துறைகளின் செயல்பாடுகள் பற்றிய விவரம் பின்வரும் பத்திகளில் அளிக்கப்பட்டுள்ளது. ஓய்வூதிய இயக்ககத் துறையின் செயல்பாடுகள்

பற்றிய விளக்கம் கோரிக்கை எண் 50 ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால பயன்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

## கருவூலக் கணக்குத் துறை

4. கருவூலக் கணக்குத் துறை 01-04-1962 ஆம் நாளன்று ஏற்படுத்தப்பட்டது. இத்துறையின்கீழ் 9 சம்பளக் கணக்கு அலுவலகங்கள், 30 மாவட்டக் கருவூலங்கள், 203 சார் கருவூலங்கள், 3 மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள், சென்னையிலுள்ள ஓய்வூதியம் வழங்கல் அலுவலகம், முத்திரைத்தாள் உதவி கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் சென்னையிலுள்ள கருவூலக் கணக்குத் துறை இயக்குநரின் தலைமையிட அலுவலகம் ஆகியவை உள்ளன. அரசுப் பணியாளர்களுக்கு சம்பளங்களும் ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதும், பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக அரசு ஒப்புதலளித்த தொகையினை அரசுத் துறைகளுக்கு வழங்குவதும் இத்துறையின் முக்கியமான பணியாகும். அரசுக்குச் சேரவேண்டிய தொகைகளைப் பெறுவதும், அவற்றுக்கான விரிவான கணக்குகளை மாநிலக் கணக்காயருக்கு அளிப்பதும் இத்துறையின் பொறுப்பாகும். பத்திரப் பதிவுக்கு பயன்படுத்தப்படும் முத்திரைத் தாள்கள் முறையாக வழங்கப்படுவதையும் கருவூலக் கணக்குத் துறை மேற்கொண்டுள்ளது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் நல நிதியை கருவூலக் கணக்குத் துறை பராமரிக்கிறது. அரசுத் துறைகளால் கருவூலங்களில் வைப்பீடு செய்யும் விலை மதிப்பு வாய்ந்த பொருள்களை கருவூலங்கள் பத்திரமாகப் பாதுகாக்கின்றன.

5. தானியங்கி முறையில் கருவூலங்களின் பட்டியல் ஏற்புமுறைத் திட்டம் என்பது, தேசிய தகவல் மையத்தால் கருவூலக் கணக்குத் துறைக்காக உருவாக்கப்பட்ட ஒரு கணினி மென்பொருளாகும். இதற்குமுன்பு கருவூலங்கள் மற்றும் சம்பளக் கணக்கு அலுவலகங்களில், பட்டியல்கள் ஏற்பளிக்கப்பட்ட பின்புதான் அவற்றின் விவரங்களைப் பெற இயலும். ஆனால், பட்டியல்கள் கணினி மூலமாக ஏற்பு செய்யப்படுவதுடன், பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படும் நிலையிலிருந்தே அதில் உள்ள விவரங்களைப் பதிவு செய்துகொள்ளக்கூடிய அளவில் இம்மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. பிற மாநிலங்களில் உள்ளது போல அல்லாமல், பட்டியல்கள் அனுமதிக்கப்படும் நிலையில் இருந்து கணக்குகள் தயாரிக்கும் நிலை வரை அனைத்துப் பணிகளும்



தொடர்ச்சியாகவும், உடனடியாகவும் online முறையிலேயே மேற்கொள்ளப்பட முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. கரூர் மற்றும் தேனி மாவட்டக் கருவூலங்களிலும் தலைமைச் செயலக சம்பளக் கணக்கு அலுவலகத்திலும் இத்திட்டம் சோதனை ஓட்டமாகச் செயல்படுத்தப்பட்டது. தற்போது பணம் பெறும் அலுவலர்கள் சமர்ப்பிக்கும் பட்டியல்களை சம்பந்தப்பட்ட கருவூலங்களில் online முறையில் சமர்ப்பிப்பதும், கணக்குகளைத் தயாரித்து அக்கணக்குகளை மாநில கணக்காயருக்கு, online முறையில் அனுப்புவதும், TNSWAN மூலமாகச் சோதனை செய்யப்பட்டு வருகிறது.

6. மின்னணு ஒப்பளிப்பு முறை (Electronic Clearing System) மூலமாக அனைத்து மாவட்டங்களிலும் அரசு ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது. கருவூலக் கணக்குத் துறையின் வலைதளமான www.tn.gov.in/karuvoolam-ல், சென்னையில் உள்ள சம்பளக் கணக்கு அலுவலகங்களில் அளிக்கப்பட்ட, மின்னணு ஒப்பளிப்பு முறைக்குட்பட்ட பணியாளர்களின் பட்டியல்களின் அவ்வப்போதைய நிலை குறித்து அறிந்துகொள்ளும் வசதி உள்ளது. கருவூலக் கணக்கு இயக்குநரகத்தில் மையச் சேவைக் கணினி அமைக்கப்பட்டு வருகிறது. இது நிறுவப்பட்டு, TNSWAN இணைப்பும் முழுவதுமாக ஏற்படுத்தப்பட்டபின், மாநிலத்தில் உள்ள அனைத்துக் கருவூலங்கள் மற்றும் சம்பளக் கணக்கு அலுவலகங்களிலும் மின்னணு ஒப்பளிப்பு முறைக்குட்பட்ட பணியாளர்களின் பட்டியல் நிலைபற்றி அவ்வப்போது அறிந்து கொள்ள வசதி ஏற்படுத்தப்படும்.

7. 'புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம்' துவக்கப்பட அரசு ஆணை (நிலை) எண் 430, நிதி (ஊதியம்) துறை, நாள் 10-9-2007-ல் அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அரசுத் துறைகள், உள்ளாட்சி அமைப்புகள், அரசுப் பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் மற்றும் சட்டப்படியான வாரியங்களில் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களின் விவரங்களை மேற்குறிப்பிட்ட இத்துறையின் வலைதளத்தின் மூலம் சேகரிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

8. தமிழ்நாட்டில் அரசுத் துறைகளை கணினிமயமாக்கும் குறிக்கோள் நிறைவேற்றத்துக்கான ஒரு துறையாக கருவூலக் கணக்குத் துறை அறிவிக்கப்பட்டுள்ளது. இத்துறையை முழுமையாகக் கணினிமயமாக்க தேசிய மின் ஆளுகை திட்டத்தின் மூலம் (NeGP), உலக

[2008 மே 14

வங்கியிடமிருந்து நிதி பெறும் பொருட்டு திட்ட அறிக்கை ஒன்று மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான மொத்த திட்ட மதிப்பீடாகிய ரூ.85 கோடித் தொகை, தமிழ்நாடு அரசு மற்றும் உலக வங்கியின் உதவித் தொகை ஆகியவற்றால் 25:75 என்ற விகிதாச்சாரத்தில் பகிர்ந்து ஏற்கப்படும்.

## உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

9. மாநிலத்திலுள்ள நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், வேளாண்மை விற்பனைக் குழுக்கள், மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் மற்றும் இதர நிறுவனங்களின் கணக்குகளை, அவற்றுக்குரிய சட்ட விதிகளின்கீழ் சட்டப்படி தணிக்கை செய்யும் பணி உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையைச் சார்ந்ததாகும்.

10. இன்றைய நாளில் பின்வரும் நிறுவனங்கள் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் தணிக்கைக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன:—

| தொடர் எண் | நிறுவனங்கள் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மாநகராட்சிகள் | 8 |
| 2. | நகராட்சிகள் | 150 |
| 3. | பேரூராட்சிகள் | 561 |
| 4. | மாவட்ட ஊராட்சிகள் | 30 |
| 5. | ஊராட்சி ஒன்றியங்கள் | 385 |
| 6. | பல்கலைக்கழகங்கள் | 19 |
| 7. | உள்ளூர் நூலக ஆணைக் குழுக்கள் | 29 |
| 8. | மாவட்ட விற்பனைக் குழுக்கள் | 25 |
| 9. | தேசிய சமூக நலத் திட்டங்கள் | 29 |
| 10. | உள்ளூர் திட்டக் குழுமங்கள் | 20 |
| 11. | கிராம ஊராட்சிகள் (சோதனை தணிக்கை மட்டும்) | 2,523 |
| 12. | பல்வகை நிறுவனங்கள் | 9 |



2008 மே 14]

### 11. (i) உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் நோக்கம்

உள்ளாட்சி நிறுவனங்களின் கணக்குகளைச் சரிபார்த்தல், வரவு செலவுகள் முறையாக உள்ளனவா எனச் சரிபார்த்தல், மேற்படி வரவு செலவுகள் சட்டத்திற்குட்பட்டும், விதிகளின்படியும் அரசாணைகளின்படியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவா என்பதனை உறுதி செய்தல், உள்ளாட்சி நிறுவனங்களின் கணக்குகள் அந்நிறுவனங்களின் செயல்பாட்டின் உண்மை நிலையை பிரதிபலிக்கின்றனவா எனவும் சரிபார்த்தல் ஆகிய நோக்கங்களோடு உள்ளாட்சி நிறுவனங்களின் தணிக்கைகள் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன. உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வரி செலுத்துவோரின் நலன்கள் பாதுகாக்கப்படுவதனை உறுதி செய்வதோடன்றி, உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அரசு மற்றும் பிற நிதி உதவி அளிக்கும் நிறுவனங்கள் வழங்கும் நிதி முழுவதும், வழங்கப்பட்ட காரணங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறதா என்பதையும், அவை சமுதாய நலனுக்கு பயன்படுத்தப்படுகிறதா என்பதையும் தணிக்கைகள் உறுதி செய்கின்றன.

### (ii) கிராம ஊராட்சி நிறுவனங்களின் சோதனைத் தணிக்கை

கிராம ஊராட்சிகளை பொறுத்தமட்டில் மொத்த ஊராட்சிகளின் எண்ணிக்கையில் 20 சதவிகிதம் சோதனைத் தணிக்கையாக இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ்வாறு தணிக்கை செய்யப்படும் ஊராட்சிகளின் எண்ணிக்கை 2,523 ஆகும். இத்துடன், கிராம ஊராட்சிகளின் வரவினங்கள், மேற்கொள்ளப்பட்ட பணிகளின் மதிப்பு மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநரால் அனுப்பப்படும் குறிப்பான புகார்கள் ஆகியவற்றின் அடிப்படையில், 2 விழுக்காடு கிராம ஊராட்சிகளின் தணிக்கைகளும் இத்துறையால் மேற்கொள்ளப்படும்.

### (iii) உலக வங்கி நிதி உதவி பெறும் நிறுவனத் தணிக்கை

உலக வங்கி நிதி உதவி பெறும் நிறுவனங்களின் தணிக்கையும் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன. கோவை தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்படும் உலக வங்கி நிதி உதவித் திட்டங்களின் தணிக்கை இத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டு தணிக்கை நடைபெற்று வருகிறது.

[2008 மே 14

**12 (i) நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்கள், பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களின் நடப்புத் தணிக்கை**

தற்போது 8 மாநகராட்சிகளிலும், 17 நகராட்சிகளிலும் மற்றும் 14 பல்கலைக்கழகங்களிலும் நடப்புத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தணிக்கைக் குழுக்கள் இந்நிறுவனங்களிலேயே செயல்படுகின்றன. 2000-2001 ஆம் ஆண்டு முதல், 385 ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திலும் நடப்புத் தணிக்கை முறையை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி 119 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களை தலைமையிடமாகக் கொண்டு, ஒவ்வொரு மூன்று அல்லது நான்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒரு ஆய்வாளர் மற்றும் ஒரு துணை ஆய்வாளர் / ஒரு உதவி ஆய்வாளர் அடங்கிய ஒரு குழு வீதம் தணிக்கைக் குழுக்கள் இதற்கென அமைக்கப்பட்டுள்ளன.

**(ii) மாநகராட்சிகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட நகராட்சிகளில் நடப்புக்குப்பின் தணிக்கை முறை அமல்படுத்தப்படுதல்**

நடப்புத் தணிக்கை செயல்படுகின்ற 8 மாநகராட்சிகளிலும் 17 நகராட்சிகளிலும் நடப்புக்குப்பின் தணிக்கை செயல்பட்டு வருகின்றது. இம்முறையின்படி, செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு தொகை வழங்கப்பட்டவுடன், செலவுச் சீட்டுக்கள் தணிக்கைக்கு உடனடியாக வழங்கப்பட்டு, அச்செலவுச் சீட்டுகளின் தணிக்கை உடனுக்குடன் செய்யப்பட்டு, குறைபாடுகள் நிர்வாகத்திற்குத் தெரிவிக்கப்படுகின்றன. தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளை உடனுக்குடன் களைய இச்செயல்முறை வழிகோலுகிறது.

(iii) நடப்புத் தணிக்கையின்போது, தணிக்கையில் கண்டறியப்படும் தணிக்கை மறுப்புரைகள், தணிக்கைச் சீட்டுகள் வாயிலாக உடனுக்குடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு தெரிவிக்கப்பட்டு, அவற்றிற்குப் பெறப்படும் பதில்கள் சரிபார்க்கப்பட்டு, குறைகள் சரி செய்யப்பட்டதை உறுதி செய்யுமிடத்து, அந்தத் தணிக்கை மறுப்புரைகள் நீக்கப்பட்டு, நிலுவையில் உள்ள மறுப்புரைகளை உள்ளடக்கியதாக தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. அவ்வாறு தணிக்கை அறிக்கைகள் வெளியிட்ட பின்னர், தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைகளைக் குறித்துப் பெறப்படும் பதில்கள் சம்பந்தப்பட்ட நிறுவனப் பதிவேடுகள் மற்றும் ஆவணங்களோடு தணிக்கைக் குழுவினரால் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டு, தணிக்கை மறுப்புரைகள் முடிவு செய்யப்படுகின்றன.



2008 மே 14]

**நடப்புத் தணிக்கைக்குட்படாத பிற நிறுவனங்களின் தணிக்கை**

13. நடப்புத் தணிக்கைக்குட்படாத எஞ்சியுள்ள 133 நகராட்சிகள், 5 பல்கலைக்கழகங்கள், இதர உள்ளாட்சி நிறுவனங்களான பேரூராட்சிகள், மாவட்ட ஊராட்சிகள், விற்பனைக் குழுக்கள், நூலக ஆணைக் குழுக்கள், உள்ளூர்த் திட்டக் குழுமங்கள் மற்றும் பிற பல்வகை நிறுவனங்களின் தணிக்கை, ஆண்டுதோறும் மேற்படி நிறுவனங்களிலிருந்து ஆண்டுக் கணக்குகள் பெறப்பட்ட பின்னர், மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**14. நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களில் வழக்கமாகச் சேரும் கணக்கு அடிப்படையிலான (Accrual based) கணக்கு வைப்பு முறையை செயல்படுத்துதல்**

(i) நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களில் பின்பற்றப்பட்டு வந்த ரொக்க அடிப்படையிலான கணக்கு வைப்பு முறைக்குப் பதிலாக, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் வழக்கமாகச் சேரும் கணக்கு அடிப்படையிலான கணக்கு வைப்பு முறை (Accrual Based Accounting System) 1999-2000, 2000-2001 ஆகிய கணக்கு ஆண்டுகளிலிருந்து இரு கட்டங்களாக செயல்படுத்தப்பட்டுள்ளது. அனைத்துப் பேரூராட்சிகளிலும் 2002-2003 ஆம் ஆண்டு முதல் இந்தக் கணக்கு முறை செயல்படுத்தப்பட்டது.

(ii) ஓர் ஆண்டின் நிதி சார் நடவடிக்கைகளைத் தெரிந்துகொள்ள உதவும் வருவாய் மற்றும் செலவு கணக்குகளையும் (Income and Expenditure Account), ஒரு குறிப்பிட்ட கால அளவில் நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களின் உண்மையான நிதிநிலையை அறிந்து கொள்ள உதவும் ஐந்தொகைக் கணக்குகளையும் (Balance Sheet), பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கு வைப்பு முறை கோட்பாட்டின்படி தயாரித்து கணக்குகளைப் பேணுவதே இந்தக் கணக்கு முறையின் இலக்கு மற்றும் நோக்கமாகும்.

(iii) இந்த நடைமுறையினால் நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்கள் அவற்றின் உடமைகளை உரிய மதிப்பீட்டு முறைகளோடும், சொத்துப் பதிவேட்டின் மூலமும் கணக்குகளில் சேர்த்து அறிந்துகொள்ள முடியும். நகர்ப்புற உள்ளாட்சி

மன்றங்கள் மேம்படுத்தப்பட்ட கணக்கு முறைகளைச் செயல்படுத்தியிருப்பதால், மூலதனத் திட்டங்களுக்கும் நலத்திட்டங்களுக்கும் நிதியுதவி அளிக்க நிதி நிறுவனங்கள் முன்வந்துள்ளன. இதன் மூலம் நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களின் நிதி ஆதாரங்கள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

(iv) அனைத்து மாநகராட்சிகளிலும், நகராட்சிகளிலும் பேணப்பட்டு வரும் கணக்குகளின் சீர்திருத்தங்களை இரண்டு கட்டங்களாக 1999-2000, 2000-2001 ஆண்டு முதலும், பேரூராட்சிகளில் 2002-2003 ஆம் ஆண்டு முதலும் இந்தியாவில் வெற்றிகரமாக செயல்படுத்திய முதல் மாநிலம் என்ற பெருமையைத் தமிழ்நாடு பெற்றுள்ளது.

**உள்ளாட்சி நிறுவனங்களின் ஆண்டுக் கணக்குகளுக்குத் தணிக்கைச் சான்று வழங்குதல்**

15. உள்ளாட்சி நிறுவனங்களின் ஆண்டுக் கணக்குகளுக்குத் தணிக்கைச் சான்று வழங்குவது மிகவும் முக்கியமான பணியாகும். மேலும், தணிக்கைச் சான்று அளிக்கப்படாத கணக்குகள் அர்த்தமற்றவை என்பது சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதியாகும். எனவே அரசாணை பல்வகை எண். 93, நிதித் (நி.கு. IV), துறை நாள் 28-3-2003 இல் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி, நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் வழக்கமாகச் சேரும் கணக்கு அடிப்படையிலான கணக்குகள் முறைப்படி தயார் செய்யப்பட்டு ஆண்டுக் கணக்குகள் இத்துறையால் தணிக்கை செய்யப்பட்டு சான்றளிக்கப்படுகின்றன.

**தணிக்கைப் படிவங்களைத் தரப்படுத்தல்**

16. தணிக்கையின் தரத்தினை மேம்படுத்தவும், தணிக்கை மறுப்புரைகளை நிர்வாகத்திற்குத் தெரிவிக்கும் முறையில் ஒரு சீரான முறை கடைப்பிடிக்கவும், நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களின் தணிக்கைப் படிவங்களை தரப்படுத்தி, இத்துறையின் தணிக்கைப் பணியாளர்களுக்கு 2007 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது.

**17. தணிக்கை மறுப்புரைகள் தீர்வு செய்யும் நடைமுறை**

(i) தணிக்கை அறிக்கையின் மீதான தொடர் நடவடிக்கை எடுப்பது இத்துறையின் இன்றியமையாத பணிகளில் ஒன்றாகும். தணிக்கையின்போது கண்டறியப்படும் பெரும் முறைகேடுகள் உடனடியாக சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிறுவனங்களின் நிர்வாக அதிகாரிகளின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. தணிக்கை அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பெரும் முறைகேடுகள் மற்றும் தொகை இழப்புகள் பற்றிய விவரங்கள் மாதாந்திர காலமுறை அறிக்கை மூலம் அரசுக்கும், சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறைகளின் தலைவர்களுக்கும் தொடர் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு தெரியப்படுத்தப்படுகின்றன.





(ii) தணிக்கை மறுப்புரைகளுக்குப் பெறப்படும் பதில்கள் சரிபார்க்கப்பட்டு தணிக்கை மறுப்புரைகள் வழக்கமாக நீக்கப்படுகின்றன. மேலும் தணிக்கை மறுப்புரைகளுக்கான பதில்கள் பெறப்பட்டு, தொடர்புடைய நிர்வாகத் துறை ஏற்பாடு செய்யும் கூட்டமர்வின் மூலமாகவும், இத்துறையின் மண்டல மற்றும் மாவட்ட அலுவலர்களால் தணிக்கை மறுப்புரைகளுக்கு உடனடி தீர்வு காணப்படுகிறது.

**18. மாவட்ட அளவிலான உயர்நிலைக் குழு மற்றும் மாநில அளவிலான உயர்நிலைக் குழு அமைத்தல்**

(i) ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தமட்டில், மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு, மாவட்ட உயர்நிலைக் குழுக்களும், ஊரக வளர்ச்சி இயக்குநரைத் தலைவராகக் கொண்டு மாநில உயர்நிலைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. 2007 ஆம் ஆண்டில் மாவட்ட அளவிலான 105 உயர்நிலைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, 5,498 எண்ணளவு தணிக்கை மறுப்புரைகள் மீது முடிவெடுக்கப்பட்டன

(ii) பேரூராட்சிகளைப் பொறுத்தமட்டில் மாநில அளவில் பேரூராட்சிகளின் இயக்குநரை தலைவராகக் கொண்டும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டும் பேரூராட்சிகளுக்கான உயர்நிலைக் குழுக்கள் அரசு ஆணை எண் 1, ந.நி.ம.கு.வ.துறை (பேரூ2), நாள் 04-01-07-ல் அமைக்க ஆணையிடப்பட்டுள்ளன. இங்ஙனம் பேரூராட்சிகளுக்கான உயர்நிலைக்குழு அமைக்கப்பட்டதால், பேரூராட்சிகளின் தணிக்கைத் தடைகள் கணிசமான அளவில் குறைக்கப்பட்டுள்ளன. 2007 ஆம் ஆண்டில் மாவட்ட அளவிலான 7 உயர்நிலைக் குழு கூட்டங்கள் நடத்தப்பட்டு, 444 எண்ணளவு தணிக்கை மறுப்புரைகள் மீது முடிவெடுக்கப்பட்டன.

(iii) நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக நிதி ஆலோசகரைத் தலைவராகக் கொண்டு சென்னை நீங்கலாக, அனைத்து மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கான மாவட்ட அளவிலான உயர்நிலைக் குழுவும், நகராட்சி நிர்வாக ஆணையரை தலைவராகக் கொண்டு மாநில அளவிலான உயர்நிலைக் குழுவும் அரசு ஆணை எண். 65, ந.நி.ம.கு.வ. துறை, நாள் 22-5-2007-ன்படி அமைக்கப்பட ஆணையிடப்பட்டுள்ளது. 2007 ஆம் ஆண்டில் மாவட்ட அளவிலான 5 உயர்நிலைக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, 862 எண்ணளவு தணிக்கை மறுப்புரைகள் மீது முடிவெடுக்கப்பட்டன.

(iv) நாட்டிலேயே முதல்முறையாக, தமிழ்நாட்டில் நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களில் உள்ள தணிக்கை மறுப்புரைகளைத் தீர்வு செய்ய, மாவட்ட மற்றும் மாநில அளவிலான உயர்நிலைக் குழுக்கள் தோற்றுவித்து ஆணையிடப்பட்டுள்ளது.

**நிர்வாகமும் தணிக்கைத் துறையும் இணைந்து நடத்தும் ஆய்வுக் கூட்டங்கள்**

19. மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவில் நிர்வாகம் மற்றும் தணிக்கை அலுவலர்களின் கூட்டு ஆய்வுக் கூட்டம் நிர்வாகம் மற்றும் தணிக்கை அலுவலர்களுடன் நடத்தப்படுவதால், நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களின் கணக்குகள் மற்றும் தணிக்கை தொடர்பான பிரச்சினைகளை, ஆரம்ப நிலையிலேயே களைய வழி ஏற்பட்டுள்ளது. இந்த நடைமுறை, மே 2007 திங்களில் திருவனந்தபுரத்தில் நடத்தப்பெற்ற மாநாட்டில் இந்திய கணக்காய்வுத் துணைத் தலைவரால் பாராட்டப்பெற்றது.

**மானியங்கள் பயன்படுத்தப்பட்டதற்கான பயனீட்டுச் சான்றிதழ் அளித்தல்**

20. பல்கலைக்கழக மானியக் குழு மாநில / மத்திய அரசு மற்றும் இதர நிதி அளிக்கும் நிறுவனங்களால் பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படும் நிதியுதவிகள் மற்றும் இத்துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்ட இதர உள்ளாட்சி நிறுவனங்களுக்கு, மாநில/மத்திய அரசுகளினால் வழங்கப்படும் மானியங்கள் ஆகியவற்றை பயன்படுத்தியதற்கு இத்துறையினால் தணிக்கைச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. திட்டப் பணிகள் முடிவடைந்தவுடன் பயனீட்டுச் சான்றிதழ்கள் உடனடியாக வழங்கப்படுகின்றன.





**சிறப்பு பணிகள்**

21. வழக்கமான தணிக்கைப் பணிகளுடன் கீழ்க்காணும் சிறப்புப் பணிகளும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

- ❖ நகராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் பேரூராட்சி ஆகியவற்றில் ஓய்வு பெற்ற பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு ஓய்வூதியப் பயன்கள் மற்றும் மாதாந்திர ஓய்வூதியம் வழங்குதல்.
- ❖ நகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவ நல நிதித் திட்டத்தின் கீழ் உதவித் தொகை ஒப்பளிப்பு செய்து வழங்குதல்.
- ❖ நகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கான குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் உதவித் தொகை ஒப்பளிப்பு செய்து வழங்குதல்.
- ❖ உள்ளாட்சி நிறுவனங்களின் கருவூல வைப்பு இருப்புக்கு சேமநல நிதி வட்டி ஒப்பளித்தல்.
- ❖ அறக்கட்டளைகளுக்கான பொருளாளராகப் பணியாற்றுதல்.

**22. உள்ளாட்சி நிறுவனப் பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல்:**

(i) உள்ளாட்சி நிறுவனப் பணியாளர்களின் ஓய்வூதிய / குடும்ப ஓய்வூதியப் பயன்களுக்கு சான்று / ஒப்பளிப்பு மற்றும் தொகை வழங்குதல் போன்ற பணிகள் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 31-01-2008 அன்றைய நிலவரப்படி, 31,799 ஓய்வூதியர்கள், நான்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் மாதாந்திர ஓய்வூதியம் பெறுகின்றனர்.

(ii) 2008-2009 நிதி ஆண்டிற்கான உத்தேச ஓய்வூதியதாரர்கள் எண்ணிக்கை மற்றும் உள்ளாட்சி நிறுவன ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பிற ஓய்வு காலப் பயன்கள் வழங்கத் தேவைப்படும் உத்தேச நிதி கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு ரூ.217.49 கோடி ஆகும். உள்ளாட்சி நிறுவன ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியப் பயன்கள் உடனுக்குடன் இத்துறையால் வழங்கப்பட்டு வருகின்றன.

| [illegible] | உள்ளாட்சி நிறுவனத்தின் பெயர் | 2008-2009 ஆம் ஆண்டிற்கான ஓய்வூதியர்கள் உத்தேச எண்ணிக்கை | 2008-09 ஆம் ஆண்டில் ஓய்வூதிய நிதியிலிருந்து செலவாகும் உத்தேச தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1. | நகராட்சிகள் | 18750 | 125.79 |
| 2. | பேரூராட்சிகள் | 6000 | 30.47 |
| 3. | ஊராட்சி ஒன்றியங்கள் | 10300 | 61.23 |
| | கூடுதல் | 35050 | 217.49 |

**(iii) உள்ளாட்சி நிறுவனங்களின் ஓய்வூதியதாரர்கள் குறைகள் தீர்த்தல்**

உள்ளாட்சி நிறுவனங்களின் ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் தங்கள் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் தொடர்பான குறைகளைக் களைவதற்கும் தேவைப்படும் விவரங்களைக் காலதாமதம் இன்றி உடன் பெற்றுக் கொள்வதற்கும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தில் தகவல் மையம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

**நகராட்சி ஓய்வூதியர்கள் நல மற்றும் குடும்ப பாதுகாப்புத் திட்டம் நிருவகித்தல்**

23. அரசு ஓய்வூதியதாரர்களுக்கு செயல்படுத்தப்பட்டு வருவதைப்போல் நலத் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் அரசாணை - பல்வகை எண். 1200, ந.நி.கு.வ. துறை, நாள். 25-5-1999-ன்படி, நகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கு 1-8-1999 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இரண்டு நலத் திட்டங்களும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் நிருவகிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின் கீழ் 2007-08 ஆம் ஆண்டில் பின்வருமாறு கோரிக்கைகள் பெறப்பட்டு தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.



| நலத் திட்டம் | | குடும்ப பாதுகாப்புத் திட்டம் | |
|---|---|---|---|
| கோரிக்கைகளின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) | கோரிக்கைகளின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
| 71 | 8.30 | 118 | 28.79 |

**உள்ளாட்சி நிறுவனப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதி இருப்புத் தொகைகளுக்கு வட்டி அளித்தல்**

24. உள்ளாட்சி நிறுவனப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதியும் அவற்றின் முதலீடுகளும் அரசால் 1967 ஆம் ஆண்டு முதல் ஏற்கப்பட்டன. அவர்களின் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளின் இருப்புகளுக்கு வட்டி வழங்குவதற்கு உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் ரூ. 9 கோடி தொகை அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகளின் அடிப்படையில் தொகை வழங்க உரிய ஒப்பளிப்பு அளிக்கப்படுகிறது.

**25. அறக்கட்டளைகளின் பொருளாளர்**

(i) உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், 1-4-1952 முதல் அறக்கட்டளைகளின் பொருளாளராகவும் செயல்பட்டு வருகிறார். அறக்கட்டளைகளை அரசு ஏற்று ஒப்பளித்து அறக்கட்டளைகளின் நிருவாகத் திட்டங்களை அரசிதழில் வெளியிடுகிறது.

(ii) இந்த அறக்கட்டளை நிதிக்கான வட்டித் தொகை, தொடர்புடைய நிறுவனங்களுக்கு அவர்களிடமிருந்து வரும் கோரிக்கைகளின் அடிப்படையில் அளிக்கப்படுகிறது. தற்போது அறக்கட்டளை நிதிப் பொருளாளர் கட்டுப்பாட்டில் ரூ.6.83 லட்சம் மதிப்புள்ள நான்கு மத்திய அரசு அறக்கட்டளைகளும், ரூ.11.22 கோடி மதிப்புள்ள 782 மாநில அரசு அறக்கட்டளைகளும் உள்ளன. 2007-08 ஆம் ஆண்டில் அறக்கட்டளைகளிலிருந்து கிடைக்கப்பெற்ற வரவுகளிலிருந்து 180 பயனாளிகளுக்கு உதவித் தொகைகள், பரிசுகள் மற்றும் பதக்கங்கள் முதலியன வழங்கப்படுவதற்காக ரூ.3.49 இலட்சம் தொகை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

[2008 மே 14

**துறையின் செயலாக்கத்தைக் கணினிமயமாக்குதல்**

26. இத்துறையின் நடவடிக்கைகளை கணினிமயமாக்கும் திட்டத்திற்காக 2007-2008 பகுதி-II திட்டத்தில் அரசு, ரூ.26.35 இலட்சங்கள் அனுமதியளித்துள்ளது. இத்துறையின் பல்வேறு பணிகளை கணினிமயமாக்கும் இரண்டாவது கட்ட செயலாக்கம் நடைபெற்று வருகிறது.

**தணிக்கை நடைமுறை நூல் திருத்தப் பணி**

27. உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையில் தணிக்கை நடைமுறை நூல், 1997 ஆம் ஆண்டிற்குப் பின்னர் திருத்தப்படவில்லை. அவ்வப்போது வெளியிடப்பட்ட திருத்தங்கள், சேர்க்க வேண்டிய இனங்கள் ஆகியவற்றை உள்ளடக்கி உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் தணிக்கை நடைமுறை நூல் திருத்தப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**துறைப் பணியாளர்களின் தணிக்கைத் திறன் மேம்பாடு**

28. தணிக்கையின் தரத்தினை மேம்படுத்துவதற்கு தணிக்கைப் பணியாளர்களின் செயல்திறனை உயர்த்த இத்துறையின் பணியாளர்களுக்கு கீழ்க்குறிப்பிட்டவாறு பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

(i) இத்துறையின் மூத்த அலுவலர்களால், துறையின் தணிக்கையாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

(ii) தமிழ்நாடு மாநிலக் கணக்காயரால் தொழில் நுட்ப வழிகாட்டுதல் திட்டத்தின் கீழ் இத்துறைப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்.

(iii) தணிக்கைத் துறை அலுவலர்களுக்கென்றே தனியாக தணிக்கையின் பல்வேறு கோட்பாடுகள் தொடர்பான பயிற்சிகள் அண்ணா மேலாண்மை நிறுவனத்தால் நடத்தப்பெற்று வருகின்றன. இப்பயிற்சி மார்ச் 2008 வரை 105 அலுவலர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. ஏப்ரல் மற்றும் மே 2008 திங்களில் இத்துறையில் 250 அலுவலர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்படவுள்ளது.



2008 மே 14]

**தணிக்கைக் கட்டணம்**

29. பல்கலைக்கழகத் தணிக்கைக்கு 100% தணிக்கை செலவினம் தணிக்கை கட்டணமாகவும், மாநகராட்சிகள், நகராட்சிகளின் தணிக்கைக்கு 50% தணிக்கை செலவினம் தணிக்கை கட்டணமாகவும் இத்துறையால் வசூலிக்கப்படுகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.7.34 கோடி தணிக்கை கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

**சிறுசேமிப்புத் துறை**

30. மாநிலத்திட்டங்களுக்கும், கட்டமைப்பு வசதி மேம்பாட்டிற்கும் தேவைப்படும் முக்கியமான பெரிய நிதி ஆதாரமாக சிறுசேமிப்பு விளங்குகிறது. 1-4-2002-லிருந்து மாதந்தோறும் வசூலாகும் நிகர சிறுசேமிப்பு வசூலுக்கு சமமான தொகையை மத்திய அரசு, மாநில அரசுக்குக் கடனாக வழங்கி வருகிறது. இக்கடன் தொகைக்கு மத்திய அரசு தற்போது விதிக்கும் வட்டி வீதம் 9.5 சதவீதமாகும்.

**சிறுசேமிப்பு திட்டங்கள்**

31. சமுதாயத்தின் பல்வேறு பிரிவினருக்கும் பயனளிக்கும் வகையில் சிறுசேமிப்புத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. அவை பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| 1. | பல்வகை வருவாய்த் திட்டம் | கிசான் விகாஸ் பத்திரம் |
| 2. | வருமான வரிச் சலுகை அளிக்கும் திட்டம் | தேசிய சேமிப்பு பத்திரம் VIIIவது வெளியீடு<br>15 ஆண்டு பொது வருங்கால வைப்பு நிதி |
| 3. | காலமுறை அடிப்படையிலான தொடர் வருவாய்த் திட்டம் | அஞ்சலக மாத வருவாய்த் திட்டம் மற்றும்<br>மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் |
| 4. | தொடர் சேமிப்புத் திட்டம் | அஞ்சலகத் தொடர் வைப்புத் திட்டம் |

| | |
|---|---|
| 5. குறித்த கால வைப்புத் திட்டம் | 1 ஆண்டு அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம் |
| | 2 ஆண்டு அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம் |
| | 3 ஆண்டு அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம் |
| | 5 ஆண்டு அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம் |
| 6. மற்ற திட்டங்கள் | அஞ்சலக சேமிப்புக் கணக்கு |

32. பல்வேறு திட்டங்களுக்கு அளிக்கப்படும் வட்டி வீதங்கள் மத்திய அரசால் செய்யப்படும் திருத்தங்களுக்கு உட்பட்டவையாகும். சிறுசேமிப்புத் திட்டங்களுக்கு 1-3-2003 முதல் அளிக்கப்பட்டு வரும் வட்டி வீதங்கள் பின்வருமாறு:—

| வ.எண் | திட்டம் | வட்டி வீதங்கள் 01-03-2003 முதல் |
|---|---|---|
| 1. | அஞ்சலக மாத வருவாய்த் திட்டம் | 8.00% + 5% ஊக்கத் தொகை (8-12-2007 முதல்) |
| 2. | 1 வருட அஞ்சலக குறித்த கால முதலீடு | 6.25% |
| | 2 வருட அஞ்சலக குறித்த கால முதலீடு | 6.50% |
| | 3 வருட அஞ்சலக குறித்த கால முதலீடு | 7.25% |
| | 5 வருட அஞ்சலக குறித்த கால முதலீடு | 7.50% |
| 3. | தேசிய சேமிப்புப் பத்திரம் VIIIவது வெளியீடு | 8.00% |
| 4. | பொது வருங்கால வைப்பு நிதி | 8.00% |
| 5. | மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் | 9.00% |





| | | |
|---|---|---|
| 6. | அஞ்சலக சேமிப்பு கணக்கு | 3.5% |
| 7. | அஞ்சலக தொடர் சேமிப்புத் திட்டம் | மாதம் ரூ.10/- வீதம் 5 வருடம் செலுத்தினால் முடிவில் ரூ.728.90 முதிர்வுத் தொகை கிடைக்கும். |
| 8. | கிசான் விகாஸ் பத்திரம் | முதலீடு 8 வருடம் 7 மாதங்களில் இரட்டிப்பாகும். |

ஐந்து வருட அஞ்சலக குறித்த கால முதலீடு, தேசிய சேமிப்புப் பத்திரம் VIIIவது வெளியீடு, பொது வருங்கால வைப்பு நிதி மற்றும் மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் ஆகியவற்றிற்கு வருமான வரிச் சலுகை அனுமதிக்கப்பட்டுள்ளது.

33. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களும், சென்னையைப் பொறுத்தவரை மாநகராட்சி ஆணையாளரும் முக்கியப் பொறுப்பு வகிக்கின்றனர்.

**சிறுசேமிப்புக்குரிய முகவர் அமைப்பு**

34. சிறுசேமிப்புத் தொகையைத் திரட்டுவதற்கு மாநிலம் முழுவதும் முகவர்கள் நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் சிறுசேமிப்புத் திட்டத்தைப் பெருக்குவதிலும், வசூல் பணிகளிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். வெவ்வேறு வகை சேமிப்புத் திட்டங்களுக்காக 3 வகையான முகவரமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**முகவர்கள் நியமனம் செய்யப்பட்ட விவரம்**

| வ. எண் | முகவரமைப்பு வகை | நியமிக்கப்பட்ட திட்டங்கள் | முக்வர்கள் விவரம். |
|---|---|---|---|
| 1. | நிலைப்படுத்தப்பட்ட முகவரமைப்புத் திட்டம் | கிசான் விகாஸ் பத்திரம், அஞ்சலக மாத வருவாய் திட்டம், தேசிய சேமிப்பு பத்திரம் VIIIவது வெளியீடு, அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம், மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம். | 14,498 |

| | | | |
|---|---|---|---|
| 2. | மகளிர் முகவர் திட்டம் (தொடர் வைப்புத் திட்டம்) | அஞ்சலக தொடர் சேமிப்புத் திட்டம் | 28,274 |
| 3. | அதிகாரபூர்வமான முகவர்கள் (பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம்) | பொது வருங்கால வைப்பு நிதி திட்டம் | 1,419 |
| | கூடுதல் | | 44,191 |

**முகவர்களுக்கான ஊக்கத் தொகை:–**

35. முகவர்கள் திரட்டும் முதலீடுகளுக்காக, அவர்களுக்குக் கீழ்க்காணும் வீதத்தில் மாநில அரசால் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

| வ. எண் | முகவரமைப்பு வகை | திட்டம் | மத்திய அரசு வழங்கும் தரகுத் தொகை | மாநில அரசு வழங்கும் கூடுதல் ஊக்கத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | நிலைப்படுத்தப்பட்ட முகவரமைப்புத் திட்டம் | கிசான் விகாஸ் பத்திரம், அஞ்சலக மாத வருவாய் திட்டம், தேசிய சேமிப்பு பத்திரம் VIIIவது வெளியீடு, அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம், மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம். | 1% | 0.5% | 1.5% |
| 2. | மகளிர் முகவர் திட்டம் (தொடர் வைப்புத் திட்டம்) | அஞ்சலக தொடர் சேமிப்புத் திட்டம் | 4% | 2% | 6% |
| 3. | பொது வருங்கால வைப்பு நிதி முகவர் திட்டம் | பொது வருங்கால வைப்பு நிதி திட்டம் | 1% | இல்லை | 1% |
| 4. | மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் (நிலை முகவர்கள்) | மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் | 0.5% | இல்லை | 0.5% |



முகவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குவதற்காக 2007-2008 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீட்டிலும், 2008-2009 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டிலும் ரூ. 25 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

## சிறுசேமிப்பு ஊக்குவிப்புத் திட்டங்கள்

36. தொடர் விளம்பரங்கள்மூலமும், முகவர்கள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோருக்கு ஊக்கத்தொகை மற்றும் பரிசுகள் வழங்குதல்மூலமும், தமிழ்நாட்டில் சிறுசேமிப்புத் திட்டத்தை அரசு செம்மையாக ஊக்குவித்து வருகிறது. சிறுசேமிப்பு வசூலில் ஈடுபட உள்ளாட்சி அமைப்புகளை ஊக்கப்படுத்தும் பொருட்டு, கூடுதலாக நிகர சிறுசேமிப்பு வசூலை ஈட்டிய மாவட்டங்களுக்கு, ஒவ்வொரு ஆண்டும் அரசு ஊக்க மானியம் வழங்குகிறது. 2005-2006 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் வசூல் சாதனை படைத்த மாவட்டங்களுக்கு 2007-2008 ஆம் ஆண்டில் ரூபாய் 5.40 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. 2008-2009 ஆம் ஆண்டுக்கு உள்ளாட்சி மன்றங்களுக்கான ஊக்கத்தொகைத் திட்டத்தின்கீழ் ரூ. 40.00 கோடி அரசு நிதியொதுக்கம் செய்துள்ளது. இந்த ஊக்கத் தொகையானது பள்ளிக் கட்டடங்கள், சத்துணவுக் கூடங்கள், சுகாதார நிலையங்கள் போன்ற கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக பயன்படுத்தப்படுகிறது.

## அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம்

37. அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் தற்போது கீழ்கண்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது:—

(i) அரசுத் தேர்வுகள் இயக்ககத்தினால் நடத்தப்படும் பின்வரும் பத்தி-38-ல் உள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள தேர்வுகளின் முடிவுகளைத் தொகுத்தல்.

(ii) மாநிலத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளின் ஆசிரியர்களின் வருங்கால வைப்பு நிதி - குறித்த பணிகள்.

(iii) துணை ஆய்வாளர்/ காவலர் ஆகியோர்களுக்கான - சீருடை பணியாளர் தேர்வாணையம் / காவலர் பயிற்சி கல்லூரியால் நடத்தப்படும் இறுதித் தேர்வுகளின் முடிவுகள்.

## மாணவர்களுக்காக கல்வித் துறையின் தேர்வு முடிவுகள் தயாரித்தல்

38. இம்மாநிலத்தில் அரசு தேர்வுகள் இயக்ககத்தினால் நடத்தப்படும் பத்தாம் வகுப்பு, மெட்ரிகுலேஷன், ஆங்கிலோ-இந்தியன், மேல்நிலைத் தேர்வு, சிறப்புத் துணைத் தேர்வு, ஆசிரியர் கல்வி பட்டயப் படிப்பு மற்றும் தொழில்நுட்பத் தேர்வுகளின் மதிப்பெண் பட்டியலை பெற்று அனைத்து மாணவர்களுக்குரிய தேர்வு முடிவுகளை தயாரித்து அரசுத் தேர்வுகள் துறை இயக்குநரகத்திற்கு அனுப்பப்படுகிறது. இதனடிப்படையில் மதிப்பெண் சான்றிதழ்களையும் தயாரித்து, இயக்குநர் அரசுத் தேர்வுகள் துறைக்கு அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் அனுப்புகிறது.

கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட பணியின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது:—

**அட்டவணை**

| தேர்வுகள் 2007 | மார்ச் (முதன்மை) | சிறப்பு துணைத் தேர்வு | அக்டோபர் 2007 | மொத்தம் |
|---|---|---|---|---|
| மேல்நிலைப்பள்ளி | 6,12,268 | 1,10,548 | 31,175 | 7,53,991 |
| பத்தாம் வகுப்பு | 8,67,707 | 1,06,358 | 99,468 | 10,73,533 |
| மெட்ரிகுலேஷன் | 1,05,883 | 7,678 | 4,165 | 1,17,726 |
| ஆங்கிலோ இந்தியன் | 4,710 | 253 | 96 | 5,059 |
| ஓரியண்டல் 10 ஆம் வகுப்பு | 1,368 | 225 | 77 | 1,670 |
| (தேர்வு இயக்ககத்தால் ஆங்கில வருடத்தில் நடத்தப்படும் இதர தேர்வுகள்) | | | | |
| 8 ஆம் வகுப்பு (தனித் தேர்வு) | 7,357 | | | 7,357 |
| கிராமப்புற திறன் கண்டறிதல் | 26,676 | | | 26,676 |
| ஆசிரியர் கல்வி பட்டயப் படிப்பு | 54,191 | | | 54,191 |
| தேசிய திறனாய்வுத் தேர்வு | 46,015 | | | 46,015 |
| தொழில் நுட்பத் தேர்வு | 12,805 | | | 12,805 |
| மொத்தம் | 17,38,980 | 2,25,062 | 1,34,981 | 20,99,023 |



## ஆசிரியர் வைப்பு நிதியின்கீழ் கையாளப்படும் பணிகள்

39. இம்மையத்தில் ஊராட்சி ஒன்றியப்பள்ளி ஆசிரியர்களின் ஆசிரியர் வைப்பு நிதிக் கணக்குத் தாள்களைத் தொகுக்கும் பணி நடைபெறுகிறது. அரசின் அறிவுரைப்படி, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் / அரசு நிதி உதவி பெறும் பள்ளிகள் மற்றும் நகராட்சிப் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு, புதிய ஆசிரியர் வைப்பு நிதிக் கணக்கு எண்கள் தொகுத்து வழங்கும் பணியும் நடைபெற்று வருகிறது. ஊராட்சி ஒன்றியப் பள்ளி சந்தாதாரர்களின் 2004-2005, 2005-2006 மற்றும் 2006-2007 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குத் தாள்கள் தொடக்கக் கல்வி இயக்குநரகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டுக்கான கணக்குத் தாள்கள் வழங்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## கூட்டுறவுத் தணிக்கைத் துறை

40. சந்தானம் குழு மற்றும் நிர்வாகச் சீர்திருத்த ஆணையத்தின் பரிந்துரைகளின்படி கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளை சுதந்திரமான மற்றும் பாரபட்சமற்ற முறையில் தணிக்கை செய்யும் நோக்கத்துடன், கூட்டுறவுத் துறையில் இருந்த தணிக்கை பிரிவினைத் தனியாக பிரித்து 17-6-1981 முதல் கூட்டுறவுத் தணிக்கைத் துறை எனும் தனித் துறையை அரசு உருவாக்கியது. கூட்டுறவு தணிக்கைத் துறையின் முக்கிய பணி தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983-ன் பிரிவு 80-ன்படி பன்மாநில கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பால் கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்த்து தமிழகத்தில் 14 நிர்வாக பதிவாளர்களின்கீழ் இயங்கும் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கையை மேற்கொள்வதாகும்.

41. கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் அதிகார வரம்புக்குள் வரும் கூட்டுறவு சங்கங்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| தொடர் எண். | பதிவாளரின் பெயர் | கூட்டுறவு சங்கங்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| (i) | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 11003 |
| (ii) | கைத்தறி மற்றும் துணி ஆணையர் | 1728 |
| (iii) | தொழில் மற்றும் வணிகத் துறை ஆணையர் | 441 |

[2008 மே 14

| தொடர் எண். | பதிவாளரின் பெயர் | கூட்டுறவு சங்கங்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| (iv) | தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் | 1927 |
| (v) | தலைமை செயல் அலுவலர், பனைப் பொருள் வளர்ச்சி வாரியம் | |
| (vi) | கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் (வீட்டு வசதி) | 1127 |
| (vii) | மீன் வளத் துறை இயக்குநர் | 1264 |
| (viii) | கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் | 906 |
| (ix) | சர்க்கரைத் துறை ஆணையர் | 18 |
| (x) | வேளாண்மைத் துறை இயக்குநர் (எண்ணெய் வித்துக்கள்) | 383 |
| (xi) | வேளாண் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு சங்கங்களின் இயக்குநர் | 203 |
| (xii) | பட்டுப் புழு வளர்ப்புத் துறை இயக்குநர் | 39 |
| (xiii) | சமூக நலத் துறை இயக்குநர் | 154 |
| (xiv) | ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் | 44 |
| | மொத்தம் | 19237* |

*(*செயல்படும் சங்கங்கள், செயல்படா சங்கங்கள் மற்றும் கலைக்கப்பட்ட சங்கங்கள் உட்பட.)*

**கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் நோக்கம்**

*42.* கணக்குகளைச் சரிபார்க்கவும், முறையாகவும் சங்கங்களின் உண்மையான மற்றும் தெளிவான நிலவரத்தைப் பிரதிபலிக்கும் வகையிலும் ஐந்தொகை கணக்கும், வரவு—செலவுக் கணக்கும், தயாரிக்கப்படுவதை உறுதி செய்யவும் கூட்டுறவுத் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. கூட்டுறவுத் தணிக்கை, உறுப்பினர்களின் நலனைப் பாதுகாத்து அரசின் உதவி வழங்கப்பட்ட குறிப்பான நோக்கத்திற்காகச் செலவிடப்படுவதையும் உறுப்பினர்களும், சமுதாயமும் பயன் அடைவதையும் உறுதி செய்கிறது.



2008 மே 14]

கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை இருவகைப்படும் அவை:

- நடப்புத் தணிக்கை (Concurrent Audit)
- அடிப்படை விதி 127-இன்கீழ் தணிக்கை (FR 127 Audit)

**(1) நடப்புத் தணிக்கை:**

45 நாட்களுக்குள் தணிக்கையை முடிக்க இயலக்கூடிய சிறிய கூட்டுறவுச் சங்கங்களில் நடப்புத் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. தணிக்கை மேற்கொள்ளும் தணிக்கையாளரின் நிலை மற்றும் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளை தணிக்கைச் செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்படும் நேரம் ஆகியவற்றின் அடிப்படையில் தணிக்கைக் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. 1-4-2007 முதல் 31-1-2008 வரையிலான காலத்திற்குத் தணிக்கைக் கட்டணமாக ரூபாய் 1.58 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

**(2) அடிப்படை விதி 127—இன்கீழ் தணிக்கை:**

பெரிய அளவிலான கூட்டுறவு நிறுவனங்களில் பணியிடங்களை உருவாக்கி, அப்பணியிடங்களில் தணிக்கையாளர்களை நியமித்து அடிப்படை விதி 127-இன்கீழ் தணிக்கை செய்யப்படுகிறது. அப்பணியிடங்களுக்கானச் செலவு சங்கங்களிலிருந்து தணிக்கைக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. ஆனால், தற்போது கூட்டுறவுச் சங்கங்களின் நிதி நிலைமையை கருத்தில் கொண்டு அரசு 23-11-2004 முதல் தணிக்கை செலவு வசூலிப்பை 100 விழுக்காட்டிலிருந்து 60 விழுக்காடாகக் குறைத்துள்ளது. 1-4-2007 முதல் 31-1-2008 வரையிலான காலத்திற்கு அடிப்படை விதி தணிக்கைக் கட்டணமாக ரூபாய் 6.20 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

**(3) கீழ்க்காணும் கூட்டுறவுச் சங்கங்கள் தணிக்கைக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது:**

(i) அனைத்து உறுப்பினர்களும் அல்லது பெரும்பான்மை உறுப்பினர்கள் ஆதி திராவிடர்களாக அல்லது மீனவர்களாக உள்ள சங்கங்கள் அனைத்தும்.

[2008 மே 14

(ii) கிராம வங்கிகள், முன்னாள் வேளாண்மை வங்கிகள், தொடக்க வேளாண்மை மற்றும் கிராம முன்னேற்ற வங்கிகள் மற்றும் கடன் சங்கங்கள் இவை தவிர்த்த, வரையறுக்கப்பட்ட பொறுப்பு அல்லது வரையறுக்கப்படாத பொறுப்புகள் கொண்ட நட்டத்தில் இயங்கும் அனைத்துத் தொடக்க கூட்டுறவு வேளாண்மை வங்கிகள்.

(iii) அனைத்து பயிற்சி நிறுவனங்கள்

(iv) அனைத்து மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள்

(v) அனைத்து பனைவெல்லம் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்கள்

(vi) அனைத்து மீனவர் கூட்டுறவு இணையங்கள்

(vii) அனைத்து கைக்குத்தல் அரிசி பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்

(viii) மாநில மற்றும் அனைத்து மாவட்ட பனைப் பொருட்கள் உற்பத்திக் கூட்டுறவு இணையங்கள்

(ix) அனைத்து பூமி தானம் மற்றும் கிராம தானம் கூட்டுறவுகள்

(x) ஆறு ஆண்டுகள் நிறைவு செய்யாத அனைத்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

(xi) தொழில் மற்றும் வணிகத் துறை இயக்குநர், காதி மற்றும் கிராமப்புற தொழில் வாரியம் இவற்றின் கட்டுப்பாட்டில் இயங்கும், தொடங்கியதிலிருந்து ஐந்தாண்டுகள் நிறைவு செய்யாத அனைத்து தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்

(xii) வரிசை எண் (i) முதல் (xi) வரை சொல்லப்படாத, தொடங்கியதிலிருந்து மூன்றாண்டுகள் நிறைவு செய்யாத அனைத்துத் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள்.

மேற்சொன்ன விலக்களிப்பு, தன் சொந்த செலவில் தணிக்கை செய்து கொள்ளும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் மற்றும் கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்குப் பொருந்தாது.



2008 மே 14]

**சிறப்பு அறிக்கைகள்:**

*43.* தணிக்கையில் கடுங்குறைகள் காணப்படும்போது அது தொடர்பான அனைத்து விவரங்களும் அடங்கிய சிறப்பு அறிக்கைகள் மூலம் சம்பந்தப்பட்ட நிர்வாக பதிவாளருக்கு உடன் தெரிவிக்கப்படுகிறது.

**தணிக்கையின் தரத்தை மேம்படுத்த வழங்கப்பட்ட திறன் மேம்பாட்டு பயிற்சிகள்:**

*44.* தணிக்கையாளர்களின் திறமை மற்றும் தணிக்கையின் தரம் இவற்றை மேம்படுத்த முறையான பயிற்சிகள், கருத்தரங்குகள் நபார்டு வங்கி மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியின்மூலமும், சரக கூட்டுறவுத் தணிக்கை உதவி இயக்குநர் அலுவலகங்களில் நடத்தப்பெறும் புத்தாக்கப் பயிற்சிகள் மூலமும் இத்துறையில் வழங்கப்பட்டு வருகிறது. இத்துடன் கூட்டுறவுத் தணிக்கையின் அடிப்படைக் கொள்கைகள், வழிகாட்டுதல்கள் அடங்கிய கூட்டுறவுத் தணிக்கை கையேடு பல்வேறு சங்கங்களின் தணிக்கையை மேற்கொள்ளும் அனைத்து தணிக்கையாளர்களுக்கும் 2006-ஆம் ஆண்டில் திருத்தப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

**தணிக்கையாளர்களுக்கான பயிற்சித் திட்டங்கள்**

*45.* தற்போது இத்துறையில் உள்ள தணிக்கையாளர்களுக்கு, நடேசன் கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையம், சென்னை மற்றும் கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையம், மதுரை ஆகிய பயிற்சி நிறுவனங்கள்மூலம் கீழ்க்கண்ட பயிற்சிகள் காலமுறைப்படி அளிக்கப்படுகிறது:—

**குறுகிய கால பயிற்சிகள்**

*(1)* நிதித்தணிக்கை பயிற்சி

*(2)* கூட்டுறவுச் சட்டங்கள் மற்றும் தொடர்புடைய சட்டங்கள்

*(3)* மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கான செயல்படா சொத்துக்கள் மேலாண்மை மற்றும் வசூல் செய்யும் முறைகள் பற்றிய பயிற்சி

*(4)* நகர கூட்டுறவு வங்கிகளுக்கான செயல்படா சொத்துக்கள் மேலாண்மை மற்றும் வசூல் செய்யும் முறைகள் பற்றிய பயிற்சி

(5) தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினிமயமாக்குதல்

(6) எம். எஸ். வேர்டு, எம்.எஸ். எக்ஸல் மற்றும் இணையவலை பயன்படுத்துதல்

(7) கணினிமயமாக்குதல், இணையவலை மற்றும் தொலைத் தொடர்பு

(8) கணினிமயமாக்கிய கணக்குமுறை

(9) கணினிமயமாக்கிய கணக்கு முறையினை தணிக்கைச் செய்தல்

(10) தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005.

**தணிக்கையாளர்களுக்கான புத்தாக்க வகுப்புகள்**

*46.* தணிக்கையாளர்களுக்கு நிர்வாக பதிவாளர்கள், இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் நபார்டு வங்கி இவற்றின் நடைமுறையில் உள்ள சுற்றறிக்கைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தணிக்கை தொடர்பான தற்போதைய விவரங்களை தெரிந்து கொள்ளவும் ஆண்டுக்கு ஒரு முறையும், அவ்வப்போதும் மாவட்டத்தில் உள்ள அலுவலகங்கள்மூலம் புத்தாக்க பயிற்சி வகுப்புகள் நடத்தப்பெறுகின்றன.

## அரசுத் துறை நிறுவனத் தணிக்கைத் துறை

*47.* "அரசு வணிகத் திட்டங்கள் தணிக்கைத் துறை" முதன் முதலாக 1969 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. 1992 ஆம் ஆண்டு இத்துறை மேலும் வலுப்படுத்தப்பட்டு, இந்திய அரசு தலைமைக் கணக்குத் தணிக்கைத் தலைவர் மற்றும் பொதுக் கணக்குக் குழுவின் பரிந்துரைகளின்படி சுதந்திரமாக இயங்கும் உள்தணிக்கைத் துறையை உருவாக்கும் முகத்தான் இத்துறை மறு சீரமைக்கப்பட்டு இத்துறையின் பெயர் "அரசுத் துறை—நிறுவனத் தணிக்கைத் துறை" என மாற்றியமைக்கப்பட்டது.

**48. தணிக்கை வரம்பு**

(அ) இத்துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்டுள்ள நிறுவனங்களின் விவரம் பின்வருமாறு:—



| | | |
|---|---|---|
| 1. | சட்டபூர்வ நிறுவனங்கள் | 10 |
| 2. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்ட மையங்கள் | 82,889 |
| 3. | வேளாண் விரிவாக்க மையங்கள் | 889 |
| 4. | அரசுத் துறைகள் (முதலமைச்சர் பொது நிவாரண நிதி, சிறு சேமிப்பு, மாவட்ட நூலகங்கள் போன்றவை) | 90 |
| 5. | பிற நிறுவனங்கள் (அரசு உதவி பெறும் விடுதிகள், இல்லங்கள், தொழில் பயிற்சி நிறுவனங்கள் போன்றவை) | 2,083 |
| 6. | ஆண்டுதோறும் தொடர் மானியம் ரூ.0.20 இலட்சம் மற்றும் அதற்கு மேல் மற்றும் தொடரா மானியமாக ரூ.1.20 இலட்சம் மற்றும் அதற்கு மேல் மானியம்பெறும் அரசல்லாத நிறுவனங்கள் | 590 |
| 7. | அனைவருக்கும் கல்வித் திட்டம் (மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம்) வட்டார வள மையங்கள் மற்றும் நகர்ப்புற மையங்கள் (385+16) | 401 |
| | **மொத்தம்** | **86,952** |

**(ஆ) அரசுத் துறைகளின் உள்தணிக்கை**

அரசின் அறிவுரைகளின்படி, 19 அரசுத் துறைகளில் உள்தணிக்கை இத்துறையின் உதவி இயக்குநர்கள் / ஆய்வர்கள் நிலையிலுள்ள அலுவலர்களால் மேற்பார்வையிடப்பட வேண்டும். இந்த உள்தணிக்கை அலகுகள் தங்களுக்குள்ள தணிக்கைப் பணிகளை மேற்கொள்வதுடன் நிதி மற்றும் கணக்குகள் சம்பந்தமான செயல்பாட்டு முறையை மேம்படுத்துவதற்காக ஆலோசனைகளை துறைகளுக்கும் அரசுக்கும் அளிக்கின்றன. இந்த உள்தணிக்கை அலகுகள் நிர்வாகத்தினருக்கு திறமையான நிதி நிர்வாகத்திற்கு உதவிடும் பொருட்டு பல்வேறு வழிகளை சுட்டிக்காட்டுகின்றன.

[2008 மே 14

**சிறப்புத் தணிக்கை**

*49.* இத்துறைக்கென ஒதுக்கப்பட்டுள்ள முறைத்தணிக்கையுடன், அரசின் குறிப்பாணைகளின்படி ஒப்படைக்கப்பட்ட அரசுத் துறைகளின் சிறப்புத் தணிக்கைகளும் முடிக்கப்பட்டு அரசிற்கு அறிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளன. இந்த சிறப்புத் தணிக்கை அறிக்கைகளின் அடிப்படையில் கீழ்க்கண்ட தணிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்ள ஒப்படைத்து அரசு ஆணைகளை வெளியிட்டுள்ளது:—

(i) அனைத்துத் துறைகளிலும் அரசுப் பணியாளர்களுக்கு 01-01-1996 ஆம் நாள் நிலவரப்படி நிர்ணயிக்கப்பட்ட ஊதிய நிர்ணயத் தணிக்கை.

(ii) மருத்துவக் கல்லூரி இயக்குநரின் தன்வைப்புக் கணக்குத் தணிக்கை.

**தணிக்கைத் தடைதீர்வு**

*50.* நிர்வாகத் துறை அலுவலர்களால் ஏற்பாடு செய்யப்படும் கூட்டமர்வுகளில் இத்துறையின் மாவட்ட அலுவலர்கள் கலந்து கொண்டு தணிக்கைத் தடைகளை நீக்கும் பணியில் ஈடுபடுகின்றனர். பெறப்பட்ட பதில்கள் மற்றும் ஆவணங்களைச் சரிபார்த்து, நிலுவையில் உள்ள தணிக்கைத் தடைகள் நீக்கப்படுகின்றன. இந்த நடைமுறை, தாமதமின்றி விரைவாக தணிக்கைத் தடைகளைத் தீர்வு செய்வதற்கும், ஓய்வு பெறும் பணியாளர்கள், ஓய்வூதியப் பயன்கள் பெறுவதற்கான சான்றிதழ் பெற்று காலதாமதமின்றி உடனுக்குடன் ஓய்வூதியப் பயன்கள் பெறுவதற்கும் வழிவகுக்கிறது. இந்த ஆண்டில் 26,883 தணிக்கைத் தடைகள் எழுப்பப்பட்டன. முந்தைய ஆண்டு தணிக்கை தடைகள் உட்பட 21,531 தணிக்கைத் தடைகள் இவ்வாண்டில் தீர்வு செய்யப்பட்டன.

**51. தணிக்கைச் சான்றிதழ்கள் வழங்குதல்**

(i) இத்துறையின் தணிக்கைக்குட்பட்ட நிறுவனங்களின் தணிக்கையை மேற்கொள்ளும்போது, அந்நிறுவனப் பணியாளர்களின் ஓய்வூதியம், சேமநல நிதி முடிப்பது குறித்த கருத்துருக்கள் முன்தணிக்கை செய்யப்பட்டு உடனுக்குடன் தணிக்கைச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. உதவி தொடக்கக் கல்வி அலுவலர்கள் கட்டுப்பாட்டிலுள்ள ஊராட்சி ஒன்றிய மற்றும் நகராட்சிப் பள்ளிகளின் ஓய்வு பெறும் ஆசிரியர்களின் சேமநல நிதிக் கணக்குகள் இத்துறையால் சரிபார்க்கப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.



2008 மே 14]

(ii) இத்துறையின் தணிக்கைக்குட்பட்ட பல்வேறு நிறுவனங்களுக்கு தமிழ்நாடு அரசு வழங்கிய மானியங்களின் உரிமைத் தகுதி சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தணிக்கை அறிக்கைகளில் சுட்டிகாட்டப்படுகின்றன. இந்நிறுவனங்களிலிருந்து பெறப்படும் மானிய கேட்பு கருத்துருக்கள் சான்றளிக்கப்பட்டு அரசுக்கு தனியே அனுப்பி வைக்கப்படுகின்றன.

**துறையை கணினிமயமாக்குதல்**

*52.* இத்துறையை கணினிமயமாக்குவதை நிறைவு செய்யும் வகையில் 2007-2008 ஆம் நிதியாண்டிற்கான பகுதி-II திட்டத்தின்கீழ் ரூ.9.45 இலட்சம் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்துறையின் செயல்பாடுகளை கணினிமயமாக்கும் பணி நடந்தேறி வருகிறது.

**பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல்**

*53.* இத்துறையின் தணிக்கைப் பணியாளர்களின் தேவையை உணர்ந்து, அவர்களை வெவ்வேறு வகையான சிறந்த தணிக்கைக்குத் தயார்படுத்தும் முகமாக துறை அலுவலர்கள்மூலமாக பணியிடை பயிற்சி 2007-2008 ஆம் ஆண்டில் அளிக்கப்பட்டது. மேலும் மாநில கணக்காயர் அலுவலக அலுவலர்கள் மூலமாகவும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனத்தின் மூலம் பயிற்சி அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

[2008 மே 14

## இணைப்பு II

(655 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 36—திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2008–2009

**1.1 திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் முக்கியப் பணிகளாவன:**

i. மாநிலத் திட்டக் குழுவின் உதவியோடு ஐந்தாண்டுத் திட்டங்கள் மற்றும் ஆண்டுத் திட்டங்கள் தயாரித்தல் மற்றும் மத்திய திட்டக் குழுவுடன் இணைந்து செயல்படுதல்.

ii. திட்டப் பணிகள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் மற்றும் மத்திய மாநில அரசுகள் செலவு பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகியவற்றைக் கண்காணித்தல்.

iii. திட்டப் பணிகள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு நிதி உதவி பெறும் திட்டங்கள் ஆகியவற்றை மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை மூலம் மதிப்பீடு செய்தல்.

iv. பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை மூலமாக புள்ளி விவரங்கள் சேகரித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் வெளியிடுதல். இப்பணிகளில், மாநில வருவாய் மதிப்பீ பொருளாதாரக் கணக்கெடுப்பு, வேளாண்மைக் கணக்கெடுப் மற்றும் சிறப்பு ஆய்வுகள் ஆகியவைகளுடன் மாநி பொருளாதார மாதாந்திர கண்காணிப்பு ஆகியவை அடங்கும்.

v. இருபது அம்சத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் வறுமை ஒழிப்புத் திட்டங்களைக் கண்காணித்தல்.

vi. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டப் பணிகளின் செயலாக்கம் குறித்து மேற்பார்வையிடுதல்.



2008 மே 14]

vii. மாநில அளவில் உலக வர்த்தக அமைப்பின் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளின் பாதிப்புகளை கண்காணித்தல்.

viii. பெரிய உள் கட்டமைப்புத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தல்.

ix. சிறப்பு முயற்சித் திட்டங்களைத் துவக்குதல் மற்றும் மேற்பார்வையிடுதல்.

x. தொலை உணர்வு நுட்பம் பயன்படுத்தப்படும் திட்டங்களை ஒருங்கிணைத்தல்.

xi. மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களின் அறிக்கைகள் மீது தொடர் நடவடிக்கை எடுத்தல்.

### 1.2 இந்தப் பணிகள் பற்றிய சுருக்கக் குறிப்பு பின்வருமாறு:

### 1.2.1. ஐந்தாண்டுத் திட்டங்களின் சாதனைகள்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முதலாகத் திட்ட இலக்குகளை மாநில அரசு தொடர்ந்து எய்தி வந்துள்ளது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலிருந்து பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் வரையில் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடுகள் மற்றும் செலவினங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| திட்டக் காலம் | (ரூபாய் கோடியில்) | |
|---|---|---|
| | ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு | செலவினம் |
| முதல் திட்டம் (1951-56) | 86 | 80 |
| இரண்டாவது திட்டம் (1956-61) | 186 | 188 |
| மூன்றாவது திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டங்கள் (1961-69) | 608 | 613 |
| நான்காவது திட்டம் (1969-74) | 552 | 559 |
| ஐந்தாவது திட்டம் (1974-79) | 1122 | 1165 |
| ஆறாவது திட்டம் (1980-85) | 3150 | 3645 |
| ஏழாவது திட்டம் (1985-90) | 5750 | 6317 |
| ஆண்டுத் திட்டம் (1990-91) | 1450 | 1591 |

| | | |
|---|---|---|
| ஆண்டுத் திட்டம் (1991-92) | 1600 | 1726 |
| எட்டாவது திட்டம் (1992-97) | 10200 | 14024 |
| ஒன்பதாவது திட்டம் (1997-2002) | 25000 | 25036 |
| பத்தாவது திட்டம் (2002-2007) | 40000 | 43568 |

### 1.2.2 பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் (2007–2012)

ரூபாய் 85,344 கோடி அளவில் பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டக்காலத்தில், மாநிலப் பொருளாதாரத்தைச் சராசரியாக 9 சதவிகித அளவிற்கு வளர்ச்சி அடையச் செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டு இந்த அரசு திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தும்.

### 1.2.3 2007–2008 ஆம் ஆண்டுத் திட்டம்

2007-2008 ஆம் ஆண்டு பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டாகும். 2007-2008 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 14,000 கோடி என்ற உயரளவிலான ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டிற்கு மத்திய திட்டக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. இது 2006-2007 ஆம் ஆண்டு வளர்ச்சித் திட்ட ஒதுக்கீட்டைக் காட்டிலும் 12 சதவீதம் அதிகமாகும்.

### 1.2.4 2008–2009 ஆம் ஆண்டுத் திட்டம்

2008-2009 ஆம் ஆண்டு பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இரண்டாவது ஆண்டாகும். 11-02-2008 அன்று புதுடில்லியில் மாண்புமிகு நிதி அமைச்சர் மற்றும் மத்திய திட்டக் குழுத் துணைத் தலைவர் ஆகியோரிடையே நடந்த கலந்தாய்வுக் கூட்டத்தில், 2008-2009 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 16,000 கோடி என்ற உயரளவிலான ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

### 1.2.5 திட்ட ஆய்வு

ஒவ்வொரு மாதமும், அரசினால் செயல்படுத்தப்படும் ஆண்டுத் திட்டப் பணிகளின் மாதாந்திர திட்டச் செலவினங்கள், சம்பந்தப்பட்ட தலைமைச் செயலக துறைகளிடமிருந்து பெறப்பட்டு, தொகுக்கப்பட்டு நிதித்துறைச் செயலாளர் வழியாக தலைமைச் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. தலைமைச் செயலாளர் தலைமையில் நடக்கும் அனைத்து துறைச் செயலாளர்கள் கூட்டத்தில்,



திட்டச் செலவினங்களை ஆய்வு செய்வதற்கு இந்த மாதாந்திர திட்ட அறிக்கைகள் பயனுள்ளதாக அமைகிறது. ஆண்டுத் திட்டத்தின் காலாண்டு சாதனைகள் நிதி அமைச்சரின் பார்வைக்கு அனுப்பப்படுகிறது.

### 1.2.6 இராஷ்டிரிய சம் விகாஸ் யோஜனா

இராஷ்டிரிய சம் விகாஸ் யோஜனா திட்டம், திருவண்ணாமலை, திண்டுக்கல், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் சிவகங்கை ஆகிய 5 மாவட்டங்களில் மத்தியத் திட்டக் குழு மற்றும் மத்திய அரசின் உள்ளாட்சி அமைப்புகளுக்கான அமைச்சகம் ஆகியவற்றின் முழு உதவியுடன் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது, குறைந்த வேளாண்மை உற்பத்தித் திறன், வேலையின்மை, சமூகம் மற்றும் ஏனைய உள்கட்டமைப்புகளில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதாகும். இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு மாவட்டம் ஒவ்வொன்றிற்கும் ஆண்டு தோறும் சிறப்பு மத்திய நிதி உதவியாக ரூ.15.00 கோடி என மூன்றாண்டுகளுக்கு மத்திய அரசு வழங்கியது. இத்திட்டத்தில் மண்வள பாதுகாப்பு, வனவளம், சமூக வனம், நீர்வடிப்பகுதி வளர்ச்சி, சிறுபாசனம், வேளாண்மை, தோட்டக்கலை, உள்கட்டமைப்பு வசதி (சாலைகள் மற்றும் மின்சக்தி), சமூகத் துறை (மருத்துவம் மற்றும் கல்வி) மற்றும் வாழ்வாதார உதவி (வருமானத்தைப் பெருக்குவதற்கான நடவடிக்கைகள் குறிப்பாக கைத்தறி, தகவல் தொழில் நுட்பம், வேளாண்மை தொழில்முறை மற்றும் பல) ஆகியவை அடங்கும். இத்திட்டங்களை மூன்றாண்டுகளில் முழுமையாக செயல்படுத்திய பின்னர் தனிநபர் வருமானம் மற்றும் வேளாண்மை உற்பத்தித் திறன் ஆகியவை உயரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்திட்டம் "பின்தங்கிய பகுதிகளுக்கான மானிய நிதி" என்று பெயர் மாற்றப்பட்டு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் செயல்படுத்தப்படுகிறது.

### 1.2.7 மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் / மத்திய, மாநில அரசுகள் செலவுப் பொறுப்பேற்கும் திட்டங்கள்

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் (100 சதவிகிதம் மத்திய அரசின் நிதியுதவியுடன்) மற்றும் மத்திய, மாநில அரசுகள் செலவுப் பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகியவை பல்வேறு துறைகள் மற்றும் நிறுவனங்களால் செயல்படுத்தப்படுவது கண்காணிக்கப்படுகிறது.

மேற்கண்ட திட்டங்களின் செயலாக்கத்தின் முன்னேற்றம் பல்வேறு நிலைகளில் மாதாந்திர அடிப்படையிலும், இத்திட்டங்களுக்கு மத்திய அரசு நிதி வழங்குவதை மூன்று மாத அடிப்படையிலும் கண்காணிக்கப்படுகிறது.

### 1.2.8 சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்கள்

சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்களை கண்காணிக்க ஏதுவாகவும், வெவ்வேறு ஆதாரங்களிலிருந்து உருவாகும் புத்தாக்கத் திட்டங்களை சம்பந்தப்பட்ட தலைமைச் செயலக துறைகளுடனும், இதர சார்பு துறைகளுடனும் கலந்தாலோசித்து செயல்படுத்தும் நோக்குடனும், "திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை" என்பது "திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை" என்று திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் 29-04-2003 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 31-ல் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண் 146, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 02-11-2006-ல் "சிறப்பு முயற்சிகள்" என்ற பொருளை அலுவல் விதிகளில் முதல் அட்டவணையில் ஒருங்கியல் பட்டியலில் சேர்க்கப்படுவதற்கான ஆணைகள் வெளியிடப் பட்டுள்ளன.

கீழ்கண்ட அறிவுரைகள் அரசு கடித எண் 8835/மதி/2003, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 02-11-2006-ல் வெளியிடப்பட்டுள்ளன:—

i. "சிறப்பு முயற்சிகள்" என்பது ஒரு பொதுவான பொருளாகும். ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் உருவாகும் எந்தவொரு திட்டத்தைவிட இது மாறுபட்டது.

ii. ஒரு பொருள், ஒரு காலகட்டத்தில் சிறப்பு முயற்சியாக இருக்கலாம். அதே பொருள் பின்னர் வழக்கமான திட்டமாகவும் மாறலாம்.

iii. சிறப்பு முயற்சிகள், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையினால் தன்னிச்சையாகவோ அல்லது பிறிதொரு துறையின் வேண்டுகோளின் பேரிலோ துவக்கப்படலாம். இவ்வாறு துவக்கப்பட்ட சிறப்பு முயற்சிகள், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையால் சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறைகளுடன் கலந்தாலோசிக்கப்பட்டு, ஒருங்கிணைக்கப்பட்டு கையாளப்படும்.



iv. சிறப்பு முயற்சிகள், அவற்றின் இயல்பின் காரணமாக சில வெற்றிகரமான திட்டமாக அமையாமலும், தொடர்ந்து பரிசீலனை செய்யவேண்டிய அவசியம் இல்லாமலும் போய்விடும். இச்சூழ்நிலையில் அவை கைவிடப்படலாம்.

v. சிறப்பு முயற்சிகளை துவக்குவது மற்றும் (அல்லது) ஒருங்கிணைப்பது, மேலும் அவற்றை முதிர்வு நிலைக்கு கொண்டுவருவது அல்லது தொடர்ந்து பரிசீலனை செய்வதில் பயனில்லை என்பது குறித்து முடிவு செய்து அவற்றை கைவிடுவது, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் பணிகளாகும்.

vi. ஒரு குறிப்பிட்ட சிறப்பு முயற்சி சாத்தியமானது போன்ற காரணங்களால் முதிர்வு நிலை அடைந்துவிட்டது என்று முடிவெடுக்கப்பட்டாலோ (அல்லது) திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் தொடர் கண்காணிப்பு இனி தேவையில்லை என்று கருதப்பட்டாலோ, அது சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறையிடம் ஒப்படைக்கப்படும்.

மேற்கூறியவற்றிலிருந்து சிறப்பு முயற்சிகள் தொடர்பாக பின்வரும் கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்பட்டன:—

(அ) உயிரி எரிசக்தி உற்பத்தித் திட்டம் மற்றும் உயிரி பொருள்கள் வழங்குதல்.

(ஆ) சர்க்கரை ஆலைகளிலிருந்து எத்தனால் தயாரித்தல் மற்றும் கருப்பஞ்சாற்று கசண்டு அல்லாத ஏனைய ஆதாரங்களான சர்க்கரைக் கிழங்கு (Sugarbeet), இனிப்புச் சோளம், மக்காச் சோளம், மரவள்ளிக் கிழங்கு மற்றும் ஏனைய மாச்சத்து தாவரங்களிலிருந்து எத்தனால் தயாரித்தல்.

(இ) காட்டாமணக்கு மற்றும் சைமருபா கிளாக்கா மரம் ஆகியவற்றிலிருந்து உயிரி எரிவாயு தயாரித்தல்.

(ஈ) உயர் தொழில்நுட்ப விவசாயம்.

அரசாணை (நிலை) எண் 10, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 18-01-2007-ல், சென்னை மெட்ரோ இரயில் திட்டம், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின்கீழ் "சிறப்பு முயற்சி" திட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## சென்னை மெட்ரோ இரயில் திட்டம்

சென்னைப் பெருநகரம் அதிவேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. இதன் சாலைகளில் போக்குவரத்தின் அளவும் மிக அதிகமாக உயர்ந்துகொண்டே செல்கிறது. எனவே, ஒரு புதிய அதிவேக இரயில் போக்குவரத்து தேவையின் அவசியத்தை உணர்ந்து தமிழ்நாடு அரசு சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தை நிறைவேற்றிட முடிவு செய்துள்ளது. இதன்மூலம் சென்னைப் பெருநகர மக்களுக்கு வேகமான, நம்பத்தக்க, வசதியான, திறன்மிக்க மற்றும் சிக்கனமான பொதுப் போக்குவரத்து திட்டத்தினை செயல்படுத்த எண்ணியுள்ளது. இத்திட்டம் இதர பொது மற்றும் தனியார் போக்குவரத்து வசதிகளாகிய, பேருந்து, புறநகர் இரயில் போக்குவரத்து மற்றும் பெருந்திரள் துரித இரயில் போக்குவரத்து திட்டத்துடன் சீரிய முறையில் ஒருங்கிணைக்கப்படும்.

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கான ஒரு விரிவான திட்ட அறிக்கையை டில்லி மெட்ரோ இரயில் கழகம் தயார்செய்து அரசின் பார்வைக்கு வழங்கியுள்ளது. இக்கழகம், டில்லி மெட்ரோ இரயில் திட்டத்தினை தயாரித்து வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது. இந்த விரிவான திட்ட அறிக்கையில் உத்தேசிக்கப்பட்டுள்ள சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கீழ் உருவாக்க திட்டமிடப்பட்டுள்ள முதல் இரண்டு வழித்தடங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| வழித்தடம் | நீளம் |
|---|---|
| வண்ணாரப்பேட்டை முதல் சென்னை விமான நிலையம் வரை | 23.1 கி.மீ |
| சென்னை கோட்டையிலிருந்து புனித தோமையார் மலை வரை | 23.4 கி.மீ |
| மொத்தம் .. | 46.5 கி.மீ |



இந்த வழித்தடங்களில் கீழ்க்காணும் நிறுத்த நிலையங்கள் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது:

வழித்தடம்-1: வண்ணாரப்பேட்டை - மண்ணடி - சென்னை கோட்டை - சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம்- எழும்பூர் - எல்.ஐ.சி. - ஆயிரம் விளக்கு - ஜெமினி - தேனாம்பேட்டை - சேமியர்ஸ் சாலை- சைதாப்பேட்டை- வேளச்சேரி சாலை - கிண்டி - ஆலந்தூர் - அலுவலர் பயிற்சி நிலையம் - இந்தியன் ஏர்லைன்ஸ் காலனி- மீனம்பாக்கம் - சென்னை விமானநிலையம்.

வழித்தடம்-2: சென்னை கோட்டை - சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் - வேப்பேரி - சாஸ்திரி நகர் - கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி - அமைந்தகரை - ஷெனாய்நகர்- அண்ணாநகர் கிழக்கு - அண்ணாநகர் டவர்- திருமங்கலம் - கோயம்பேடு - சென்னை புறநகர் பேருந்து நிலையம் — அரும்பாக்கம் - வடபழனி - அசோக் நகர்- கே.கே. நகர் - சிட்கோ -ஆலந்தூர் - புனித தோமையார் மலை.

இவ்வழித்தடங்களின் ஒருபகுதி நிலத்தின் அடியிலும் மற்ற பகுதி உயர்வான நிலையிலும் அமையும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள வழித்தடங்கள் மற்றும் நிறுத்த நிலையங்கள் ஆகியவை உத்தேசமானவை; இது விரிவான வடிவமைப்பு மற்றும் திட்ட செயலாக்கத்தின்போது மாற்றப்படத்தக்கவை. விரிவான திட்ட அறிக்கையின்படி, இந்த இரண்டு வழித்தடங்களின் கட்டுமானப் பணிகள் 2013-2014-ல் முழுமையடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த இரண்டு வழித்தடங்களுக்கும் தமிழ்நாடு அரசு தனது கொள்கை அளவிலான ஒப்புதலை வழங்கியுள்ளது. மத்திய அரசும் இத்திட்டத்தை நிறைவேற்றுவதில் முனைப்புடன் உள்ளது. மத்திய அரசின் நிதி உதவிக்காக தமிழ்நாடு அரசினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள பிரேரணை மீது மத்திய திட்டக் குழு தனது கொள்கை அளவிலான ஒப்புதலைத் தெரிவித்துள்ளது. எனவே, மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கான செலவு ரூ.9,757 கோடி (மார்ச் 2007 விலைகளில்) (வரிகள், சுங்கவரிகள், விலைவாசி உயர்வு, கட்டுமான காலத்திற்கான

வட்டி, இன்னபிற நீங்கலாக) என தோராயமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் செலவு விரிவான வடிவமைப்பு மற்றும் திட்ட செயலாக்கத்தின் போது மாறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இச்செலவில் சுமார் 40 சதவிகிதத்தை மத்திய, மாநில அரசுகள் ஏற்றுக்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது. மீதமுள்ள செலவினை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கியிடமிருந்து கடனாக பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் என்ற சிறப்பு வகை நிறுவனம் உருவாக்கப்பட்டு நிறுவனங்களுக்கான சட்டத்தின் கீழ் 03-12-2007 அன்று துவக்கப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு டில்லி மெட்ரோ இரயில் நிறுவனத்தை இடைக்கால / முதன்மை ஆலோசகராக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் நியமித்து தமிழ் நாடு அரசு அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கியின் தொடர்புக் குழு ஜனவரி மற்றும் ஏப்ரல் 2008-ல் சென்னைக்கு வருகைபுரிந்தது. சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தினை செயல்படுத்துவது தொடர்பாக சம்பந்தப்பட்ட அலுவலர்களுடன் விரிவாக ஆலோசனை நடத்தியுள்ளது. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் ஓர் உயர்நிலைக் குழு டோக்கியோ சென்று, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கியின் தலைமை செயல் இயக்குநர் மற்றும் இதர அலுவலர்களுடன் 06-02-2008 அன்று ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கியின் தலைமையகத்தில் விரிவான பேச்சு வார்த்தை நடத்தியுள்ளனர். இந்தக் கூட்டத்தில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கியின் பொறுப்பாளர்கள் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கான நிதி உதவி வழங்குவதில் தங்களது முழு ஆர்வத்தினை வெளிப்படுத்தினர். ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கியின், திட்ட அமைப்பு ஆய்வுக்கான சிறப்பு உதவி எதிர்பார்க்கப்படுகிறது.

### 1.2.9 மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், தமிழ் நாட்டில் நீலகிரி மாவட்டத்தில் 1975 ஆம் ஆண்டு முதல் மத்திய திட்டக் குழுவின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. மலைப்பகுதியின் உயிரின



சூழல்களைப் பேணுதல், பாதுகாத்தல் அதனை மேலும் வளப்படுத்துதல் ஆகிய மாநில அரசின் முயற்சிக்கு உறுதுணையாக இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் இயற்கைச் சூழலைப் பாதுகாப்பதும், இயற்கைச் சூழலை சீர்செய்வதும் ஆகும். இதன் அடிப்படையில் உயிரின சூழலைப் பாதுகாக்கவும், மலைவாழ் உயிரினங்களை பாதுகாத்து புத்துயிர் ஊட்டும் வகையில் அனைத்து வளர்ச்சிப்பணிகளும் திட்டமிடப்படுகின்றன. நீலகிரி மாவட்டம் முழுவதும் 75 பெரிய நீர்வடிபகுதிகளாக பகுக்கப்பட்டு, முன்னுரிமை நீர்வடிபகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் பணிகள் முன்னுரிமை நீர்வடிபகுதிகளில் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தில் சாகுபடி செய்யத்தக்க நிலங்களில், வடிகால்களைச் சுத்திகரித்தல் மூலம் மழைநீரைச் சேமித்தல், ஈரப்பதத்தை தக்கவைத்தல் போன்ற சுற்றுப்புற சூழலுக்கு உகந்த வேளாண் உற்பத்தி நடவடிக்கைகள் ஆகியவற்றை ஊக்குவிப்பதின் மூலம் சிறிய நுண்நீர் வடிப்பகுதிகள் மேம்படுத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டிற்கு மத்திய திட்டக் குழு சிறப்பு மத்திய உதவியாக ரூபாய் 35.50 கோடியை வருடாந்திர ஒதுக்கீடாக வழங்கி வருகின்றது. இந்த சிறப்பு மத்திய உதவி 90 சதவிகிதம் மானியமாகவும் 10 சதவிகிதம் கடனாகவும் விடுவிக்கப்படுகிறது. 2005-2006 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு சிறப்பு மத்திய உதவியின் மானியத்தை மட்டும் விடுவித்து வருகிறது. கடன் பகுதியை, வெளிச்சந்தைக் கடனாகப் பெறுவதற்கு மாநில அரசுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

### 2007–2008 ஆம் ஆண்டின் செயல்பாடு

2007-2008 ஆம் ஆண்டிற்கு மொத்த ஒதுக்கீடு ரூபாய் 35.50 கோடியாகும். இந்த முழு ஒதுக்கீட்டிற்கும் ஒப்பளிப்புகள் வழங்கப்பட்டுவிட்டன. மேற்படி நிதி ஒதுக்கீட்டில், பெருமளவு தொகை மண்வளப் பாதுகாப்பு, காடுவளர்ப்பு, தோட்டப்பயிர் வளர்ப்பு, உள்ளாட்சி மன்றங்கள் மேம்பாடு, சாலைகள் இணைப்பு வசதி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், சுற்றுலா மேம்பாடு ஆகிய திட்டப் பணிகளுக்காக செலவிடப்பட்டுள்ளது.

### 2008–2009 ஆம் ஆண்டிற்கான திட்ட செயற்குறிப்பு

திட்டச் செயல்பாட்டினை கருத்தில் கொண்டு, 2008-2009 ஆம் ஆண்டுத் திட்டத்திற்கு ரூபாய் 42.93 கோடிக்கு நிதி ஒதுக்கீடு செய்ய

மத்திய திட்டக்குழு ஒப்புக்கொண்டுள்ளது. வரைவு ஆண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டுத் திட்டத்தில் மண் மற்றும் நீர் வளப் பாதுகாப்பு, காடு வளர்ப்பு, தோட்டக்கலை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், சாலைகள் மற்றும் சுற்றுலா துறைகளின் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

### 1.2.10. மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம்

மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாட்டில் 1975-76-ல் தொடங்கப்பட்டு, மத்திய அரசின் முழு நிதியுதவியுடன் (90 சதவிகிதம் மானியம் மற்றும் 10 சதவிகிதம் கடன்) செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்கு மலைத் தொடர் பகுதியானது, தமிழ்நாட்டில் 26,000 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் உள்ளது. இது தமிழ்நாட்டின் மொத்த பரப்பளவில் 20 சதவிகிதமாகும். இத்திட்டம் தற்பொழுது தமிழ்நாட்டில் 8 மாவட்டங்களில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்ட 57 வட்டாரங்களைக் கொண்ட 33 வட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த 8 மாவட்டங்களில் தேனி மற்றும் கன்னியாகுமரி ஆகிய இரண்டு மாவட்டங்களில் இத்திட்டம் முழுவதுமாக செயல்படுத்தப்படுகிறது.

**இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன :**

(i) உயிரினப் பாதுகாப்பிற்கு, இயற்கைச் சூழலின் சமநிலையைப் பேணுதல்

(ii) இப்பகுதியில் அபரிமிதமாகக் காணப்படும் மாறுபட்ட மரபணு உயிரினங்களைப் பாதுகாத்தல்

(iii) மனித இனத்தால் இயற்கைச் சூழலுக்கு ஏற்பட்ட மற்றும் ஏற்படுகின்ற சீரழிவுகளைச் சரி செய்தல்

(iv) அங்குள்ள மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி சுற்றுச் சூழல் சீர்கேட்டினால் ஏற்படும் அபாயம் பற்றி புரியவைத்து சுற்றுச் சூழல் வளர்ச்சிக்கான திட்டங்களில் அவர்களைத் தீவிரமாக பங்கு கொள்ளச் செய்தல்

இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் முக்கிய வளர்ச்சிப் பணிகள் மண்வளப் பாதுகாப்பு, தோட்டக்கலை, காடு வளர்ப்பு, சிறுபாசனம், ஊரக சாலைகள், மீன்வளம், பட்டுப்புழு வளர்ப்பு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், சுற்றுலா, விடுபட்ட உள்கட்டமைப்பு வசதிகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் மரபுசாரா எரிசக்தி ஆகியவையாகும். இந்த திட்டத்தின்கீழ், திட்டமிடல் மற்றும் வளர்ச்சிக்கான பரந்த வளவாய்ப்புள்ள பகுதி நீர்வரத்து பகுதி ஆகும். ஒருங்கிணைந்த மேம்பாட்டிற்காக 134 நீர்வரத்து பகுதிகள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.



2007-2008 ஆம் ஆண்டுத் திட்டத்திற்கு ரூ.17.04 கோடிக்கு மத்திய திட்டக் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. துறைத் தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்கள் மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையிலான மாவட்ட அளவிலான மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் வைக்கப்பட்டு, ஒப்புதலுக்குப் பின் ஆண்டுத் திட்டம் 2007-2008-ல் சேர்க்கப்பட்டது.

2008-2009 ஆம் ஆண்டிற்கு ரூ.20.61 கோடிக்கு மத்திய திட்டக் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இது 2007-2008 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையினைக் காட்டிலும் ரூ.3.57 கோடி கூடுதலாகும்.

### 1.2.11. இருபது அம்சத் திட்டம்–2006

இருபது அம்சத் திட்டம் 1975-ல் முதன்முதலாக தொடங்கப்பட்டது. 1982 மற்றும் 1986 ஆகிய ஆண்டுகளில் இரண்டு முறை இத்திட்டம் மாற்றி அமைக்கப்பட்டது. தற்போது இத்திட்டம் மூன்றாவது முறையாக 2006 ஆம் ஆண்டு திருத்தி அமைக்கப்பட்டு, "இருபது அம்சத் திட்டம் 2006" எனப் பெயரிடப்பட்டுள்ளது. 2007 ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து இத்திட்டக் கண்காணிப்பு நடைமுறைக்கு வருகிறது.

நாட்டில் வறுமையினைப் போக்கி, ஏழை, எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் ஆகும். இத்திட்டத்தில், வறுமை ஒழிப்பு, வறுமைக் கோட்டின்கீழ் உள்ள மக்களுக்கான வேலைவாய்ப்பு, கல்வி, வீட்டு வசதி, சுகாதாரம், வேளாண்மை மற்றும் நிலச் சீர்திருத்தங்கள், நீர்ப்பாசனம், குடிநீர், நலிந்த பிரிவினரின் பாதுகாப்பு மற்றும் உரிமை, நுகர்வோர் பாதுகாப்பு போன்ற சமூகப் பொருளாதார அம்சங்கள் உள்ளன.

[2008 மே 14

இத்திட்டத்தின் மாதாந்திர முன்னேற்ற அறிக்கைகள் மத்திய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட செயலாக்க அமைச்சகத்திற்கு அனுப்பப்படுகிறது. மத்திய அரசு மாதந்தோறும் மாநிலங்களின் செயல்பாடுகளைத் தரவரிசைப்படுத்துகிறது. மாவட்ட அளவில் இத்திட்ட செயல்பாடுகள் மாநில அரசால் தரவரிசைப்படுத்தப்படுகிறது.

**1.2.12. பெருந்திட்டங்களின் பயன்களை மதிப்பீடு செய்தல்**

அரசு திட்டங்களின் பயன்கள் உரிய மக்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்துவதற்காக மதிப்பீடு செய்தல் இத்துறையின் முக்கிய பணியாகும். திட்டங்களைச் செயல்படுத்தும்போதும், திட்டங்கள் முடிவுற்ற பின்னரும் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை மதிப்பீடுகளைச் செய்துவருகின்றது. அம்மதிப்பீட்டாய்வுகளின் முடிவுகள் பகுத்தாய்வு செய்யப்பட்டு தேவையான திருத்தங்கள் மற்றும் கொள்கையளவில் மாற்றங்கள் ஏதேனும் இருப்பின், அரசுக்குத் தெரிவிக்கப்படுகிறது.

**1.2.13. உலக வர்த்தக நிறுவனப் (WTO) பிரிவு**

உலக வர்த்தக நிறுவனம் தொடர்பான பணிகளை ஒருங்கிணைக்க அரசாணை (நிலை) எண் 121, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, நாள் 19-11-2001-ல் உருவாக்கப்பட்ட ஒருங்கிணைப்புப் பிரிவு திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையில் செயல்பட்டு வருகிறது. உலக வர்த்தக நிறுவனத்தினால் மாநில வேளாண்மைத் துறையில் ஏற்படுகின்ற பாதிப்புகள் பற்றிய கருத்தாய்வு கூட்டங்கள் நடத்தப்பட்டன. உலக வர்த்தக நிறுவனத்தினால் கொண்டு வரப்பட்டுள்ள உலகமயமாக்கப்பட்ட சந்தையினால் நெசவு தொழில் குறிப்பாக ஆயத்த ஆடை தொழில் சந்திக்கும் பிரச்சினைகள் தொடர்பான கருத்தாய்வுக் கூட்டம் திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் முன்னிலையில் நடைபெற்றது. பல்வேறு துறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் கண்காணிக்கப்படுகின்றன. சம்பந்தப்பட்ட துறைகள் தக்க மேல் நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளன.

**1.3. துறைத் தலைமையிடங்கள்**

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள துறைகள் பின்வருமாறு:

(i) மாநிலத் திட்டக் குழு



2008 மே 14]

(ii) பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை

(iii) மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

மேற்கண்ட துறைகளின் பணிகள் பின்வரும் பக்கங்களில் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன:-

**மாநிலத் திட்டக் குழு**

**2.1.** இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசுக் கொள்கையின் வழிகாட்டும் நெறிகளுக்கேற்ப, மாநிலத்தில் திட்டமிட்ட முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்காக, மாநிலத் திட்டக் குழு தமிழ்நாட்டில் 1971 ஆம் ஆண்டு மே திங்கள் 25ஆம் நாள் ஏற்படுத்தப்பட்டது. மாநிலத் திட்டக் குழு மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையின்கீழ் இயங்குகிறது. ஒரு ஆலோசனை அமைப்பாகச் செயல்படும் மாநிலத் திட்டக் குழு, மாநிலத்தின் வளர்ச்சி குறித்த பல்வேறு செயல்பாடுகளில் தனது பரிந்துரைகளை அரசுக்கு அளிக்கிறது. பேராசிரியர் மு. நாகநாதன் அவர்களைத் துணைத் தலைவராகவும், ஏழு பகுதி நேர உறுப்பினர்களையும் கொண்டு 19-05-2006 அன்று மாநிலத் திட்டக் குழு திருத்தியமைக்கப்பட்டது. திட்டமிடல் மற்றும் நிதித் துறைகளின் அரசுச் செயலர்கள், இக்குழுவின் அலுவல் சார் உறுப்பினர்களாவர். மாநிலத் திட்டக்குழுவின் உறுப்பினர்-செயலர் இக்குழுவின் நிருவாகப் பொறுப்பை ஏற்றுள்ளார்.

**2.2. மாநிலத் திட்டக் குழுவின் முதன்மையான பொறுப்புகள் :**

(i) அரசின் முன்னுரிமைகள், கொள்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஆண்டுத் திட்டங்களையும், ஐந்தாண்டுத் திட்டங்களையும் தயாரித்தல்.

(ii) ஆதி திராவிடர் துணைத் திட்டம், பழங்குடியினர் துணைத் திட்டம் ஆகியவற்றை ஐந்தாண்டுத் திட்டங்கள்/ ஆண்டுத் திட்டங்களின் உள் பகுதியாகக் கருதி உருவாக்குமாறு அரசுக்கு அறிவுரை வழங்குதல்.

(iii) ஐந்தாண்டுத் திட்டங்களை இடைக்கால மறு ஆய்வு செய்து திட்டங்களில் தேவையான மாற்றங்கள், திட்டங்களைத் திருத்தியமைத்தல் குறித்து அரசுக்கு தெரிவித்தல்.

(iv) மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையின் வாயிலாக, முக்கிய திட்டங்களை மதிப்பீடு செய்தல்.

(v) மாநில மனித மேம்பாட்டுக் குறியீடு, பாலின மேம்பாட்டுக் குறியீடு ஆகியவை தொடர்பான வளர்ச்சிக் காரணிகளைப் பல்வேறு நிலைகளில் கண்காணித்தல்.

(vi) திட்டங்கள் வகுத்திடவும், செயல்படுத்தவும் தேவையான சிறப்பு ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

(vii) தமிழ்நாட்டுப் பொருளாதாரத்தைக் கண்காணித்து, தேவையான அறிக்கைகளை அரசுக்கு அளித்தல்.

## 2.3. ஆண்டுத் திட்டமும், பதினோராவது ஐந்தாண்டுத் திட்டமும் தயாரித்தல்

### 2.3.1. பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் (2007–2012)

பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முன்னுரிமைகளையும், அணுகுமுறைகளையும் சுட்டிக்காட்டும் 'அணுகுமுறை அறிக்கை' வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, பதினோராவது ஐந்தாண்டுத் திட்ட ஆவணம் தயாரிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 09-12-2007-ல் நடைபெற்ற கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டது. பதினோராவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடு ரூ.85,344 கோடியாக நிர்ணயிக்கப்பட்டு, அதில் ரூ. 18,192.83 கோடி புதிய திட்டங்களுக்காகவும், எஞ்சிய தொகை தொடரும் திட்டங்களுக்காகவும் ஒதுக்கப்பட்டன. பதினோராவது ஐந்தாண்டுத் திட்ட ஆவணம் முதன்முறையாக தமிழிலும், ஆங்கிலத்திலும் தயாரிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள், அரசு சாரா நிறுவனங்கள், மற்ற தொழில் முனைவோர், தகுதிபடைத்தவர்கள் ஆகியோருடன் கலந்து பேசி, அவர்களுடைய கருத்துரைகளையும் ஏற்றுக்கொண்டு இத்திட்ட ஆவணம் திட்டப் பெற்றது. திட்ட ஆவணம் இரு பிரிவுகளாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. பகுதி 1 திட்டத்தின் மேலோட்ட உரையையும், பகுதி 2 மாநிலத்தின் பொருளாதார நிலையையும் உள்ளிட்ட விரிவான துறைவாரியான விளக்கக் குறிப்பும் கொண்ட ஆவணமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

### 2.3.2. 2008–2009 ஆம் ஆண்டுத் திட்டம்

மாநிலத்தின் ஆண்டுத் திட்டங்கள் மத்திய திட்டம், மாநில அரசின் ஐந்தாண்டுத் திட்டம் ஆகியவற்றின் முன்னுரிமைகளையும், குறிக்கோள்களையும் பெரிதும் பின்பற்றி உருவாக்கப்பட்டுள்ளன.



புதுடில்லியில் 11-02-2008 அன்று மத்தியத் திட்டக் குழுவின் துணைத் தலைவருடன் நடைபெற்ற கூட்டத்தில் 2008-2009 ஆம் ஆண்டிற்கு ரூ.16,000 கோடி நிதி ஒதுக்கீட்டிற்கு ஒப்புதலளிக்கப்பட்டது. நடப்பு விலையில், 2007-2008 ஆம் ஆண்டின் திட்ட ஒதுக்கீட்டைவிட இது 14 சதவிகிதம் கூடுதலாகும்.

## 2.4. தமிழ்நாடு மாநில நிலப் பயன்பாட்டு வாரியம்

மாநில நிலப் பயன்பாட்டு வாரியமானது, தற்பொழுது மாநிலத் திட்டக் குழுவின் துணைத் தலைவரின் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகின்றது. நிலம், நீர் பயன்பாடு தொடர்பான துறைகளின் தலைவர்களும், அரசுச் செயலர்களும் இக்குழுவின் உறுப்பினர்களாவர். மாநிலத் திட்டக் குழுவின் உறுப்பினர்—செயலர் இதற்குக் கூட்டுக்குழு தலைவராக உள்ளார்.

வேளாண்மை நிலங்கள் மதிப்புமிக்க சொத்துகள் என்பதால் அவை காற்று அல்லது கடல் அரிப்பினாலும், நீர் தேங்குதல் / நீர் சூழ்ந்திருத்தல், உப்புத்தன்மை அல்லது நகரமயமாதல், தொழில்மயமாதல் ஆகியவற்றால் பாதிக்கப்படாமலிருக்கும் பொருட்டு இக்குழு நமது வளமான வேளாண்மை நிலங்களைப் பாதுகாத்திட உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. மாநிலத்தில் மண்வளங்களும் அவற்றின் அமைவிடங்களும் பற்றி விரிவான ஆய்வுகளை மேற்கொள்வதோடு இவ்வாய்வுகளைக் கொண்டு தேவையான சீர்செய்யும் மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளையும் இவ்வாரியம் மேற்கொள்கிறது. ஆற்று வடிநிலப் பகுதிகளிலும், நடுத்தர, பெரிய நீர்ப்பாசனப் பகுதிகளிலும் வண்டல் மண்படிவதைத் தடுத்திடத் தேவையான நடவடிக்கைகளையும் இவ்வாரியம் மேற்கொள்கிறது.

மத்திய அரசு ரூ.75 இலட்சத்தில் 2007-2008 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது. 2008-2009 ஆம் ஆண்டிற்கு ரூ.85 இலட்சம் முன் மொழியப்பட்டுள்ளது.

## 2.5. மனித மேம்பாடு

ஐக்கிய நாடுகள் வளர்ச்சித்திட்டம் (UNDP) மற்றும் மத்திய திட்டக் குழு ஆதரவுடன் தீட்டப்பட்ட "மனித மேம்பாட்டுக்கான மாநில திட்டங்களை வலுப்படுத்துதல்" எனும் திட்டத்தின்கீழ் மாநிலத் திட்டக் குழுவில் மனித மேம்பாட்டு ஆராய்ச்சி மற்றும் ஒருங்கிணைப்பு அலகு (HDR&C) ஏற்படுத்தப்பட்டது.

[2008 மே 14

இத்திட்டத்தின்கீழ், சிவகங்கை, திருவண்ணாமலை, கடலூர் ஆகிய மூன்று மாவட்டங்களுக்கான மாவட்ட மனித மேம்பாட்டு அறிக்கைகள் வழிகாட்டுக் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, இறுதி வடிவம் கொடுக்கப்பட்டு வெளியிடும் நிலையில் உள்ளன. திண்டுக்கல், நாகப்பட்டினம் மாவட்டங்களுக்கான அறிக்கைகள் தயாரிக்கும் பணி நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன.

மனித மேம்பாட்டுக்கான மாநிலத் திட்டங்களை வலிமைப்படுத்தும் திட்டமானது டிசம்பர் 2009 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இவற்றில் மாநிலத் திட்ட ஒதுக்கீட்டில் மகளிருக்கான பங்கினை வலுப்படுத்துதல், மாநில புள்ளி விவரங்கள் முறையை வலுப்படுத்துதல் ஆகிய இரண்டு புதிய பகுதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. மாநில மனித மேம்பாட்டு இரண்டாம் அறிக்கையையும், ஏனைய மாவட்டங்களுக்கும் மனித மேம்பாட்டு அறிக்கைகளையும் தயாரிக்கும் பணிகளை மாநிலத் திட்டக் குழு மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

**2.6. 2008–2009 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்**

மாநிலத் திட்டக் குழுவில் உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தவும், எண்ணியல் நூலகம் ஏற்படுத்தவும், மாநில அளவிலான புள்ளிவிவர மையம் அமைத்திடவும், அலுவலகப் பணியாளர்களுக்கு பயிற்சியளித்திடவும் ரூ.32.50 இலட்சம் முன்மொழியப்பட்டுள்ளது.

## பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை

**3.1.** பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை, மாநிலத்தின் தலைமை புள்ளி இயல் முகமையாகும். மாநிலம் முழுமையிலும் புள்ளி விவரங்களை சேகரிப்பதிலும், தொகுப்பதிலும், ஆராய்வதிலும், வேளாண்மை, தொழில் மற்றும் விலைவாசி ஆகிய பிரிவுகளின் கீழ் அறிக்கைகள் வெளியிடுவதும் மற்றும் புள்ளி விவரங்கள் குறித்த செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் அமைப்பாக செயல்படுவதும் இத்துறையின் முக்கிய பணிகளாகும்.

**3.2.** பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறையால் கீழ்க்கண்ட திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன:

**(அ) மாநில அரசினால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

மேலாண்மை முறை மற்றும் விவரங்கள் சேகரித்தலை நவீனப்படுத்துதல்



2008 மே 14]

இத்திட்டத்தின்கீழ், கணிப்பொறிகளின் தரம் உயர்த்துதல் மற்றும் பணியாளர்களுக்கான பயிற்சி ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன.

**(ஆ) மத்திய அரசினால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

**1. வேளாண்மைக் கணக்கெடுப்பு**

நுண்ணிய அளவிலான வேளாண் திட்டமிடுவதற்கென உரிய நிலப் பதிவேடுகளிலிருந்து கைப்பற்றின் அளவு, தன்மை மற்றும் கையிருப்பின் உரிமம் பற்றிய விவரங்கள் மறு அட்டவணைப்படுத்தப்படுகின்றன.

**2. பழம், காய்கறி மற்றும் சிறுபான்மைப் பயிர்களில் பயிர் மதிப்பீட்டாய்வு நடத்துதல்**

பழம், காய்கறி மற்றும் சிறுபான்மைப் பயிர்களுக்கான ஒரு ஹெக்டேருக்கான விளைச்சல் விவரத்தை பயிர் அறுவடை பரிசோதனைகள் மூலம் கண்டறிந்து அதன் மூலம் பயிர் உற்பத்தி மற்றும் விளைச்சல் விகிதம் மிக நுட்பமாக கணக்கிடப்படுகிறது.

**சிறப்பு ஆய்வு – தோட்டக்கலைப் பயிர்களுக்கான ஆய்வு**

நித்தியக் கல்யாணி, ஆவாரை, கண்வலிக் கிழங்கு, ஜெர்பரா, கார்னேசன் மற்றும் காளான் ஆகிய தோட்டக்கலைப் பயிர்களுக்கான ஆய்வு நவம்பர் 2006 முதல் ஆகஸ்ட் 2007 வரை மேற்கொள்ளப்பட்டது. வீதம் மற்றும் விகிதாசார குறைபாடுகளைக் களைந்து மாநில வருவாயை மேம்படுத்துவதற்காக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இதற்காக ரூ.13.50 இலட்சம் மத்திய அரசு நிதி ஒதுக்கீடு அளித்துள்ளது. இதற்கான ஆய்வு முடிக்கப்பட்டு அறிக்கை வெளியிடப்படவுள்ளது.

**3. தேசிய தொழில்நுட்ப ஆள்திறன் தகவல் முறைக்கான ஒருங்கிணைப்பு மையம் ஏற்படுத்துதல்**

இத்திட்டத்தின்கீழ், தமிழ் நாட்டில் உள்ள அனைத்து தேர்ச்சி பெற்ற பொறியியல் பட்டதாரிகள் மற்றும் பட்டயதாரர்கள் ஆகியோரின் பல்வேறுபட்ட பொறியியல் மற்றும் தொழில் நுட்ப தனித்தன்மை குறித்து விவரங்கள் சேகரித்தல் மூலம் அவர்களின் தேவை மற்றும் அவற்றை ஈடுகட்டுதலை தொடர்ச்சியாக மதிப்பிடுதல் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன.

## 4. பொருளாதாரக் கணக்கெடுப்பு

மாநிலத்தில் உள்ள அனைத்து வேளாண்மை (பயிர் உற்பத்தி மற்றும் தோட்டப் பயிர்கள் நீங்கலாக) மற்றும் வேளாண்மை அல்லாத நிறுவனங்களின் விவரங்களைச் சேகரிக்கும் பணியே பொருளாதாரக் கணக்கெடுப்பாகும்.

ஐந்தாவது பொருளாதார கணக்கெடுப்பு மத்திய அரசின் முழு நிதி உதவியுடன் 2005 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நடத்தப்பட்டது. இக்கணக்கெடுப்பிற்கு ரூ.588.76 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டதில் ரூ.575.62 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.13.14 இலட்சம் நடப்பு நிதியாண்டு இறுதிக்குள் செலவிடப்பட உள்ளது.

ஐந்தாவது பொருளாதாரக் கணக்கெடுப்பின் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் அறிக்கை வெளியிடப்படும்.

## (இ) மத்திய மாநில அரசுகள் செலவு பொறுப்பேற்கும் திட்டங்கள் (50 : 50)

### 1. பயிர் பரப்பு உரிய காலத்தில் மதிப்பிடும் திட்டம்

ஒவ்வொரு ஆண்டும் 20 விழுக்காடு கிராமங்களில் முன்னுரிமை அடிப்படையில் நில உபயோக புள்ளி விவரங்கள் கணக்கெடுத்தல் மற்றும் ஒவ்வொரு பருவத்திலும் சில முக்கிய பயிர்களின் நீர் பாய்ச்சப்பட்ட மற்றும் நீர்பாய்ச்சப்படாத பரப்பில் உயர் உற்பத்தி ரகம் மற்றும் உள்ளூர் ரகம் வாரியாக பயிரிடப்படும் பரப்பு மதிப்பீடு செய்யப்படுகிறது.

### 2. பயிர் புள்ளிவிவர மேம்பாட்டுத் திட்டம்

மாநிலத்தில் கிராம அளவில் அடிப்படை களப்பணியாளர்களான கிராம நிர்வாக அலுவலர்களால் சேகரிக்கப்படும் வேளாண்மைப் புள்ளி விவரங்களில் காணப்படும் குறைபாடுகளை மத்திய மற்றும் மாநில அரசு அதிகாரிகளால் முறையாக ஆய்வு செய்யப்பட்டு, அவற்றை சரிசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டம், நுட்பமான முடிவுகளுக்கு அடிப்படையானவற்றை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் முடிவுகள் பயிர் மதிப்பீடு திட்டத்தை நல்ல முன்னேற்றத்துடன் செயல்படுத்த உதவும்.



### 3.3 திட்டம் சாரா திட்டங்கள்

திட்டப் பணிகளைத் தவிர இத்துறை பல்வேறு ஆய்வுகளையும், திட்டம் சாரா திட்டங்களின் மாநில வருவாய் மதிப்பீடு, மாநிலக் கணக்கு, மூலதன ஆக்கம், ஆண்டுத் தொழில் ஆய்வு, மாதாந்திர தொழில் உற்பத்தி குறியீட்டெண், பருவமும் பயிரும் பற்றிய அறிக்கை, பயிர் முன் மதிப்பீட்டறிக்கை, உணவு மற்றும் உணவு அல்லாத பயிர்களின் பயிர் மதிப்பீட்டாய்வு, தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம், தென்னை மற்றும் கமுகு ஆய்வு, மழை பற்றிய புள்ளி விவரங்கள் சேகரித்தல், நீர்ப்பாசனப் புள்ளி விவரம், விவசாயக் கூலி குறியீட்டெண், வீட்டு வசதி புள்ளி விவரம், கட்டிட கட்டுமான செலவு குறியீட்டெண், ஆண்டு நகராட்சி புள்ளி இயல் கையேடு, மாவட்ட புள்ளி இயல் கையேடு, மாநில புள்ளி இயல் கையேடு மற்றும் ஆண்டு புள்ளி விவரத் தொகுப்பு, ஆள்திறன் மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம், அயல்நாட்டு வாணிபம், அங்காடிப் புலனாய்வு மற்றும் விலைவாசி, தொழிற்சாலை ஊழியர்களின் நுகர்வு விலைக் குறியீடு, மொத்த விலைக் குறியீட்டெண், சிறுபான்மைப் பயிர் மதிப்பீட்டாய்வு, சுற்றுச் சூழல் புள்ளி விவரம், விற்பனை மிகுதி மற்றும் தேசிய மாதிரி ஆய்வுத் திட்டம் ஆகிய பணிகளையும் செய்துவருகின்றது.

### 3.4. மாநிலப் புள்ளி இயல் குழு

மாநிலப் புள்ளி இயல் குழுவானது பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறையில் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்படும் முறைகள், அவற்றை பயன்படுத்தும் தன்மைகள் ஆகியவை குறித்து மேற்பார்வை செய்கிறது. மாநிலப் புள்ளி இயல் குழு, அரசாணை (நிலை) எண் 156 திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 15-11-2006-ன்படி மீள அமைக்கப்பட்டு, மாநிலப் புள்ளிஇயல் குழுக் கூட்டம் 25-4-2007 அன்று நடைபெற்றது.

### 3.5. 2008–2009 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்

பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறையின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு ரூ.50.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2008 மே 14

## மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

**4.1.** பேரளவிலான வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்டங்களுக்கு அரசு நிதியளித்து நிறைவேற்றி வருகிறது. அவ்வாறான திட்டங்களின் தாக்கம் மற்றும் பயன்களை முன்மதியுடன் மதிப்பீடு செய்ய வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். அதன்படி மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை, தொடங்கப்பட்ட 1972 ஆம் ஆண்டு முதற்கொண்டு மதிப்பீட்டாய்வுகள் மேற்கொள்ளுதல் மூலம் கொள்கைகளை வகுப்பது மற்றும் திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு பொறுப்பேற்று அரசுக்கு உதவி வருகிறது.

**4.2. இத்துறையின் முக்கியப் பணிகளாவன:**

(i) மத்திய, மாநில அரசுத் திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு உதவி பெறும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்;

(ii) குறிப்பிட்ட பிரிவுகளில் திட்டங்களைச் சிறப்பு மதிப்பீடு செய்தல் மற்றும் சமூகப் பொருளாதார ஆய்வுகளை மேற்கொள்ளுதல்;

(iii) மாநில அரசின் வரி வருவாய் பற்றி முன்கூட்டியே அறிந்து கொள்ள சிறப்புப் பகுப்பாய்வுகள் மேற்கொள்ளல்;

(iv) வருடாந்திர வெளியீடுகளான 'தமிழ்நாடு - ஒரு பொருளாதார ஆய்வு' மற்றும் தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு 'பொருளாதாரம் மற்றும் பணிவாரியான பகுப்பாய்வு' மேற்கொள்ளல்.

**4.3.** தமிழ்நாட்டில் மாநில, மத்திய அரசுகள் செயல்படுத்தும் திட்டங்கள் மற்றும் உலக வங்கி, டானிடா, சிடா, ஐரோப்பிய பொருளாதாரக் கழகம் மற்றும் பன்னாட்டு வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றின் உதவியுடன் செயல்படுத்தப்படும் வெளிநாட்டு நிதி உதவி பெறும் திட்டங்கள் ஆகியவை இத்துறையால் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன. மேலும், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களின் பல்வேறுபட்ட உட்கூறுகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டாய்வு செய்யப்படுகின்றன. இவை தவிர, குறுகிய கால உடனடி மதிப்பீடுகளும் மற்றும் ஆராய்ச்சி அறிக்கைகளும் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.



2008 மே 14]

**4.4.** இத்துறை தொடங்கப்பட்டதிலிருந்து, மார்ச் - 2008 வரை, பல்வேறு துறைகளைச் சார்ந்த 582 மதிப்பீட்டாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**4.5.** எந்தெந்தத் திட்டங்களை மதிப்பீடு செய்ய எடுத்துக்கொள்ளலாம் என்றும், மதிப்பீடு செய்யப்பட்ட அறிக்கைகளின் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய மேல்நடவடிக்கைகள் குறித்தும் விவாதித்து முடிவெடுக்கவும் மாநில மதிப்பீட்டுக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருத்தியமைக்கப்பட்ட இக்குழு, வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித்துறைச் செயலாளரைத் தலைவராகக் கொண்டும், மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை இயக்குநரை உறுப்பினர்-செயலராகக் கொண்டும் இயங்கி வருகிறது.

**4.6. 2008-2009 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டம்**

மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும் அலுவலர்களின் பணித் திறனை உயர்த்திடவும் ரூ.10.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# இணைப்பு III

(655 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 50—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2008–2009

இம்மானியக் கோரிக்கையில் பின்வரும் பெருந்தலைப்புகள் அடங்கியுள்ளன:

(ரூபாய்)

| | |
|---|---|
| 2071. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | 7,919,06,35,000 |
| 2235. சமூகப் பாதுகாப்பும் நலனும் — 60. ஏனைய சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டங்கள் | 13,31,67,000 |
| **மொத்தம்** | **7,932,38,02,000** |

2. இந்த மானிய கோரிக்கையின்கீழ் இடம் பெறும் முக்கியமான செலவினம், அரசுப் பணியாளர்கள் மற்றும் அரசு மானிய உதவி பெறுகின்ற கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியப் பயன்கள் அளிப்பது தொடர்பானதாகும். இந்த மானியக் கோரிக்கையில், ஓய்வூதிய இயக்குநரகத்தின் செயல்பாடுகள், விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் முன்னாள் இந்திய தேசிய இராணுவப் படை பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பிற பயன்கள் அளிப்பதும் அடங்கும். இந்த மாநிலத்தில், 31-12-2007 ஆம் நாள் நிலவரப்படி, சுமார் 5,94,680 பேர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுகின்றனர்.





இம்மாநிலத்தில் உள்ள ஓய்வூதியம் மற்றும், குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் குறித்த விவரம் வருமாறு:

| | கருவூலம் மூலம் | வங்கிகள் மூலம் | மொத்தம் |
|---|---|---|---|
| 1. மாநில அரசு ஓய்வூதியம் பெறுபவர்கள் | 2,84,679 | 32,334 | 3,17,013 |
| 2. ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்கள் | 64,200 | 4,413 | 68,613 |
| 3. அரசுப் பணியாளர் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் | 1,31,561 | 6,407 | 1,37,968 |
| 4. ஆசிரியர் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் | 27,119 | 802 | 27,921 |
| 5. ஓய்வூதியம் பெறும் ஏனைய வகையினர் | 35,203 | 7,962 | 43,165 |
| **மொத்தம்** | **5,42,762** | **51,918** | **5,94,680** |

### 3. ஓய்வூதியம்:

(i) ஓய்வூதியம் பெற தகுதி பெறுவதற்கு குறைந்தபட்சத் தகுதி பணிக்காலம் 10 ஆண்டுகளாகும். முழு ஓய்வூதியம் பெற குறைந்தபட்ச பணிக்காலம் 33 ஆண்டுகளாக இருந்ததை 30 ஆண்டுகளாக 1-4-2003 முதல் குறைத்து அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், அரசுப் பணியாளர்கள் 1-4-2003 முதல் கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 50 சதவீதம் அல்லது கடைசி 10 மாத பணிக்கால அளவில் பெற்ற சராசரி ஊதியத்தில் 50 சதவீதம் இதில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஓய்வூதியம் கணக்கிடப்படுகிறது.

(ii) அரசு 1-1-2006 முதல் 50 சதவீதம் அகவிலைப்படியை அகவிலை ஓய்வூதியம் / அகவிலை குடும்ப ஓய்வூதியமாக அனுமதித்து ஆணையிட்டுள்ளது.

(iii) குறைந்த அளவு ஓய்வூதியத்தொகை மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1275/-

**4. பணிக்கொடை:**

**(i) ஆற்றிய பணிக்கான பணிக்கொடை:**

பத்து ஆண்டுகளுக்குக் குறைவாக தகுதிப் பணிபுரிந்தவர்களுக்கு, அவர்கள் ஆற்றிய பணிக்கான பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது. முடிவுற்ற ஒவ்வொரு ஆறுமாத காலப்பணிக்கும் 1/2 மாத ஊதியம் என்ற ஒரே சீரான வீதத்தில் இப்பணிக்கொடை கணக்கிடப்படுகிறது. இது, ஆற்றிய பணிக்காக அனுமதிக்கத்தக்க ஓய்வுகாலப் பணிக்கொடையுடன் சேர்த்து ஒரே நேரத்தில் வழங்கப்படுகிற ஒட்டு மொத்தத் தொகையாகும்.

**(ii) இறப்புப் பணிக்கொடை:**

அரசுப் பணியாளர் ஒருவர் பணியில் இருக்கும்போதே மரணமடையும் நேர்வில், பின்வரும் வீதங்களில் இறப்புப் பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது:-

| பணிக்காலம் | பணிக்கொடையின் வீதம் |
|---|---|
| 1. ஓராண்டுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் இரு மடங்கு |
| 2. ஓராண்டு அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் ஐந்தாண்டுகளுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் ஆறு மடங்கு |
| 3. ஐந்தாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் இருபதாண்டுகளுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் பன்னிரண்டு மடங்கு |
| 4. இருபதாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக | அதிகபட்சம் மாத ஊதியத்தில் 33 மடங்கு என்பதற்கு உட்பட்டு, முடிவுற்ற ஒவ்வோர் ஆறு மாதத் தகுதிப் பணிக்கும் அரைமாதச் சம்பளம். ஆனால், அவ்வாறு வழங்குகிற இறப்புப் பணிக் கொடை எந்த இனத்திலும் ரூ.3.50 இலட்சத்திற்கு மேற்படக் கூடாது |





**(iii) ஓய்வுக்காலப் பணிக்கொடை:**

ஒருவர், ஐந்தாண்டும் அதற்கு மேலும் தகுதிப் பணியை முடித்திருந்தால், அவர் ஓய்வு பெறும்போது உயரளவாக மாத ஊதியத்தில் 16 ½ மடங்கு என்ற அளவிற்கு உட்பட்டு, அவர் பணியாற்றி முடித்துள்ள ஒவ்வொரு ஆறு மாத தகுதிப் பணிக்கும் மாத ஊதியத்தில் நான்கில் ஒரு பங்கு ஓய்வுக்காலப் பணிக்கொடையாக வழங்கப்படுகிறது. ஓய்வுக்காலப் பணிக்கொடையின் உச்சவரம்பை 1-1-1996-லிருந்து ரூபாய் 2.50 இலட்சத்திலிருந்து ரூபாய் 3.50 இலட்சமாக உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், 1-4-1998 அன்று அல்லது அதற்குப்பிறகு ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு அவர்கள் கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலைப்படியின் அடிப்படையில், பணிக்கொடை கணக்கிடப்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிட்டுள்ளது. 1-1-2006 முதல் வழங்கப்படும் அகவிலை ஊதியமும் இத்துடன் சேர்க்கப்படுகிறது.

**5. குடும்ப ஓய்வூதியம்:**

அரசுப் பணியாளர் ஒருவர், பணியாற்றும்போது, அல்லது ஓய்வு பெற்ற பின்னர் இறந்து விட்டால், அவரது குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையதாகும். ஒருவர் பணியிலிருக்கும்போது இறந்து விட்டால், அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதி பெற, அவர் தம்முடைய பணிக்காலத்தில் ஓய்வூதியம் பெறத்தகுதியுடைய பதவியில் தொடர்ந்து ஓராண்டுகாலம் பணியாற்றியிருக்க வேண்டும். அரசுப் பணியாளர் பணியில் இருக்கும்போது இறக்கும் நேர்வுகளில், குடும்ப ஓய்வூதியம், அவர் கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 50 விழுக்காடு, அவர் இறந்த பின்னர் 7 ஆண்டுகள்வரை வழங்கப்படுகிறது. அதன் பின்னர் குடும்ப ஓய்வூதியம் அவர் கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 30 விழுக்காடாக அளிக்கப்படும். மேலும், அரசுப் பணியாளர் ஒருவர் தொடர்ந்து ஓராண்டு காலம் பணியாற்றுவதற்கு முன்பே பணியிலிருக்கும் போது இறந்து விடுவாரேயானால், அவருடைய குடும்பத்திற்கும் குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்கப்படுகிறது. ஆனால், அந்தப் பணி அல்லது பதவியில் நியமனம் செய்யப்படுவதற்கு முன் அவரை மருத்துவ அதிகாரி மருத்துவப் பரிசோதனை செய்து அரசுப் பணிக்கு அவர் தகுதியானவர் என்று அறிவித்திருக்க வேண்டும்.

[2008 மே 14

ஓய்வு பெற்ற பின்னர் இறந்துவிட்டால், அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதிபெற, அவர் இறக்கும் போது ஓய்வூதியம் பெறுபவராக இருந்திருக்க வேண்டும். இருப்பினும், ஓய்வுபெற்ற பிறகு இறந்து விடும் நேர்வுகளில் 10 ஆண்டிற்குக் குறைவாகப் பணியாற்றி இருப்பவர்களின் குடும்பங்களுக்கும் குறைந்தளவு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. மற்றபடி ஓய்வூதியத்திற்குத் தகுதியுடையவர் அல்லர்.

விதவைக்கு / மனைவியை இழந்த கணவனுக்கு, அவர், மறுமணம் செய்து கொள்ளும் வரையில் அல்லது இறக்கும் வரையில் இதில் எது முந்தியதோ அதுவரையில் அவருக்குக் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. அவருடைய இறப்பிற்குப் பிறகு, அவருடைய குழந்தைகளுக்கு 25 வயது ஆகும் வரையிலோ அல்லது அவர்கள் திருமணம் செய்துகொள்ளும் வரையிலோ இதில் எது முந்தியதோ அதுவரை குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது. எனினும், அத்தகைய மகன் அல்லது திருமணமாகாத மகள் 25 வயதை அடைந்த பிறகும்கூட, பொருள் ஈட்ட அல்லது வாழ்க்கை நடத்த இயலாத அளவுக்கு மனநலம் குன்றியவராக அல்லது மனநலமற்றவராக இருந்தாலோ, உடல் ஊனமுற்றவராக அல்லது ஏலாமையுற்றவராக இருந்தாலோ அவருக்கு, வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படும். குறைந்தளவு குடும்ப ஓய்வூதியம் மாதமொன்றுக்கு ரூபாய் 1,275/- ஆகும்.

### 6. கருணைத் தொகை வழங்குதல்:

வருங்கால வைப்பு நிதிக்குப் பங்குத் தொகை செலுத்தி, இறந்துவிட்ட பணியாளர்/மாநில அரசின் ஓய்வூதியமில்லாத பணியாளர் அமைப்பைச் சேர்ந்தவர்களின் குடும்பங்களுக்கும், 1-1-1986-க்கு முன் பணியிலிருந்து ஓய்வுபெற்ற/பணியிலிருக்கும் போது இறந்துவிட்ட முன்னாள் மாவட்ட வாரியப் பணியாளர்களுக்கும், குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியில்லாத நபர்களுக்கும் 1-11-1997 முதல் ரூபாய் 31 அகவிலைப்படியுடன் சேர்த்து மாதமொன்றுக்கு வழங்கப்படும் கருணைத் தொகையை ரூபாய் 150-லிருந்து ரூபாய் 605 ஆக உயர்த்தி அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. இவர்கள், 1-1-1998 முதற்கொண்டு வழங்கப்படும் அகவிலைப்படி உயர்வையும் பெறத் தகுதியுடையவர்கள்.

### 7. ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாக அளித்தல்:

ஓய்வூதியம் பெறுவோர், தமது ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியாக $33^1/_3$ விழுக்காடு வரையிலான ஓய்வூதியத் தொகையினை ஒட்டு மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். ஓய்வூதியம் வழங்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டுக்குள் அவர்கள், விண்ணப்பித்திருந்தால், மருத்துவப் பரிசோதனை இல்லாமல், ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாகப் பெற மாநிலக் கணக்குத் துறைத் தலைவரால் அனுமதி வழங்கப்படுகிறது. இச்சலுகை, விருப்பத்தின்பேரில் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஓய்வு பெற்ற நாளும், ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்றுக் கொண்ட நாளும் ஒரே நாளாக இருக்குமாயின் அவ்வாறு ஓய்வு பெற்றவர் அவர் ஓய்வு பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகு அல்லது ஓய்வு பெற்ற பிறகு இரண்டாவது மாதத்திலோ அல்லது அதன் பின்னரோ ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்றிருந்தால் அவ்வாறு ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகு ஓய்வூதியத்தில் குறைக்கப்பட்ட பகுதியை மீண்டும் சேர்த்தளித்து முழுமையாக ஓய்வூதியம் பெற்றிட அரசு அனுமதியளித்துள்ளது.



2008 மே 14]

### 8. ஏனைய ஓய்வுக்காலப் பயன்கள்

(i) ஓய்வு பெறும்போது கணக்கிலுள்ள ஈட்டிய விடுப்பில், உயரளவு 240 நாட்களுக்கான ஈட்டிய விடுப்பை, ஒப்படைப்பு செய்து விடுப்புச் சம்பளம் பெற அனுமதிக்கப்படுகிறது.

(ii) ஓய்வு பெறும்போது, பணியாளர் கணக்கில் உள்ள சொந்த அலுவலுக்கான விடுப்பில், அதிகபட்சமாக 180 நாட்களை 90 நாட்களாக மாற்றி முழு சம்பளத்திற்கு ஒப்படை செய்து ரொக்கம் பெற அனுமதிக்கப்படுகிறது.

(iii) ஈட்டிய விடுப்பின் முழு அளவினையும் சொந்த அலுவல்கள் குறித்த அரை சம்பள விடுப்பினையும் காசாகப் பெற அடிப்படைச் சம்பளத்துடன் அகவிலை ஊதியமும், அகவிலைப்படியும், வீட்டு வாடகைப்படியும் நகர ஈட்டுப்படியும் சேர்த்துக் கணக்கிட்டு வழங்கப்படுகிறது.

(iv) ஓய்வு பெறும் பணியாளர் ஓய்வு பெற்ற பின்னர் தன்னுடைய சொந்த ஊருக்கு அல்லது தான் சென்று வசிக்க விரும்பும் ஊருக்குச் செல்வதற்கான பயணப்படி வழங்கப்படுகிறது.

[2008 மே 14

**9. ஓய்வூதியம் பெறுவோருக்கான ஏனைய பயன்கள்:**

**(அ) அகவிலைப்படி**

(i) ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு / குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு, அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படுவது போலவே அகவிலைப்படி வழங்கப்படுகிறது.

(ii) மாநில அரசின் ஓய்வூதியம் பெறும் இராணுவ ஓய்வூதியதாரர்கள், மத்திய அரசின் ஓய்வூதியத் தொகைக்கான அகவிலைப்படியுடன், மாநில அரசின் ஓய்வூதியத்திற்கான அகவிலைப் படியையும் சேர்த்துப் பெற அனுமதிக்கப் படுகின்றனர்.

**(ஆ) மருத்துவப்படி**

ஓய்வூதியம் பெறுவோருக்கு / குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்குத் திங்களொன்றுக்கு ரூ.50 மருத்துவப் படி வழங்கப்படுகிறது.

தற்காலிக ஓய்வூதியம் பெறுபவர்கள்/ குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் அகவிலைப்படி மற்றும் மருத்துவப்படி பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

**(இ) பொங்கல் பரிசு**

அரசு (அனைத்திந்திய பணி உட்பட), மானியம் பெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி மன்றங்களின் அனைத்துவகை தனி ஓய்வூதியதாரர்கள் உட்பட ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் அனைவருக்கும் ஒருமொத்த பொங்கல் பரிசுத் தொகையாக ரூபாய் 150-லிருந்து ரூபாய் 300 (ரூபாய் முன்னூறு மட்டும்) 2008 ஆண்டு முதல் உயர்த்தி வழங்குகிறது.

**10. ஓய்வூதியம் பெறுவோர் நல நிதித் திட்டம்:**

தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் நல நிதி என்ற ஒரு நிதியை ஏற்படுத்தி, ஓய்வூதியம் பெறுவோருக்கு சிறப்பு மருத்துவச் சிகிச்சை / அறுவை சிகிச்சை மேற்கொள்வதற்காக அந்நிதியிலிருந்து நிதியுதவி அளிக்கும்பொருட்டு, 1-7-1995 முதல் தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் நல நிதித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு ஓய்வூதியர்களிடமிருந்து மாதமொன்றுக்கு ரூபாய் 10 பிடித்தம் செய்யப்படுகின்றது. இது தற்பொழுது



2008 மே 14]

ரூபாய் 50 ஆக உயர்த்தி பிடித்தம் செய்யப்படுகிறது. ஓய்வூதியர் மேற்கொள்ளும் மொத்த மருத்துவச் செலவினத்தில் 75 விழுக்காடோ அல்லது ரூபாய் 50,000 இவற்றில் எது குறைவோ அத்தொகை இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிறது. 1-4-2008 முதல் இந்த உச்சவரம்பு ரூபாய் ஒரு இலட்சமாக தற்பொழுது உயர்த்தி வழங்கப்படுகிறது. அரசு வெளியிட்ட பட்டியலில் உள்ள சிறப்பு சிகிச்சை/அறுவை சிகிச்சைக்கான செலவினத்தை பட்டியலில் இல்லாத மருத்துவமனையிலும் மேற்கோண்டால் அச்செலவினத்தை மாவட்ட மருத்துவ அலுவலர்/ஊரக மருத்துவ நல இயக்குநர்/மருத்துவக் கல்வி இயக்குநர் ஆகியவர்களின் உரிய சான்றுடன் திரும்ப அளிக்க ஆணையிடப்பட்டுள்ளது. 31-01-2008 வரை ஓய்வூதியர்களிடமிருந்து பெறப்பட்ட 36,043 விண்ணப்பங்களுக்கு ரூபாய் 38.47 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் ரூபாய் 8 லட்சம் வரை அரசு உதவித் தொகை வழங்குகிறது. மேலும், தேங்கியுள்ள விண்ணப்பங்களைத் தீர்வு செய்யும்பொருட்டு 2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ரூபாய் 5 கோடியும் மார்ச் 2008-ல் மானியமாக ரூபாய் 10 கோடியும் இத்திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

**11. ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம்:**

தமிழ்நாடு அரசு, ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம் என்றதொரு திட்டத்தை 1-1-1997 முதல் தொடங்கி செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்படி, ஓய்வூதியம் பெறுவோர் இறக்கும் காலம்வரை அவர்தம் ஓய்வூதியத்திலிருந்து மாதந்தோறும் தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதிக்கு ஒரே சீராக ரூபாய் 70 பிடித்தம் செய்யப்படுகிறது. இந்த நிதி 1-1-1998-லிருந்து செயல்படுத்தப்படுகிறது. இந்த நிதிக்கு ஓர் ஆண்டு தொகை செலுத்திய பிறகு, இறக்க நேரிடும் ஓய்வூதியதாரரின் குடும்பத்திற்கு ரூபாய் 25,000 வழங்கப்படும். 31-01-2008 முடிய இத் திட்டத்தில் 73,314 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. ரூபாய் 183.90 கோடி அளவிற்கு இறந்துபோன ஓய்வூதியரின் குடும்பங்களுக்கு குடும்பப் பாதுகாப்பு நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

**12. உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள் உட்பட அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கு ஓய்வூதியம்:**

அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கும், உள்ளாட்சி மன்றப் பணியாளர்களுக்கும் மாநில அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்படுவது போன்றே ஓய்வு காலப் பயன்கள் அனுமதிக்கப்படுகின்றன.

[2008 மே 14

**13. கடந்த ஆண்டுகளில் ஓய்வூதியம் மற்றும் ஓய்வுகாலப் பயன்கள் குறித்து ஏற்பட்டுள்ள செலவு வருமாறு:**

| ஆண்டு | ஓய்வூதியம் மற்றும் ஓய்வு காலப் பயன்கள் குறித்த மொத்தச் செலவு (ரூபாய் கோடியில்) | மொத்த வருவாய் கணக்கு வரவுகளில் சதவீதம். |
|---|---|---|
| 1998-1999 | 1691.42 | 11.45 |
| 1999-2000 | 2668.41 | 16.46 |
| 2000-2001 | 2927.24 | 15.48 |
| 2001-2002 | 3050.48 | 16.07 |
| 2002-2003 | 3488.20 | 16.86 |
| 2003-2004 | 3279.96* | 13.84 |
| 2004-2005 | 3921.05 | 13.78 |
| 2005-2006 | 4488.83 | 13.22 |
| 2006-2007 | 5461.68 | 13.35 |
| 2007-2008 திருத்திய மதிப்பீடு | 6751.25 | 14.51 |
| 2008-2009 திட்ட மதிப்பீடு | 7932.38 | 15.40 |

* நிலுவைத் தொகை வழங்குவது தள்ளி வைக்கப்பட்டதன் காரணமாக குறைந்தளவு செலவினம்.

**14. பங்களிப்புத் தொகையுடன் கூடிய ஓய்வூதியத் திட்டம்:**

1-4-2003 ஆம் நாளுக்குப் பின்னர் பணியில் சேர்ந்துள்ள புதிய பணியாளர்கள் பங்களிப்புத் தொகையுடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். 1-4-2003-க்குப் பின்னர் பணியில் புதியதாக பணியமர்த்தப்பட்ட அரசுப்



2008 மே 14]

பணியாளர்களிடமிருந்து புதிய ஓய்வூதியத் திட்டத்திற்குச் சந்தாவாக அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப் படியில் 10 சதவீதம் பிடித்தம் செய்யப்படுகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் அதற்குச் சமமான அளவு அரசு பங்குத் தொகை செலுத்துகின்றது. மாநில கணக்காயர் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கணக்குகளை தற்போது நிர்வகித்து வருகிறார். ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணையம் (PFRDA) முழுமையாக செயல்படத் தொடங்கியதும் இந்தத் தொகைகள் அதற்கு மாற்றப்படும்.

**ஓய்வூதிய இயக்ககம்**

15. ஓய்வூதியம் பெறத் தகுதியுள்ள மாநில அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஓய்வுபெற்ற பின் ஓய்வூதிய விதிகளின்கீழ் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் ஓய்வூதியத்தை மாவட்டக் கருவூலங்கள், ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் மற்றும் பொதுத் துறை வங்கிகள் மூலம் பெற்று வருகின்றனர். இவர்களைத் தவிர குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கும் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. மேலும், ஓய்வூதியர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் பெருகிக்கொண்டே வருகிறது. இவர்களுக்கு ஓய்வூதியம் சம்மந்தமாக பல்வேறு பிரச்சினைகள் காலப்போக்கில் எழுகின்றன. அவைகளில் முக்கியமானவை ஓய்வூதியம் கணக்கிடுவதற்கு விடுபட்ட பணிக்காலம், திருத்திய ஓய்வூதிய நிர்ணயம், ஓய்வூதியம் கிடைக்கப்பெறாமை போன்ற பிரச்சினைகள் இருந்து வருகின்றன. இந்த பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள வயதான ஓய்வூதியதாரர்கள் தாங்கள் பணிபுரிந்த பல்வேறு அலுவலகங்களுக்குச் சென்று விவரங்களைப் பெற மிகுந்த சிரமப்படுகிறார்கள். ஓய்வூதியதாரர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் அவர்களின் நலன்களைக் காப்பதற்கும் அவர்களுக்கென்று ஒரு தனி அமைப்பு தேவை எனக்கருதி அவர்களுக்கு ஒரு ஓய்வூதிய இயக்ககத் துறையை 01-09-1994 முதல் நடைமுறைப்படுத்திட தமிழக அரசு ஆணையிட்டது. இந்த ஓய்வூதிய இயக்ககம் அரசு நிதித் துறையின் இணைச் செயலர் நிலையில் ஒரு இயக்குநரையும், அரசு நிதித் துறையின் துணைச் செயலர் நிலையில் ஒரு இணை இயக்குநரையும், சார்புச் செயலர் நிலையில் ஒரு துணை இயக்குநரையும் மற்றும் ஆதாரப் பணியாளர்களையும் கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்த இயக்குநரகம் தற்போது கீழ்வரும் பணிகளைச் செய்து வருகிறது.

(i) ஓய்வூதியர்கள் குறைகளை தீர்த்தல்.

[2008 மே 14

(ii) ஓய்வூதிய அதாலத் அமைப்பு அலுவலர் பணி.

(iii) அனைத்து அரசு அலுவலர்களும் / தலைமை துறை அலுவலர்களும் ஓய்வூதிய கருத்துருவினை மாநில கணக்காயர்களுக்கு உரிய நாளில் அனுப்பினார்களா என்பதனை உறுதி செய்தல் மற்றும் ஆய்வு செய்தல்.

(iv) மாநில கணக்காயர் அலுவலகத்தில் தொடர்பு கொண்டு ஓய்வுபெறும் நபர்களுக்கு ஓய்வு பெறும் நாளன்று அனைத்து ஓய்வூதிய பயன்களும் தாமதமின்றி பெற்றிட ஆவன செய்தல்.

(v) ஓய்வூதியர்கள் கோரும் தெளிவுரைகளை வழங்கிடல்.

(vi) தமிழ்நாடு தொழிற்சாலை பணியாளர்களது சேமநல நிதித் திட்டமும் அது தொடர்பான பணிகளை மேற்கொள்ளல்.

(vii) தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்கள் மருத்துவ நலநிதித் திட்டம் 1995.

(viii) தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்கள் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம் 1997.

(ix) கருவூலக் கணக்குத் துறையில் பராமரிக்கப்பட்டு வந்த சிறப்பு சேமநலநிதி திட்டம் 1984-ஐ இத்துறைக்கு மாற்றம் செய்து அப்பணிகளை இத்துறையில் கவனித்தல்.

(x) தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம் 2000.

(xi) தமிழ்நாடு சமூகப் பாதுகாப்பு திட்டம் 1974.

**ஓய்வூதியர்கள் குறை தீர்வு:**

16. மாவட்டங்களில் ஓய்வூதியர்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நான்கு மாதங்களுக்கு ஒருமுறை மாவட்ட ஆட்சித் தலைவரால் நடத்தப்பட்டு வருகிறது. இயக்குநரக அலுவலர் ஒருவர் இக் கூட்டத்தில் பங்கேற்று அம்மாவட்டத்தில் உள்ள ஓய்வூதியர்கள் குறைகளைக் கேட்டறிந்து, விரைந்து தீர்த்திட மாவட்ட ஆட்சியருக்கு உதவி புரிதல், மாநில கணக்காயர் அலுவலகத்தில் அது சம்பந்தமாக கோப்பு நிலுவையில் இருந்தால் தொடர்பு கொண்டு தொடர் நடவடிக்கை இவ்வியக்ககத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



2008 மே 14]

நேரடியாகவோ அல்லது முதலமைச்சரின் தனிப்பிரிவு மூலமாகவோ பெறப்படும் மனுக்களைக் கருணையுடன் பரிசீலித்து, அவர்களது துறைத் தலைவர்களுடன் தொடர்புகொண்டு ஓய்வூதியர்கள் குறைகள் தீர்க்கப்பட்டு வருகின்றன. ஓய்வு பெறும் அரசு அலுவலர்கள் தாமதமின்றி உடனடியாக தங்களது ஓய்வூதியப் பயன்களைப் பெற்றிடத்தக்க பணி மேற்கொள்ளப்படுகின்றன.

**ஓய்வூதியர் அதாலத்**

17. ஓய்வூதியர்களின் குறை தீர்க்கும் அதாலத் தமிழ் நாடு சட்டப் பணிகள் ஆணை குழுவால் உயர்நீதிமன்ற வளாகத்தில் 22-02-2002 முதல் அமைக்கப்பட்டு செயல்படுகிறது. ஓய்வூதிய அதாலத்தால் வழங்கப்படும் கட்டளைகளின்மீது தொடர் நடவடிக்கை எடுத்திட, அரசு, ஓய்வூதிய இயக்குநர், தலைமைச் செயலக நிர்வாகத் துறை சார்பாளர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் மாநில கணக்காயர் சார்பாளர் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு குழுவினை அமைத்துள்ளது. ஓய்வூதிய இயக்குநர் ஓய்வூதிய அதாலத் அமைப்பு அலுவலராவார் (Nodal Officer), மாதந்தோறும் இந்த அதாலத் நடைபெறுகிறது. மேலும், அதிக அளவில் ஓய்வூதியர் பயனடைந்திடும் வகையில் இது டிசம்பர் 2003 முதல் மாதமிருமுறை நடைபெறுகிறது. 31-01-2008 வரை பெறப்பட்ட 888 மனுக்கள் மீதான வழக்கு விசாரிக்கப்பட்டு 670 வழக்குகள் தீர்வு செய்யப்பட்டுள்ளன.

**ஓய்வூதியர்களுக்கான வழிகாட்டி**

18. ஓய்வூதியப் பயன்களை ஓய்வூதியர்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு வழிகாட்டி ஏடு ஒன்று தயார் செய்யப்பட்டு இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. (www.tn.gov.in/dop) ஓய்வூதியப் படிவங்கள் இணைய தளத்தில் இருந்து உடனடி உபயோகத்திற்காக பெற்றுக் கொள்ளலாம். மின் அஞ்சல் மூலமாகவும் இத்துறையுடன் தொடர்பு கொள்ளலாம். இத்துறைக்கான மின் அஞ்சல் குறியீடு dop@tn.nic.in

**தமிழ்நாடு அரசு தொழிற்சாலை தொழிலாளர் வருங்கால வைப்புநிதித் திட்டம் 1969:**

19. அரசுத் தொழில் நிறுவனங்களில் தினக்கூலி பணியாளர்களின் நலம் கருதி இத்திட்டம் 1969 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்காக 01-04-1989-க்கு முன்னர் பணியாளர்களின்

[2008 மே 14

கூலித் தொகையில் 8.33 சதவீதத் தொகை சந்தாவாகவும் அதற்கு சரிசமமான அளவு நிறுவனரின் பங்குத் தொகையாகவும் அளிக்கப்பட்டு வந்தது. 01-04-1989-க்குப் பின்னர் பணியாளரின் கூலித் தொகையில் 10 சதவீதத் தொகை சந்தாவாகவும் அதற்கு சரிசமமான அளவு அரசு பங்காகவும் வழங்கப்பட்டு வருகிறது. விவசாயம், வனத் துறை, பொதுப் பணித் துறை, கால்நடைப்பராமரிப்பு, பட்டு வளர்ச்சித் துறை, தோட்டக்கலைத் துறை மற்றும் விதைப்பண்ணைகள் போன்ற அரசு துறைகள் சார்ந்த 453 அலகுகள் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டு 20,215 உறுப்பினர்கள் இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தில் கணக்குகள் முழுவதும் கணினிமயமாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ரூ.47 கோடி அளவிலான வருவாய், அரசு தன் வைப்புக் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு அரசு சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடை திட்டம் 1984:**

20. இந்தத் திட்டம் 01-04-1984 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாதம் ரூ.20/- வீதம் 148 மாதங்கள் வரை அரசுப் பணியாளரிடம் பிடித்தம் செய்யப்பட்டு, அத்தொகை பணியிலிருந்து ஓய்வுபெறும்போது, அவர் செலுத்திய சந்தாத் தொகை வட்டி மற்றும் அரசின் பங்குத் தொகையாக ரூ.5,000/-ம் கொடுக்கப்படுகிறது. இத்தொகை 15-09-2000 முதல் ரூ.10,000/-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம் 2000:**

21. இத்திட்டம் 01-10-2000 முதல் எல்லா நிரந்தர அரசுப் பணியாளர்களுக்கும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

அ. இத்திட்டத்தில் ரூ.50/- வீதம் மாதா மாதம் செலுத்தி ஓய்வு பெறும் மாதத்திற்கு முன்மாதம் வரை செலுத்தலாம். அத்தொகை ஓய்வு பெறும்போது வட்டியுடன் திரும்ப வழங்கப்படுகிறது.

ஆ. இத்திட்டத்தில் 01-10-2000 அன்று அதற்குப்பின் பணியில் சேருபவர்களுக்கு இத்திட்டம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதன் சந்தா தொகை ரூ.70/- ஆகும். இத்தொகையுடன் வட்டியும், அரசின் பங்குத் தொகை ரூ.10,000/- பணியில் இருந்து ஓய்வுபெறும்போது திரும்ப வழங்கப்படுகிறது.



2008 மே 14]

**தமிழ்நாடு சமூகப் பாதுகாப்புத் திட்டம் 1974:**

22. தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு சமூக பாதுகாப்பு திட்டம் 1974-ஐ எல்லா பிரிவு மக்களும், முக்கியமாக கூலித் தொழிலாளர் மற்றும் சுய தொழில் செய்வோர் பயனடைந்திட 1975ஆம் வருடம் முதல் துவக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் பொதுமக்கள் மாத சந்தாத் தொகை முறையே ரூ.10/-, ரூ.20/-, ரூ.30/- மற்றும் ரூ.60/- என மாதா மாதம் செலுத்தக் கூடிய ஏழுவகை பிரிவுகள் உள்ளன. அதன்படி சந்தாதாரர்கள் மாத ஓய்வூதியமாக ரூ.20/-, ரூ.35/-, ரூ.60/- மற்றும் ரூ.100/- என 30 வருடங்களுக்கு தொடர்ந்து ஓய்வூதியமும், திட்ட இறுதியில் ஒட்டு மொத்தத் தொகையும் பெறலாம். இதில் சந்தாதாரர்களுக்கும் அரசுக்குமிடையேயான ஒப்பந்தப்படி சந்தா காலம் முடிவடைந்தபின் 30 ஆண்டுகளுக்கு ஓய்வூதியத் தொகை வழங்கப்படும். சந்தா சேகரிப்பு 1982 உடன் நிறுத்தப்பட்டுவிட்ட போதிலும் இத் திட்டத்தின் ஆயுட் காலம் 2037 வரை தொடரும். தற்பொழுது இவ்வியக்ககத்தில் அதற்கான எஞ்சியுள்ள பணிகள் கவனிக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு பவர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் மற்றும் தமிழ்நாடு டிரான்ஸ்போர்ட் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷனில் ரூபாய் 25.53 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த இயக்ககம் ஓய்வூதியதாரர்களின் அனைத்து பிரச்சினைகளையும் தீர்ப்பதற்குண்டான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தேவைப்படும்போது சம்மந்தப்பட்ட துறைகளை நேரடியாக தொடர்புகொண்டு பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதால் இதுபோன்ற சிரமமான சூழ்நிலையிலிருந்து வயதான ஓய்வூதியதாரர்கள் விடுபட வழி காணப்படுகிறது.

**விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் முன்னாள் இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கும் ஓய்வூதியம் மற்றும் ஏனைய பயன்கள்:**

23. விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டு நமது நாட்டின் விடுதலைக்காக சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்த தியாகிகளுக்கும், அவர்தம் குடும்பத்தினருக்கும் உதவிகள் வழங்குவதில் தமிழ்நாடு அரசு எப்பொழுதும் முன்னுரிமை அளித்து வருகிறது. அவர்களின் நலனுக்காக, விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம், மருத்துவ வசதி, இலவசப் பேருந்து வசதி, வீடுகள்

[2008 மே 14

ஒதுக்கீடு மற்றும் அரசு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை போன்ற பல திட்டங்களை தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகின்றது.

24. பொதுத் துறையின் 28-9-1966-ம் நாளிட்ட அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள வரைமுறைப்படி தமிழ்நாடு அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத் திட்டம் 1-10-1966 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டதற்காக மூன்று மாத காலத்திற்குக் குறையாமல் சிறையில் அடைக்கப்பட்டவர்களும், துப்பாக்கிச் சூட்டிலும் அல்லது காவலர் தடியடியிலும் நிரந்தரமாக ஊனமுற்றவர்களும் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெற தகுதியுடையவர்களாவர். மேலும், இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களும் 1946 ஆம் ஆண்டு கடற்படை கலகத்தில் பங்கு கொண்டவர்களும், மதுரை சதித்திட்ட வழக்கில் சிறைத் தண்டனை பெற்றவர்களும் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்கள் என பின்னர் அறிவிக்கப்பட்டது. மேலும், சுதந்திரப் போராட்டத்தின் போது கைது வாரண்ட் பிறப்பிக்கப்பட்டதைத் தவிர்ப்பதற்காக தலைமறைவாக இருந்து சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டவர்களும், சொத்து பறிமுதல் செய்யப்பட்டவர்களும், அரசுப் பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டவர்களும், அதற்கு ஆதாரமாக நீதிமன்ற அல்லது அரசு ஆவண ஆதாரங்களைச் சமர்ப்பித்தால், விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்கள் எனவும் அறிவிக்கப்பட்டது. ஓய்வூதியம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளில் ஒன்றான மூன்று மாத கால சிறைவாசம் என்பது மூன்று வார காலம் என 01-04-1980 முதல் குறைக்கப்பட்டது. இந்த ஓய்வூதியம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த வருமான உச்ச வரம்பு 11-03-1983 முதல் நீக்கப்பட்டது.

25. விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெற விரும்புபவர்கள் தாங்கள் சிறைத் துன்பம் அனுபவித்ததை நிரூபிக்கும் பொருட்டு அதற்கு ஆதாரமாக நீதிமன்ற ஆணை அல்லது சிறைத் துறை ஆவணத்தின் உரிய பகுதியின் நகல் ஒன்றை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். மேற்படி ஆவணங்கள் கிடைக்காத நிலையில், 1980 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முன்பு செயல்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்கும் 'சககைதி' சான்றிதழ்கள், மனுதாரர்கள் சிறைத் தண்டனை அனுபவித்ததற்கான ஆதாரமாக, 1-1-1980 முதல் ஏற்றுக்



2008 மே 14]

கொள்ளப்பட்டன. ஆனால் இந்த முறையில் சில குறைபாடுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதால், இவ்வாறு சட்டமன்ற உறுப்பினர்களால் வழங்கப்படும் 'சககைதி' சான்றினை ஏற்கும் முறை 1988 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டது. பொதுத் துறையின் 16-11-1988 நாளிட்ட அரசு ஆணையின்படி மாநிலம் முழுவதற்கும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட பதினைந்து சான்றாளர்களுள் எவரேனும் இருவரிடமிருந்து 'சககைதி' சான்று பெற்று விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டது. பின்னர், இந்த முறையிலும் சிரமங்கள் உள்ளன என அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதால், 7-2-1996 ஆம் நாளிட்ட பொதுத் துறையின் அரசு ஆணையின்படி மாவட்ட ஆட்சியரைத் தலைவராகவும், மாவட்ட வருவாய் அதிகாரியை துணைத் தலைவராகவும், அனைவரும் அறிந்த மூன்று தியாகிகளை உறுப்பினர்களாகவும், அனைவரும் அறிந்த இரண்டு தியாகிகளை சான்றளிப்பவர்களாகவும் கொண்டு மாவட்ட அளவிலான சீராய்வுக் குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டது. இக்குழுவின் உறுப்பினர்களாகவும், சான்றளிப்பவர்களாகவும் உள்ள தியாகிகள் நீதிமன்ற மற்றும் சிறைத் துறை மூல அரசு ஆவணங்களின் அடிப்படையில் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறுபவராக இருத்தல் வேண்டும். விடுதலைப் போராட்ட ஓய்வூதியம் கோருபவர் தாம் சிறைத் தண்டனை அடைந்த காலத்தில், 18 வயது நிரம்பியவராக இருந்திருக்க வேண்டும். வரையறுக்கப்பட்ட படிவத்தில், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கு ஓய்வூதியம் கோரி விண்ணப்பம் அனுப்பப்படவேண்டும். அரசால் வகுக்கப்பட்ட நெறிமுறைகளின்படி மாவட்ட சீராய்வுக் குழுவினால் இந்த விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு அரசுக்குப் பரிந்துரை செய்யப்படும்.

26. சுதந்திரப் போராட்ட வீரர்களின் பல்வேறு சங்கங்கள் விடுதலைப் போராட்ட ஓய்வூதியத்தை மாநில அரசு உயர்த்த வேண்டும் என்று நீண்ட காலமாக கோரிக்கைகள் வைத்தன. அதனை ஏற்றுக் கொண்டு இந்த அரசு 1-5-2007 முதல் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மாநில ஓய்வூதியத்தை மாதம் ஒன்றுக்கு ரூ.3,000/-லிருந்து ரூ.4,000/-ஆகவும், அவர்களின் வாரிசுகளுக்கு குடும்ப ஓய்வூதியத்தை மாதம் ஒன்றுக்கு ரூ.1,500/-லிருந்து ரூ.2,000/-ஆகவும் உயர்த்தி வழங்கி வருகிறது.

27. விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் அரசால் அவ்வப்போது உயர்த்தப்பட்ட விபரம் இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

28. மாநில அரசின் ஓய்வூதியம் பெற்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர் இறந்தால், இந்த ஓய்வூதியத் தொகையானது அன்னாரின் மனைவிக்கு/கணவருக்கு/ உரிய வயதடையாத குழந்தைகளுக்குத் தொடர்ந்து குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. மேற்படி ஓய்வூதியம் பெற்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர்களின் மகனோ அல்லது மகளோ மனவளர்ச்சி குன்றியவராகவோ அல்லது நிரந்தர உடல் ஊனமுற்றவராகவோ இருக்க நேர்ந்தால், அவர்களது வாழ்நாள் முழுமைக்கும் தொடர்ந்து ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இந்தக் குடும்ப ஓய்வூதியத் தொகையும் அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது. இதன் விபரம் இணைப்பு 2-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

29. விடுதலைப் போராட்ட இயக்கத்தில் பங்கு கொண்டு நாட்டிற்காக குறிப்பிடத்தக்க வகையில் சிறப்புறப் பணியாற்றிய மேலோரின் தியாகத்தைப் பாராட்டி அவர்களது வாரிசுகளுக்கும் சிறப்பு ஓய்வூதியமானது அரசால் வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித்தோன்றல்கள் 132 பேர்களுக்கும், வீரபாண்டிய கட்டபொம்மனின் நேரடியான முதுநிலை வழித்தோன்றல்கள் 7 பேர்களுக்கும், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் மன்னர் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியின் தகுதியான வழித்தோன்றல்கள் 80 பேர்களுக்கும் அவர்கள் வாழ்நாள் முழுவதற்கும் மாதம் ஒன்றிற்கு ரூபாய் 500/- வீதம் அரசியல் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

30. விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் அவர்களது வாரிசுகளுக்கும் வழங்கப்படும் ஏனைய சலுகைகள் பற்றிய விவரம் பின்வருமாறு:

**(அ) மருத்துவ வசதிகள்:**

விடுதலைப் போராட்ட வீரர்கள் அல்லது அவரது வாரிசுதாரர்களுக்கு அரசு மருத்துவமனைகளில் 'அ' வகுப்பு வார்டு வசதிகளுடன் இலவச மருத்துவ சிகிச்சை வழங்கப்படுகிறது. மேலும் மைய அரசிடமிருந்தோ அல்லது மாநில அரசிடமிருந்தோ அல்லது இரண்டு அரசுகளிடமிருந்தோ ஓய்வூதியம் பெற்று வருகின்ற



அனைத்து விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் / விதவைகளுக்கும்/ உரிய வயதடையாத குழந்தைகளுக்கும் மாதம் ஒன்றிற்கு ரூ.15/- வீதம் மருத்துவப்படி வழங்கப்படுகிறது.

**(ஆ) போக்குவரத்து வசதி:**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில், மைய மற்றும் மாநில அரசு ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும்/விதவைகளுக்கும் அவர்களின் சட்டப்படியான வாரிசுகளுக்கும், இலவசமாகப் பயணம் செய்ய சலுகைகள் வழங்கப்பட்டு வருகிறது.

**(இ) வீட்டு வசதி:**

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு, தமிழ்நாடு மாநில வீட்டு வசதி வாரியம் ஒதுக்கீடு செய்யும் வீடுகளில் / மனைகளில் / அடுக்கு மாடி வீடுகளில், பொதுமக்களுக்கு ஒதுக்கப்பட்ட 37 சதவிகிதத்திலிருந்தும், ஆதி திராவிடர்/ பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட 18 சதவிகிதத்திலிருந்தும் மற்றும் சலவையாளர்/ நாவிதர்களுக்கு ஒதுக்கப்பட்ட 5 சதவிகிதத்திலிருந்தும், தலா ஒரு சதவிகிதம் வீதம் ஒதுக்கப்படுகிறது.

**(ஈ) வேலைவாய்ப்பில் முன்னுரிமை:**

விடுதலைப் போராட்டத் தியாகிகளின் சட்டப்படியான வாரிசுகளுக்கு, அரசுத்துறைகளுக்கும் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கும் வேலைவாய்ப்புக்குத் தகுதியான பெயர்ப்பட்டியல் வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து அனுப்பப்படும்பொழுது, முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

**(உ) ஈமச்சடங்குச் செலவு:**

விடுதலைப் போராட்ட வீரர் இறந்தால், அவர்தம் ஈமச் சடங்குச் செலவுக்காக விடுதலைப் போராட்ட வீரரின் மனைவிக்கு அல்லது அவருடைய நேரடி வாரிசுதாரர்களுக்கு உதவித் தொகையாக ரூ.2,000/- உடனடியாக வழங்கப்பட்டு வருகிறது. இறந்துபோன விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில், வட்டாட்சியருக்குக் குறையாத பதவியிலுள்ள வருவாய்த் துறை அலுவலர் ஒருவரால் அரசு சார்பில் மறைந்தவரின் உடல் மீது

மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தப்படுகிறது. மாநில அரசின்/ மைய அரசின் ஓய்வூதியம் அல்லது இவ்விரண்டு ஓய்வூதியங்களையும் பெறுகின்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவருக்கும் இது பொருந்தும்.

31. தற்போது மாநில அரசின் பல்வேறு வகையான ஓய்வூதியங்களைப் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | மாநில ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் எண்ணிக்கை (ரூ.4,000/- + ரூ.15 மருத்துவப்படி) | 882 |
| 2. | மாநில அரசின் குடும்ப ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுதாரர்களின் எண்ணிக்கை (ரூ.2,000/- +ரூ. 15/- மருத்துவப்படி) | 2220 |
| 3. | வீரபாண்டிய கட்டபொம்மன் வழித்தோன்றல்கள் (ரூ. 500/- மாதம் ஒன்றுக்கு) | 7 |
| 4. | சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித்தோன்றல்கள் (ரூ. 500/- மாதம் ஒன்றுக்கு) | 132 |
| 5. | மன்னர் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியின் வழித்தோன்றல்கள் (ரூ. 500/- மாதம் ஒன்றுக்கு) | 80 |

**மைய அரசின் ஓய்வூதியத் திட்டம்:**

32. மைய அரசும் விடுதலைப் போராட்ட வீரர்கள் ஓய்வூதியத் திட்டத்தை 15-08-1972 ஆம் நாள் முதல் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்படி வழங்கப்படும் சலுகைகள் பின்வருமாறு:

(i) மைய அரசு சுதந்திரப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறுவதற்கு, விடுதலைப் போராட்ட இயக்கத்தில் பங்கு கொண்டு குறைந்தபட்சம் ஆறு மாதங்கள் சிறைத்துன்பம் அனுபவித்தவர்கள் தங்களது சிறைத்துன்பத்திற்கு ஆதாரமாக சிறைச்சான்று சமர்ப்பித்தால், தகுதியுடையவராகிறார்கள். அவ்வாறு சிறைச்சான்று சிறை ஆவணங்களில் இல்லாத நேர்வில், சம்பந்தப்பட்ட சிறை நிர்வாகத்திடமிருந்து



பெறப்பட்ட "ஆவணங்கள் இல்லை" என்பதற்குரிய சான்றும், தான் சிறையிலிருந்த காலத்தில், அதே சிறையில் குறைந்தபட்சம் ஓராண்டு காலம் சிறைத்துன்பம் அனுபவித்தவர்கள் இருவரிடமிருந்து, நிர்ணயிக்கப்பட்டுள்ள 'சககைதி சான்றிதழ்' படிவத்தில் பெறப்பட்ட இரு 'சககைதி சான்றிதழ்கள்' சமர்ப்பித்தல் வேண்டும் (அல்லது) தற்போதுள்ள அல்லது முன்னாள் சட்டமன்ற/நாடாளுமன்ற உறுப்பினர் சான்றாளராக இருக்கின்ற நிலையில் இரு சக கைதி சான்றுகளுக்குப் பதிலாக 'ஒரு சககைதி சான்றிதழ்' மட்டும் சமர்ப்பித்தால் போதுமானது.

(ii) ஆதி திராவிடர்/பழங்குடியினர் மற்றும் பெண் விடுதலைப் போராட்ட வீரர் ஆகியோரைப் பொறுத்தமட்டில், ஓய்வூதியம் பெறுவதற்கு சிறைத் தண்டனை அனுபவித்த காலம் ஆறு மாதத்திலிருந்து மூன்று மாதங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.

(iii) ஆறு மாதம் அல்லது அதற்கும் மேலாக தலைமறைவாக இருந்தவர்கள், ஆனால் அரசு ஆவணங்கள் கிடைக்கப் பெறாதவர்கள், மனுதாரரின் மாவட்டத்தைச் சேர்ந்த அனைவருக்கும் அறிமுகமான விடுதலைப் போராட்ட வீரரும் இரண்டாண்டுகள் அல்லது அதற்கும் மேலாக சிறைத்தண்டனை அனுபவித்துள்ளவருமான எவரேனும் ஒருவரிடமிருந்து, குறிப்பிட்ட படிவத்தில், 'நன்கறிந்த சான்றிதழ்' பெற்று தக்க ஆதாரமாகச் சமர்ப்பிக்கலாம். மேலும், மேற்படி "அரசு ஆவணங்கள் கிடைக்கவில்லை" எனில் அதற்கான சான்றிதழ் சம்பந்தப்பட்ட அலுவலகங்களிலிருந்து பெற்று சேர்ப்பிக்க வேண்டும்.

(iv) விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்டு 10 சவுக்கடிகள்/ கசையடிகள் அல்லது பிரம்படிகள் தண்டனையாகப் பெற்று ஒருவர் துன்பப்பட்டிருந்தால், அது ஆறு மாத காலம் சிறைத்தண்டனை அனுபவித்ததற்கு ஈடாகக் கருதப்படும்.

(v) மேலும், மைய அரசு சுதந்திரப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறுவதற்கு, இந்தியாவிற்கு வெளியே நடந்த சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டு, ஆறு மாதங்களோ அல்லது அதற்கு மேலோ சிறைத்துன்பம்/காவல் துன்[illegible] முன்னாள் இந்திய தேசிய இரா[illegible] தகுதியுடையவர்களாவர்.

(vi) மைய அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறும் ஒவ்வொருவருக்கும் 1-8-2007 முதல் ரூ.6,330/- ஓய்வூதியத்துடன் 68 சதவீதம் அகவிலைப்படியும் சேர்த்து ரூ.10,634/- வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு மைய அரசு ஓய்வூதியம் பெற்று வரும் விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் வாரிசுதாரர்களின் எண்ணிக்கை 2,620 ஆகும்.

(vii) மைய அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம்/மைய அரசு குடும்ப ஓய்வூதியம் பெறுபவருக்கு, மாநில அரசின் நிதியிலிருந்து, ரூபாய் 500/- ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

33. மேற்குறிப்பிட்ட விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத் திட்டங்களுக்காக 2008-2009 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 12.99 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## இணைப்பு-1

### மாநில அரசால் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை விவரம்

| வ. எண். | கால அளவு | ஓய்வூதியத் தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1. | 01-10-1966 முதல் | 50/- |
| 2. | 15-08-1972 முதல் | 75/- |
| 3. | 01-04-1979 முதல் | 100/- |
| 4. | 25-01-1981 முதல் | 150/- |
| 5. | 10-06-1986 முதல் | 250/- |
| 6. | 01-08-1989 முதல் | 350/- |
| 7. | 01-01-1991 முதல் | 400/- |
| 8. | 01-08-1992 முதல் | 1,000/- |
| 9. | 01-09-1995 முதல் | 1,500/- |
| 10. | 15-08-1997 முதல் | 3,000/- |
| 11. | 1-5-2007 முதல் | 4,000/- |





## இணைப்பு – 2

### மாநில அரசால் விடுதலைப் போராட்ட வீரர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் மாதாந்திர குடும்ப ஓய்வூதியத் தொகை விவரம்

| வ. எண். | கால அளவு | ஓய்வூதியத் தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1. | 01-10-1966 முதல் | 50/- |
| 2. | 15-08-1972 முதல் | 75/- |
| 3. | 01-04-1979 முதல் | 100/- |
| 4. | 25-01-1981 முதல் | 150/- |
| 5. | 10-06-1986 முதல் | 250/- |
| 6. | 01-08-1989 முதல் | 350/- |
| 7. | 01-01-1991 முதல் | 400/- |
| 8. | 01-08-1992 முதல் | 500/- |
| 9. | 01-09-1995 முதல் | 750/- |
| 10. | 15-08-1997 முதல் | 1,500/- |
| 11. | 1-5-2007 முதல் | 2,000/- |

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the
Principal Secretary to Government and Commissioner of Stationery and Printing,
Chennai-600 002.